குமாரனாகிய இயேசு

[விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தங்களில்]

M. CHRISTOPHER

குமாரனாகிய இயேசு

(விவிலியம், திருக்குறள்,

சைவ சித்தாந்தங்களில்)

குமாரனாகிய இயேசு

(விவிலியம், திருக்குறள்,
சைவ சித்தாந்தந்தங்களில்)

M. Christopher,
Benaiah, Kallukatty, Kuzhithurai - 629 163,
K.K. Dist., Tamil Nadu, India.
Ph. : 04651 - 260404.

First Edition : **2008**

Copy Right Reserved : **GEMS, Kuzhithurai.**

Typesetting & Printing : ***South India Press, Marthandam.***

குமாரனாகிய இயேசு

(விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தந்தங்களில்)

1. ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் 1
2. கிழக்காசியாவில் ஆதாம் மேற்கில் இயேசு 9
3. படைப்பின் வரலாறு - விவிலியத்தில் - 20
4. படைப்பின் செய்தி - திருக்குறள், சைவ சித்தாந்தங்களில் ... 25
5. வீழ்ச்சியடைந்த மனிதனின் நிலை - (வி.வி., சை.சி.) 33
6. மனிதன் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குள் 45
7. மனிதனுக்கு வீழ்ச்சியிலிருந்து மீட்பு - (வி.வி., சை.சி.) ... 52
8. விவிலியத்தில் திரித்துவக் கடவுள் 59
9. திருக்குறளில் மூவொரு கடவுள் 63
10. குமாரனாகிய கடவுள் யார்? 70
11. குமாரனாகிய கடவுளின் வாழ்க்கை வரலாறு (பாகம் : 1) ... 75
12. குமாரனாகிய கடவுளின் வாழ்க்கை வரலாறு (பாகம் : 2) ... 91
13. குமாரனாகிய கடவுள் ஏன் அவதரித்தார்? (சை.சி.) ... 101
14. குமாரனாகிய கடவுள் பரலோக மேன்மை துறந்தவர் ... 109
15. குமாரனாகிய கடவுள் தம்மையே பலியாக்கியவர் 114
16. குமாரனாகிய கடவுள் பாவத்தை நீக்கி இரட்சிக்கிறவர் ... 121
17. குமாரனாகிய கடவுள் உயிர்த்தெழுந்தவர் 124
18. குமாரனாகிய கடவுள் நியாயத்தீர்ப்பு செய்பவர் 127
19. மீட்கப்பட்டவர்கள் - சான்றோர் - 130
20. சான்றோர் பண்புகள் 1. அன்பு 137
21. சான்றோர் பண்புகள் 2. நாண் 145
22. சான்றோர் பண்புகள் 3. ஒப்புரவு 150
23. சான்றோர் பண்புகள் 4. கண்ணோட்டம் 156
24. சான்றோர் பண்புகள் 5. வாய்மை 163
25. மீட்கப்பட்டவர்கள் இறைவனோடு (விவிலியம்) 170
26. மீட்கப்பட்டவர்கள் பேரின்பத்தில் (திருக்குறள்) 180
27. மீட்கப்பட்டவர்கள் இறைவனோடு இணைதல் (சி.ஞா.போ.) 189
28. குமாரன் எல்லாருக்கும் உரியவர் 198

இதர வெளியீடுகள் 211

முகவுரை

நம் நாட்டில் மதக்கலவரங்களைக் குறித்து பத்திரிகைகளில் அடிக்கடி வாசிக்கிறோம். மதத்தின் பேரால் கொள்ளைகள், கொலைகள் கூட நடப்பதுண்டு. அதிலும் விசேஷமாக 'இந்துக்க'ளுக்கும் கிறிஸ் தவர்களுக்கும் இடையே ஏற்படும் கலகங்களும் பெரும் அளவில் உண்டு. இது பெரும் வேதனை தரும் ஒன்றாகும்.

மதங்களின் அடிப்படை உண்மைகளையும் வரலாற்றுச் சத்தியங்களையும் உள்ளபடியே அறிந்துகொண்டால் இப்படிப்பட்ட கலகங்களுக்கு அவசியம் இருக்காது. 'இந்து' 'இந்துக்கள்' என்ற வார்த்தைகளைக் குறித்து பண்டிட் ஜவஹர்லால் நேரு கீழ்க்கண்ட வாறு கூறியிருக்கிறார். "Hindu means a people and not the followers of a particular religion". "From Sindhu came the words Hindu and Hindustan as well as Indus and India".

இந்து என்ற வார்த்தை எந்த ஒரு மதத்தையும் குறிப்பிடுவது அல்ல என்றும், அது இந்திய மக்களை (அதாவது சிந்து நதி மக்களை) குறிக்கும் வார்த்தை என்றும், இந்த வார்த்தை சிந்து என்ற ஆற்றின் பெயரிலிருந்து வந்தது என்றும் பண்டிட் ஜவஹர்லால் நேரு தமது டிஸ்கவரி ஆப் இந்தியா (Discovery of India) என்ற நூலில் வரலாற்றுச் சான்றுகளுடன் கூறியிருக்கிறார்.

(Hindu Law) இந்துலாவிலிருந்து (Hinduism) இந்துயிசமும், இந்துயிசத்திலிருந்து (Hindutwa) இந்துத்துவாவும், இந்துத்துவாவிலி ருந்து இந்து மதம் என்ற வார்த்தையும் A.D. 18-ம் நூற்றாண்டுக்குப் பின் உண்டாயிற்று என்று நாம் வரலாற்றில் பார்க்கிறோம்.

இந்நாட்களில் இந்துத்துவவாதிகளின் தலைவர்கள் எல்லாரும் இந்துயிசம் ஒரு மதமல்ல அது ஒரு வாழ்க்கை முறை மட்டுமே என்று அறிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். அவ்வறிக்கைகள் எல்லா பத்திரிகை களிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலும் கூட சாதாரண மக்கள் எல்லோருமே இந்துயிசம் ஒரு மதமென்றே கருதுகிற அந்நிலை யிலேயே செயல்படுகிறார்கள். இதுவும் தேவையில்லாத மதக்கலவரங் களுக்குக் காரணமாகி விடுகிறது.

கடந்த பல வருடங்களாக மேலே கூறப்பட்ட காரியங்களைக் குறித்து வரலாற்று அடிப்படையில் ஆய்வு செய்து தெளிவு பெற்றவர்களில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கவர் Dr. M. தெய்வநாயகம் M.A., Ph.D. ஆவார். Dr. தெய்வநாயகம் அவர்கள் தமது ஆராய்ச்சிகளின் அடிப்படையிலான திருக்குறள், விவிலியம், சைவசித்தாந்த ஒப்பாய்வு மற்றும் அனேக நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். மட்டுமல்ல ஆராய்ச்சி அறிஞர்களைக் கூட்டிக் கருத்தரங்குகள் நடத்தித் தமது முடிவுகளை நிலைநாட்டியிருக்கிறார்கள்.

வரலாற்று அடிப்படையில் நாம் பார்க்கும்போது இந்துமதம் என்று அழைக்கப்படும் சைவ வைணவ மதங்கள் அப்போஸ்தலனாகிய தோமாவால் முதலாம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட குமாரனாகிய கடவுளின் நற்செய்தியின் அடிப்படையில் உருவானவை என்று காணப்படுகிறது. அதாவது விவிலிய அடிப்படையில் தோமாவின் நற்செய்தியும் அந்நற்செய்திகளின் அடிப்படையில் திருக்குறளும், திருக்குறளின் அடிப்படையில் பக்தி இயக்கங்களும், சைவ வைணவ மதங்களும் உருவாயின. திருக்குறளைச் சரியான கண்ணோட்டத்தில் படித்தால், அது குமாரனாகிய கடவுளின் நற்செய்தியை அறிவிக்கும் ஒரு தமிழ் நூல் என்பதைக் கண்டுகொள்ளலாம். ஒரே கடவுளின் திரித்துவக் கொள்கையில் குமாரனாகிய கடவுளே மனுக்குலத்தை இரட்சிக்க இவ்வுலகத்தில் வந்தவர். அவர் ஈட்டிய இரட்சிப்பைப் பற்றிக்கொண்டு அந்த இரட்சிப்பின் வழிகளில் வானாகிய தூய ஆவியின் துணையோடு செயல்படுகின்றவர்கள் இறுதியில் இறைவனோடு இணைந்து பேரின்ப வீட்டில் நித்திய வாழ்வு பெறுவார்கள் என்ற நிலையான சத்தியம் விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்த நூலாகிய சிவஞானபோதம் ஆகியவற்றில் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதே இந்நூலின் நோக்கம்.

இவை ஒரே அடிப்படையிலான கொள்கைகளே என்பதை அறிந்தபின் தாங்கள் ஒருவரை ஒருவர் முட்டிக்கொள்வதும், மோதிக் கொள்வதும் தேவையற்றது என்றும், இழிவானது என்றும் நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வார்கள்.

இந்நூலுக்கு ஆசியும் அனுமதியும் அளித்துள்ள **Dr. D. தேவகலா M.A., M.Phil., Ph.D.** அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியுள்ள **Dr. ஜேம்ஸ் ஆர். டேனியல்**, முதல்வர் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி, நாகர்கோவில் அவர்களுக்கும், அவ்வப்போது தக்க ஆலோசனை தந்தும் சரிபார்த்தும் உதவிய **Dr. A. ஏனோஸ் M.A., Ph.D.** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஆசிரியர்.

புதுமை காட்டும் பொதுமை

திருக்குமாரன் இயேசுநாதர் மூலமே மனுக்குல விடுதலை என்பதனைத் தெளிவாக வெளிக்கொணர்வது திருவிவிலியம். திருவிவிலியத்தின் மையக் கருத்தே இதுதான். திருவிவிலியம் காட்டும் திருவழியும் இதுதான். திருக்குமாரனின் திருஇரத்தமே மனுக்குலத்தைப் பாவச் சேற்றிலிருந்து மீட்டெடுக்கிறது. திருஇரத்த விடுதலை பெறுவோர் நிலைவாழ்வு பேறுபெற்றோர்.

ஆயின் இவ்விடுதலையைத் தக்கவைத்துக் கொள்ள தூய ஆவியின் பேரருள் நமக்குத் தேவை. ஒழுக்க நெறியுடன் கூடிய உயர் கிறிஸ்தவ வாழ்க்கை இறுதிவரை வாழ்வோர் நிலையான பேரின்பத்தில் இறைவனோடு என்றுமே ஒன்றி உறவாடும் பேறுபெற்றவர் ஆகின்றனர். பழைய ஏற்பாட்டின் ஊடாகப் புதிய ஏற்பாடு காட்டும் இம்மெய் வாழ்வினிலே இறைவனின் சீடர்கள் (திருத்தொண்டர்கள்) நற்செய்தி நூற்களாகத் தந்துள்ளனர். கிறிஸ்துவைக் குறித்து மேற்கு ஆசியாவில் திருத்தொண்டர்கள் அறிவித்த நற்செய்தியும் இதுவே.

கிபி. முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உலகெங்கும் போய் இந்நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இயேசு பெருமானின் திரு ஆணையை ஏற்றுதெற்கு ஆசியாவின் தென்பகுதியான இந்தியாவில், அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் இந்நற்செய்தி முதலாம் நூற்றாண்டிலிருந்து இன்றைய நாள் வரை பல்வேறு ஒழுக்க, சமய, ஒழுகலாறு தாக்கங்களைத் தமிழகத்தில், தமிழக - தமிர்தம் வாழ்வியலில், மெய்யறிவு நூற்களில் வெகுவாகக் காணமுடிகிறது.

ஆயின் இத்தாக்கங்கள் இலைமறை காய்போல் இந்நூற்களில் புதைந்து கிடக்கின்றன. பலநேரங்களில் பலாப்பழம் போல் காட்சி அளிக்கின்றது. சுற்றியுள்ள முள்ளோடு கூடிய தோலை அகற்றி, உள்நார்கூட்டத்தையும் அகற்றி, மேல்காணும் தசைநாரையும் அகற்றி, அகம் ஆழமாகப் பார்த்தால் முறையாக - பலாச்சுளைகளாகக் காட்சி தருவதனைக் காணலாம்.

அதிலும் குறிப்பாகத் தமிழர் திருமறையெனப் போற்றிப் புகழப்படுகின்ற திருக்குறளிலும், சைவ சித்தாந்த நூலான சிவஞான முனிவர் அருளிச் சென்ற சிவஞானபோதத்திலும் இத்தாக்கங்கள் தெள்ளிதின் விளங்குவதைக் காணலாம். எனவே இந்தச் சிந்தனை யோட்டமெல்லாம் தோமாவின் வழியாக அரிதின் கிடைத்த கிறிஸ்தவ நெறி தாக்கங்களே எனவும், சைவம், வைணவம் எனத் தமிழர் சமயங்களாக நாம் கருதுபவை கிறிஸ்துவ சமயத்தின் வெளிப் பாடே என்றும், இந்நூற்கள் சுட்டிச் செல்லும் முழுமுதற்கடவுளும், இறையியல் கோட்பாடும், சமயநெறிக் கருத்துக்களும் திருவிவிலிய நற்செய்திக் கருத்துக்களே எனவும், திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறள், நாயன்மார்கள் ஈந்தளித்த சைவத் திருமறைகளும் (தேவாரம், திருவாசகம் போன்ற பன்னிரண்டு போற்றி நூற்களும்) சிவஞான முனிவர் உள்ளிட்ட எஞ்சியோர் நல்கிய சிவஞான போதம் உள்ளிட்ட பதினெட்டு சித்தாந்த நூற்களும், ஆழ்வார்கள் அழகுறப் பாடிப் போற்றிய நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் உள்ளிட்ட போற்றி நூல்கள் மற்றும் சித்தாந்த நூற்களும் கருப்பொருளாக மணக்கும் விடுதலை நாயகன் இயேசு பிரானையே சுற்றிச் சுழல்கின்றன என்றும், மேற்கு ஆசியாவில் தோன்றி இச்சிந்தனைத் தொடர் தூய தோமா என்னும் கிறித்தவ திருத்தொண்டர் வழியாகத் திருதமிழகத்தை அடைந்து இப்புது வடிவங்களைத் தாங்கி நிற்கின்றன. என்று மு. தெய்வநாயம் தனது புதுமையான பொதுமைதேடும் கோட்பாட் டினை அரை நூற்றாண்டுகளாக தமிழகத்தின் பட்டிதொட்டி யெங்கும் பறைசாற்றி வருகின்றார்.

அன்னாரது பார்வை, இறையியல் பொருள்கொள்ளல், சொல்மூலம் கண்டறிதல், சொற்பொருள் விளக்கம், வேர்ச்சொல் நாடி விளக்கம் தருதல், தாக்கச்சூழல், தாக்கக் கருத்து, கருத்தோட்டம், தாக்கச் சொல் - பொருள் - கருத்தொற்றுமை, புதுமையாகத் தோன்றி டினும், கிறிஸ்தவத்திற்கும் இம்மண்ணின் கிறஸ்தவம்சார் சமயங்க ளுக்கும் உள்ள இறையியல் கருத்தொற்றுமைப் பொதுமையை ஆய்வுமுறையில் வெளிக்கொணர்கிறது. தெய்வநாயகம் அடியொற்றி இந்நூலாசிரியர் இப்பொதுமையைத் திருக்குறள் மற்றும் சிவஞான போதம் அடிப்படையில் கருத்து விளக்க முயற்சியை இந்நூலில் மேற் கொண்டுள்ளார். வரவேற்கத்தக்க முயற்சி. பல இடங்களுக்கு இன்னமும் விளக்கம் தேவை. பல இடங்களில் சொற்பொருள் விளக்கம், அதனடிப்படையில் எழும் தாக்கம் தமிழ்ச்சமய / இறையியல் சூழலில் மறு பொருள் கொள்வதற்குத் தகுந்த அடிப்படையுடன் உள்ளதா /

உள்ளனவா என்பது இன்னமும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

மிகக் கடினமான ஒரு கருப்பொருளை மிக எளிதாக எல்லோருக்கும் எளிதில் புரியும் வண்ணம் ஆக்கித்தந்துள்ள நூலாசிரியரின் முயற்சி மிகவும் பாராட்டிற்குரியது. ஏற்கனவே இந்த பின்னணியத்தில் இதுபோன்ற சில சித்தாந்த தெளிவு நூற்களை யாத்துள்ள நூலாசிரியரின் தொடர் ஆன்மீகப் பயணத்தில் இன்னொரு மைல்கல் இந்நூல். நூலாசிரியரின் ஆன்ம அனுபவமும் உண்மையைத் தேடும் உளப்பாங்கும், தனக்குச் சரியெனபட்டதை உறுதியுடனும், உள்ள உரத்துடனும் எடுத்துச் சொல்லும் திறனும் இந்நூலின் உயிர்நாடி. இத்தூய பயணம் தொடர நான் பெரிதும் விரும்புகின்றேன். இந்நூல் கிறிஸ்தவ இறையியல் அறிஞர்கள், சைவ, வைணவ அறிஞர்கள் / இறையியலாருடன் கருத்துப்பரிமாற்றம் மேற்கொள்வதற்குப் பயனுள்ள அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. புதுமையில் பொதுமை காணும் வழிமுறைகளைத் தொடர்ந்து ஆய்வோம். இறைத்திட்டம் நம்மூலம் நிறைவேறட்டும். நூலாசிரியரின் பணி தொடர இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

Sd/-

E. James R. Daniel
(Principal, Scott Christian College (Autonomous)
Academic Co-ordinator, Ktt Christian Federation
Hon. Visiting Fellow & Chair on Christian Studies,
Manonmaniam Sundaranar University)

நாகர்கோவில்,
25.05.2008

ஆசியும் அனுமதியும்

குமாரனாகிய இயேசு, (விவிலியம், திருக்குறள், சைவசித்தாந்தங்களில்) என்னும் தலைப்பில் இந்நூலை எழுதியுள்ள திரு. கிறிஸ்டோபர் அவர்களின் சீரிய பணியை கடவுள் நாமே அதிகமாய் ஆசீர்வதிக்கும் படி வேண்டிக்கொள்கிறோம். இந்நூலைப் படிக்கும் கிறிஸ்தவர்கள் மற்றும் ஆதி இந்தியக்கிறிஸ்தவர்களான சைவ வைணவர்கள் ஆகியோர் தங்கள் கருத்துக்களில் தெளிவு பெற்று தேவையற்ற வேற்றுமைகளை களைந்துஒன்றுபட்டு சிறந்தமுறையில் இறைப்பணி செய்யஇறைவன் அருள்புரியவேண்டுகிறோம்.

இந்நூலில் திருக்குறள் தொடர்பாகவும் 'இந்துமதம்' எனப்படும் சைவ, வைணவ சமயங்கள் பற்றியும் கூறியுள்ள கருத்துகள், திராவிட ஆன்மீக இயக்க நிறுவனரும், 'திராவிட சமயம்' இதழின் ஆசிரியருமான டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் 1968 முதல் செய்த ஆராய்ச்சிகளின் சுருக்கம் ஆகும்.

★ திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூலே. அதாவது, திருக்குறள் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நூலே.

★ 'இந்துமதம்' எனப்படும் சைவ, வைணவச் சமயங்கள், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவக் கிளைகளே.

★ எனவே, இந்துமதத்தைப் பெரும்பான்மையினரின் மதமாகக் கொண்ட இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு; அதாவது, இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே

எனும் புதிய உண்மைகளை 37 ஆண்டுக்கால ஆராய்ச்சியின் வழியாக நிலைநாட்டியுள்ளார் டாக்டர் மு. தெய்வநாயகம்.

இவ்வுண்மைகளை ஆழமான ஆராய்ச்சி அடிப்படையில் அறிந்து கொள்ள விரும்புவோர் டாக்டர் மு. தெய்வநாயகத்தின் '**விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு**' எனும் நூலையும் மேலும் இவ்வாய்வு தொடர்பாக அவர் எழுதிய 251 க்கும் மேற்பட்ட நூல்களையும் காணலாம்.

இந்நூலாசிரியர் கிறிஸ்டோபர் அவர்கள், இந்த ஆராய்ச்சிக் கருத்துகளைப் பயன்படுத்த டாக்டர் தெய்வநாயகம் அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். டாக்டர் ஐயாவின் ஆராய்ச்சிக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு,

★ எளிய முறையில்

★ எளிய நடையில்

★ எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம்

★ எவருக்கும் பயன்படும் நோக்கில்

இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளதால், அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, டாக்டர் தெய்வநாயகம் ஐயா அவர்கள் கொடுத்த அனுமதியுடனுடன் இந்நூல் வெளிவருகின்றது.

எனவே, டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களின் ஆராய்ச்சிக் கருத்துகளை,

★ ஆழமாக அறிந்து கொள்ள விரும்புவோரும்

★ மேலும் ஆய்வு அடிப்படையில் புரிந்து கொள்ள விரும்புவோரும்

ஐயாவைப் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

டாக்டர் மு. தெய்வநாயகம், M.A., Ph.D.,
நிறுவனர் - திராவிட ஆன்மீக இயக்கம்,
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023.
☎: 91-44 - 2644 9032 Email: dravida@eth.net
Website :http://www.geocities.com/dravidian_religion

ஆசிரியரின் சீரிய பணி சிறக்கவும் இறைவனின் ஆசியும் அருளும் பெருகவும் இறைவனிடம் வேண்டிக் கொள்கிறோம்.

இறைப்பணியில் அன்புடன்,

சகோதரி டாக்டர் தெ. தேவகலா, M.A., M.Phil., Ph.D.,
ஒருங்கிணைப்பாளர்
திராவிட ஆன்மீக இயக்கம்.

அதிகாரம் : 1

ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்

ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்பது திருமூலரின் வாக்கு. இது மக்கள் மத்தியில் பலவகைகளில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அதன் கருத்துக்களை மக்கள் எவ்வாறு புரிந்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒன்றே குலம்

ஒன்றே குலம் என்பது வரலாற்று அடிப்படையில் அமைந்த கருத்தாகக் காணப்படுகிறது. அதாவது இந்த உலகத்தில் நானா தேசங்களில் காணப்படும் ஜனங்கள் எல்லாருமே ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் என்பது பொருள். அதை மேலும் தெளிவுபடுத்தினால், உலகின் ஜனங்கள் எல்லாருக்கும் ஆதி பெற்றோர் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் என்கிற கருத்துக்கு வந்து விடுகிறோம். ஆதி பெற்றோரான ஆதாம் ஏவாள் ஆகியோரின் பெயர்கள் நம் நாட்டில் பழமையான கல்வெட்டுகளிலும் குகைக் கல்வெட்டுகளிலும் ஆதன், அவ்வை என்று காணப்படுகிறது. அவர்களுடைய வரலாறு விவிலியத்தில் வாசிக்கிறோம்.

நாமெல்லாரும் சகோதரர்கள்

உலகின் மக்களெல்லாம் ஒரே பெற்றோரிலிருந்து தோன்றியவர்கள் என்று சிந்திக்கும்போது நமக்குள் ஒரு ஒற்றுமை (பாசு) உணர்ச்சி எழுகின்றது. நாம் எங்கு வசிப்பினும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று உண்மையாய் எண்ணும்போது எல்லா பாசத்திலும் மேலான இரத்தப் பாசம் ஏற்படுகிறது. அந்தப் பாசத்தோடு திருமூலர் கூறியிருப்பதே 'ஒன்றே குலம்' என்ற வார்த்தை. நாம் எல்லாரும் ஒரே பெற்றோரிலிருந்து தோன்றிய சகோதரர்கள். நமக்குள் ஜாதி ஏற்றத்

தாழ்வோ, இனவெறியோ கிடையாது. இத்தகைய பண்போடு வாழ்வது எவ்வளவு மேன்மையான வாழ்க்கை!

ஒருவனே தெய்வம்

பொதுவாக, கடவுள் கொள்கை உடையவர்கள் எல்லாரும் 'கடவுள் ஒருவரே' என்பார்கள். அந்த ஒரே கடவுள் யார்? என்பது தான் கேள்வி. இன்று நம் நாட்டில் கிறிஸ்தவர்களும் இந்துக்கள் என்று அழைக்கப்படும் சைவ வைணவ மக்களும் வெகுவாய் வசிக்கிறார்கள். அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டால்.... என்ன பதில் கிடைக்கும்? அமைதியான பதிலுக்குப்பதிலாக கடவுள் பெயரில் ஒரு குட்டிக்கலவரமே நடந்து விடலாம்....?

பல விடைகள்

கேள்வி கேட்கப்பட்ட கூட்டத்தில் ஒருவர், குமாரனாகிய கடவுள் ஒருவரே மெய்யான கடவுள் என்பார். வேறொருவர், குமரக்கடவுளே உண்மைக் கடவுள் என்பார். மற்றொருவர், பரிசுத்த பிள்ளை தான் மெய்யான கடவுள் என்றும், வேறொருவர், பிள்ளையாரே உண்மைக் கடவுள் என்றும், மற்றொருவர், இயேசுவே உண்மையான கடவுள். அவரைத் தவிர வேறொரு நாமம் இல்லை என்றும் வேறொருவர், பாவ வினைகளைத் தீர்க்கும் வினாயகரே உண்மைக் கடவுள் என்றும் கூறுவார்கள்.

முடிவில்லை

இவ்வாறாக விவாதம் தொடர்ந்து கொண்டே போகும். அதற்கு முடிவு காண முடியாது. ஏனென்றால் ஒவ்வொருவரும் தாங்கள் சொல்லும் பெயர்தான் உண்மையான கடவுளின் பெயர் என்று சாதித்துக் கொண்டே இருப்பார்கள். அப்படியானால் விவாதத்தில் ஏற்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களும், சைவர்களும் வெவ்வேறான தெய்வங்களைக் கொண்டிருக்கிறார்களா? இல்லை. அவர்கள் கொண்டிருப்பதும் கூறுவதும் ஒரே கடவுளைத்தான். ஆனால் அவர்கள் கூறும் பெயர்களைக் குறித்த விவரங்களை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதே உண்மை.

ஒரே பொருள்

குமாரனாகிய கடவுள் என்பதும் குமரக் கடவுள் என்பதும் பொருள் ஒன்று தான். அவ்வாறே பரிசுத்தப் பிள்ளை என்பதும் பிள்ளையார் என்பதும் சுட்டுவது ஒருவரைத் தான். இயேசு என்ற

வார்த்தையின் பொருள் பாவங்களை நீக்கி இரட்சிக்கிறவர் என்பதே. பாவவினைகளை நீக்கும் வினாயகர் என்பதும் பாவங்களை நீக்கி இரட்சிக்கிறவர் என்பதும் பொருள் ஒன்றே.

சிக்கல்

ஆனால் பிள்ளையார், வினாயகர் என்றெல்லாம் சொன்ன உடனே இன்று ஒரு தும்பிக்கையுடனும், பெரும் வயிறுடனும் கூடிய ஒரு உருவம் நம் மனக்கண்முன்னே தோன்றி விடும். அந்த உருவத்தைக் கடந்து நமக்குச் சிந்திக்க முடிவதில்லை. அதைக் கடந்து நாம் சிந்தித்துத் தெளிவுபெற வேண்டுமானால் நாம் நம் நாட்டில் நடந்துவிட்ட சில வரலாற்றுச் சம்பவங்களையும் உண்மை நிகழ்வுகளையும் குறித்து நன்கு அறியவேண்டும். “சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்று இயேசு பெருமான் கூறியுள்ளார். இதைச் செய்வதே அதாவது பொறுமையோடு நமது வரலாற்று உண்மை களைப் படித்து அறிந்து கொள்வதே, இந்தச் சிக்கலில் இருந்து வெளி வருவதற்கு ஒரே வழி.

உண்மையில் இரட்சகர் ஒருவரே

உண்மையாய் உலக இரட்சகர் ஒருவரே. அவரே உலகத்தில் அவதரித்த தேவகுமாரன். அவரே குமாரனாகிய கடவுள். அவரே குமரக் கடவுள். அவரே பரிசுத்தப் பிள்ளை. அவரே (மதிப்புக்குரிய பிள்ளை) பிள்ளையார். அவரே பாவிகளை இரட்சிக்க வந்த இரட்சகராகிய இயேசு. அவருக்குக் ஒருசாரார் கூறும் பெயரே பாவவினைகளைத் தீர்க்கும் வினாயகர் என்பது.

ஆனால் பிற்காலங்களில் சாத்தானின் சூட்சி காரணத்தால் விஷமிகளால் சில கட்டுக் கதைகளும் அந்தக் கதைகளுக்கு ஏற்ற உருவங் களும் உண்டாக்கப்பட்டு, தோமாவால் இந்தியாவுக்குக் கொண்டு வரப் பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவமானச் சைவ வைணவ மதங்களில் புகுத்தப்பட்டதே பற்பல சிக்கல்களுக்குக் காரணமாயிற்று. சிக்கல்களை அகற்ற வேண்டியது சத்தியத்தை அறிந்தவர்களின் கடமையாகும். சத்தியத்தை அறிய பிரயாசப்படுவோம்.

ஓர் எடுத்துக்காட்டு

பிள்ளையார் என்ற பெயரை ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் சரியான கருத்தோடு தேவக் குமாரனுக்குப் பயன்படுத்தினார்கள். பின் நாட்களில் அந்த வார்த்தை பலநிலைகளில் இழிவுபடுத்தப்பட்டிருப் பதைப் பார்க்கமுடிகிறது.

அதாவது: குமாரனாகிய கடவுள் மரித்து உயிர்த்தவர். எனவே பிள்ளையார் மரித்து உயிர்த்தவர் என்பதை விளக்கும் வகையில் நம் நாட்டில் அனேக கட்டுக்கதைகள் உண்டாக்கப்பட்டது. சக்தி குளித்துக் கொண்டிருக்கையில் உருட்டி எடுத்த அழுக்கைப் பிள்ளையாக உருவாக்கித் தனக்குக் காவலுக்காக வைத்தாள்.

அழுக்குருண்டை பிள்ளையார்

அப்போது அங்கு வந்த சிவனை உள்ளே செல்ல பிள்ளை தடுக்கவே, கோபமடைந்த சிவன் பிள்ளையின் கழுத்தை வெட்டிக் கொன்றுவிட்டான். இதைக்கண்ட சக்தி சிவனை மன்றாட, சிவன் வெளியே சென்று, எதிர்பட்ட ஒரு யானையின் தலையை வெட்டி பிள்ளையின் உடலில் பொருத்தினான். பிள்ளை மனித உடலில் யானைத் தலையுடன் உயிர் பெற்று அழுக்குருண்டை பிள்ளையாராக ஆகிவிட்டது.

கணபதி

அது அதோடு நின்றுவிடவில்லை. அந்தப் பிள்ளையாருக்கு யானைத் தலை இருப்பதால் மற்றுமோர் பெயர்! அது தான் கணபதி என்பது. அதாவது கணங்களுக்குப் பதியான கணபதி அல்லது கணேசன்.

கட்டுக்கதைகளால் அவலம்

இன்று நாம் பிள்ளையார் என்ற உடனே இந்த எல்லா பெயர்களும் அவற்றின் உருவத்தோற்றங்களுடன் விரைந்து நம் கண்முன் வந்து விடுகிறது. பிள்ளையார், குமாரனாகிய கடவுள் என்ற உன்னத நிலையிலிருந்து கணபதியென்ற (யானை) ஒரு மிருகத்தின் நிலையில் காட்டப்படும் அவலம்!

கடவுளைக் கேலிக்கூத்தாக்கும் துணிகரம்

கட்டுக்கதைகளைப் படித்துக்கொண்டு கோவில்களில் சென்று அங்குச் சித்திரிக்கப்பட்டிருக்கும் சொரூபங்களையும் கோவில்களில் செயல்படுத்தப்படும் தேவதாசி முறை போன்ற பல சடங்காசாரங்களையும் கூர்ந்து கவனிப்போர் உண்மைக் கடவுளைப் பக்திப் பரவசத்தோடு பற்றிக் கொள்ளுவதற்குப் பதிலாகக் கடவுளையே கேலிக் கூத்தாக எண்ணும் அவலம் ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட நிலைகளைப் பார்க்கும்பொழுது ஆதி இந்திய

கிறிஸ்தவம் என்ற சைவ வைணவ மதங்கள் இந்துமதம் என்ற இந்துத்துவாவின் போர்வையில் ஆதி நெறிகளுக்கு மாறாக வெகுதூரம் சென்று விட்டது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இவை எல்லாம் கடவுள் நம்பிக்கை இல்லாத விஷமிகள் வேண்டுமென்றே செய்த சதிகள் அல்லாமல் வேறல்ல.

இதுபோன்ற சிக்கல்களைப் பரிகரித்து ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தை அதன் ஆதிநிலைக்குக் கொண்டு செல்ல வேண்டியது உண்மையை அறிந்தவர்கள்மேல் விழுந்த கடமையாகும்.

கடவுளின் பெயர்

கடவுள் யார் என்ற கேள்விக்கு ஆத்திகர்கள் பொதுவாகக் கூறும் பதில், அண்டசராசரங்களையும், மனிதர்களையும், படைப்புகள் யாவையும் படைத்து இயக்கிக் கொண்டிருப்பவர், என்பதாகும். அப்படிப்பட்ட கடவுளின் பெயர் என்ன? சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட மேன்மைகளைக் கொண்ட கடவுளுக்கு இடுகுறிப்பெயர் (Arbitrary name அதாவது எக்காரணத்தையும் குறிக்காமல் பெரியோர்களால் போடப்படும் பெயர்) கொடுக்கத்தக்கவர் யார்? எவரும் இல்லை. கடவுள் காரணப்பெயர்களாலேயே அறியப்படுகிறார் என்பதே உண்மை. கடவுள் என்பதும் ஒரு காரணப்பெயரே. அவர் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர் என்ற காரணத்தால் நாம் அவரைக் கடவுள் என்று அழைக்கிறோம்.

மோசே என்ற பக்தனின் ஆசை

விவிலியத்தில் மோசே என்ற ஒரு தேவமனிதனைப்பற்றி வாசிக்கிறோம். அவர் கடவுளோடு நேரில் பேசியவர். அவர் கடவுளின் பெயர் அறிவதற்கு ஆசைப்பட்டார். எனவே அவர் கடவுளிடம் உமது நாமம் என்ன? என்று கேட்டார். அதற்கு அவருக்குக் கிடைத்த பதில் 'இருக்கிறவர் ஆகவே இருக்கிறேன்' என்பதாகும். இதுவும் ஒரு காரணப்பெயராகவே காணப்படுகிறது. அதாவது சதாகாலங்களிலும், சகல இடங்களிலும் இருந்துகொண்டிருப்பவர் என்பது பொருள்.

ஒரே கடவுள், மூன்று நிலைகள்

சகலத்தையும் படைத்தவராகிய ஒரே கடவுள் தம்மை மூன்று தன்மைகளில் வெளிப்படுத்தியுள்ளார். எனவே அவர் மூவொரு கடவுள் அல்லது 'திரியேக தேவன்' என்று அழைக்கப்படுகிறார். அவர் அன்பே உருவானவர். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்கிறது

விவிலியம். அவர் அன்புமயமானவர். அன்பு என்ற சொல்லுக்குக் கூறப்படும் மற்றுமோர் அழகிய தமிழ்ச்சொல்லே 'சிவம்' என்பது. — சிவம் என்று சொல்லும்போது, முன்கூறிய விஷமிகளால் உருவாக்கப்பட்டவைகளான மனதில் எழுகின்ற உருவ நிலைகளையும் எண்ணங்களையும் மாற்றி விடுவோம் — அன்பும் சிவமும் இரண்டல்ல. அது ஒன்றே ஆகும். எல்லாம் அன்பு மயம் என்பதே எல்லாம் சிவமயம் என்பது.

அன்புமயமான கடவுளின் செயல்பாடு

அன்புமயமான் கடவுள் அதாவது சிவமயமான கடவுளின் செயல்பாட்டின் விளைவே இந்தப் படைப்புகள் யாவும். கடவுள் தம் அன்பின் பெருக்கினாலேயே மனிதனைப் படைத்தார். கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் கடவுளின் கட்டளையைத் தள்ளிவிட்டுச் சாத்தானுக்குச் செவிகொடுத்ததினால் நித்திய ஜீவனுக்குப் பதிலாக நித்திய மரணத்தைத் தேடிக்கொண்டான். இந்நிலையிலும் கூட அன்புக் கடவுளின் அன்பு செயல்பட்ட காரணத்தால், அன்புமயமான (சிவமயமான) கடவுள் இந்த உலகத்தில் ஒரு மனிதனாக ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்தார்.

மூன்று நிலைகள்

அன்பு(சிவ)மயமான கடவுள், அவர் பிதாவாகிய கடவுள் என்று அழைக்கப்படுகிறார். மனிதரை இரட்சிக்க இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்ததால் அவர் குமாரனாகிய கடவுள் என்று அழைக்கப்படுகிறார். குமாரனாகிய கடவுள் மனிதனாகப் பிறக்கக் காரணமாயிருந்த கடவுளின் (வல்லமை) ஆற்றல் அல்லது சக்தி தூய ஆவி ஆகிய கடவுள் என்று அழைக்கப்படுகிறார்.

1. அன்பு(சிவ)க் கடவுள் - பிதா அல்லது அப்பன்
2. மனிதனாகப் பிறந்தவர் - குமாரன் அல்லது குமரன்
3. கடவுளின் ஆற்றல் - தூய ஆவி அல்லது சக்தி (பெலன்)

குமாரனாகிய கடவுளின் காரணப் பெயர்கள்

மேலே கூறப்பட்ட திரித்துவத்தில் குமாரனாகிய கடவுளுக்குக் கூறப்படும் காரணப்பெயர்களைப் பார்ப்போம். அவர் கெட்டுப்போன மனுக்குலத்தை மீட்டு இரட்சித்து மறுபடியும் கடவுளோடு சேர்த்து நிலையான வாழ்வு அளிக்கும்படி ஒரு மனிதனாக இந்த உலகில் அவதரித்தவர். குமாரனாகிய கடவுள் ஒருவரே. அவர் இந்த உலக வரலாற்றில் ஒரு மனிதனாகப் பிறந்து மனுக்குலத்தின் பாவங்களைத்

தம்மேல் சுமந்து அந்தப் பாவத்துக்காகத் தம்மையே பலியாக்கி மரித்து உயிர்த்தெழுந்து பரத்துக்குச் சென்றவர்.

ஒரே குமாரனுக்கு அனேக காரணப்பெயர்கள்

இந்த ஒரே குமாரனாகிய கடவுள் இன்று அனேகக் காரணப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். இது விரிவாக 10-வது அதிகாரத்தில் விளக்கப்படுகிறது. அனேகக் காரணப்பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அப்பெயர்களால் சுட்டப்படுகிறவர் குமாரனாகிய கடவுள் ஒருவரே.

சில காரணப் பெயர்கள்

* தேவகுமாரன் * மனுஷகுமாரன் * திருக்குமாரன் * குமரக்கடவுள் * பரிசுத்தப் பிள்ளை * பிள்ளையார் * சாரோனின் ரோஜா * அழகர் * சிலுவைநாதர் * ஐந்தவித்தான் * நீத்தார் * கிறிஸ்து * இயேசு * இரட்சகர் * மீட்பர் * பாவவினைதீர்க்கும் வினாயகர் முதலானவை.

கிறிஸ்தவ, சைவ, வைணவ மக்கள்

மேலே கூறப்பட்டுள்ள காரணப்பெயர்களும் இதுபோன்ற மற்றும் அனேகப் பெயர்களும், நம் நாட்டில் கிறிஸ்தவ மக்களாலும் இந்துக்கள் என்று அழைக்கப்படும் சைவ வைணவ மக்களாலும் பயன் படுத்தப்படுவதைப் பார்க்க முடிகிறது. அதற்குக் காரணம் கிறிஸ்தவ, சைவ வைணவ மதங்களின் அடித்தளம் ஒன்றே ஒன்று என்பதே ஆகும். இவ்வுண்மைகளை இந்திய மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அதோடு தற்போது சைவ வைணவ மதங்களில் திணிக்கப்பட்டுள்ள கொள்கைகள் திரிபுகள் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள விளைவு களைக் குறித்தும் அறிந்துகொள்ளவேண்டும்.

வரலாற்று அடிப்படை

முதல் மனிதனாகிய ஆதாம் ஆசியாவின் கிழக்கே (இந்தியாவில்) படைக்கப்பட்டான். ஆதாமின் பாவச் சந்ததி பெருகி மேற்காசியாவில் சென்றது. மனுக்குலத்தை மீட்கும்படியாகக் குமாரனாகிய கடவுள் மேற்காசியாவில் (பலஸ்தீனாவில்) கி.பி. முதலாம் நூற்றாண்டில் அவ தரித்தார். குமாரனாகிய கடவுளின் இரட்சிப்பின் நற்செய்தி கிரேக்க மொழியில் மேற்காசியாவில் எழுதப்பட்டது. அது விவிலியத்தின் புதிய ஏற்பாடு என்று அழைக்கப்படுகிறது. குமரனாகிய கடவுளின் இரட்சிப்பின் நற்செய்தி அந்நாட்களிலேயே தோமா அப்போஸ்தலனால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. அந்நற்செய்தியின் அடிப்படை

யில் அந்நாட்களில் திருவள்ளுவரால் தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூலே திருக்குறள் ஆகும். அந்நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்கள் மீட்கப்பட்டவர்கள் அல்லது சான்றோர் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் உயர்ந்த பண்புகளுடையவர்களாய்த் திகழ்ந்தார்கள். தோமா வால் கொண்டு வரப்பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவம் பின்பு சைவம் வைணவம் என்று அழைக்கப்பட்டது.

சீர் குலைவு

பின்நாட்களில் நற்செய்தியை ஏற்க மறுத்த விஷமிகளால் சைவ வைணவ மதங்கள் சீர்குலைக்கப்பட்டன. அனேக ஆயிரம் சான்றோர்களும் சித்தர்களும் சித்திரவதை செய்யப்பட்டார்கள். இந்நிலையில் ஆதி இந்தியக் கிறிஸ்தவமென்ற சைவக் கொள்கைகளைக் காப்பாற்றும் முயற்சியில் 13-ம் நூற்றாண்டில் மெய்கண்டாரால் எழுதப்பட்டதே சிவஞானபோதம் என்ற சைவ சித்தாந்த நூல் ஆகும்.

விவிலியம், திருக்குறள், சிவஞானபோதம் மற்றும் சைவ சித்தாந்த சாஸ் திரங்கள் ஆகியவற்றைப் படிக்கும்போது கிறிஸ்தவம் மற்றும் சைவ சித்தாந்தம் கூறுவது ஒரே கடவுளைப்பற்றியே என்பது தெளிவாகப் புலன்படும். இவ்வாறு படைப்பின் வரலாறு, குமாரனாகிய கடவுளின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றைக் கூர்ந்து படிக்கும்போது ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்ற திருமூலர் கூற்று முற்றிலும் மெய்ப்பிக்கப்படுகிறது.

இதை நாம் சரியாகப் புரிந்து கொண்டால் நம் நாட்டில் வீண் சண்டைகளுக்கும் வாக்குவாதங்களுக்கும் இனக் கலவரங்களுக்கும் மதக்கலவரங்களுக்கும் எவ்விதத்திலும் அவசியம் இல்லை என்பதை நன்கு அறிந்துகொள்வோம்.

அதிகாரம் : 2

கிழக்காசியாவில் ஆதாம், மேற்கில் இயேசு

ஆசியாக் கண்டம்

கடவுளால் படைக்கப்பட்ட உலகத் தேசங்களில் ஆசியாக் கண்டம் மிகச் சிறந்ததாய் விளங்குகிறது. அதிலும் குறிப்பாக ஆசியாவின் தென் பகுதி எல்லா நிலைகளிலும் சிறப்புமிக்கதாய்த் தொன்றுதொட்டே காணப்படுகிறது. பண்டைய உலகத்தில் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களும் ஒன்றாக இணைந்திருந்தன. பூமத்திய ரேகை ஆசியா, ஐரோப்பா ஆகிய கண்டங்களின் தென்பகுதிகளிலும், ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடபகுதிகளிலுமாகச் செல்கின்ற காரணத் தால் இப்பகுதிகள் தட்பவெப்ப நிலையிலும் மிதமாகக் காணப் படுகின்றன.

தெற்காசியா

தெற்காசியா, மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கிலும் வங்கக்கட லுக்கு மேற்கிலுமாய் பரந்து காணப்படுகிறது. இப்பகுதியின் கிழக்கில் இந்தியாவும் மேற்கில் (பாலஸ்தீனா) இஸ்ரேல் நாடுகளும் அமைந்துள் ளன. பாலஸ்தீனா நாடு, ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களுக்குச் செல்லும் முக்கியப் பாதையாகவும், இணைப்புப் பகுதி யாகவும் இருந்து வந்தபடியால் மிக முக்கியமானதாக எண்ணப்பட்டு வந்தது.

இந்தியா

தெற்காசியாவின் கிழக்கில் அமைந்துள்ள நாடுகளில் இந்தியா வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த ஒரு நாடாகும். உலகின் முதல்

மனிதச் சமுதாயம் இங்குதான் தோன்றியது என்பதற்குப் பல சான்றுகள் இன்று கூறப்படுகின்றன. உலகின் முதல் மொழி தமிழ் என்றும், தமிழ் பேசிய முதல் சமுதாயம் தமிழர் (திராவிடர்) என்றும், உலகின் முதல் நாகரிகமான சிந்துவெளி நாகரிகம் மொழி அடிப்படையில் திராவிட நாகரிகம் என்றும் காணப்படுகிறது.

முதல் மனிதன் கிழக்கே

முதல் மனிதன் தெற்காசியாவின் கிழக்கே இந்தியாவில்தான் படைக்கப்பட்டான் என்பதற்கும், இங்கிருந்து தான் மனுக்குலம் பெருகத் தொடங்கிற்று என்பதற்கும் அனேக சான்றுகள் இன்று கூறப்படுகின்றன.

தெற்காசியா அதிலும் குறிப்பாக இந்தியா, பாபிலோனியா, பாலஸ்தீனா ஆகிய நாடுகள் உலகிலேயே வரலாற்று முக்கியத்துவம் மிகுந்தவை என்பதில் சந்தேகமில்லை. இந்நாடுகளுக்கிடையே தொன்று தொட்டே நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன.

சிந்துவெளி மக்கள் கிழக்கிலிருந்து மேற்கே

கிழக்காசியாவில் உருவான இந்தத் திராவிட நாகரிகம் மேற்காசியாவில் பரவி சுமேரியன் நாகரிகம் என்றும், அங்கிருந்து பாலஸ்தீனம் வழி ஆப்பிரிக்காவில் பரவி எகிப்து நாகரிகம் அல்லது நைல் நாகரிகம் என்றும் அழைக்கப்பட்டது என்று இந்நாட்களில் ஆராய்ச்சியாளர்களால் கூறப்படுகிறது. மேலே குறிப்பிட்ட மூன்று நாகரிகங்களுக்கும் மிக நெருங்கிய ஒற்றுமை காணப்படுவது குறிப்படத்தக்கதாகும்.

உலகப்பெரு மதங்கள்

உலகில் தோன்றிய எல்லா மதங்களும் ஆசியா கண்டத்தில் அதிலும் குறிப்பாகத் தெற்காசியாவிலேயே தோன்றியுள்ளன என்பது நமக்குப் பெருமைக்குரிய ஒன்றாகும். உலகப்பெரும் மதங்களான யூத மதம், கிறிஸ்தவம், சௌராஷ்டிற மதம், புத்த மதம், சமண மதம், இஸ்லாமிய மதம், இந்து மதம் என்று அழைக்கப்பட்ட சைவ, வைணவ மதங்கள், சீக்கிய மதம் ஆகிய அனைத்து மதங்களும் தெற்காசியாவி லேயே தோன்றியவையாகும். தெற்காசியாவின் மேற்கிலுள்ள மத்திய தரைக் கரையோர நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையே பல நிலைகளில் நெருங்கிய உறவு இருந்து வந்ததற்கான பற்பலச் சான்றுகள் இன்று கிடைத்திருக்கின்றன.

இந்திய மதங்களைக் குறித்த ஆராய்ச்சி

உலகப் பெருமதங்களைக் குறித்து, அதிலும் குறிப்பாக இந்தியா வில் தோன்றிய மதங்களைக் குறித்து **டாக்டர். மு. தெய்வனாயகம்** அவர்கள் பல்லாண்டு காலமாக ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள் ளார்கள். அவ்வாராய்ச்சிகளின் பயனாகத் தமிழர் சமயம் உலக சமயங் களின் வளர்ச்சிக்கு அடிப்படையானது என்று பல சான்றுகளுடன் தெளிவுபடுத்தியுள்ளார்கள். மேலும் தமிழர் சமய முதல் உலக மானாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலை யில் தமிழர் சமய அறிமுகக் கருத்தரங்கு ஒன்று 2007 மே மாதம் 15, 16, 17, 18, 19 தியதிகளில் சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் டாக்டர். தெய்வனாயகம் அவர்கள் பேசிய விழிப்பூட்டும் சுவையான சில கருத்துக்கள் கீழ்வருமாறு:-

இந்தியத் தமிழர் சமய மாநாடு

வரலாற்றை அலசிப் பார்த்தால் 1940-ல் இந்தியத் தமிழர் சமய மாநாடு என்று ஒரு மாநாடு சென்னைப் பச்சையப்பா கல்லூரியில் நடத்தியிருக்கிறார்கள். அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய மறைமலையடிகள் ஆற்றிய தலைமை உரையைத் தமிழர் மதம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். பின்பு 1972-ல் தேவநேயப் பாவாணர் தமிழர் மதம் என்ற தலைப்பில் வேறொரு நூல் வெளியிட்டிருக்கிறார்கள். சைவ வைணவ சமயங்கள் கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்பு தான் தமிழகத்தில் எழுந்திருப்பதை நாம் பார்க்கின்றோம். அதற்கு முன் இந்தியாவில் இருந்த சமயங்கள் சமணமும் பவுத்தமும் ஆகும்.

ஆதன், அவ்வை தமிழ்நாட்டில்

உலகின் மிகப் பழமையான பெயர்கள் தமிழ்நாட்டில் இருந்தி ருப்பதை பார்க்கமுடிகிறது. அவை ஆதன் அவ்வை என்பவை ஆகும். இந்தப் பெயர்களை பைபிளில் ஆதாம், ஏவாள் என்று சொல்லப்பட் டுள்ளது. குரானில் ஆதன், அவ்வை என்று கூறப்பட்டுள்ளது.

கடவுளுக்கு ஆதன் தந்தையார் என்ற பெயர்

ஆதன் அவ்வையைப் பற்றித் தமிழகத்தில் தமிழில் ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. கடவுளுக்கே பெயர் ஆதன் தந்தையார் என்பதாகும். பிசிர் என்ற ஊரில் வாழ்ந்த ஆதன் தந்தையார் பிசிராந் தையார் என வழங்கியதை நாம் பார்க்கிறோம். ஆதன் தந்தை என்று

கடவுளுக்கு ஏன் பெயர் வந்தது என்று நாம் சிந்தித்துப் பார்க்கும் போது தமிழ் மொழி பற்றிய மற்றொரு கருத்தும் எழுகிறது.

தமிழ் உலகின் முதல் மொழியா?

தமிழ் மொழி உலகின் முதல் மொழி என்று எழுதுகிற அறிஞர்கள் நம்மில் உருவாகிக் கொண்டு இருக்கிறார்கள். தேவநேயப்பாவாணர் எழுதியிருக்கிறார். சாந்தூர்சேகரன் எழுதி வருகிறார். உண்மையா இல்லையா என்பதை ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டுபிடிக்கலாம். தமிழ் மொழி உலகின் முதல் மொழி என்று உரிமை பாராட்டும்போது இன்றைக்குப் பழமையான மொழிகளில் தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைத்திருக்கிறது. ஏன் இப்போது அந்த அந்தஸ்த்து கிடைத்திருக்கிறது? அதற்கு முன்னால் அது செம்மொழி இல்லையா? இந்திய அரசாங்கம் இப்பொழுது அறிவிக்க என்ன காரணம்?

அரசியல் செல்வாக்கு

இப்போது தான் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் துணை இந்திய ஆட்சியாளர்களுக்குத் தேவைப்பட்டதாலும் இவர்கள் அனைவரும் சேர்ந்து தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கோரியதாலும் இப்போது கிடைத்துள்ளது. இதிலிருந்து என்ன தெரிகிறது? அரசியல் செல்வாக்கு நம்மிடம் இல்லாத காரணத்தால் நம்முடைய மொழிக்கோ, நம்முடைய இனத்துக்கோ, நம்முடைய பண்பாட்டிற்கோ, சம்பத்துக்கோ ஒரு அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை என்பதை இப்போது பார்க்கிறோம்.

அடிமைப்படுத்தப்பட்ட தமிழர்

தமிழர்கள் ஆயிரவருடங்களுக்கு மேலாக சாளுக்கியர்களாலும், நாயக்கன்மார்களாலும், இஸ்லாமியராலும், ஆங்கிலேயர்களாலும் ஆளப்பட்டார்கள். இப்போதும் இந்தி பேசுகிற மக்களுடைய அரசியல் செல்வாக்குக்குள்ளாக நாம் இருக்கிறோம். ஆகவே தமிழர் சமயம் மற்றும் தமிழர் மேன்மைகள் அனைத்தும் மறைந்து கிடக்கின்றன. இப்போது அவற்றை வெளியே கொண்டு வருகிறோம்.

சிந்துவெளி மக்களின் ஆன்மீகச் சிந்தனை

சிந்து வெளியிலிருந்த தமிழர்களுடைய ஆன்மீகச் சிந்தனை தான் பைபிள் ஆகவும், குர்ரானாகவும், சைவமாகவும், வைணவமாகவும் உருவாகியிருக்கிறது. இந்த வரலாற்றைக் குறித்துத்தான் இந்த

அறிமுகக் கருத்தரங்கில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு ஆராய்ச்சி அறிஞர்களால் விவாதிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இதை உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும்.

ஆதாம் ஏவாள் வாழ்ந்த இடம்

ஆதாம் ஏவாள் என்ற முதல் மனிதர்கள் வாழ்ந்த இடம் எது என்று பார்க்கும்போது தமிழகத்தோடு மிகவும் தொடர்பில் இருக்கிறது. ஆதாம் ஏவாள் பிள்ளைகளுடைய கல்லறைகள் எங்கிருக்கிறது என்று கேட்டால், என்னய்யா உலகம் தோன்றியபோது தோன்றிய மனிதனுடைய கல்லறைகள் எப்படி இருக்க முடியும் என்று தான் சாதாரணமாக நினைப்போம்.

ஆதாமின் பிள்ளைகளின் கல்லறைகள்

40 அடி நீளத்தில் நம் நாட்டில் ஒரு இடத்தில் இரண்டு கல்லறைகள் 'ஆதாம் ஏவாள் பிள்ளைகளின் கல்லறைகள்' என்ற போர்டுகளுடன் நீண்ட நெடுங்காலமாகப் பாதுகாத்து வரப்படுகிறது. இது தமிழகத்தில் எங்கே இருக்கிறது என்று கேட்டால் இராமேஸ்வரம் ரெயில் நிலையத்திற்கு ஒரு கிலோமீட்டர் தொலைவிலேயே இருக்கிறது. இது யார் பாதுகாப்பில் இருக்கிறது என்று கேட்டால் நம் நாட்டின் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர். அப்துல்கலாம் அவர்களின் குடும்பப் பாதுகாப்பில் இருந்து வருகிறது. இது எத்தனை பேருக்குத் தெரியும்? தெரியாமல் மறைந்து கிடக்கிறது. ஆகவே இதெல்லாம் வெளிவரவேண்டுமல்லவா?

மேலும் சில 40 அடி கல்லறைகள்

அந்த கல்லறைகள் இரண்டும் 40 அடி நீளத்தில் இருக்கின்றன. 40 அடி நீளத்தில் மனிதர்கள் இருந்தார்களா? நாம் ஆராய்ச்சி பண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் இதுபோன்ற கல்லறைகள் வேறு எங்கெங்கு உள்ளன? என்று பார்த்தால் இராமேஸ்வரத்தில் உள்ளது போன்ற ஒரு கல்லறை தங்கச்சி மடத்திலும் உள்ளது. அதுபோல தொண்டியிலும் ஒரு 40 அடி கல்லறை இருக்கிறது. அதேபோல் தஞ்சாவூர் பக்கத்தில் ஒரு 40 அடி கல்லறை இருக்கிறது.

இலங்கையிலும் 40 அடி கல்லறை

உலகத்தில் வேறு எங்காவது 40 அடி கல்லறை இருக்கிறதா என்று பார்த்தால் இலங்கையில் திரிகோண மலைக்குப் பக்கத்தில் ஒரு குன்றின்மேல் ஒரு 40 அடி கல்லறை இருக்கிறது.

ஆராய்ச்சிகள் தேவை

இந்தக் கல்லறைகள் ஏன் வைத்திருக்கிறார்கள்? அல்லது சும்மா இவைகளை வைத்திருக்கிறார்களா? உள்ளே எலும்பு இருக்கிறதா? 40 அடி மனிதர்கள் இருந்தார்களா? இவை எல்லாம் ஆராயப்பட வேண்டியவைகள். தமிழர்களுடைய சொத்துக்கள் பல மறைந்து கிடக் கின்றன. காவிரிப் பூம்பட்டிணம் கடலுக்குள் இருக்கிறது. இவைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். மாநில மத்திய அரசுகள் முன்வரவேண்டும். முக்கியமாக மத்திய அரசு இவை களைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது.

ஆதம் பாதம்

இலங்கையிள்ள ஒரு மலையின் உச்சியில் ஒரு பாதம் இருக் கிறது. அதின் பெயர் ஆதம் பாதம். 40 அடி உயரத்தில் ஒரு மனிதன் இருந்தால் அவன் பாதம் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு நீளத்தில் அது இருக்கிறது. ஒரே ஒரு பாதம்! இதைக் கிறிஸ்தவர்களும் இஸ்லா மியர்களும் ஆதம் பாதம் என்கிறார்கள். இந்துக்கள் சிவனடி பாதம் என்கிறார்கள். பவுத்தர்கள் ஸ்ரீபாதம் அல்லது திருப்பாதம் என்கிறார்கள். இப்படி ஒவ்வொரு சமயத்தவரும் உரிமை பாராட்டக் காரணம் என்ன? இலங்கையில் 2000 வருடங்களுக்கு மேலாகப் பவுத்தர்கள் தான் ஆட்சி பண்ணுகிறார்கள். அவர்கள் அதை ஸ்ரீபாதம் என்கிறார்கள். ஆனால் மூன்று பெயர்கள் எப்படி வந்தது? மூன்று பெயர்களையும் பவுத்தர்கள் எப்படி அனுமதித்தார்கள்? அது முன்னாலே இருந்ததா என்பவைகள் ஆராய்ச்சி பண்ணவேண்டியவையாகும்.

ஆதாம் துரத்திவிடப்பட்ட இடமா?

ஆதாம் ஏவாளை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப் பட்ட போதே இறக்கி விடப்பட்ட இடம் இது என்று சொல்லுகிறார்கள். ஏன் சிவனடிபாதம் என்கிறார்கள்? ஆதி சிவன் முதல் மனிதனை குறிக் கிறது. பரம சிவன் என்பது இறைவனைக் குறிக்கிறது. இறைவனால் உருவாக்கப்பட்டவன் தான் ஆதி சிவன், அப்படியானால் ஆதி சிவன் இறைவனால் படைக்கப்பட்டவனே தவிர பிறந்தவன் அல்ல.

பிறவாயாக்கைப் பெரியோன்

ஆதாம் பிறந்த மனிதன் அல்ல. அவன் படைக்கப்பட்டவன். தமிழ் இலக்கியங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலாக ஆதாமுக்கு தமிழ்நாட்டில் கோயில் இருக்கிறது. அதைச் சிலப்பதிகாரம் சொல்லுகிறது. அந்தக் கோயிலின் பெயர் பிறவா

யாக்கைப் பெரியோன் கோயில் என்பதாகும். இவை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏவாளுக்கும் கோயில்

ஆதாமைப்போல ஏவாளும் வழிபடப்பட்டிருக்கிறாள். இன்றும் கன்னியாகுமாரி திருநெல்வேலி மாவட்டங்களில் ஔவை வழிபாடு இருப்பதை பார்க்கிறோம். பெண்கள் மட்டும் இருந்து வழிபடக்கூடிய ஒரு ரகசிய வழிபாடு இது. பழமையான கல்வெட்டுக்கள் குகைக் கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் ஆதாம் பெயரை நாம் பார்க்கிறோம்.

தமிழ் முதல் மொழி என்பதை மறுப்பது எப்படி?

முதல் மனிதன் பேசிய மொழி எது என்ற கேள்வியைக் கேட்டால் தமிழ்மொழி என்று சில அறிஞர்கள் சொல்கிறார்கள். நாம் அதை மறுக்க வேண்டுமானால் அதற்குக் காரணகாரியங்கள் வேண்டும். இன்னொரு மொழியை கண்டுபிடித்து அதுதான் முதல் மொழி என்று நிரூபிக்கும் பொழுது இதைத் தள்ளிவிடலாம். இன்றைக்கு இருக்கிறதில் பழமை யான மொழிகள் எந்த மொழிகளிலிருந்து வந்திருக்கிறது, அவைகளின் அடிப்படைகள் என்ன என்று பார்க்கவேண்டியது ஆராய்சியாளர்களின் கடமையாகும்.

சிந்துவெளி எழுத்துக்கள்

சிந்துவெளி நாகரிகத்திலுள்ள எழுத்துக்களைத் தமிழ்நாட்டில் மயிலாடுதொறைக்குப் பக்கத்தில் நாம் பார்க்கிறோம். புதிய கற்கால கோடாரி ஒன்று கிடைத்திருக்கிறது. அதில் சிந்துவெளி எழுத்துக்கள் இருக்கிறது. இன்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

சிந்துவெளியில் சிவவழிபாடு

சிந்துவெளியிலிருந்த தமிழர்களுடைய ஆன்மீகச் சிந்தனை சிவ வழிபாடு. அந்தச் சிவ வழிபாட்டிலிருந்து சிவலிங்க வழிபாடு வந்தது. சிவம் என்றால் அன்பு. அன்பு வேறு சிவம் வேறு அல்ல. சிவ வழிபாடு என்றால் அன்பாகிய கடவுளை வழிபடுகின்ற வழிபாடு. சிவலிங்க வழிபாடு என்றால் அன்பாகிய கடவுளை வழிபடுவதற்கு ஒரு இடத்தில் அமைக்கப்பட்ட ஒரு அடையாளம்.

சிவலிங்க வழிபாடு

மனிதன் கடவுளைச் சிந்திக்கிறான். படுத்துத் தூங்குகிறான். காட்சி காண்கிறான். அந்த இடத்தில் கடவுள் இருக்கிறார் என்று

நினைக்கிறான். மறுபடியும் வந்து அந்த இடத்தில் கடவுளைத் தொழுவதற்கு அடையாளமாக ஒரு கல்லை நாட்டுகிறான். மற்ற கற்களிலிருந்து அதைப் பிரித்தறிய இக்கல்லுக்கு எண்ணை வார்க்கிறான். இதையெல்லாம் யாக்கோபின் வாழ்க்கையில் பைபிளில் பார்க்கிறோம். நாட்டப்பட்ட கல்லுக்குச் சிவலிங்கம் என்று பெயர். ஏனென்றால் அன்பாகிய கடவுளைச் சந்தித்த இடத்திற்கு அடையாளமாக அல்லது ஞாபகார்த்தமாக நாட்டப்பட்டது. மறுபடியும் வந்து அந்தகல்லை வணங்கவில்லை, இறைவனைத் தான் வணங்குகிறான். இடச் சிறப்புக்காகத்தான் கல் நாட்டப்படுகின்றது.

ஆன்மவியல்

இன்று உலகில் மெய்யியல் இருக்கிறது. அறிவியல் இருக்கிறது. இறையியல் இருக்கிறது. ஆனால் ஆன்ம இயல் இல்லை. அதாவது மனிதனுக்கு உள்ளிருக்கிற ஆறாவது அறிவுக்குக் காரணமானது 'மனிதம்'. அதுதான் ஆன்மா என்று குறிக்கப்படுகிறது. அதாவது Soul. அந்த ஆன்மாவைப்பற்றி அறிதல் ஆன்மவியல் அல்லது Study of Soul. அதற்கு Soulology என்ற புதுப்பெயர் ஆங்கிலத்தில் உருவாக்கப் படுகிறது.

திணை இலக்கணம் சிறப்பு

உலக மொழிகளில் பலவற்றிற்கு இல்லாத சிறப்பு தமிழ் மொழியில் இருக்கிறது. தமிழ்மொழியில் திணை இலக்கணம் என்று ஒரு இலக் கணமே இருக்கிறது. ஆறாவது அறிவுக்குக் காரணமான உயர்ந்த ஒழுக்கத்தை உடையவர்கள் கடவுளும் மனிதனும் மட்டுமே. அதுதான் உயர்திணை. இந்த உயர்திணை (ஆறாவது அறிவு) இல்லாத மற்ற உயிரினங்கள், உயிரற்ற பொருட்கள் எல்லாம் அஃறிணை என்று சொல்லப்படுகின்றன. உயிருள்ளவைகளையும் உயிரற்றவைகளையும் இரண்டாகப் பிரித்து மனிதனுடைய சிறப்பைச் சொல்லுவது தமிழ் மொழியில் மட்டும் தான். மற்ற மொழிகளில் அது இல்லை.

அகப்பொருள்

இது தமிழ் மொழியின் தனிச்சிறப்பாகும். தமிழ் மொழியில் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு இலக்கணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அகத்தில் அதாவது உள்ளத்தில் பேரகமாகிய இறைவனோடு இணைந்து அனுபவிக்கும் இன்பம்தான் அகப்பொருள் என்று விளக்கப்படுகிறது. புறத்தில் உள்ளது புறப்பொருள். அது புறத்திணை என்று விளக்கப்படுகிறது. அகத்திணை, புறத்திணை, அகப்பொருள், புறப்பொருள் இவ்விரண்டுக்கும் சேர்த்துத்தான் பொருள் இலக்கணம்

அமைந்துள்ளது. இது உலகத்தில் வேறு எந்த மொழிகளிலும் இருப்பதாகத் தெரியவில்லை. இது தமிழர்களின் உயர்ந்த ஆன்மீகச் சிந்தனையையே காட்டுகிறது. ஆனால் தமிழன் அடிமைப்பட்டுக் கிடக்கிற படியால் இவை எல்லாம் மறைந்து கிடக்கின்றன.

விவிலியத்தில் உன்னதப்பாட்டு

பொருள் இலக்கணம் கடவுளோடு இணைந்து அனுபவிக்கிற இன்பம் என்று பார்த்தோம். விவிலியப் பழைய ஏற்பாட்டில் உன்னதப் பாட்டு அந்த நிலையில் விளக்குவதாகும். கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள இணைப்பு புதிய ஏற்பாட்டில் வரும்போது கூட திருச்சபை மணவாட்டி என்றும் இயேசுக்கிறிஸ்து மணவாளன் என்றும் கூறப் படுகிறது.

திருக்குறளில் இன்பத்துப்பால்

திருக்குறளை எடுத்தால் இன்பத்துப்பாலில் அதைத்தான் சொல்லுகிறார். இன்பத்துப்பால் வெறும் இல்லற வாழ்வோடுமட்டு மல்ல, அதைத்தாண்டி இறைவனும் ஆன்மாவும் இணைந்து அனுப விக்கிற அந்த இன்பத்தை அதாவது அகப்பொருள் இன்பத்தைக் கூறுவது ஆகும். அண்மையில் வாழ்ந்த ராமலிங்க சுவாமிகளுடைய ஆறாம் திருமறை படிக்கும்போது அவர் இறைவனோடு அனுபவிக்கிற இன்பத்தை எவ்வளவு சுவைத்திருக்கிறார் என்பதை இறைவனை அகத்தும் புறத்தும் புணர்ந்தோனே என்று பாடியுள்ள வரிகள் வெளிப்படுத் துகிறது. இதைச் சாதாரணமாக எவரும் புரிந்து கொள்ள முடியாது.

உரையின் சிறப்பு

மேலே கூறப்பட்ட கருத்துக்கள் சுவைமிக்க செய்திகளாக விளங்குகின்றன. ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் மட்டுமல்ல அண்டை நாடுகளும் இந்தியாவின் பகுதிகளாகக் கருதப்பட்டது. அத்தேசம் முழுவதும் பேசப்பட்டு வந்த மொழி தமிழ்மொழியாகும். இக்கருத்தினை டாக்டர் அம்பேத்கார் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். மட்டுமல்ல சிந்துசமவெளி நாகரிகம் மொழி அடிப்படையில் திராவிட (அதாவது தமிழ்) நாகரிகம் என்றே கூறப்படுகிறது.

தமிழர் சிறப்பு

டாக்டர் தெய்வனாயகம் அவர்களின் உரையாடலில் தமிழின் சிறப்பு, தமிழர்களின் சிறப்பு ஆகியவை விளக்கப்பட்டன. இன்று தமிழர்கள் தென் இந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் தான் வசிக்

கிறார்கள். தமிழர்களின் சிறப்புகள் யாவும் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றன. மட்டுமல்ல தமிழர்களின் சிறப்புகளுக்கு வேற்றவர்கள் உரிமை பாராட்டுகின்றனர். இந்நிலையில் மறைக்கப்பட்ட உண்மை களனைத்தையும் வெளிக்கொண்டு வருவது மிகவும் அவசியமாகும்.

ஆதம் பாலம்

முற்காலத்தில் இலங்கை இந்தியாவோடு இணைக்கப்பட்டிருந் ததாக கருதுவதற்கு இடமுண்டு. ஆதிமனிதன் ஆதாம் வீழ்ச்சிக்குப்பின் ஏதேன் தோட்டத்திற்குக் கிழக்கே துரத்தப்பட்டானென்று விவிலியத்தில் வாசிக்கிறோம். தென் இந்தியாவுக்குக் கிழக்கிலுள்ள இலங்கையில் ஓர் மலை உச்சியில் ஆதம் பாதம் இருப்பதாகப் பார்த்தோம். ஏதேனி லிருந்து கிழக்கே இலங்கைக்குச் சென்ற பாதை தொன்றுதொட்டே **ஆதம் பாலம்** என்று அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. அது இந்நாட்களில் கரைந்துபோய் ஓர் மணல் திடிலாகக் காணப்படுகிறது. இதை ஒரு கூட்டத்தார் ராமர்பாலம் என்ற புதுப்பெயரில் மக்களை திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள்.

சேது சமுத்திரம்

முதல் மனிதனான ஆதாமுக்குக் காயீன் ஆபேல் என்ற இரு மக்களில் காயீன் ஆபேலைக் கொன்று போட்டானென்றும் அதற்குப் பின் ஆதாமுக்கு பிறந்த நல்ல மகனின் பெயர் சேத் என்றும் காணப் படுகிறது. ஆதாமின் நல்ல சந்ததியான சேத்தின் பெயரால் அறியப் படுவதே சேது சமுத்திரம் என்று கூறப்படுகிறது.

குமாரனாகிய கடவுள் மேற்காசியாவில்

இந்தியாவிலிருந்து மேற்கே சென்ற ஜனம் பாபிலோனிலிருந்து பல்வேறு தேசங்களுக்குப் பிரிந்து சென்றதாகக் பார்க்கிறோம். தெற்காசியாவின் மேற்குப் பகுதியில் அதாவது பாலஸ்தீனா நாட்டில் கடவுள் மனிதனாக அவதரித்தார் என்பது வரலாறு. கடவுள் மனிதனாக பிறந்த செய்தி அந்நேரமே கீழ்த்தேசத்துக்கு ஒரு விசேஷித்த நட்சத் திரத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. மேற்கு ஆசியாவில் பிறந்து வளர்ந்து உலக மக்களை இரட்சிப்பதற்காகத் தம்மையே பலியாக்கிய தேவ குமாரனாகிய இயேசு வல்லமையோடு உயிர்த்தெழுந்து மீண்டும் பரத் துக்கு எழுந்தருளினார். இந்த வரலாற்றுச் செய்திகள் மேற்காசியா வில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டு புதிய ஏற்பாட்டுப் புத்தகமாக

விவிலியத்தில் காணப்படுகிறது. குமாரனாகிய இயேசுவின் வாழ்க்கை வரலாறு 11, 12 அதிகாரங்களில் தெளிவாக விளக்கப்படுகிறது.

இந்தச் செய்திகள் அனைத்தும் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே இந்தியாவுக்கும் தோமா மூலம் அறிவிக்கப்பட்டது. அதுவே ஆதி இந்தியக் கிறிஸ்தவம். அதைத் திருவள்ளுவர் தமிழ் மொழியில் திருக்குறளாக எழுதினார். எனவே திருக்குறள் (கிழக்காசியாவில்) இந்தியாவில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட விவிலியம் எனக் கூறலாம். திருக்குறளின் அடிப்படையில் அதாவது ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் உருவானதே சைவ, வைணவ மதங்கள். (இவைகள் ஆராய்ச்சி அடிப்படையிலான சத்தியங்கள் ஆகும்).

அதிகாரம் : 3

படைப்பின் வரலாறு - விவிலியத்தில்

உலகில் படைக்கப்பட்ட முதல் பெற்றோரைப் பற்றியும் படைப் பின் வரலாறு பற்றியும் விரிவாக விவிலியத்தில் காண்கிறோம்.

உலகப் படைப்பு

கடவுள் வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள அனைத் தையும் வார்த்தையினால் உண்டாக்கினார் என்று ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் காணலாம்.

முதல் மனிதப் (ஆதாமின்) படைப்பு

“தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவாத்துமாவானான். தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்”(ஆதி. 2 : 7 - 8).

தேவக் கட்டளை

“தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி : நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்” என்று கட்டளை யிட்டார். (ஆதி. 2 : 16, 17)

முதல் மனுஷி - ஏவாளின் படைப்பு

"....தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரை அடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப் பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள்" என்றான் *(ஆதி 2 : 21 - 23).*

வெவ்வேறு விதமாய் உண்டாக்கப்பட்டன

இவ்வாறு மூன்று படைப்புகளும் வெவ்வேறு விதமாய் உண்டாக்கப்பட்டன என்று விவிலியத்தின் ஆதியாகமத்திலுள்ள முதல் இரண்டு அதிகாரங்களில் விளக்கப்படுகிறது.

படைப்பில் தேவ மகிமை

முதல் மனிதனாகிய ஆதாம், ஸ்திரீயாகிய ஏவாள் ஆகிய இருவரும் தேவ மகிமையைத் தரித்திருந்தபடியால் அவர்கள் நிர்வாணிகளாய் இருந்தும் வெட்கப்படவில்லை. அவர்களால் ஆளப்பட்ட உலகமும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

கடவுளின் ஆசீர்வாதம்

"தேவன் அவர்களை நோக்கி : நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்படுத்திச் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" *(ஆதி. 1:28).* இதுவே படைக்கும்போது காணப்பட்ட தூய நிலை.

தூய நிலையிலிருந்து பாவநிலைக்கு

தூய நிலையிலிருந்து ஒடுங்கி படைப்புகள் அனைத்தும் பாவமாகிய மலத்தில் வீழ்ந்து சாபத்துக்குள்ளான வரலாறு குறித்து விவிலியம் ஆதியாகமம் 3 - ம் அதிகாரத்தில் இவ்வாறு விளக்குகிறது:-

சாத்தானாகிய சர்ப்பத்தின் வஞ்சனை

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது (தீயவன்) தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது" (ஆதி. 3 : 1).

ஸ்திரீயின் கூற்று

"ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து : நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்துத் தேவன் நீங்கள் சாகாத படிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்". (ஆதி. 3 : 2, 3).

சாத்தானின் பொய்

"அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி : நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப் படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது". (ஆதி. 3 : 4, 5)

ஸ்திரீயின் தோல்வி

***"அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய்** இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருசனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப் பட்டது. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலை களைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணி னார்கள்". (ஆதி. 3 : 6, 7).*

தேவனின் சந்திப்பு

"பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தரு டைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்

துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன், நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன் என்றான்". (ஆதி. 3 : 8).

போக்குச் சொற்கள்

"அப்பொழுது அவர் : நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம் : என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி : நீ இப்படி செய்தது என்ன? என்றார். ஸ்திரீயானவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது; நான் புசித்தேன் என்றாள்" (ஆதி. 3 : 11, 12, 13).

ஸ்திரீயின் வித்து சாத்தானின் தலையை நசுக்குவார்

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து : நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும், சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய்; நீ உன் வயிற்றினால் நகர்ந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய். உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் (ஸ்திரீயின் வித்து) உன் தலையை நசுக்குவார்" (ஆதி. 3 : 14 -15).

மனிதனின் வீழ்ச்சி

மேலும் "அவர் ஸ்திரீயை நோக்கி : நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருசனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமை நோக்கி : நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்துப் புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்" (ஆதி. 3 : 16 -17) என்றார்.

ஜன்மபாவம்

இவ்வாறு மகிமையாய் படைக்கப்பட்ட மனிதன் பாவத்தில் வீழ்ச்சியடைந்ததினால் மகிமையை இழந்து சாபத்துக்குள்ளானான். அவன் மட்டுமல்ல; அவன் சந்ததிகளும், உலகமும் கூட சபிக்கப்பட்ட நிலையில் ஆயிற்று.

ஒரே மனிதனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே அவன் சந்ததியாகிய மனுக்குலம் முழுவதும் பாவத்துக்குள் ஆனது. இது பிறப்பிலேயே தொடர்ந்துவரும் ஜென்மபாவம் என்று அழைக்கப்படுகிறது.

அதிகாரம் : 4

படைப்பின் செய்தி

(திருக்குறள், சைவ சித்தாந்தங்களில்)

திருக்குறள் மற்றும் சைவ சித்தாந்த நூல்களில் விவிலியம் கூறும் வரலாறுகள் அனைத்தும் செய்திகளாகக் கொடுக்கப்பட்டிருப் பதை காணமுடிகிறது.

திருக்குறள் மற்றும் சைவ சித்தாந்த நூல்கள்

தோமாவின் நற்செய்தியின் அடிப்படையில் எழுதப்பட்டவை களே திருக்குறள் மற்றும் சைவ சித்தாந்த நூல்கள். ஆனால் அந்நூல்க ளுக்கு உரை ஆசிரியர்கள் தவறான உரைகள் எழுதி விட்ட காரணத்தால் மக்கள் உண்மை அறியாமல் திண்டாடுகிறார்கள்.

முனைவர் மு. தெய்வநாயகம் M.A., Ph.D. அவர்கள்

இந்நிலையில் சமீபகால ஆராய்ச்சிகளின் அடிப்படையில் திருக்குறள், சிவஞானபோதம் போன்ற நற்செய்தி நூல்களுக்கு டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் சரியான உரைகளும் விளக்கங் களும் வெளியிட்டுள்ளார்கள். இந்நூலில் தரப்பட்டுள்ள விளக்கங்கள் அதன் அடிப்படையிலானவைகளே.

சைவ சித்தாந்தம்

சைவ மதத்தின் கொள்கைகள் தத்துவங்கள் ஆகியவை சைவ சித்தாந்தம் என்று அழைக்கப்படுகிறது. சைவ சித்தாந்த நூல்கள் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் என்றும் அழைக்கப்படுகிறது. சைவ சித்தாந்த சாஸ்திரங்களின் அடிப்படை சாஸ்திரமாய் விளங்குவது மெய்கண் டாரின் **'சிவஞான போதம்'** ஆகும். சிவஞான போதம் சூத்திரங்களால்

ஆன நூல் ஆகும். மெய்கண்ட தேவநாயனார் விவிலியக் கருத்துக் களைச் சாறுபிழிந்து சுருக்கமாகச் சிவஞானபோதத்தின் 12 சூத்திரங் களில் அடக்கியுள்ளார். இவை அனைத்தும் 40 வரிகளில் தொகுக்கப் பட்டிருப்பது வியப்புக்குரியதாகும்.

படைப்பு குறித்து சிவஞானபோதம்

கடவுள் உலகத்தையும் முதல் மனிதனையும் முதல் ஸ்திரீயையும் படைத்த விதத்தைக் குறித்து மெய்கண்டார் சிவஞானபோதம் முத லாம் சூத்திரத்தில் குறிப்பிடுகிறார்.

படைப்புகள் பாவத்தில்

முதலாம் சூத்திரம் கடவுளின் படைப்பைக் குறித்து மட்டு மல்ல, கடவுளால் தூய நிலையில் படைக்கப்பட்ட படைப்புகள் அந்தத் தூய நிலையை இழந்து பாவத்தில் வீழ்ச்சியடைந்ததைக் குறித் தும் கூடக் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

1. கடவுளே படைப்புக்குக் காரணர். (படைப்புகள் தானாய் தோன்றியவை அல்ல)
2. கடவுள் முதல் மனிதனையும், முதல் ஸ்திரீயையும், உலகத்தையும் மூன்று வெவ்வேறு நிலைகளில் படைத்தார்.
3. படைப்புகள் யாவும் படைக்கப்பட்ட நிலையில் தூய நிலையில் இருந்தன.
4. படைப்புகள் யாவும் தூயநிலையிலிருந்து மலமாகிய பாவத்தில் விழுந்துவிட்டன.
5. இவைகளைக் குறித்துப் புலவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சிவஞானபோதம் - சூத்திரம் : 1

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

பதவுரை

அவன் : முதல் மனிதனாகிய ஆதாம்
அவள் : முதல் ஸ்திரீயாகிய ஏவாள்

அது	:	உலகம்
எனும் அவை	:	எனப்பட்ட அவை
மூவினைமையின்	:	மனிதனைப் படைத்தல், ஸ்திரீயைப் படைத்தல், உலகத்தைப் படைத்தல் ஆகிய மூன்று வெவ்வேறு செயல்களினால்
தோற்றிய திதியே	:	படைக்கப்பட்ட நிலையில்
ஒடுங்கி	:	தூய நிலையிலிருந்து ஒடுங்கி
மலத்து உளதாம்	:	பாவத்தில் வீழ்ந்ததாகிய
அந்தம்	:	தூய நிலையின் முடிவே
ஆதி	:	பாவநிலையின் ஆரம்பம்
என்மனார்	:	என்று வழிவழியாகக் கூறுவர்
புலவர்	:	வேத அறிவில் புலமை பெற்றோர்

கருத்துரை

அவனாகிய ஆதாம், அவளாகிய ஏவாள், அதுவாகிய உலகம் இவை மூன்றையும் இறைவன் மூன்று வெவ்வேறு செயல்களால் படைத்தார். அவை படைக்கப்பட்ட தூய நிலையிலிருந்து ஒடுங்கிப் பாவத்தில் வீழ்ச்சியடைந்தது. இது தூய நிலையின் முடிவும் பாவ நிலையின் தொடக்கமும் ஆயிற்று என்று புலமை பெற்றோர் வழிவழி யாகக் கூறிவருகின்றனர்.

விளக்க உரை

கடவுள் முதல் மனிதனாகிய ஆதாமையும், முதல் பெண் ஆகிய ஏவாளையும் உலகத்தையும் மூன்று வெவ்வேறு முறைகளில் படைத்தார். அவைகள் படைக்கப்பட்ட நிலையில் தூய்மையாய் இருந்தன. ஆனால் பின்பு அவைகள் மலமாகிய பாவத்தில் வீழ்ச்சியடைந்துவிட்டன. பரிசுத்த விவிலியத்தில் விரிவாய் விளக்கப்பட்டிருக்கும் இந்தப் படைப்பின் வரலாற்றுச் செய்தியை மெய்கண்டார் தமது சிவஞான போதம் முதல் சூத்திரத்தில் மிகச்சுருக்கமாக விளக்கியுள்ளார்.

விவிலியக் கருத்துக்கள்

மெய்கண்டார் தமது சூத்திரத்தை 'என்மனார் புலவர்' என்று கூறி முடிக்கின்றார். வேத அறிவில் புலமைபெற்ற அந்தப் புலவர்கள் கூறியிருப்பதை அவர் நன்கு அறிந்து அவை மெய் என்று கண்டு கொண்

டார். அவர் சந்தேகமில்லாமல்மெய் என்று கூறியிருப்பது விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களே ஆகும். நாம் முன்னால் பார்த்த விவிலியச் செய்தியைப் பார்த்து விட்டால் முதல் சூத்திரம் எந்தவித இடர்ப்பாடுகளுக்கும் இடையில்லாதபடி புரிந்துவிடும்.

அவன் அவள் அது

அவன் என்பது ஆதாம் என்றும் அவள் என்பது ஏவாள் என்றும் அது என்பது உலகம் என்றும் அறிந்துகொண்டால் மட்டுமே 'மூவினைமையின் தோற்றிய' என்ற அடுத்த பகுதியோடு சரியாக இசைத்துவிடமுடியும். அதாவது ஆதாம், ஏவாள், உலகம் இவை மூன்றும் மூன்று வெவ்வேறு முறைகளில் தோற்றுவிக்கப்பட்டன. விவிலியக் கருத்துப்படி இதை எவ்வித இடர்ப்பாடுமின்றிப் புரிந்து கொள்ளலாம்.

மூன்று வினைகள்

அதாவது ஆதாம் மண்ணினால் செய்யப்பட்டு கடவுளின் ஜீவ சுவாசத்தை ஊதி தோற்றுவிக்கப்பட்டான்; ஏவாள் ஆதாமிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பினால் தோற்றுவிக்கப்பட்டாள்; உலகம் கடவுளின் வார்த்தையால் தோற்றுவிக்கப்பட்டது. மூன்றும் மூன்று வெவ்வேறு வினைகளில் என்பதில் எவ்விதச் சிக்கலும் இல்லை.

தவறான உரைகள்

மேற்கண்ட, மெய்கண்ணடாரின் கருத்துக்களை அறியாது அல்லது அதை வேண்டுமென்றே புறக்கணிக்க முனையும் உரை ஆசிரியர்களுக்கு முதல் சூத்திரத்திற்குச் சரியான விளக்கம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே தான் அவன் அவள் அது என்பதை ஆண், பெண், அலி என்று எடுத்துக்கொண்டு 'மூவினைமையின் தோற்றிய' என்பதோடு இணைக்கமுடியாமல் எதை எதையோ விளக்க முயல்கிறார்கள். இதுபோன்ற பொருத்தமற்ற வேறு விளக்கங்களும் பார்க்க முடிகிறது.

'தோன்றிய' என்று திரிக்கும் முயற்சி

கடவுளே படைத்தவர் என்பதை எதிர்க்கும் கூட்டத்தார் 'தோற்றிய' என்ற வார்த்தையை விளக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். ஏனென்றால் தோற்றிய என்று சொல்லும்போது தோற்றுவிப்பதற்கு

ஒருவர் இருக்க வேண்டும். அவர்கள் முதல் சூத்திரத்தை விளக்கும் போது 'தோற்றிய' என்பதற்குப் பதிலாக தோன்றிய என்று கூறி எல்லாம் தானாகவே தோன்றியது என்கிறார்கள்.

தூய நிலை நீடிக்கவில்லை

அவன், அவள், அது ஆகிய அவை படைக்கப்பட்டது நல்ல தூய நிலையில் ('திதி') ஆகும். ஆனால் அந்தத் தூய நிலை நீடிக்க வில்லை. தூய நிலையிலிருந்து ஒடுங்கி (மலத்துளதாம்) மலமாகிய பாவத்தில் விழுந்துவிட்டன. முதல் மனிதன் எவ்வாறு பாவத்தில் விழுந்தான் என்கிற வரலாறு விவிலியத்தில் விவரிக்கப்படுகிறது. முதல் சூத்திரம் படைப்பைக்குறித்தும் அந்தப் படைப்புக்கள் யாவும் பாவ மாகிய மலத்தில் வீழ்ச்சியடைந்த செய்தியைக் குறித்தும் மட்டும் சுருக்கமாகக் கூறுகிறது.

அந்தம் ஆதி

அந்த வீழ்ச்சி தூயநிலையின் அந்தமும் அல்லது முடிவும் பாவநிலையின் தொடக்கமும் ஆயிற்று. இது வீழ்ச்சியின் பயங்கர மான விளைவுகளைச் சுட்டுகிறது. அதாவது பரிசுத்த நிலையில் கடவு ளோடு கூட நித்தியகால வாழ்வுக்காகப் படைக்கப்பட்ட மனிதன் வீழ்ச்சியின் காரணத்தால் சந்ததி பரம்பரையாய் ஜன்மப் பாவத்துக்குள் ளாகி (சகச மலம்) கடவுளை விட்டு விலகி நித்திய ஜீவனை இழந்த வனாகி விட்டான். இந்த இழப்பை ஈடுகட்டவே கடவுள் இந்த உலகத் தில் மனிதனாகப் பிறக்கவேண்டியதாயிற்று.

வீழ்ச்சியடைந்த விதம்

சிவஞானபோதம் முதல் சூத்திரத்தில் ஆதிப் பெற்றோர் வீழ்ச்சி யடைந்த விதத்தைக் குறித்து விளக்கம் தரப்படவில்லை. சைவ சித்தாந்த பாடல்களில் ஒன்றான திரு உந்தியாரில் இதன் விளக்கம் தரப் படுகிறது.

திருவுந்தியாரில்

படைக்கப்பட்ட முதல் மனிதன் பாவத்தில் வீழ்ச்சியடைந் ததைக் குறித்து சைவசித்தாந்த சாஸ்திரங்களில் முதலாம் சாஸ்திரமான திருவுந்தியாரிலும் கூறப்பட்டுள்ளது. இதை இயற்றியவர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் என்பவராவார்.

அவர் கடவுளின் ஆற்றலைப் (கடவுளின் ஆவியை) பெற்றவர். அவர் தாம் கண்ட சத்தியங்களை ஆற்றலோடு அதாவது வல்லமையோடு 'உந்திப்பற', 'உந்திப்பற' என்று கூறி தம் அடிகளை முடிப்பார். பேருண்மைகளைக் கடவுளின் ஆவியின் ஆற்றலோடு இப்படி கூறியதால் அவர் 'திருவுந்தியார்' என்றே அழைக்கப்பட்டார். 'உந்திப்பற' என்பதற்கு ஊக்கமாய் சொல் அல்லது அடித்துப்பேசு என்பது பொருள்.

திருவுந்தியார் 41

"முக்தி முதற்கொடிக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீ பற
அப்பழம் உண்ணாதே உந்தீ பற" (41)

பொருள்

முக்தி நிலையாகிய தூய நிலையில் படைக்கப்பட்டவற்றுள் முதற்கொடியாகிய முதல் மனிதனில் மோகமாகிய பாவக் கொடி படர்ந்து அத்தியாகிய சாவுக்கனி பழுத்தது. எப்போதென்றால் 'அப்பழம் உண்ணாதே' என்ற கூற்றை மறுத்தபோதாகும். இதை ஊக்கமாய் எடுத்துக் கூறு.

விளக்கம்

இப்பாடலிலும் முதல் மனிதனின் வீழ்ச்சி சுட்டிக்காட்டப்படுகிறது. இங்குச் சுட்டப்படுவது விவிலியத்தில் கூறப்படும் வரலாற்றுச் செய்தியே ஆகும். இங்கே எந்தச் சூழ்நிலையில் முதல் மனிதன் வீழ்ச்சியடைந்தான் என்பதற்கு ஒரு குறிப்பும் கொடுக்கப்படுகிறது. அது என்னவென்றால் 'அப்பழம் உண்ணாதே' என்பதாகும்.

கடவுளின் கட்டளை

இது கடவுள் ஆதாமுக்குக் கொடுத்த கட்டளையாகும். கடவுள் நன்மை தீமை அறியக்கூடிய மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளை கொடுத்தார். ஆனால் ஆதி பெற்றோர் அந்தக் கட்டளை மீறி கனியைப் புசித்து நித்திய மரணத்தைத் தங்களுக்கும் தங்கள் சந்ததி அனைத்திற்கும் சம்பாதித்து விட்டார்கள். இதனால் கிடைத்ததே சகசமலமாகிய ஜன்மபாவம்.

பைபிள் வரலாறு காட்டப்படுகிறது

மேற்கண்ட பாடல்கள் கடவுளே படைப்புக்குக் காரணர்; அவர்

ஆதிப்பெற்றோரையும் உலகத்தையும் தூயநிலையில் படைத்தார்; ஆனால் பின்பு அவைகள் பாவத்தில் விழுந்துவிட்டன; என்கிற கருத்துக்களைக் கூறுகின்றன என்றும் அக்கருத்துக்கள் விவிலியத்தில் கூறப்பட்டுள்ள வரலாற்றின் அடிப்படையில் ஆனவைகள் என்றும் தெளிவாய் காணமுடிகிறது.

படைப்பைக்குறித்து திருக்குறள்

திருவள்ளுவர் தமது திருக்குறளின் முதல் பாகமான கடவுள் வாழ்த்தில் கடவுளை, மூவொரு கடவுளாக அதாவது இயல்புடைய மூவராக வாழ்த்துகிறார். தமது முதல் குறட்பாவிலேயே கடவுளை 'ஆதிபகவன்' என வாழ்த்தி அவரே படைப்புக்கெல்லாம் ஆதி காரணர் என்கிறார்.

(அ. 1:1)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (கு. 1)

அகரம்எழுத்துக்கெல்லாம் ஆதியாய் இருப்பதுபோல உலகின் படைப்புக்கெல்லாம் ஆதி காரணமாயிருப்பவர், கடவுள்; வான், நீத்தார் என்று தம்மையே பகுத்து நிற்கும் ஆதிபகவன் ஆவார்.

வார்த்தையானவர்

எழுத்து என்றால் வார்த்தை. ஆதியிலே இருந்தவர் வார்த்தையாகிய கடவுள் என்பதும் இங்கே சுட்டப்படுகிறது. 28-வது குறளில் திருவள்ளுவர் கடவுளை நிறைமொழி மாந்தர் என்று குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும். நிறைமொழி மாந்தர் அதாவது நிறை மொழியாகிய வார்த்தை மாந்தரானவர்: அதாவது மாம்சமானவர் என்பது விளக்கம்.

கடவுள் படைப்புகளுக்கெல்லாம் முன் இருந்தவர் என்றும் அவரே படைப்புக்குக் காரணரென்றும் வார்த்தையாய் இருந்த அவர் மாம்சமானார் அதாவது மனு உருவெடுத்தார் என்றும் திருவள்ளுவர் விளக்குகிறார்.

'பொய்தீர் ஒழுக்கநெறி'

திருவள்ளுவர் 6-ம் குறட்பாவில் ஐந்தவித்தானாகிய இறைவன் பொறியாகிய சிலுவையில் தம்மையே பலியாக்கி ஆதாமால் ஏற்பட்ட பாவத்தைப் பரிகரித்து ஏற்படுத்திய இரட்சிப்பை 'பொய்தீர் ஒழுக்கநெறி'

என்று குறிப்பிடுகிறார். அதாவது அந்த ஒழுக்கநெறியை ஏற்படுத்தியது பொய்யைத் தீர்த்து அல்லது பரிகரித்து என்கிறார். அந்தப் பொய் ஏதேன் தோட்டத்தில் சாத்தான் கூறியதாகும். அந்தப் பொய்யின் காரணத்தாலேயே தூயநிலை ஒடுங்கிப் பாவநிலை ஏற்பட்டது. (பக்கம் 115, 116 காண்க)

ஆன்மாவைக் குறித்து விவிலியம்

விவிலியத்தில் மனிதனின் படைப்பில் இருந்தே ஆன்மாவின் தன்மை விளக்கப்படுகிறது. ஆதியாகமம் 2:7 - ல் "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்". என்று வாசிக்கிறோம். எனவே மண்ணினால் உருவாக்கப்பட்ட சரீரத்தில் ஜீவனும் (ஆவியும்) ஆன்மாவும் ஆக மனிதன் மூன்று அம்சங்களால் உருவாக்கப்பட்டவன் என்று காணப்படுகிறது. இம்மூன்றில் ஆன்மாவே தலையானது. எனவே மனிதன் ஆன்மா என்றே கருதப்பட்டு அழைக்கப்பட்டான் என்று விவிலியத்தில் அனேக வசனங்களில் பார்க்கிறோம். ஆன்மா, படைப்புகளில் மனிதனுக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ள ஒரு சிறப்பு அம்சமாகும்.

அதிகாரம் : 5

வீழ்ச்சியடைந்த மனிதனின் நிலை

(வி.வி., சை.சி.)

விவிலியத்தில்

ஆதிபெற்றோரின் கீழ்ப்படியாமையால் பாவம் உண்டாயிற்று. ஆதாமின் சந்ததி அனைத்தும் பாவிகள் என்ற பரிதாப நிலைக்குள்ளாகிவிட்டார்கள். இது பிறப்பிலேயே உண்டாகும் ஜன்மபாவம் (சகச மலம்) என்று கூறப்படுகிறது. இதைக்குறித்து, "ஒரே மனிதனின் கீழ்ப்படியாமையினால் அனேகர் பாவிகளாக்கப்பட்டார்கள்" (ரோம 5:19) என்று விவிலியத்தில் வாசிக்கிறோம்.

நித்திய ஜீவனை இழந்தான்

நித்திய ஜீவனுக்காகப் படைக்கப்பட்ட மனிதன் நித்திய ஜீவனை இழந்து மரண ஆக்கினைக்குள்ளானான். மனிதனின் ஆன்மா இருள் அடைந்து உணர்வற்ற நிலையில் ஆயிற்று. பரிசுத்தமாய் தேவனோடு இருக்கும்படி படைக்கப்பட்ட மனிதன் தேவனை விட்டு விலகி அவனுடைய வீழ்ச்சியினால் அசுத்தத்துக்குள்ளானான்.

தேவன் மனஸ்தாபப்பட்டார்

மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் (ஆதி. 6:5-6).

ஜனம் அழிக்கப்பட்டது

ஜனங்களின் பாவத்தின் மிகுதியால் தேவன் ஆதாமின் சந்ததியை ஜலப்பிரளயத்தால் அழிக்கச் சித்தமானார். ஆனாலும் நோவா என்ற பரிசுத்தவானின் குடும்பத்தார் எட்டுப்பேரால் மீண்டும் ஜனங்கள் பெருகினார்கள்.

வீழ்ச்சியடைந்தவர்களுக்கு மீட்பின் திட்டம்

இவ்வாறு கெட்டுப்போன ஆதாமின் சந்ததியை மீட்டு அவர்களுக்கு மறுபடியும் அவர்கள் இழந்துபோன நித்திய ஜீவனைக் கொடுக்கும்படி தேவன் மீட்பின் திட்டத்தை வகுத்தார். அதன்படி கடவுள் மனிதனாக அவதரிக்கவேண்டியதாயிற்று.

சிவஞானபோதத்தில்

தூய நிலையில் படைக்கப்பட்ட மனிதன் மலமாகிய பாவத்தில் வீழ்ச்சியடைந்துவிட்டதைக் குறித்து சிவஞானபோதம் முதலாம் சூத்திரத்தில் பார்த்தோம். வீழ்ச்சி அடைந்த பாவ சந்ததி கடவுளை விட்டு அகன்றுபோய்விட்டது. பயம் அவர்களை ஆட்கொண்டது. பிறப்பிலேயே தீமை அவர்களைப் பற்றிக்கொண்டது. மக்கள் தங்கள் ஆன்மாவையும் தங்களைப் படைத்த கடவுளையும் அறியாத நிலையில் சென்றுவிட்டார்கள்.

ஆன்மாவோ, கடவுளோ - இல்லை என்ற நிலை!

மக்கள் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குள் சிக்கிக் கொண்டார்கள். தங்களுக்கு ஆன்மா என்ற ஒன்று இல்லை என்றும் கடவுளே இல்லை என்றும் சாதித்தார்கள். அவர்கள் ஆன்மா, வீழ்ச்சியின் காரணத்தால் மயக்க நிலையில் ஆகிவிட்டது. அவர்கள் உடலையும் உயிரையும் மட்டுமே அறிந்திருந்தார்கள். ஆன்மாவைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. கடவுள் உண்டு என்கிற அறிவும் அவர்களுக்கில்லை.

மெய்கண்டாரின் விளக்கம்

இந்நிலையில் மெய்கண்டார், தான் கண்டுகொண்ட சத்தியங்களை மக்களுக்குச் சிவஞானபோதம் வழி விளக்கினார். வழி தெரியாமல் தப்பித் தடுமாறி நிற்கின்ற மக்களுக்கு ஆன்மாவும் கடவுளும் உண்டு என்கிற சத்தியத்தைச் சிவஞானபோதம் 3 முதல் 7 சூத்திரங்கள் வழியாய் விளக்குகின்றார் மெய்கண்டார். அங்கே

கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் பாவமாகிய மலத்தில் விழுந்தபின் ஆன்மாவின் பரிதாப நிலைகள் விளக்கப்படுகின்றன.

சி.ஞா.போ 3 - 7 சூத்திரங்கள்

1. மாயா இயந்திரமாகிய உடலுக்குள் ஆன்மா உண்டு.
2. உடலில் செயல்படும் அந்தக்கரணங்கள் ஆன்மாவின் செயல் பாட்டிற்கு உதவுகின்றவைகளே தவிர அவைகள் ஆன்மாவல்ல.
3. ஆன்மா தன்னையோ தன்னைச் செயல்பட வைக்கும் இறைவனையோ உணரமுடியாமல் இருக்கிறது.
4. கடவுள் எத்தன்மை உடையவர்?
5. கடவுள் சத்தாகவும் உகலப் பொருட்கள் அசத்தாகவும் ஆன்மா சதசத்தாகவும் இருக்கின்றனர்.

1. மாயா இயந்திரமாகிய உடலுக்குள் ஆன்மா உண்டு

உடல் என்பது ஒரு மாயா இயந்திரம். அதற்குள் ஆன்மா இருக்கிறது. நான் என் உடலைச் சுட்டிக்காட்டி இது எனது உடல் என்கிறேன். அப்போது 'நான்' வேறு நான் காண்பிக்கும் உடல் வேறு என்று காண்கிறோம். இங்கே உடலுக்கு வேறாக இருக்கும் 'நான்' என்பது தான் ஆன்மா.

ஆன்மா உண்டா?

நான் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து உறுப்புக ளின் வழியாக செயல்படுகிறேன். கண் வழியாய் பார்க்கிறேன். காது வழியாய் கேட்கிறேன். ஆனால் பார்ப்பது கண் அல்ல; நான். நானே பார்க்கிறேன். அவ்வாறே காது கேட்பதற்கு உதவுகிறது. ஆனால் கேட் பது, காதா அல்லது நானா? காதல்ல, நானே கேட்கிறேன். இவ்வாறு எனக்குப் பயன்படுகிற ஐம்புலன்கள் வேறு, நான் வேறு. ஐம்புலன் களுக்கு வேறாய் இருக்கும் 'நான்' என்பது தான் ஆன்மா.

நான் பயன்படுத்தும் கண் பார்க்க முடியாமலும் காது கேட்க முடியாமலும் போகும்போது அந்த ஐம்புல ஒடுக்க நிலைகளை நானே அறிகிறேன். ஐம்புலன்கள் அல்ல. அந்த 'நான்' என்பது தான் ஆன்மா.

இவ்வாறு என் உடலுக்கு வேறானதாகவும் என் ஐம்புலன்க ளுக்கு வேறானதாகவும் எனது உடலுக்குள் இருக்கும் 'நானே' ஆன்மா. எனவே உடலுக்குள் ஆன்மா இருக்கிறது.

ஆனால் எனக்குள் இருக்கும் ஆன்மாவை என்னால் உணர இயல வில்லை. கடவுள் வந்து உணர்த்தும்பொழுது உணரும் தகுதி உடலுக் கல்ல, ஆன்மாவிற்கே உண்டு. இதை 3-வது சூத்திரம் விளக்குகிறது.

சிவஞானபோதம் - சூ. 3

"உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டி வினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திரத் தனுவினுள் ஆன்மா."

பதவுரை

இலது என்றலின்	=	இல்லை என்று கூறுவதாலும்
எனது உடல் என்றலின்	=	என்னுடைய உடம்பு என்று (பிரித்துச்) சொல்வதாலும்
ஐம்புலன் ஒடுக்கம்	=	மெய், வாய், கண், மூக்கு, செவி யாகிய ஐம்பொறிகள் வழியாக ஐம்புலன்களின் ஒடுக்கநிலை களை அறிகின்ற காரணத்தாலும்
கண்படில்	=	கண்ணுறக்கத்தில்
உண்டிவினை இன்மையின்	=	உணவும், வேலையும் இல்லாத தாலும்
உணர்த்த உணர்தலின்	=	வேறொருவர் உணர்த்த உணர் வதாலும்
மாயா இயந்திரத் தனுவினுள்	=	மாயா இயந்திரமாகிய உடலுக் குள்
ஆன்மா உளது	=	ஆன்மா இருக்கின்றது

விளக்கம்

மாயா இயந்திரமாகிய உடலுக்குள் ஆன்மா உண்டு என்பதைக் கீழ்க்கண்ட காரணங்களால் அறிந்து கொள்ளலாம்.

1. ஆன்மா என்று ஒன்று இல்லை. என்று கூறும் காரணத்தாலேயே ஆன்மா உண்டு என்று மறைமுகமாய்க் கூறப்படுகிறது. ஏனென் றால் இல்லாத ஒன்றிற்குப் பெயரில்லை. இல்லாத ஒன்றை யாரும் இல்லை என்று சொல்வதுமில்லை.

2. நாம் பேசும்போது எனது உடல் என்று கூறுகிறோம். அதிலிருந்து நாம் வேறு நமது உடல்வேறு என்று தெரிகிறது. நம் உடலுக்கு வேறான நான் அல்லது நாம் என்பதே ஆன்மா.

3. நாம் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்து உறுப்புகளின் வழியாக செயல்படுகிறோம் அவ்விதம் செயல்படுவது நானா என் உறுப்புக்களா? நான் கேட்கிறேன், என்று சொல்லும்போது கேட்பது அவ்வுறுப்பல்ல மாறாக 'நானே'யாகும். எனவே ஐம்புலன்கள் வழியாக அறியும் 'நானே' அந்த ஆன்மா.

4. நாம் நித்திரை செய்யும் போது உணவு உண்பதாகவும், வேலை செய்வதாகவும் கனவு காண்கிறோம். உண்மையில் உண்டதும் செயல்பட்டதும் நம் உடல் அல்ல 'நானே'யாகும். அந்த 'நானே' ஆத்மா.

நம் உடல் வழியாக இத்தனை காரியங்கள் செய்த போதிலும் நம்மை நம்மால் உணர இயலவில்லை. இவ்வாறே ஆத்மா தன்னைத் தானாக உணர இயலாத நிலையில் இருக்கிறது. இறைவன் வந்து உணர்த்தும் போது அதை உணரும் தகுதி உடலுக்கல்ல ஆன்மாவிற்கே உண்டு.

2. அந்தக்கரணங்கள் ஆன்மாவல்ல

ஐம்பொறிகள் ஆன்மாவல்ல என்றால்; பற்றுவது, சிந்திப்பது, துணிவது, தன் கண்கொள்ளுவது போன்ற செயல்களை பிறப்பிக்கின்ற மனம், புத்தி, சித்தம் அகங்காரம், ஆகிய அந்தக்கரணம் ஆன்மாவா என்ற சந்தேகம் எழலாம். ஆனால் அந்தக்கரணம் ஆன்மாவல்ல என்பதே உண்மை. அந்தக்கரணம் ஆன்மாவின் செயலுக்குக் கருவியாய் இருக்கிறதே அல்லாமல் ஆன்மாவல்ல. நான் அறிந்தேன்; நான் முடிவெடுத்தேன் என்று கூறும்போது 'நான்' என்ற ஆன்மா வேறு அந்தக்கரணம் (அறியும் செயல்புரிந்த மனம்) வேறு என்று விளங்குகிறது.

அந்தக்கரணங்கள் ஆன்மாவுக்கு உதவுகின்றன

அந்தக்கரணங்களின் செயல்களைக் கவனிப்போம்: கண், முதலில் கருவிகளின் வழியாகக் காணப்படுவதைப் பற்றுவது மனம், அதை இன்னதென்று சிந்திப்பது, சித்தம். சிந்தனையின் வழி இது தான் எனத் துணிவேன் என எழுவது, அகங்காரம். துணிந்து தன் கண் கொள்வது புத்தி. இவ்வாறு மனம் புத்தி முதலிய நான்கும் ஆன்மாவாகிய அரசனுக்கு, அமைச்சர்கள் போல நின்று உதவுகின்றன. இதை சூ : 4 விளக்குகிறது.

"அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்து ஆன்மா சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே."

பதவுரை

ஆன்மா	-	ஆன்மாவானது
அந்தக்கரணம்	-	மனம், புத்தி, அகங்காரம், சித்தம், ஆகிய அந்தக் கரணங்களாகிய
அவற்றின் ஒன்று அன்று	-	அவற்றில் ஒன்று அன்று
சகசமலத்து உணராது	-	சகசமல மறைப்பின் காரண மாக ஆன்மா தன்னை உணர மாட்டாமல் நிற்கிறது.
அமைச்சரசு ஏய்ப்பநின்று	-	அமைச்சர்களைக் கொண்டு ஆட்சி செய்யும் அரசனைப் போல நின்று
அவை	-	அந்தக்கரணங்களை
சந்தித்தது	-	சந்தித்துச் செயல்படுவது
அஞ்சு அவத்தைத்தே	-	நனவு, கனவு, துயில், அறிதுயில், இன்துயில் ஆகிய ஐந்து அனுப வங்களிலாகும்.

கருத்துரை

ஆன்மாவானது மனம், புத்தி, அகங்காரம் சித்தம் ஆகிய அந்தக் கரணங்களில் ஒன்று அல்ல. சகசமலமாகிய பாவத்தால் மறைக்கப்பட்ட ஆன்மா தன்னை உணர முடியாமல் இருக்கிறது. ஓர் அரசன் அமைச் சர்களைக் கொண்டு ஆட்சி செய்வது போல ஆன்மா அந்தக் கரணங் களைச் சந்தித்து செயல்படுகிறது. இந்தச் செயல்பாடு நனவு, கனவு, துயில், அறிதுயில், இன்துயில் ஆகிய ஐந்து நிலைகளில் நடைபெறுகிறது.

விளக்கம்

இங்கே வீழ்ச்சி அடைந்த ஆன்மா சகசமலத்தின் காரணத்தால் தன்னை உணரமுடியாத நிலையில் இருப்பது விளக்கப்படுகிறது. அறிவது, பற்றுவது முடிவெடுப்பது, துணிவது ஆகியன மனம் புத்தி, அகங்காரம் சித்தம் ஆகிய அந்தக்கரணங்களின் செயல்பாடுகளாகும்.

நான் அறிந்தேன், நான் பற்றினேன், நான் முடிவெடுத்தேன், நான் துணிந்தேன் என்று நாம் கூறுகிறோம் இதிலிருந்து அந்தக் கரணங் களின் இயக்கத்திற்குக் காரணம் 'நான்' ஆகிய ஆத்மா என்று விளங்கு கிறது. அந்தக்கரணம் ஆத்மாவின் செயல்பாட்டிற்குக் கருவியாக இருக் குமே தவிர ஆன்மாவல்ல: அரசனுக்கு அமைச்சர்கள் உதவுவது போல ஆன்மாவுக்கு அந்தக்காரணங்கள் உதவுகின்றன.

சகச மலத்தின் காரணமாக வீழ்ச்சி அடைந்த ஆத்மா தன்னை உணரும் ஆற்றல் இல்லாமல் இருக்கிறது என்று பார்த்தோம். எனவே இப்படிப்பட்ட ஆத்மா தன்னை உணர இயலாநிலையில் நின்று கொண்டு அந்தக் கரணங்களின் துணையோடு செயல்படுகிறது. மலமாகிய பாவத்தால் மறைக்கப்பட்ட ஆன்மா அந்தக் கரணத்தின் துணையோடு செய்யும் செயல்கள் நனவு, துயில், அறிதுயில், இன்துயில் ஆகிய ஐந்து அனுபவங்களில் நடைபெறுகின்றன.

3. தன்னையும் இறைவனையும் உணரா ஆன்மா

உடலின் உள்ளே ஆன்மா உண்டு என்பதைப் பார்த்தோம். வீழ்ச்சி யடைந்த காரணத்தால், அந்த ஆன்மா தன்னையும் தன்னை செயல்பட வைக்கும் இறைவனையும் உணரமுடியா நிலையில் காணப்படுகிறது.

இது ஒரு உவமையால் விளக்கப்படுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள் தம்மையும் தம்மைச் செயல்பட வைக்கும் ஆன்மாவையும் அறியாதிருக்கிறது. அதுபோல ஆன்மா தன்னையும் தன்னைச் செயல்படவைக்கும் இறைவனையும் உணர முடியாமல் காணப்படுகிறது.

ஆகிலும் இறைவனால் உணர்த்தப்படும்பொழுது ஆன்மா உணர்வடைகிறது. இதுவும் ஒரு உதாகரணத்தால் விளக்கப்படுகிறது. அதாவது இரும்பு தானாய் அசையாமல் காணப்படுகிறது. அதே நேரத் தில் ஒரு காந்தத்தை அங்குக் கொண்டுவந்தால் இரும்பு அசைந்து காந் தத்தை எட்டிப்பிடிக்கிறது. அவ்வாறே ஆன்மா இறைவனால் உணர்த் தப்படும்பொழுது அது உணர்வடையும் ஆற்றலைப்பெறுகிறது. இதை 5-ஆம் சூத்திரம் விளக்குகிறது.

சிவஞானபோதம் - சூ. 5

விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

பதவுரை

விளம்பிய	-	முன் சூத்திரத்தில் சொல்லப்பட்ட
உள்ளத்து	-	உள்ளே இருக்கும் ஆன்மாவினால்
மெய், வாய், கண், மூக்கு	-	மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும்
அளந்து அறிந்து	-	தமக்கு முன்னுள்ள பொருள்களை இப்படிபட்டவை என அளவிட்டு அறிந்தும்
அறியா ஆங்கவை போல	-	தம்மையும், தம்மைச் செயல்பட வைக்கும் ஆன்மாவையும் அறியா திருக்கும் ஐம்பொறிகளைப் போல
தாம்	-	ஆன்மாக்கள் தாமும்
தம் உணர்வின்	-	தமது உணர்வில் விளங்குகின்றன
தமி	-	முதல்வனாகிய கடவுளின்
அருள்	-	திரு வருளினால்
காந்தம் கண்ட	-	காந்தத்தால் இழுக்கப்பட்ட
பசாசத்து அவையே	-	இரும்பினை ஒத்து ஆன்மாக்கள் செயல்படுகின்றன.

விளக்கம்

முன்சூத்திரத்தில் சொல்லப்பட்டபடி உடலுக்குள் இருக்கும் ஆன்மாவினால் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறி களும் அவைகளுக்கு முன்உள்ள பொருட்களை அறிந்துகொள்கின்றன. ஆனால் அவை தம்மையும் தம்மைச் செயல்பட வைக்கும் ஆன்மாவையும் அறியாதிருக்கின்றன. அது போலவே ஆன்மாக்களும் காணப்படுகின்றன. இரும்புக்குத் தானாய் இயங்கும் இயக்கம் இல்லா தது போல ஆன்மாக்களுக்கும் தாமே தம்மை உணரும் ஆற்றல் இல்லை. காந்தம் இழுக்க இரும்பு அதோடு இணைவதைப்போல கடவுளால் உணர்த்தப்படும் போது ஆன்மா உணரும் ஆற்றல் அடைகிறது.

காந்தமும் இரும்பும்

காந்தத்தின் முன்னால் ஓர் இரும்பையும் ஓர்மரக்கட்டையையும் வைத்தால் இரும்பு காந்தத்தை அடைகிறது. மரக்கட்டை அசை

யாமல் இருக்கிறது. இதுபோல ஆன்மாவிற்கு மட்டுமே கடவுளை உணரும் ஆற்றல் உண்டு. மற்ற பொருட்களுக்குக் கடவுளை உணரும் ஆற்றல் இல்லை. கடவுள் தம்மை உணர்த்தும் போது மட்டுமே ஆன்மாக்கள் தம்மையும் தம் தலைவனாகிய கடவுளையும் உணரும் ஆற்றலைப் பெறுகின்றன. அதுவரை அவை தம்மை உணராத ஆன்மாவாகக் காணப்படும்.

4. கடவுள் எத்தன்மையுடையவர்?

கடவுள் எல்லா உருவப்பொருட்களைப்போல, ஐம்பொறிகளால் அறிந்து உணரக்கூடிய பொருளா? அப்படியானால் எல்லா உருவப்பொருட்களும் அழிந்துபோகும் விதமாய், கடவுளும் அழியும் பொருள் ஆகிவிடுவார். கடவுள் அழியக்கூடிய பொருளாகிய அசத்து அல்ல. மாறாக அவர் அழியாப் பொருளாகிய சத்தாய் நிற்பவர் ஆகும். சத்தாய் நிற்கும் கடவுள் கருவிகளால் உணர முடியாதவர் என்றால் இல்லாதபொருள் ஆகிவிடுவார்.

கடவுள் உணரக்கூடியவரா, அல்லது உணர இயலாதவரா என்று கேட்டால் கடவுள் தமது அருளால் தன்னை யாருக்கு உணர்த்து வாரோ அவர்களால் மட்டுமே அவரை உணரமுடியும். மற்றவர்க ளால் அவரை உணர முடியாது, என்று சான்றோர் பதிலளிப்பார்கள். இதை 6-ாவது சூத்திரம் விளக்குகிறது.

சிவஞானபோதம் - சூ. 6

"உணர்வு உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே."

பதவுரை

உணர்வு உரு எனின்	-	(கடவுள்) ஐம்பொறிகளால் அளந்து அறிந்து உணரக்கூடிய உருவப் பொருளே என்றால்
அசத்து	-	நிலையில்லாத அழியும் பொருள் ஆவான்
உணராது	-	கருவிகளால் உணர முடியாதவன் என்றால்
இன்மையின்	-	இல்லாத பொருள் ஆவான்

சிவசத்து	-	என்றும் நின்று நிலைபெறும் கடவுள்
இருதிறன்	-	உணரக்கூடாததும் உணரக்கூடியதும் ஆகிய இரண்டு தன்மைகளையும்
அல்லது என	-	அல்லாதவன் என்று
மன் உலகு	-	நிலைபேறுடைய மெய்யுணர்வு பெற்ற சான்றோர்கள்
இரண்டு வகையின்	-	இரண்டு வகையாலும்
இசைக்கும்	-	சொல்லுகிறார்கள்

விளக்கம்

கடவுள் ஐம்பொறிகளால் உணரக்கூடிய உருவப்பொருள் என்றால் உருவப் பொருள்யாவும் அழியும் தன்மையுடையவையாய் இருப்பதைபோல கடவுளும் அழியும் பொருள் ஆகிவிடுவார். கடவுள் நமது கருவிகளால் உணர இயலாதவர் என்றால் இல்லாத பொருள் ஆகிவிடுவார். அன்பாகிய கடவுள் உணரக்கூடியதும் உணரக் கூடாததும் ஆகிய இரண்டு தன்மையும் அல்லாதவர் என்று சான்றோர்கள் சொல்லுகிறார்கள். கடவுளின் அருள் பெற்றவார்களால் மட்டுமே கடவுளை உணர இயலும் அருள் பெறாதவர்களால் உணரஇயலாது.

5. கடவுள், உலகப்பொருள், ஆன்மா

கடவுள் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் சத்துப்பொருள் ஆவார். அவர் சகலவற்றையும் அறியும் முற்றறிவு படைத்தவர்.

உலகப்பொருட்கள் யாவும் அழியக்கூடியவை. மட்டுமல்ல, அவை பிறிதொன்றை அறியும் திறனும் அற்றவை. எனவே அவை அசத்துப்பொருட்கள் ஆகும்.

சத்தாம் கடவுளும் அசத்தாம் உலகப்பொருளும் ஆகிய இரண்டும் அல்லாத மூன்றாவது பொருள் ஒன்று உண்டு. அது கடவுளைப்போல முழு அறிவுடையதாய் அல்லாமல் குறை அறிவுடையதாயும், உலகப்பொருளைப்போல அழியக்கூடியதல்லா மல், அழியாமை உடையதாகவும், சத்தும் அசத்தும் அல்லாமல் காணப்படும் சதசத்தாகிய ஆன்மா ஆகும். இந்த ஆன்மா சத்தாகிய கடவுளையும் அசத்தாகிய உலகப்பொருளையும் அறியக்கூடிய தன்மையுடையதாகும். இதை 7-ஆம் சூத்திரம் விளக்குகிறது.

"யாவையும் சூனியம் சத்து எதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்து இலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா வான்மா"

பதவுரை

சத்து எதிர் -	என்றும் நிலைத்திருக்கும் ஒன்றாகிய கடவுளின் முன்னர்
யாவையும் சூனியம் ஆகலின்-	எல்லா பொருள்களும் அழிந்து ஒழியக் கூடியவைகளே ஆதலால்
சத்தே அறியாது -	நிலைத்திருக்கும் ஒன்றாகிய கடவுளே முற்றறிவுடையவனாதலின் இன்னொன்றை அறிய வேண்டிய அவசியமற்றவன்.
அசத்து இலது -	அழியக் கூடிய பொருளுக்கு அறியுந்திறன் இல்லை ஆகவே அது எதையும் அறியாது
இரண்டலா -	சத்தாகிய கடவுளும், அசத்தாகிய உலகப்பொருளும், ஆகிய இரண்டும் அல்லாமல்
ஆன்மா -	குறையறிவும், அழியாமையையும் உடைய சதசத்தாகிய ஆன்மா
இருதிறன் அறிவுளது -	சத்தாகிய கடவுளையும், அசத்தாகிய உலகப் பொருளையும் அறியக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளது.

விளக்கம்

கடவுள் என்றும் நிலைத்திருக்கும் சத்தாயிருப்பவர். அவர் பூரண அறிவுடையவர். அப்படிப்பட்ட கடவுளுக்கு முன் அனைத்து பொருட்களும் அழியக்கூடியவையே. அழியக்கூடிய பொருளுக்கு அறியும் ஆற்றல் கிடையாது. எனவே அவை அசத்துப்பொருட்களாகும். சத்தாம் கடவுளும் அசத்தாம் உலகப்பொருளும் அல்லாத ஒன்றே சத

சத்தாகிய ஆன்மா. அதாவது கடவுளைப்போல முழு அறிவில்லாத தும் உலகப்பொருளைப்போல் அழியும் தன்மை இல்லாததுமாய் சதசத் தானதே ஆன்மா. இந்த சதச் சத்தாகிய ஆன்மா சத்தாகிய கடவுளையும் அசத்தாகிய உலகப் பொருளையும் அறியக் கூடிய தன்மையைக் கொண்ட தாகும். எனவே கடவுள் வந்து உணர்த்தினால் உணரக்கூடிய தன்மை ஆன்மாவுக்கு உண்டு.

விளக்கவுரை

பாவத்தில் விழுந்த ஆன்மா தன்னையே உணராத மயக்க நிலையில் ஆழ்ந்துவிட்டது. மட்டுமல்ல தன்னைப்படைத்த கடவுளை உணரும் உணர்வையும் இழந்துவிட்டது. ஆன்மா என்று ஒன்று இல்லை; கடவுளும் இல்லை என்று நம்பியது.

எனவே மெய்கண்டார் சிவஞானபோதம் வழி, மாயா இயந்திர மாகிய உடலுக்குள் ஆன்மா உண்டு என்றும் கடவுள் இருக்கிறார் என்றும் விளக்கிக் காட்டுகிறார்.

அதே நேரத்தில் வீழ்ச்சியினால் ஆன்மாவுக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாபமான நிலையை எடுத்துக்காட்டுகிறார். ஆன்மா தானாய் உணர்ந்து தன்னையோ இறைவனையோ அறிய முடியாத நிலை மிக பயங்கரமான ஓர் நிலையாகும்.

விவிலியமும் இந்த நிலை பற்றி கூறியுள்ளது: ஒருவனை நான் இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரான் என் னால் அன்றி உங்களால் ஒன்றும் செய்ய இயலாது.

நம் சுய முயற்சியினால் நாம் இறைவனை அடைய முடியாது என்று அறிந்து கொள்ளவேண்டும். ஆன்மாவின் இந்தப் பரிதாப நிலையைக் கண்டு அன்புள்ளம் படைத்த இறைவன் தாமே மனிதனைத் தேடி இந்த பூமியில் குருவாக வந்து சிலுவைத் தவத்தில் ஆன்மாவை உணர்த்து வதைக் குறித்து மெய்கண்டார் 8-வது சூத்திரத்தில் விளக்கியுள்ளார்.

அதிகாரம் : 6

மனிதன் - பிறவிச்சுழற்சிக் கொள்கைக்குள்

கடவுள் கட்டளையை மீறி மலமாகிய பாவத்தில் சிக்கிக் கொண்ட மனுக்குலம் தேவனற்றவர்களாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் சிருஷ்டிகரை மறந்து சிருஷ்டிகளைத் தொழுகை செய்ய ஆரம்பித்தார்கள். தொழுகை மதமல்ல. மதமும் தொழுகையும் ஒன்று என்று அனேகர் நினைப்பதுண்டு. ஆனால் மதம் என்பது வேறு, தொழுகை என்பது வேறு. ஒருவனுக்கு ஏதோ ஒன்றில் ஏற்படும் பணிவு, பாசம், பயம் இவைகளால் அதைத் தொழுகை செய்வது தொழுகை அல்லது வழிபாடு எனப்படும். இது மதச் சடங்குகளில் பின்பற்றி வரும் வழிபாட்டு முறைகளுக்கு வேறுபட்டதாகும்.

தன்னை அறியாத மனிதன்

மனிதன் கடவுளை விட்டு அகன்று போனாலும் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்டவனாகவே இருந்தான். தன்னைப் படைத்த கடவுளைப் பற்றி அறியாதவனாய், அவர் மேல் நம்பிக்கை இல்லாதவனாய் இருந்தபடியால் பயம் அவனை ஆட்கொண்டது. பயத்தினால் அவன் தன்னுடைய சக்திக்கு மேலானவையென எண்ணினவற்றை ஒவ்வொன்றாகத் தனக்குக் கடவுளாக்கிக் கொண்டான்.

முப்பத்தி முக்கோடி தேவர்கள்

அவ்வாறு, சூரியன், சந்திரன், கணக்கில்லாத நட்சத்திரங்கள் ஆகியவைகளையும், காற்று, புயல், மழை, ஆறுகள், கடல், பூமி, மலைகள், குன்றுகள், பள்ளத்தாக்குக்ள், நீரூற்றுகள் ஆகிய இயற்கை படைப்புகளையும், காலை, மாலை, வெயில், பனி, குளிர் போன்ற

காலநிலைகளையும் யானை, பசு, எருமை, கரடி, புலி முதலான சகலவித மிருகங்களையும், தவளை, எலி, பெருச்சாளி போன்ற ஜீவிகளையும் பாம்பு, பல்லி போன்ற ஊரும் பிராணிகளையும், மயில், கழுகு, பருந்து போன்ற பறவைகளையும் கடல்வாழ் ஜீவிகளையும், மரங்கள், செடிகொடிகள் ஆகிய சகலவற்றையும் மனிதன் தனக்குத் தெய்வங்களாகக் கொண்டான். மட்டுமல்ல; வீரச் செயல்களோடு வாழ்ந்து வந்த மாமனிதர்களை, அவர்கள் வாழ்ந்த காலங்களிலும், அவர்கள் வாழ்நாட்களுக்குப் பின்னும் தெய்வங்களாக்கிக் கொண் டார்கள். மேலும் மனிதச் சக்திக்கு அப்பாற்பட்ட வீரச்செயல்கள் புரிந்ததாகக் கற்பனைக் கதைகளில் காட்டப்படும் கதாபாத்திரங்களும் தெய்வங்களாக்கப்பட்டார்கள். அதோடு இறந்து போன மனிதர் களின் ஆவிகளும் மற்றும் பலவித ஆவிகளும் தெய்வங்களாக்கப் பட்டு தொழுகை செய்யப்பட்டன. இன்று உலகனைத்திலும் எண்ணி முடியாத அளவுக்குத் தொழுகை செய்யப்படும் தெய்வங்களுக்கு **முப்பத்தி முக்கோடி தேவர்கள்** என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

உயிர்ப் பலிகள்

இப்படிப்பட்ட தேவர்களைக் குறிப்பிட்ட காரணங்களுக்காக ஜனங்கள் தொழுகை செய்தார்கள். ஒன்று, அந்தத் தேவதைகள்த் தங்களுக்கு தீங்கு செய்யாமலிருக்க பயத்தினால் அவைகளைத் தொழு தார்கள். மற்றொன்று, தங்கள் விருப்பங்கள் நிறைவேற்றப்படவும், தாங்கள் விரும்பிய ஏதாவது காரியங்கள் நடந்து விட்டால் அந்தத் தேவதைகளுக்கு நன்றி செலுத்துவதற்காக அவைகளை தொழுகை செய்தார்கள். இவ்விரண்டுவித தொழுகைகளிலும் பலிகள் அதாவது உயிர்ப்பலிகள் செலுத்தப்பட்டன.

இந்தியாவில் பழந்திராவிட வழிபாடு

முற்கால இந்தியாவில் ஞாபகக்கல் வழிபாடு இருந்து வந்த தென்று பார்த்தோம். அதோடு திராவிடர்கள் தங்கள் கோடிக்கணக் கான இஷ்டதேவதைகளுக்குக் கோடிக்கணக்கான மிருகபலிகளை செலுத்தி வழிபட்டு வந்தார்கள். இந்த விதமான பலிசெலுத்தி நிறைவேற்றி வந்த வழிபாட்டிற்கு பழம் திராவிட வழிபாடு என்று பெயர். இந்தியாவில் பல இடங்களில் இன்றும் இவ்வித பழம் திராவிட வழிபாடுகள் நடந்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய மக்களின் சிந்தனை

இந்தியாவில் பழந்திராவிட வழிபாடுகளில் மக்கள் ஆயிரக் கணக்கான மிருகங்களைப் பலியிட்டுத் தங்கள் தேவதைகளுக்குத் தொழுகை செய்வதன்மூலம் எண்ணிறந்த ஜீவஜந்துக்கள் தேவர்கள் பெயரால் பலியிடப்படுவதைக் குறித்து இந்திய மக்களில் சிலர் சிந்திக்கத் தொடங்கினார்கள். அப்படிப்பட்டவர்களில் மகாவீரர், கௌதம புத்தர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். கி.மு. 6-ம் நூற்றாண்டில் மகாவீரர் என்பவர் சமண மதத்தையும், கௌதம புத்தர் புத்த மதத்தையும் ஸ்தாபித்தார்கள். இவ்விரு மதங்களும் கடவுள் கொள்கை இல்லாத மதங்களாகும். உலகமும் அதிலுள்ள படைப்புகள் யாவும் தானாகவே தோன்றினவென்றும், அவை தானாகவே இயங்கு கின்றனவென்றும், ஒரு மனிதன் சரியான முறையில் வாழ்வதற்குக் கடவுள் என்ற ஒருவருடைய துணை தேவை இல்லை என்றும் எல்லாவற்றையுமே சுயமுயற்சியினால் (அவரவர் செய்யும் கர்மங்களால்) செய்ய முடியும் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப்பின்

ஆனால் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் கடவுளின் நற்செய்தி தோமா அப்போஸ்தலனால் அறிவிக்கப்பட்டதன் மூலம் அனேக சமணர்களும் பவுத்தர்களும் கடவுள் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக்கொண்ட சமணர்கள் ஸ்வேதாம்பரர் என்றும் ஏற்றுக்கொண்ட பவுத்தர்கள் மகாயான பவுத்தர்கள் என்றும் அறியப் பட்டார்கள். கடவுள் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத சமணர்கள் திகம்பரர்கள் என்றும் ஏற்றுக்கொள்ளாத பவுத்தர்கள் ஹீனயான பவுத்தர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். கடவுள் கொள்கை இல் லாத சமண பவுத்த மதங்கள் ஏற்படுத்திய கொள்கையே பிறவிச் சுழற் சிக் கொள்கை என்ற Cycle of Birth ஆகும்.

பிறவிச் சுழற்சிக் கொள்கை

பிறவிச் சுழற்சிக் கொள்கை உயிருக்கு முக்கியத்துவம் கொடுக் கிறது. கடவுளைப்பற்றிய அறிவும் ஆன்மாவைப் பற்றிய அறிவும் அன்று இருந்ததில்லை. மகாவீரர், புத்தர் ஆகியோர் கடவுள் என்ற பெயரில் உயிர்களைக் கொல்வதைக் கண்டித்தார்கள். அவர்கள் நடத்திய ஆராய்ச்சியில் இரண்டு காரியங்களைக் கண்டு பிடித்தார்கள். அவை யாவன : ஒன்று, உயிர் அழியாதது. மற்றொன்று, எல்லா உயிரினங் களிலும் காணப்படுவது ஒரே நிலையிலான உயிரே என்பனவாகும்.

பரிணாம கொள்கை

அவர்கள் மனிதருக்கும் மிருகங்களுக்கும் உள்ள அடிப்படை வேற்றுமை குறித்து அறிந்து கொள்ளவில்லை. உயிரினங்களெல்லாம் தானாகவே ஒன்றிலிருந்து ஒன்றாக வளர்ச்சி அடைந்து மாற்றமடைந்து முடிவில் மனிதன் என்ற உயர் நிலையை அடைகின்றன என்று நம்பி னார்கள். இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே பிறவிச் சுழற்சிக் கொள்கை.

மரம் முதல் மனிதன் வரை உயிர் ஒன்றே

இந்தக் கொள்கைப்படி மரம், செடி கொடிகள், ஊரும் பிராணிகள், ஜீவ ஜந்துக்கள், பறவைகள், மச்சங்கள், மனிதன் ஆகிய வற்றில் அதாவது ஓரறிவுள்ள மரம் முதல் ஆறறிவு உள்ள மனிதன் வரை யிலான எல்லாவற்றிலும் அமைந்துள்ள உயிர் ஒன்றே, இந்த உயிர் ஒருபோதும் அழியாததாகும்.

மீண்டும் மீண்டும் பிறக்கும்

உலகில் உள்ள கோடிக்கணக்கான உயிர் இனங்கள் சாகும் போது, அவற்றின் உடலிலிருந்து பிரியும் உயிர்கள் அழியாமல் மற்றொரு உடலில் பிரவேசிக்கின்றன. அவ்வாறு ஒவ்வொரு உயிரும் கோடிக் கோடி பிறப்புகளில், கோடிக்கோடி உடல்களுக்குள் பிரவேசிக்கின்றன. அவ்வாறு உயிர்கள் கோடிக்கணக்கான பிறப்புகள் எடுக்கின்றன.

சுழன்று பிறக்கும் உயிர்

ஒரு பிறப்பில் மரமாக இருந்த உயிர் அதாவது ஒரு பிறப்பில் மரம் என்ற உடலில் இருந்த உயிர் அடுத்த பிறப்பில் புழுவாகவோ, கொசுவாகவோ, பாம்பாகவோ, யானையாகவோ, மனிதனாகவோ பிறக் கலாம். அந்த உயிர்கள் அந்தப் பிறப்பில் ஆற்றும் கர்மத்தைப் பொறுத்து அவை ஓரறிவு, ஈரறிவு, ஐந்தறிவு, ஆறறிவு ஆகிய உயர்வு தாழ்வு அடையலாம். அதாவது ஆறறிவு பெற்ற மனிதன் மனிதப் பிறவியில் நல்ல கர்மங்கள் செய்யாமற்போனால் அம்மனிதன் அவனுடைய கிரியைகளுக்கு ஏற்ப பூனையாகவோ, நரியாகவோ, மரமாகவோ, கொசுவாகவோ பிறக்கலாம். இவ்வாறு பிறவிகள்தோறும் உயிர் காலாகாலங்களில் சுழன்று சுழன்று பிறந்து கொண்டே இருக்கும்.

சல்லேகணை

உயிர்களைக் கொல்லாமலிருக்க ஜயின பவுத்தர்கள் கொல்லாமை கடைபிடித்தனர். ஜந்துக்களைக் கொல்லாமல் புலால் உண்ணாமல் இருந்தாலும் தாவரங்களிலும் உயிர் இருப்பதால் சிக்கல் ஏற்படுகிறது. இக்கொள்கையில் அதிகப் பற்றுடைய சமணர்கள் எதுவுமே சாப்பிடா மல் தங்களை மாய்த்துக் கொள்ளும் மேலான நிலை சல்லேகணை என்று அழைக்கப்படுகிறது.

கடவுள் கொள்கைக்கு மாறுபட்ட பிறவிச் சுழற்சி

பிறவிச் சுழற்சிக் கொள்கை கடவுள் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். கடவுள் கொள்கைபடி கடவுளே படைப்புக்குக் காரணர். அவர் இந்தப் பூமியையும் பூமியிலுள்ள உயிரினங்களையும் மனிதனையும் படைத்தார். ஆனால் பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி உலகமும் உயிர்களும் தானாய்த் தோன்றியவை ஆகும். அவை ஒன்றி லிருந்து மற்றொன்றாய்ப் பரிணமித்து வந்துள்ளதாகும். மனிதனின் செயல்பாடுகளுக்குக் கடவுள் தேவையில்லை.

உயிர், உடல், ஆன்மா

கடவுள் கொள்கைப்படி மனிதனுக்கு உடல், உயிர், ஆத்துமா ஆகிய மூன்று அம்சங்கள் உண்டு. ஆனால் மற்று உயிரினங்களுக்கு ஆன்மா இல்லை. நம் உடல் பேருடல் அல்லது பேரண்டத்தின் ஒரு பகுதியான சிற்றுடல் ஆகும். உடலை அழியாமல் பாதுகாப்பதற்காகவே உயிர் இருக்கிறது. உயிர் பிரிந்த உடன் உடலின் உருவம் சிதையத் தொடங்கி விடும். உடலுக்கல்ல உயிருக்கே உருவம் உண்டு. நம் உயிர் பேருயிரின் ஒரு பகுதியான சிற்றுயிர் ஆகும். உடலிலிருந்து உயிர் பிரிந்ததும் அது பேருயிரில் சென்றடைந்து விடும். ஆன்மா அழியாத தாகும். ஆன்மா என்பது தான் உள்ளான மனிதன். அதுவே உண்மை யாக மனிதனுக்குள் இருக்கும் மனிதம். நமது ஆன்மா பேரான்மா அல்லது பேருள்ளத்தின் (கடவுளின்) ஒரு சிறு பகுதியாகும். எனவே அது சிற்றான்மாவாகும்.

ஆன்மாவின் நீடுவாழ்வு

ஆன்மா உடலையும் உயிரையும் ஆட்சி செய்கிறது. இவ் வுலகத்தில் கடவுளைப் பற்றிக்கொண்ட ஆன்மா (மனிதன்) நித்திய ஜீவன் பெற்றுக் கடவுளோடு நித்திய இன்பம் அடைவான். இவ்வுலகத்

தில் கடவுளைப் பற்றிக் கொள்ளாத ஆன்மா (மனிதன்) நித்திய நரகத்தில் சென்று வேதனை அடைவான்.

ஆன்மாவைப் பற்றிய அறிவில்லாதோர்

ஆன்மாவைப் பற்றிய அறிவில்லாதோர் உயிரை ஆன்மா என்றும் அழைத்தார்கள். அவர்கள் மனிதனுக்கும் மற்று உயிர் இனங்களுக்கும் இருக்கும் உயிர் ஒன்றே என்று கருதினர். ஆத்துமாவைப் பற்றி அறியாத வர்கள் தங்களுக்குக் கடவுள் கொள்கை இல்லாததால் ஆத்துமாவை உடைய மனிதன் மட்டும் கடவுளின் சாயலாக உருவாக்கப்பட்டான் என்றும், இவ்வுலக வாழ்க்கைக்குப் பின் அவனுக்கு நித்தியமான ஒரு வாழ்க்கை உண்டு என்றும் அறியாதிருக்கிறார்கள். பிறவிச்சுழற்சிக் கொள்கை உடைய வர்களும் இந்நிலையில் இருக்கிறார்கள்.

மக்களின் தவிப்பு

இன்றும் பிறவிச் சுழற்சிக் கொள்கையை நம்பிக் கோடிக்கணக் கான மக்கள் தங்கள் நிலையான வாழ்வு பற்றிய எந்த ஒரு எதிர்பார்ப்போ நம்பிக்கையோ இல்லாதபடி இந்த உலக வாழ்க்கையை முடிக்கிறார்கள். அதனால் மக்கள் செய்வதறியாது தவிக்கிறார்கள். அவர்கள் முந்தின பிறவியில் என்னவாயிருந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதை விளக்குவாரும் எவரும் இல்லை. இந்தப் பிறவிக்குப் பின் அவர்கள் எந்தப் பிறவியை அடைவார்கள் என்பதும் அவர்களுக்கு தெரியாது. அதையும் விளக்குவர் எவரும் இல்லை. அவர்களுக்கு எத்தனை பிறவிகள் உண்டு என்பதோ அவர்களின் கடைநிலை என்ன என்பதோ எதுவுமே அவர்களுக்குத் தெரியாமல் கலங்கித் தவிக் கிறார்கள்.

நம்பிக்கையற்ற வாழ்க்கை

வாழ்க்கையைப் பற்றிய ஒரு நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படு வதில்லை. அவர்களுக்குள் இருக்கும் விலையேறப் பெற்ற ஆத்து மாவைக் குறித்து அவர்களுக்குத் தெரியாது. அதைச் சொல்லிக் கொடுப் பாரும் எவருமில்லை. எனவே அதைக்குறித்து அவர்கள் கவலைப்படு வதுமில்லை. இந்தப் பிறவியில் நாம் மனிதனாகப் பிறந்திருக்கிறோம். மரித்து மண்ணோடே மண்ணாய்ப் போவோம் என்னும் நிலையில் அவர்களின் வாழ்வு முடிவடைகிறது. அதற்குப் பின் என்ன ஆவார்கள் என்பது குறித்து அவர்களுக்குக் கவலை இல்லை.

பிறவிச்சுழற்சிக்கு மாறான சைவ சித்தாந்தம்

பிறவிச் சுழற்சிக் கொள்கையில், கடவுள் கொள்கை கிடையாது. உலகத்தையும் உயிர்களையும் கடவுள் படைக்கவில்லை. அவை தானாகவே தோன்றிற்று என்பது சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். மட்டுமல்ல, சைவ சித்தாந்தம் ஆன்மா (மனிதன்)வுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. மனிதனுக்குள் ஆன்மா உண்டு என்பதைச் சைவ சித்தாந்தம் வலியுறுத்துகிறது. அந்த ஆன்மா அழியாதது; பாவத்தால் அந்த ஆன்மா கறைப்பட்டு மயக்க நிலையில் ஆகிவிட்டது. அப்படிப்பட்ட ஆன்மாவை மீட்க இறைவன் குருவாக அவதரித்தார். இறைவன் ஆன்மாவை உணர்த்த ஆன்மா உணர்வடைகிறது. அப்படிப்பட்ட ஆன்மா இறைவன் பாதத்தில் நித்திய பேரின்பம் அடைகிறது என்னும் கொள்கைகளையும் கொண்டுள்ளது.

இந்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பிறவிச் சுழற்சிச் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

அதிகாரம் : 7

மனிதனுக்கு வீழ்ச்சியிலிருந்து மீட்பு

(வி.வி., சை.சி.)

மீட்பின் திட்டம் விவிலியத்தில்

கடவுளால் படைக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாம், மனுஷியாகிய ஏவாள் மற்றும் உலகம் ஆகியவை பாவத்தில் வீழ்ச்சியடைந்த பின் ஏற்பட்ட நிலைகளைக் குறித்து விவிலியம் விளக்குகிறது. தேவ கட்டளை மீறி பாவத்துக்குள்ளாகித் தேவனை விட்டு அகன்றுபோன மனிதனைத் தம்மிடம் மறுபடியும் சேர்த்துக் கொள்ளும் தேவதிட்டத்தைக் கடவுள் ஏதேன் தோட்டத்திலேயே வெளிப்படுத்தினார்.

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன், அவர் (ஸ்திரீயின் வித்தான இயேசு) உன் தலையை நசுக்குவார்..." அதாவது தன் பொய்யினால் மனிதனை வீழ்த்திய சாத்தானை ஸ்திரீயின் வித்தாக உலகத்தில் அவதரிக்கும் குமாரனாகிய கடவுள் சிலுவை மரத்தில் வெற்றி கொண்டு அவன் தலையை நசுக்குவார் என்பது பொருள். இந்தத் தேவத் திட்டம் மனிதன் வீழ்ச்சி அடைந்த உடனே அறிவிக்கப்பட்டபோதிலும் இரட்சகராகிய இயேசு உலகில் அவதரித்துத் தம்மைவிட்டு தூரம்போன மக்களை மறுபடியும் சேர்த்துக் கொள்வதற்காகச் சிலுவை மரத்தில் தம்மையே பலியாக்கியது அனேக ஆண்டுகள் சென்றபின் ஆகும்.

வீழ்ச்சிக்குப்பின் முதல் கொலை

முதல் மனிதனாகிய ஆதாமுக்குக் காயீன் ஆபேல் என்ற இரு

புதல்வர்கள் பிறந்தார்கள் என்றும் காயீன் தன் இளைய சகோதரனாகிய ஆபேலைக் கொன்று போட்டான் என்றும் காணப்படுகிறது. இதுவே பாவத்தில் வீழ்ச்சியடைந்தபின் நடந்த மனிதனின் முதல் கொலை.

சேத் - நல்ல சந்ததி

இதைத் தொடர்ந்து துஷ்ட மனிதனாகிய காயீன் ஏதேனுக்குக் கிழக்கே அனுப்பி விடப்பட்டான் என்றும் ஆதாமுக்குச் சேத் எனும் ஒரு குமாரனும் அதன் பின் அனேக குமாரர்களும் குமாரத்திகளும் பிறந்தார்களென்றும் ஆதியாகமம் 4, 5 - ம் அதிகாரங்களில் காணப் படுகிறது.

ஜலத்தினால் அழிவும் தேவனுடைய பாதுகாப்பும்

தங்களின் மிகுதியான பாவத்தால் ஜனங்கள் எல்லோரும் அழிக்கப்பட்டார்கள் என்றும் நோவா என்ற ஒரு மனிதனின் குடும்பத் தாராகிய 8 பேர் மட்டும் மீந்திருந்தார்கள் என்றும் அவர்களால் மீண்டும் ஜனங்கள் பெருகினார்கள் என்றும் வாசிக்கிறோம். அவர்கள் கிழக்கிலிருந்து மேற்காசியாவில் சினேயார் என்ற மெசப்பட்டோமி யாவில் தங்கினார்கள்.

ஜனங்கள் நானாதேசங்களில்

மெசப்பட்டோமியாவில் வாழ்ந்து பெருகின ஜனம் அவ்விடத் திலிருந்து நாலாத் திசைகளிலும் சிதறிச் சென்றார்கள் என்று ஆதி. 10-ம் அதிகாரத்தில் விரிவாக விளக்கப்படுகிறது. அக்கூற்றிற்கு ஏற்ப ஜனங்களும் தேசங்களும் அமைந்துள்ளார்கள் என்று இன்றும் வரலாற்றில் பார்க்கமுடிகிறது.

ஆபிரகாம் என்ற மனிதன்

சிதறடிக்கப்பட்ட பின் மெசபட்டோமியாவின் (பாபிலோன்) ஊர் என்ற இடத்திலிருந்து கடவுள் ஆபிரகாம் என்ற ஒருவனை வேறு படுத்தி அவன் வழியாக உலகத்தில் எல்லா ஜனங்களுக்கும் வீழ்ச்சியிலிருந்து விடுதலை கொடுக்க கடவுள் சித்தமானார்.

"கர்த்தர் ஆபிராமை நோக்கி : நீ உன் தேசத்தையும், உன் இனத் தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய சாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்

படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி 12 : 1 - 3). இது பூமியிலுள்ள வம்சங்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவதற்குத் தேவனால் வகுக்கப்பட்ட திட்டமாகக் காணப்படுகிறது. இந்த ஆபிரகாமின் சந்ததியில் தான் தேவக்குமாரன் பிறந்தார்.

ஸ்திரீயைக் குறித்த திட்டம்

இது சபிக்கப்பட்ட மனுக்குலத்தை மீட்டு மறுபடியும் தம்மிடம் சேர்த்துக்கொள்வதற்கு உலகில் அனுப்பப்படவேண்டிய இரட்சகர் பிறப்பதற்கான ஒரு கன்னிகை (ஸ்திரீ)யை ஏற்படுத்துவதற்காகக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட திட்டமேயாகும். ஆபிரகாம் என்ற அந்த மனிதன் தேவஅழைப்பின்படி பாபிலோனைவிட்டு ஆசியாக் கண்டத்தின் மேற்கு பகுதியிலுள்ள பாலஸ்தீனா என்ற (இஸ்ரவேல்) தேசத்தில் சென்று வசித்தான். அங்கு அவனுக்கு ஈசாக்கு என்ற மகனும் ஈசாக்குக்கு யாக்கோபு என்ற மகனும் பிறந்தார்கள்.

பண்படுத்துதல்

யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்ற பெயர் கொடுக்கப்பட்டு அவன் சந்ததி திரளாய்ப் பெருகி, அவர்கள் இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டார்கள். இவ்வாறு ஆபிரகாமின் சந்ததியாகிய இஸ்ரவேலர் பலஸ்தீனாவிலும் பின்பு எகிப்திலும் மறுபடியும் பலஸ்தீனாவிலும் பின்பு பாபிலோனிலும் வசித்து கடவுளால் பண்படுத்தப்பட்டார்கள்.

மறுபடியும் பலஸ்தீனாவில்

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனியா அடிமைத்தனத்திலிருந்து கோரேஸ் மன்னனின் நாட்களில் (B.C. 539) விடுவிக்கப்பட்டு அவர்கள் மறுபடியும் பலஸ்தீனாவில் வந்து சேர்ந்தார்கள். அங்கே ஆபிரகாமுக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும்படி காத்திருந்தார்கள்.

அகஸ்து ராயனின் நாட்களில்

உலகப் பேரரசனான ரோமா சாம்ராஜ்யத்தில் அகஸ்து சீசரின் ஆட்சிக் காலத்தில் கடவுளின் வாக்குத்தத்தம் நிறைவேறிற்று. தூய நிலை

யில் தம்மோடு இருக்கும்படி கடவுளால் படைக்கப்பட்ட மனுக்குலம் தம்மை விட்டுத் தூரம் போனபோதிலும் அவர்களை மீட்டு மறுபடியும் தம்மிடம் சேர்த்துக் கொள்வதற்காக குமாரனாகிய கடவுள் அந்நாட்களில் பலஸ்தீனாவில் மரியாள் என்ற ஒரு ஸ்திரீயில் பிறந்து மனுக்குலத்தின் பாவத்தைத் தம்மேல் சுமந்து பாவப்பரிகாரத்துக்காகத் தம்மையே பலியாக்கி மரித்து உயிர்த்தெழுந்தார். அவர் சம்பாதித்துத் தந்ததே இரட்சிப்பு என்னும் மீட்பு. அதை ஏற்றுக் கொண்டவர்கள் மறுபடியும் கடவுளோடு சேர்க்கப்படுகிறார்கள். இது ஒரு நீண்ட வரலாறாகக் காணப்படுகிறது. The Rees Chronological Bible-ன் அடிப்படையில் முதல் மனிதன் வீழ்ச்சியடைந்தது B.C. 3975-லும், தேவகுமாரனின் பிறப்பு B.C. 5- லும் என்று காணப்படுகிறது.

மீட்பின் திட்டம் சைவ சித்தாந்தத்தில்

இறைவனின் மீட்பின் திட்டம் சைவ சித்தாந்தச் சாஸ்திரங்களில், சிவஞான போதம் 2-ம் சூத்திரத்தில் சுருக்கமாக விளக்கப்படுகிறது.

இறைவனின் இருவினைகள்

கடவுள் இருவினைகள் புரிகிறார். அவையாவன ஒன்று, (முதல் சூத்திரத்தில் கூறப்பட்ட) ஆதி மனிதன், ஸ்திரீ, உலகம் ஆகியவற்றைப் படைத்தல். இறைவன் இவற்றை எவ்வாறு படைத்தார் என்றால் தம் முடைய ஆற்றலினால் தம்மை விட்டுப் போக்குதல் ஆகிய தோற்று வித்தலால் படைத்தார். அது அவர் ஆணையாலும் அவர் ஆணைக்குள் ஆயிற்று. இதுவே போக்கு அல்லது போக்குதல் ஆகிய தோற்றுவித்தல். ஆனால் வீழ்ச்சியடைந்த மனிதனோ கடவுளை விட்டு அகன்று தூரம்போய்விட்டான்.

இறைவனின் மற்றுமோர் செயல் என்னவென்றால், வீழ்ச்சியடைந்து சீர்கெட்டுப்போன மக்களை மீட்டுத் தம்மிடம் மறுபடியும் சேர்த்துக் கொள்தல் ஆகும். இதுவே சேர்த்தல் என்னும் வரவு. இந்த மீட்டெடுத்தல் என்ற வரவு எளிதாய் வந்துவிடவில்லை. வீழ்ச்சி அடைந்த மனிதரை மீட்டெடுக்கக் கடவுள் தீட்டிய திட்டத்தின்படி நீண்ட காலங்களுக்குப்பின், கடவுள் தாமே இந்த உலகத்தில் ஒரு மனிதனாகப் பிறந்து மனிதரின் பாவத்துக்குச் சிலுவைத் தவத்தினால் பரிகாரம் செய்து மறுபடியும் தம்மிடம் (வரவு) வருவதற்கான வழி திறந்திருக்கிறார்.

போக்கு, வரவு

வீழ்ச்சி அடைந்த மனித சமுதாயம் கடவுளை விட்டு அகன்று போயிற்று. கடவுள் மனிதனைத் தோற்றுவித்த நிலையில் அவர்கள் தம்மை விட்டுத் தூரம் போய் விட்டார்கள். எனவே கருணை நிறைந்த கடவுள் அவர்களை மறுபடியும் தம்மிடம் சேர்க்கச் (வரவழைக்க) சித்தமானார். இந்தச் சேர்த்தலுக்கு அதாவது கடவுளை விட்டுத் தூரம் போன மனுக்குலத்தை இரட்சித்து மீண்டும் தம்மிடம் சேர்ப்பதற்கு அனேக வழிமுறைகளைச் செய்து கடைசியாகக் கடவுளே இவ்வுலகத்தில் மனிதனாய் அவதரித்து பாவபரிகாரத்துக்காக தம்மையே பலியாக்க வேண்டியதாயிற்று. கடவுளின் இந்தச் செயலினாலேயே வரவு அல்லது சேர்த்தல் ஆகிய செயலைச் செய்துள்ளார். இதைச் சிவஞான போதம் 2-ம் சூத்திரம் விளக்குகிறது.

சி.ஞா.போ. சூத்திரம் 2

அவையே தானே ஆயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

பதவுரை

அவையே ஆய்	-	முதல் மனிதன், முதல் ஸ்திரீ, உலகம் ஆகிய அவை மூன்றையும் தோற்றுவித்து
தானே ஆய்	-	அவற்றை தன் ஆணையால் மறைந்து தானே ஆகிய
இருவினையின்	-	மேலே குறிப்பிட்ட (தோற்றுவித்தல், சேர்த்தல் ஆகிய மறைத்தல்) இரு செயல்களால்
போக்கு	-	தம்மை விட்டுப் போக்குதல் ஆகிய தோற்றுவித்தல்
வரவு	-	தம்மிடம் சேர்த்தல்
புரிய	-	இவைகளைச் செய்ய
ஆணையின்	-	அவை கடவுளின் ஆணையிலிருந்து
நீக்கம் இன்றி	-	நீக்கம் இல்லாமல்
நிற்கும் அன்றே	-	நிலைத்து நிற்கும்

கருத்துரை

கடவுள் இரு வினைகள் புரிகிறார். அவையாவன. ஒன்று: ஆதி மனிதன், ஸ்திரீ, உலகம் ஆகியவற்றைத் தோற்றுவித்தது. மற்றொன்று தூய நிலையிலிருந்து ஒடுங்கித் தம்மை விட்டு மலமாகிய பாவத்தில் விழுந்துபோன பாவச் சந்ததியைத் தம்மிடம் தாமே சேர்ப்பது. அதாவது தோற்றுவித்தல், சேர்த்தல் ஆகிய இரு செயல்கள். இவை இரண்டையும் இறைவன் தம்முடைய ஆணையினாலேயே (ஆட்சிக்குள்ளேயே) செய்கிறார். எனவே இவை இறைவனின் ஆட்சியிலிருந்து நீங்காமல் இறை ஆட்சிக்கு உட்பட்டவையே ஆகும்.

விளக்கவுரை

அதாவது, இறைவன், அவன் அவள் அது ஆகிய மூன்றையும் வெவ்வேறு செயல்களால் படைத்தார் என்றும், படைக்கப்பட்டபோது அவை தூய நிலையில் படைக்கப்பட்டன என்றும் முதல் சூத்திரத்தில் விளக்கப்பட்டது. இது கடவுளின் ஆணையின் வழியிலான தோற்று வித்தல் என்ற செயல் ஆகும். ஆனால் அவை தூய நிலையிலிருந்து ஒடுங்கி மலமாகிய பாவத்தில் வீழ்ச்சியடைந்தது என்றும் அங்கே விளக்கப்பட்டது. அவை பரிசுத்தராகிய கடவுளிடமிருந்து விலகிப்போய் சகச மலமாகிய பாவத்துக்கு அடிமைப்பட்டுவிட்டன. ஆனாலும் கடவுள் அவைகளை மீட்டு மறுபடியும் தம்மோடு சேர்த்துக்கொள்ள சித்தமானர். அதற்காகக் கடவுளே இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்து பாவப்பரிகாரத்துக்காகத் தம்மையே பலியாக்கி வீழ்ச்சியடைந்தவர்களை மறுபடியும் தம்மோடு சேர்த்துக் கொண்டார். தோற்றுவித்தல், சேர்த் தல் ஆகிய இருவினைகளும் கடவுளின் செயல்களே.

மீட்பைக் குறித்து திருக்குறள்

திருக்குறளின் மையப்பொருளே மீட்பு அல்லது இரட்சிப்பு என்பதாகும். இந்த இரட்சிப்புக்குத் திருவள்ளுவர் கூறும் வார்த்தைகள் பொய்தீர் ஒழுக்கநெறி, ஒழுக்கம், அறம் போன்றவை ஆகும். இந்த இரட்சிப்பாகிய அறத்தை வீழ்ச்சியடைந்த மக்களுக்கு அளிக்க வந்த வரே நீத்தாராகிய (குமாரன்) கடவுள். பரலோக மேன்மைகளை மனு மக்களுக்காகத் துறந்த நீத்தாருக்குத் திருக்குறளில் கொடுக்கப்பட்டுள்ள மற்றுமோர் காரணப்பெயர் தான் ஐந்தவித்தான் என்பது. ஐந்தவித் தான் என்றால் தன் ஐம்புலன்களையும் அவித்தவர் (பலியாக்கினவர்) என்பது பொருள். அவர் ஐம்புலன்களையும் பலியாக்கியது எங்கெ என்

றால் பொறிவாயில் ஆகும். அதாவது பொறியாகிய கொலைக் கருவியில் (சிலுவையில்) ஆகும்.

பொறிவாயில் என்ன சம்பாதித்தார்?

அவர் பொறிவாயில் என்ன சம்பாதித்தார் என்றால், பொய்யினால் (சாகவே சாவதில்லை என்ற சாத்தானின் பொய்) ஏற்பட்ட பாவத்தைத் தீர்த்து அதாவது பரிகரித்து ஒழுக்க நெறியாகிய மீட்பை உண்டாக்கினார். பொய்க்குப் பிதாவாகிய சாத்தானால் உருவாக்கப் பட்ட அந்த மாபெரும் பொய்யே மனிதனின் வீழ்ச்சிக்குக் (பாவத்துக்கு) காரணமாயிருந்தது. பாவத்தின் சம்பளமாக மனிதன் நித்திய மரணத்தை அடைந்து விட்டான். அத்தகைய பொய்யும் பொய்யனாகிய சாத்தானும் பொறியாகிய சிலுவையில் நசுக்கப்பட்டபடியால் கிடைத்ததே மீட்பு. (15-வது அதிகாரம் 115 பக்கம் பார்க்க) பொய்யனின் கால்களின் கீழிருந்து மனுமக்கள் மீட்கப்பட்டுவிட்டார்கள். அந்த மீட்பினிமித்தம் அவர்கள் அடையப்போவது தான் இறைவனோடு மறுபடியும் சேர்தல். அவ்வாறு இறைவனோடு சேர்ந்து அவர்கள் அடையப்போவதே நீடு வாழ்வு. அதாவது நித்தியப் பேரின்ப வாழ்வு.

மீட்பின் செய்தி

இதுபோன்ற மீட்பின் செய்தி திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரங்களிலும் நிரம்பிக் கிடக்கிறது. மீட்பின் செய்தியைத் தவிர, மீட்கப் பட்டவர்க்கு இருக்க வேண்டிய பண்புகளும் விளக்கப்படுகின்றன. இறுதியில் மீட்கப்பட்ட சான்றோர் அடையவிருக்கும் பேரின்ப வாழ்வைக் குறித்து இன்பத்துப்பாலில் விளக்கப்படுகிறது.

அதிகாரம் : 8

விவிலியத்தில் திரித்துவக் கடவுள்

கடவுள் கிறிஸ்தவர்களால் திரித்துவக் கடவுள், திரியேக தேவன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

ஆதி முதல் மூவொருவராகச் செயல்பட்டுக்கொண்டிருந்த கடவுள் இந்த உலகத்தில் ஒரு மனிதனாக அவதரித்து ஓர் கன்னியின் வயிற்றில் பிறந்து அவருடைய மூவொரு தன்மையைத் தெளிவாக விளக்கினார்.

அன்புக்கடவுள்

கடவுள் அன்பே உருவானவர். எனவே கடவுளை அன்புக் கடவுள் என்று அழைத்தார்கள். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்புக்கடவுள் ஆற்றல் உடையவர் அது மட்டுமல்ல அவர் ஆற்றலினால் செயலாற்றுகிறவரும் கூட. இவ்வாறு கடவுள், அன்பும், ஆற்றலும், செயலும் நிறைந்தவர் என்றும் அம்மூன்று நிலைகளில் ஒன்றாய் விளங்குகிறவர் என்றும் காணமுடிகிறது.

கடவுளின் மானிட அவதாரத்தில் மேற்கண்ட மூன்று நிலைகளையும் தெளிவாய்ப் பார்க்க முடிகிறது. அன்பாகிய கடவுள் தம் அன்பின் பெருக்கினாலேயே கெட்டுப்போன மனிதரை மீட்டெடுப்பதற்காகத் தாமும் ஒரு மனிதனாக இந்த உலகத்தில் பிறக்கச் சித்தம் கொள்ளுகிறார். அதற்காக அவருடைய ஆற்றலை (வல்லமை அல்லது சக்தியை) மரியாள் என்ற ஒரு ஸ்திரீயின் வயிற்றில் அனுப்பியதைப் பார்த்தோம். அப்போது அந்த அன்புக் கடவுளின் திட்டங்களை செயலாற்றுவதற்காக இயேசுவாக (குமாரனாக) வெளிப்பட்டார்.

மூன்று நிலைகள்

இங்கே மூன்று நிலைகளும் வெளிப்படுகிறது. 1. அன்பாகிய கடவுளிலிருந்து குமாரன் வெளிப்பட்டபடியால், அன்புக் கடவுள் பிதாவின் ஸ்தானத்தில் காணப்படுகிறார். 2. செயல்படுவதற்கு வெளிப் பட்டவர் குமாரனுடைய ஸ்தானத்தில் காணப்படுகிறார். 3. குமாரன் வெளிப்படுவதற்குக் காரணமாயிருந்த ஆற்றல் அல்லது கடவுளின் வல்லமை அல்லது சக்தி தூய ஆவியாக விளங்குகிறார்.

இந்தத் திரித்துவம் 1. அன்பு அல்லது பிதா, 2. குமாரன், 3. தூய ஆவி அல்லது சக்தி என்று மேலே கூறப்பட்ட காரணங்களால் கொள்ளப்படுகிறது.

கடவுளின் திரித்துவம்

வரலாற்றில் மேற்காசியாவில் பிறந்து வாழ்ந்த குமாரனாகிய கடவுளின் வாழ்க்கையின் பல பகுதிகளில் இந்நிலைகள் மிகவும் தெளிவாக விளங்குவதைக் காணலாம். குமாரனாகிய கடவுளின் வாழ்க்கை வரலாற்றில் திரித்துவத்தை வெளிப்படுத்துகின்ற சில இடங்கள் கீழே சுட்டிக் காட்டப்படுகின்றன.

தூதனின் கூற்று

குமாரனாகிய இயேசுவின் பிறப்பைக் குறித்துத் தூதன் : "நீ பரிசுத்த ஆவியினாலே கற்பம் தரித்து ஒருகுமாரனைப் பெறுவாய்" என்றான். பின்பு தூதன் யோசேப்போடு "மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப் படாதே. அவளிடத்தில் உண்டாயிருப்பது பரிசுத்த ஆவியினாலுண் டானது" என்றான். (லூக். 1:31; மத் 1:20)

இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது

இங்கே கடவுளைப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூன்று நிலைகளில் காணமுடிகிறது. "பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல இறங்கிவந்தார், வானத்திலிருந்து, நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்" (மத். 3:16, 17) என்ற சத்தம் தொனித்தது. பிதாவானவர் வானத்திலிருந்து பேசுவதையும் குமாரன் யோர்தான் ஆற்றின் கரையில் நிற்பதையும் பரிசுத்த ஆவியானவர் புறாவின் ரூபத்தில் வானத்திலிருந்து இறங்கி வருவதையும் பார்க்கிறோம்.

தேவ குமாரன் ஆலயத்தைச் சுத்தீகரிக்கும்போது

இயேசு எருசலேம் தேவாலத்தில் ஆடுமாடு விற்கிறவர்களையும் காசுக்காரர்களையும் கண்டு அவர்களைத் துரத்தி விட்டு "என் பிதாவின் வீட்டை வியாபார வீடு ஆக்காதிருங்கள்" *(மத். 21:12-17)* என்றார்.

மறுரூபமலையில்

இயேசு மறுரூப மலையில் சீஷர்களோடு இருக்கையில்; வானத்திலிருந்து "இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்கள்" *(மத். 17:5)* என்று சத்தம் தொனித்தது.

காய்பா முன் விசாரணையில்

"பிரதான ஆசாரியன் அவரை (இயேசுவை) நோக்கி நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு நீர் சொன்னபடிதான். அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல்வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத். 26:62-64).

பிலிப்புவுக்குப் பதிலளிக்கையில்

பிலிப்பு பிதாவைக் காண்பிக்க வேண்டிக்கொண்டபோது, இயேசு பிரதியுத்தரமாக "பிலிப்புவே இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். ....நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா ? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக்கிரியைகளைச் செய்துவருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்" என்றார் (யோ. 14:9-11).

தேற்றரவாளனைக் குறித்துக் கூறுகையில்

இயேசு:.... "நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்திற்கு வரார். அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உங்களுக்குக் கண்டித்து உணர்த்துவார்..." என்றார் (யோ. 16:7,8).

"பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பபோகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்.....". (யோ. 15:26).

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்....." (யோ. 14:26).

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து. எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்....." (அப். 1:8).

இயேசு பிதாவிடம் ஜெபிக்கும் போது

"பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும். (யோ. 17:2). ...நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன் (யோ. 17:21). .....நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோ. 17:22).

சிலுவையில்

பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். (லூக். 23:46).

கடவுள் ஒருவராயிருந்தாலும் மூன்று நிலைகளில் அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூன்று நிலைகளில் செயல்படுகிறவர் என்பதை மேலே கூறப்பட்டுள்ள நிகழ்சிகளிலிருந்தும் இது போல் நிகழ்ந்த மற்றனேகக் காரியங்களிலிருந்தும் கண்டுகொள்ளலாம்.

அதிகாரம் : 9

திருக்குறளில் மூவொரு கடவுள்

கிறிஸ்தவத்தில் கடவுள், திரியேக தேவன் அல்லது திரித்துவக் கடவுள் என்று அழைக்கப்படுகிறார். அதே நேரத்தில் திருக்குறள் மற்றும் சைவ சித்தாந்த நூல்களிலும் கடவுள் மூவொரு கடவுள் என்று அழைக்கப்படுகிறார். திருத்துவக் கடவுள் திரியேக தேவன் என்பதும் மூவொரு கடவுள் என்பதும் ஒரே பொருளையே குறிக்கிறது.

மூவொரு கடவுள்

திருவள்ளுவர் திருக்குறளில் மூவொரு கடவுளை விளக்குகிறார். பொதுவாகத் தமிழ் இலக்கியங்களில் ஆசிரியர்கள் நூலின் முகவுரைப் பகுதியான பாயிரத்தில் கடவுளை வாழ்த்துவார்கள். முதல் அதிகாரத்தில் கடவுளை வாழ்த்தி இரண்டாவது அதிகாரத்தில் தாம் அந்த நூலில் சொல்லப்போகும் பொருளைக் கூறிப் பாயிரத்தை முடிப்பார்கள். ஆனால் திருவள்ளுவர் அந்தப் பொதுமரபுக்கு மாறாகத் தமது திருக்குறளில் கடவுள் வாழ்த்துக்காக முதல் மூன்று அதிகாரங்களை எடுத்துக்கொண்டு நான்காவது அதிகாரத்தில் செயப்படுபொருளைக் கூறி பாயிரத்தை முடிக்கிறார்.

இதற்குக் காரணம் திருவள்ளுவர் முதல் மூன்று அதிகாரங்களில் மூவொரு கடவுளை வாழ்த்துவதே ஆகும். மூவொரு கடவுளுக்கு விவிலியம் கூறும் பெயர்கள் பிதாவாகிய கடவுள், பரிசுத்த ஆவியாகிய கடவுள், குமாரனாகிய கடவுள் என்பனவாகும். திருவள்ளுவர் அந்த காரணப்பெயர்களை இங்கு குறிப்பிடாமல் கடவுளின் மூன்று செயல் பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கடவுள், வான், நீத்தார் என்ற காரணப்பெயர்களில் வாழ்த்துகிறார்.

முதலாவது பிதாவாகிய கடவுளை வாழ்த்துகிறார்

திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் பிதாவாகிய கடவுளைக் கடவுள் என்ற பெயரில் (எல்லாவற்றையும் கடந்து நிற்பவர்) அழைத்து வாழ்த்துகிறார்.

அவர் முதலாம் குறட்பாவிலேயே கடவுளை 'ஆதிபகவன்' என்று அழைக்கிறார். அதாவது அவர் தம்மைத்தாமே கடவுள், வான், நீத்தாராகிய மூவராகப் பகுத்து நிற்பவர் என்கிறார். கடவுளே படைப்புக்குக் காரணர் என்றும் 'வாலறிவன்', 'சருவ ஞானி' என்றும் 'மலர்மிசை ஏகினான்' அதாவது இருதயமாகிய மலரில் வந்து வசிப்பவர் என்றும் கூறி வாழ்த்துகிறார்.

இரண்டாவது தூய ஆவியாகிய வானைச் சிறப்பிக்கிறார்

இரண்டாம் அதிகாரத்தில் திருவள்ளுவர் தூய ஆவியை வான் என்ற நிலையில் வாழ்த்திச் சிறப்பிக்கிறார். விவிலியத்தில் பரிசுத்த ஆவியாகிய கடவுள் பரிசுத்த அக்கினி, பனித்துளி, ஆவியின் மழை ஆகிய பலநிலைகளிலும் விளக்கப்பட்டிருக்கிறார். கடவுளின் ஆவி, வான் அல்லது மழையைப் போல நிரப்பும் சக்தி உள்ளதாகக் காட்டப்படுகிறது.

தூய ஆவியின் சிறப்புகள்

வான் ஆகிய தேவ ஆவியின் சிறப்புகளை மழை யின் (வானின்) தன்மைகளைக் கொண்டு விளக்குகிறார். தேவ மக்கள் சிறப்பாக வாழ வேண்டுமானால் வானமிழ்தாகிய ஆவியின் மழை வேண்டும் என்கிறார் வள்ளுவர். (குறள் 11).

கடவுளுக்கு ஊழியம் செய்ய

மட்டுமல்ல, தூயஆவியை, ஊழியர்களை எழுச்சியோடு ஊழியம் செய்ய வைக்கும் 'வாரி வளம்' (அருள் வெள்ளமாகவும்), சீர்கெட்டவர்களைத் தூக்கியெடுக்கும் (மனம் திரும்ப வைக்கும்) அருள் மழையாகவும் விளக்குகிறார் (குறள் 13, 14, 15). நற்செயல்கள் செய்யத்தூண்டுவதும் விசும்பின் துளியாகிய ஆவியின் அருள் ஆகும் (குறள் 16). இடி மின்னல்களோடு (வல்லமையோடு) பொழியப்படும் அருள்மழை இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய ஊழியர்களும் ஒன்றுமில்லாமல் ஆகிவிடுவார்கள் (குறள் 17).

கடவுளுக்கு ஆராதனை செய்ய

மேலும் 'வானம்வறக்குமேல்' அதாவது அருள் வெள்ளம் ஆகிய

தேவ ஆவி இல்லாவிட்டால் கடவுளுக்கு உகந்த ஆராதனையும் செய்ய முடியாது என்கிறார் (குறள் 18). 'தானம் தவம்' ஆகியவற்றைச் செய்ய வைப்பவரும் கூட தேவ ஆவியானவரே (குறள் 19).

எவரையும் 'ஒழுக்கத்தில்' காத்துக்கொள்ள

எல்லாவற்றிற்கும் மேலாக நீத்தாராகிய தேவகுமாரன் பெற்றுத் தந்த மாபெரும் இரட்சிப்பு ஆகிய ஒழுக்கத்தைக் கடைசி வரை காத்துக் கொள்ள வேண்டுமானால் எவ்வகை மேம்பட்டவருக்கும் பரத்தி லிருந்து அருளப்பட்ட அருள்மாரி இன்றியமையாததாகும்.

(அ. 2:10)

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" (கு. 20).

மூன்றாவது குமாரனாகிய நீத்தாரை வாழ்த்துகிறார்

மூன்றாம் அதிகாரத்தில் திருவள்ளுவர் குமாரனாகிய கடவுளை நீத்தார் என்ற பெயரில் வாழ்த்துகிறார். குமாரனாகிய கடவுள் பரலோ கத்தின் மேன்மைகள் அனைத்தையும் நீத்து (துறந்து) உலகுக்கு வந்து மனிதருக்காகத் தன்னையே பலியாக்கியபடியால் அவருக்கு நீத்தார் என்ற பெயர் முற்றிலும் பொருத்தமானதாகும்.

நீத்தாரே ஐந்தவித்தான்

நீத்தாராகிய குமாரனுக்குத் திருவள்ளுவர் முதலாம் அதிகாரத்தில் கொடுத்திருக்கும் ஒரு காரணப்பெயர் 'ஐந்தவிந்தான்' என்பதாகும். ஐந்தவிந்தானாகிய குமரக்கடவுள் பொறியாகிய சிலுவையில் தம்மையே பலியாக்கி மனிதருக்காகச் சம்பாதித்த பொருளே பொய்தீர் ஒழுக்க நெறியாகிய அறம் என்ற இரட்சிப்பு. இந்த ஒழுக்கத்தை மனுக்குலத்திற்கு அளித்திடத் தம் பரலோக மேன்மைகளை நீந்தவராகையால் திருவள்ளுவர் அவரை ஒழுக்கத்து நீத்தார் என்று குறிப்பிடுகிறார்.

இருமை வகை தெரிந்தவர்

கடவுளின் மகன் மட்டுமே 'இருமை வகை தெரிந்தவர்'. அதா வது இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் சரியாகப் புரிந்தவர். இம் மையிலுள்ள மனிதரின் பாவ நிலையைக் கண்டு மனம் உருகி மறுமை யின் மேன்மைகளை விட்டவர். தாமே ஈண்டு அறம் பூண்டவர். அவருடைய பெருமையே உலகில் சிறந்தது (குறள் 23).

மக்களின் ஐம்புலன்களைக் காத்தவர்

அவர் தமது ஐம்புலன்களை அவித்து (பலியாக்கி) உலக மக்களின் 'ஓர் ஐந்தும்' அதாவது ஐம்புலன்களைக் காத்தார் (குறள் 24). மட்டுமல்ல அவர் 'செயற்கரிய செய்தவர்' அதாவது உலகில் ஒருவருக்கும் செய்ய முடியாத செயலாகிய இரட்சிப்பின் செயலைத் தம் ஜீவனைக் கொடுத்து செய்தவர் (குறள் 25). அவர் 'ஐந்தின் வகை தெரிந்தவர்' (குறள் 27). அவரே 'நிறைமொழி மாந்தர்' அதாவது வார்த்தை மாம்சமானவர். அவர் பெருமையை விவரிப்பதே மறைமொழியாகிய விவிலியம் (குறள் 28).

நீதியாய் நியாயம் விசாரிப்பவர்

அதுமட்டுமல்ல அவர் 'குணமென்னும் குன்றேறி நின்றவர்' அதாவது நற்குணங்களின் சிகரமானவர். ஆனால் ஒருநாள் அவர் நியாயாதிபதியாக வருவார்.அப்போது அவர் ஈட்டிய இரட்சிப்பாகிய ஒழுகத்தில் நில்லாதவர்கள் அவர் 'வெகுளியைக் (கோபத்தை) கணமேயும் காத்தல் அரிது' கணப்பொழுது கூட சகித்துக் கொள்ள மாட்டார்கள் (குறள் 24). அவர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர் (30).

குமாரனாகிய நீத்தார் உயிர்த்தெழுந்தவர்

இப்படிப்பட்ட ஐந்தவித்தானாகிய நீத்தாரின் ஆற்றலுக்கு வள்ளுவர் ஒரு சான்று கூடக் குறிப்பிடுகிறார். அது என்னவென்றால் அவர் உயிர்த் தெழுந்த ஆற்றலுக்கு 'அகல் விசும்புளார்கோமான் இந்திரன்' கூறிய சாட்சியாகும், குமாரனாகிய கடவுள் உயிர்த் தெழுந்தபோது தேடிச் சென்ற மரியாளுக்கு அகன்ற வானங்களி லுள்ள தேவதூதன் "அவர் இங்கு இல்லை அவர் சொன்னபடி உயிர்த் தெழுந்தார்" என்று சொன்ன சாட்சியை வள்ளுவர் இங்குச் சுட்டிக் காட்டுகிறார். (குறள் : 25)

இவ்வாறு திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பகுதியான மூன்று அதிகாரங்களில் திருவள்ளுவர் வாழ்த்துவது மூவொரு கடவுள் என்றும் அது சைவத்தில் கூறப்படும் அப்பன், சக்தி, மகன் (சிவன், சக்தி, குமரன்) ஆகிய மூவொரு கடவுள் என்றும் அதுவே விவிலி யத்தில் கூறப்படும் பிதா, பரிசுத்தஆவி, குமாரன் ஆகிய திரித்துவக் கடவுள் என்றும் ஏற்றுக்கொள்வதற்குச் சந்தேகமே இல்லை.

இயல்புடைய மூவர்

இதுமட்டுமல்ல, பாயிரத்தை முடித்து வள்ளுவர் நூலை ஆரம்பிக்கும் போதும் இந்த மூவொரு கடவுளை 41-ம் குறட்பாவில் இணைத்தே குறிப்பிடுகிறார்.

(அ. 5:1)

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (கு. 41)

அதாவது கடவுள் வாழ்த்துப் பகுதியில் கூறப்பட்ட கடவுள், வான், நீத்தார் என்பது இயல்பாகவே செயலாற்றும் மூவொரு கடவுள் ஆகும். மூன்று நிலைகள் காட்டப்பட்டாலும் கடவுள் ஒருவரே. அதாவது பொய்தீர் ஒழுக்கநெறியைக் காட்டியவர் ஐந்தவித்தான் (கடவுள்). அவ்வொழுக்கத்தின் பொருட்டு தம்மை நீத்தவரே நீத்தார். யார்யார்க்கும் ஒழுக்கத்திற்குக் காரணமாயிருப்பது வான். வள்ளுவர் ஒழுக்கம் என்ற சொல்லால் முதல் மூன்று அதிகாரங்களையும் ஒன்றாக்கிக் காட்டுகிறார். கடவுள் இவ்வுலகில் செயலாற்றுவதற்கு இல்வாழ்வான் என்பவன் துணைநிற்கிறான். அதாவது கடவுள் தம் வழிகளில் நடக்கும் பிள்ளைகளைக் கொண்டே இந்த உலகத்தில் செயலாற்றுகிறார் என்பது தெளிவாகிறது.

தவறான உரைகள்

இப்படிப்பட்ட இறைக்கருத்துக்கள் திருக்குறள் முழுவதிலும் நிரம்பி இருப்பதைக் காண முடியும். இக்கருத்துக்களை முற்கால உரை ஆசிரியர்கள் எவரும் வெளியிடவில்லை ஏனென்றால் திருவள்ளுவர் சமணர் என்று தவறாகப் புரிந்து கொண்ட காரணத்தாலும் திருவள்ளுவர் திரியேக தேவனில் சிறந்த பற்றுடையவர் என்பதைப் புரிந்துகொள்ளாத காரணத்தாலும் தோமாவால் கொண்டு வரப்பட்ட ஆதிக் கிறிஸ்தவத்தின் நற்செய்திகள் அடங்கியதே திருக்குறள் என்ற சத்தியங்களை அறிந்து கொள்ளாத காரணத்தாலும் தவறான உரைகள் எழுதிவிட்டார்கள். எனவே அந்த உரைகளைப் படிப்பவர்கள் கூடத் தவறாய் அங்கீகரித்துவிட்டார்கள்.

ஓர் எடுத்துக்காட்டு

எடுத்துக்காட்டாக 'இயல்புடைய மூவர்' என்பதற்கு முன் உரை ஆசிரியர்களின் விளக்கங்களைக் கவனிப்போம். இயல்புடைய மூவர் யார்? திரு.வி. கல்யாண சுந்தரனார் கூற்று : "இங்கே ஒரு சிக்கல் உள்ளது. அது மூவர்க்கும் என்ற சொல்லைப் பற்றியது. மூவர்க்கும்

என்பது பற்றிப் பலவித கருத்துக்கள் வெளிவந்துள்ளன. உண்மை காண அறிஞர்கள் முயலவேண்டும். பாடபேதம் இருக்குமோ என்றும் யான் ஐயுறுவதுண்டு".

மேலும் அவர் கூறியிருப்பது

"ஆசிரியர் உள்ளத்தைக் காணுதல் அருமையாகவே தோன்று கிறது. எவரை உளங்கொண்டு ஆசிரியர் 'மூவருக்கும்' என்று அருளி னாரோ தெரியவில்லை. இதுபற்றி யான் பலமுறை நினைத்ததுண்டு. என் உள்ளத்தில் எத்தனையோ பொருள்கள் தோன்றித்தோன்றி மறைந்தன. திருவள்ளுவர் கூறிய 'மூவர்' என்னை எங்கெங்கோ ஈர்த்து ஈர்த்து அலைந்தனர்."

உரை ஆசிரியர்கள் கூறியுள்ள சில 'மூவர்'

சில உரை ஆசிரியர்கள் கூறியுள்ள சில 'மூவர்'கள் ஆவன:

1. பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி.
2. உறவினர், நண்பர், ஏழைகள்.
3. தாய், தந்தை, மனைவி.
4. பெற்றோர், மனைவி, மக்கள்.
5. அந்தணர், அரசர், வணிகர்.
6. சேரர், சோழர், பாண்டியர்.
7. அறவோர், ஒழுக்கத்து நீத்தார், அந்தணர்.

சமீபகால ஆராய்ச்சிகள்

ஆனால் சமீப காலத்தில் அனேக அறிஞர்கள் திருக்குறளை ஆய்வு செய்து உண்மைகருத்துக்களை வெளிக்கொண்டுவந்து, அறிஞர்கள் மத்தியில் நிலை நாட்டியுள்ளார்கள். இம்முறையில் மிகவும் பாராட்டப் படத்தக்கவர் டாக்டர் M. தெய்வனாயகம் M.A. PHD. அவர்கள் ஆவர். (விளக் கங்களுக்கு (1) ஐந்தவித்தார் யார்? (2) வான் எது? (3) நீத்தார் யார்? ஆகிய நூல்களைப் படிக்கவும்)

மூவொரு கடவுள் - சைவத்தில்

"அருவமும் உருவமும் ஆனதும் அன்றி நிறை உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்குள்ளவாமே" - திருஞான சித்தியார். 1 : 38.

"யாவருமா யாவையுமா எழில் வேதப் பெருளுமாய் மூவரு மாய் முதலாய மூர்த்தி" - திருமங்கை 4 : 12.

அதவாது எல்லாருமாய், எல்லாவுமாய், அழகான வேதப் பொருள்களுமாய், மூவருமாய் முதல்வராய் அவதரித்தவன்.

மூவொரு கடவுள் - வைணவத்தில்

"உடம்பு உருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய் உலகுய்ய நின்றவன்" - நம்மாழ்வார் திருவாய் - *1 - 9 -1*.

அதாவது உடம்பின் உருவில் மூன்றும் ஒன்றாகக் காட்சிய ளித்து உலகத்தை மீட்டெடுக்க மனிதனாக வந்த காரணத்தால் மூவொரு கடவுள் என்ற பெயர்.

மேலும் : நம்மாழ்வார் திருவாய் *3 - 6 -2* - ல் "கடவுளை மூவராகிய மூர்த்தி" என்று குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

அதிகாரம் : 10

குமாரனாகிய கடவுள் யார்?

கடவுள் ஒருவரே; அவர் அண்டசராசரங்களையும் படைத்தவர் என்னும் கருத்து உலகமக்களில் பெரும்பாலானோருக்குக் காணப் படுகிறது. அந்த ஒரே கடவுள் திரித்துவக் கடவுள் என்கிறது கிறிஸ்தவம். திரித்துவக் கடவுள் என்கிற அதே பொருளில் மூவொரு கடவுள் என்று திருக்குறள் மற்றும் சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. கிறிஸ்த வமும் சைவ வைணவ மதங்களும் ஒரே வரலாற்று உண்மையின் அடிப் படையில் உருவானவைகளாய் காணப்படுகிறது.

குமாரனாகிய கடவுள் கிறிஸ்தவத்திலும், சைவத்திலும்

கிறிஸ்தவத்தில் கூறப்படும் திரித்துவத்தில் இரண்டாவதாகக் கூறப்படுபவர் குமாரனாகிய கடவுளாகும். அவ்வாறே சைவத்தில் கூறப்படும் மூவொரு கடவுள் என்ற நிலையில் இரண்டாவதாகக் கூறப் படுவதே குமரக் கடவுள் ஆகும். குமாரனாகிய கடவுள் என்பதும், குமரக் கடவுள் என்பதும் ஒரே நிலையைச் சுட்டுவதாகும். அதாவது ஆதி முதற்கடவுளாகிய மூவொரு கடவுள் பாவத்தில் மாண்டு கிடக் கிற மனிதரை மீட்பதற்காக ஒரு மனிதனாகப் பிறக்கிறார். அவ்வாறு குமாரனாகப் பிறந்தவர் குமாரனாகிய கடவுள் அல்லது குமரக் கடவுள் என்று அழைக்கப்படுகிறார்.

குமாரனாகிய கடவுளின் வேறு பெயர்கள்

கடவுளுக்கு இடுகுறிப் பெயர் (Arbitrary Name) எதுவும் காணப் படுவதில்லை. அவருக்கு இடுகுறிப்பெயர் போடத்தக்கவர்கள் எவருமே இருக்க முடியாது. அவர் அறியப்படுவது எல்லாம் காரணப் பெயர்களால் மட்டுமே. கடவுள் என்ற பெயரும் காரணப்பெயரேயாகும்.

அவர் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர் என்ற காரணத்தால் கடவுள் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். மனுமக்களைப் பாவத்திலிருந்து மீட்டெடுக்கும்படியாக இந்த உலகத்தில் ஒரு மனிதனாகப் பிறந்த குமாரனாகிய கடவுள் அனேகக் காரணப்பெயர்களால் அழைக்கப் படுகிறார்.

1. தேவக் குமாரன்

குமாரனாகிய கடவுள் பரலோகத் தேவனின் குமாரன் என்ற காரணத்தால் கிறிஸ்தவர்கள் இப்பெயரால் அழைக்கிறார்கள்.

2. மனுஷ குமாரன்

குமாரனாகிய கடவுள் தேவனாய் இருந்தும் மனிதரை மீட்கும் படியாக ஒரு ஸ்திரீயினிடத்தில் மனிதனாகப் பிறந்த காரணத்தால் மனுஷகுமாரன் என்று அழைக்கப்படுகிறார்.

3. திருமகன், திருக்குமாரன், திருக்குமரன்

குமாரனாகிய கடவுள் கடவுளின் மகனாக (குமாரனாக) பிறந்தவர் என்ற காரணத்தால் இப்பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

4. குமரக் கடவுள்

இது குமாரனாகிய கடவுள் என்பதற்குப் பதிலாகக் கூறப்படும் மற்றுமோர் சொல்லாகும்.

5. பரிசுத்தப் பிள்ளை

குமாரனாகிய கடவுள் பிதாவாகிய கடவுளின் மகனாக அல்லது பிள்ளையாகப் பிறந்த காரணத்தாலும் அந்தப் பிள்ளை பாவம் இல்லா மல் பரிசுத்தமாய்ப் பரிசுத்த ஆவியினால் ஓர் கன்னியில் பிறந்த காரணத் தாலும் அவர் பரிசுத்தப் பிள்ளை என்று அழைக்கப்படுகிறார். இப்பெயர் விவிலியத்திலும் குறிக்கப்பட்டுள்ளது.

6. பிள்ளையார்

மேலே குறிப்பிடப்பட்ட பரிசுத்தப் பிள்ளை எல்லாம்வல்ல கடவுளின் பிள்ளையானதால் அதற்குரிய மதிப்பை அளிக்கும் காரணத் தால் மதிப்பிற்குரிய பிள்ளை என்ற பொருளில் பிள்ளையார் என்று ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தில் அழைக்கப்பட்டது. தற்காலங்களில் சைவ வைணவ மதங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

7. சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி

குமாரனாகிய கடவுள் தமது அழகான வாலிபப் பருவத்திலேயே மனிதருக்காகத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். அவ்வாறு முடிவு மட்டும் தன் சரீரத்தில் அழகு வாய்ந்தவராகக் காணப்பட்ட காரணத்தால் அவர் சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி என்ற செல்லப்பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

8. அழகர்

மேலே கூறப்பட்ட அதே காரணங்களுக்காகக் குமாரனாகிய கடவுள் அழகு வாய்ந்தவர் என்ற பொருளில்அவர் அழகர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்த வார்த்தையை அதிகமாகச் சைவ வைணவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

9. முருகன்

முருகு என்ற வார்த்தையின் பொருள் அழகு என்பதாகும். ஆகவே மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக அழகர் என்ற வார்த்தைக்குப் பதிலாக முருகன் என்ற காரணப்பெயரும் குமாரனாகிய கடவுளுக்கு வழங்கப்படுகிறது. இதையும் சைவ வைணவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

10. சிலுவை நாதர்

குமாரனாகிய கடவுள் பாவம் நிறைந்த மனுக்குலத்திற்காகச் சிலுவை மரத்தில் தம்மைப் பலியாக்கிய காரணத்தால் அவர் சிலுவை நாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

11. பொறிவாயில் ஐந்தவித்தான்

குமாரனாகிய கடவுள் பொறியாகிய (மரணக்கருவி) சிலுவையில் தமது ஐம்புலன்களையும் பலியாக்கி மனிதரை மீட்டுக் கொண்ட காரணத்தால் அவரைப் பொறிவாயில் ஐந்தவித்தான் என்று திருக்குறள் அழைக்கிறது.

12. நீத்தார், ஒழுக்கத்து நீத்தார்

குமாரனாகிய கடவுள் மனுக்குலத்தை மீட்கும்படியாகத் தமது பரலோக (மறுமையின்) மேன்மைகளை எல்லாம் நீத்தவர்; அதாவது துறந்தவர் அல்லது தியாகம் பண்ணி இம்மைக்கு வந்தவர் என்ற காரணத்தால் அவரை நீத்தார் என்று திருக்குறள் அழைக்கிறது. அவர் ஒழுக்கம்

அல்லது அறம் ஆகிய இரட்சிப்பை நிலைநாட்டுவதற்காகவே பரலோக இன்பங்களை நீத்தார். எனவே அவர் ஒழுக்கத்து நீத்தார் என்று அழைக்கப்படுகிறார்.

13. கிறிஸ்து

குமாரனாகிய கடவுளுக்கு வழங்கப்பட்ட மற்றுமோர் காரணப் பெயர் மேசியா என்பதாகும். மேசியா என்பது ஒரு எபிரேயச் சொல் ஆகும். அதின் பொருள் எண்ணெய் வார்க்கப்பட்டவர் அல்லது அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதாகும். குமாரனாகிய கடவுள் இராஜாவாகவும் பிரதான ஆசாரியனாகவும் வந்த காரணத்தால் மேசியா என்ற பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது. (இராஜாக் களும் ஆசாரியர்களும் எண்ணெய் வார்த்து அபிஷேகம் பண்ணப்படு வார்கள்). மேசியா என்ற எபிரேய வார்த்தைக்கு ஒத்த கிரேக்க வார்த்தை கிறிஸ்டாஸ் என்பதாகும். 'கிறிஸ்டாஸ்' என்ற கிரேக்கச் சொல் பின் நாட்களில் ஒலிமாற்றமடைந்து ஆங்கிலத்தில் 'கிறைஸ்ட்' என்றும் தமிழில் கிறிஸ்து என்றும் கூறப்படுகிறது.

14. நசரேயன்

குமாரனாகிய கடவுள் மனிதனாக அவதரித்து வசித்து வந்த இடம் நாசரேத்து என்ற ஊராகும். அவர் நாசரேத்தில் வசித்து வந்த காரணத்தால் நசரேயன் என்று அழைக்கப்படுகிறார்.

15. இயேசு

இயேசு என்ற வார்த்தை யோசுவா என்ற எபிரேயச் சொல்லில் இருந்து கிடைக்கப்பெற்றதாகும். குமாரனாகிய கடவுள் மனிதனாகப் பிறந்து வளர்ந்தது மேற்காசியாவிலுள்ள பலஸ்தீனாவில் ஆகும். அன்று அங்குப் பேசப்பட்ட மொழி அரமேயம் மற்றும் எபிரேயம் ஆகும். யோசுவா என்ற எபிரேய வார்த்தையின் பொருள் இரட்சிக்கிறவர் என்பதாகும். குமாரனாகிய கடவுள் மனிதரைப் பாவத்திலிருந்து இரட் சிப்பதற்காகப் பிறந்த காரணத்தால் அவருக்கு யோசுவா (இரட்சிக் கிறவர்) என்ற காரணப்பெயர் (எபிரேயச் சொல்) கொடுக்கப்பட்டது.

பிற்காலங்களில் யோசுவா என்ற எபிரேய வார்த்தை ஒலி மாற் றத்தால் கிரேக்க மொழியில் இயூசுஸ் என்றும் மேலும் அனேக வருடங் களுக்குப்பின் ஆங்கில மொழியில் ஜீஸஸ் என்றும் மேலும் பல ஆண்டுகளுக்குப்பின் தமிழ் மொழியில் இயேசு என்றும் கொள்ளப் பட்டது. இயேசு (யோசுவா) என்ற வார்த்தையால் விளக்கப்படும் பொருள் இரட்சிக்கிறவர் என்பதாகும்.

தெளிவு

இதைக் கீழ்வரும் வசனங்கள் தெளிவாக்குகின்றன. (1) மத். 1:21 குமாரனாகிய கடவுளின் பிறப்பைப் பற்றித் தேவதூதன் யோசேப்புக்கு அறிவிக்கிறான். "அவள் (மரியாள்) ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு (எபிரேயத்தில் யோசுவா) என்று பெயரிடுவாயாக. ஏனென்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப் பார் என்றான்". இங்கே இயேசு (யோசுவா) என்பது இடுகுறிப்பெயர் அல்லவென்றும் அது இரட்சிக்கிறவர் என்ற காரணத்தால் கொடுக்கப் பட்ட காரணப்பெயர் என்றும் பார்க்கிறோம்.

(2) லூக். 2:11, குமாரனாகிய கடவுளின் பிறப்பு பெத்லெகேமிலுள்ள மேய்ப்பர்களுக்குத் தூதன் அறிவிக்கிறான், "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்". இங்கே இயேசு என்ற பெயரே கூறப்படவில்லை. மாறாக (இரட்சிப் பதற்காக வந்த) இரட்சகர் என்றே கூறப்படுகிறது.

16. இரட்சகர், மீட்பர்

இரட்சகர், மீட்பர் ஆகிய காரணப்பெயர்களும் மேலே கூறப் பட்ட காரணங்களால் பயன்படுத்தப்படுகின்றது. இங்கே குமாரனாகிய கடவுள் இரட்சிக்கிறவர் அல்லது மீட்கிறவர் அல்லது ஜனங்களின் பாவங்களை நீக்குகிறவர் என்ற காரணத்தால் வழங்கப்படுகிறது.

17. வினை தீர்க்கும் வினாயகர்

மேலே கூறப்பட்டபடி குமாரனாகிய கடவுள் வினைகளை அதாவது பாவ வினைகளைத் தீர்ப்பவர் என்ற காரணத்தால் அவர் வினை தீர்க்கும் வினாயகர் என்றும் அழைக்கப்படுகிறார். சைவ வைணவர்கள் இந்த வார்த்தையை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

மேலும் பல பெயர்கள்

இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட பெயர்களோடு வேறு அனேகக் காரணப்பெயர்களும் குமாரனாகிய கடவுளுக்குக் கிறிஸ்தவர் களாலும் சைவர்களாலும் (ஆதி இந்திய கிறிஸ்தவர்களாலும்) வழங்கப் படுகின்றன. அதாவது குமாரனாகிய கடவுளின் பல்வேறு செயல்பாடுக ளின் காரணமாக அவருக்குப் பல்வேறு காரணப்பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

அதிகாரம் : 11

குமாரனாகிய கடவுளின் வாழ்க்கை வரலாறு

(பாகம் : 1)

வரலாறு

இயேசுவின் பிறப்பைக் குறித்த வரலாற்று நிகழ்ச்சிகளை நாம் விவிலியத்தில் பார்க்கமுடிகிறது.

முன் உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனங்கள்

முற்காலங்களில் வாழ்ந்த தீர்க்க தரிசிகளில் பலர் தேவகுமாரனின் பிறப்பைக் குறித்தும் வாழ்க்கையைக் குறித்தும் அனேகக் காரியங்களை தீர்க்கதரிசனங்களாக முன் கூட்டியே உரைத்திருந்தார்கள்.

இயேசு பலஸ்தீனத்திலுள்ள பெத்தலகேமில் பிறப்பார், அவர் ஒரு கன்னிகையினிடத்தில் பிறப்பார், அவர் பிறப்பின்போது சிறுவர்கள் கொலை செய்யப்படுவார்கள், மனிதர்களுடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு துக்கங்களைச் சுமப்பார், ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்படுவார், துன்மார்க்கரோடே அவருடைய பிரேத குழியை நியமிப்பார்கள், அவர் வஸ்திரங்களைப் பங்கிட்டு அதன் பேரில் சீட்டு போடுவார்கள், மனிதனுடைய மீறுதலினிமித்தம் காயப்பட்டு, அக்கிர மங்களினிமித்தம் அவர் நொறுக்கப்படுவார், எகிப்திலிருந்து வரவழைக் கப்படுவார், கழுதைமேல் பவனிவருவார், முப்பது காசுக்கு விற்கப் படுவார், அவருடைய எலும்புகள் முறிக்கப்படுவதில்லை. இது போன்ற அனேக காரியங்கள் தீர்க்கத்தரிசிகளால் முன்னதாகவே உரைக்கப்பட்டிருந்தன.

அகஸ்து சீசர் காலத்தில் இயேசு பிறந்தார்

ரோமில் அதிகாரத்தில் இருந்த ஜூலியஸ் சீசரை, புரூட்டஸ் என்பவன் கொலை செய்தது உலகவரலாற்றில் ஓர் முக்கிய சம்பவமாகும். ஜூலியஸ் சீசரின் மரணத்திற்குப் பிறகு மார்க் ஆன்றனி என்பவனுக்கும் ஆக்டோவியன் என்ற அகஸ்துவுக்கும் ஆக்டியம் என்ற இடத்தில் கி.மு. 31 -ல் கடும் போர் மூண்டது. அப்போரில் ஆக்டோவியன் மார்க் ஆன்றனியை தோற்கடித்தான். மார்க் ஆன்றனி தற்கொலை செய்து கொண்டான். ஆக்டோவியன் என்ற அகஸ்து கி.மு. 27 -ல் ரோமில் சீசராகப் பதவியேற்றான். அவன் கி.மு. 27 முதல் கி.பி. 14 வரை சீசராக ரோம ஆட்சியில் நீடித்தான் என்பது வரலாறு. இந்த ஆக்டோவியன் என்ற அகஸ்து (அகஸ்டஸ்) சீசரின் ஆட்சிக் காலத்தில் வரலாற்றுப் புகழ் பெற்ற நிகழ்ச்சியான கடவுளின் மனித அவதாரம் பலஸ்தீனா தேசத்தில் நிகழ்ந்தது.

அற்புதமான பிறப்பு

அகஸ்து சீசரின் நாட்களில் பலஸ்தீனாவில் மரியாள் என்ற கன்னிப்பெண் யோசேப்பு என்பவனுக்கு நியமிக்கப்பட்டிருந்தாள். அவள் (மரியாள்) இருந்த வீட்டில் தேவ தூதன் பிரவேசித்து : "கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார் ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி மரியாளே பயப்படாதே: நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படி ஆகும் ? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும் என்றான்." அந்தபடியே மரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள் (லூக். 1:28-35).

யோசேப்பிடம் தூதன்

மரியாள் கர்பவதியாய் இருப்பதை யோசேப்பு அறிந்து இரகசியமாக அவளைத் தள்ளிவிட மனதாய் இருந்தான். அப்போது அவனிடத்தில் தேவதூதன் தோன்றி; "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்

டானது. ஏனென்றால் அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளை யிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற் பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து அவருக்கு இயேசு என்று பேரிட்டான்") *(மத். 1:18-25).*

அகஸ்துவின் ஆணை

மரியாள் பூரணக் கர்ப்பவதியாய் இருக்கும் காலத்தில் ரோம சக்கர வர்தியான அகஸ்து சீசர் அவன் தேசம் எங்கும் குடிமதிப்பு எழுதும் படிக்கு ஓர் ஆணை பிறப்பித்தான். எனவே அந்த ஆணைப்படி ரோம சாம்ராஜ்ஜியத்திற்குள் வசித்து வந்த ஜனங்கள் தங்கள் தங்கள் சொந்த தேசத்திற்குச் செல்லவேண்டியிருந்தது. எனவே அகஸ்து ராயனின் ஆணைப்படி யோசேப்பும் மரியாளும் நாசரேத்திலிருந்து தங்கள் சொந்த ஊரான பெத்தலகேமுக்குச் சென்றார்கள். *(லூக்கா 2:1-5)*

பிரசவகாலம்

குடி மதிப்பெழுதும் படி யோசேப்பும் மரியாளும் பெத்தலகே முக்குச் சென்ற போது அங்கே மரியாளுக்குப் பிரசவ காலம் நேரிட்டது. "அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்க ளுக்கு இடமிலாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்." *(லூக். 2:6,7)*

குமாரனின் பிறப்பு உலகெங்கும் அறிவித்தல்

உலகனைத்தையும் படைத்தவராகிய மூவொரு கடவுள் மனுக் குலத்தை இரட்சிக்க இந்த உலகத்தில் பிறந்த போது அந்த மாபெரும் பிறப்பு உலகெங்கும் அறிவிக்கப்பட்டது என்று காணப்படுகிறது. ஆசியாவின் மேற்குப் பகுதியான பலஸ்தீனாவில் தேவதூதன் கடவுள் மைந்தனின் பிறப்பைபற்றி மேய்ப்பர்களுக்கு அறிவித்தான்.

மேய்ப்பர்களுக்குச் செய்தி

"அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந் தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகா சித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை

நோக்கி: இதோ எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தக்ஷணமே பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுசர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லித் தேவனைத் துதித்தார்கள்." (லூக். 2 : 8 - 14)

கீழ் தேசத்துக்குச் செய்தி

தேவகுமாரனின் பிறப்பின் செய்தி ஒரு விசேசித்த நட்சத்திரத்தின் மூலமாய் வானவெளியில் அறிவிக்கப்பட்டது. *ஏரோது ராஜாவின் நாட்களில், "யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்" (மத். 2:1-2).*

நாசரேத்தில் வசித்தார்

குமாரனாகிய கடவுள் தமது 30-வது வயது மட்டும் பலஸ்தீனாவில் நாசரேத்து என்ற இடத்தில் தமது பெற்றோர் என்று அறியப்பட்ட யோசேப்பு மரியாள் என்பவர்களோடு வாசம் பண்ணினார்.

ஊழியத்தின் ஆரம்பம்

இரட்சகராகிய தேவகுமாரன் தமது 30-வது வயதில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். அவர் 30-ம் வயதில் யோர்தான் ஆற்றில் யோவான் ஸ்நாபகன் என்பவரால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். பின்பு அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டு அவனைத் தோற்கடித்து வெற்றி சிறந்தார்.

மனம் உருகினார்

அவர் ஜனங்களைப் பார்க்கையில் அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல இருப்பதைக் கண்டு அவர்கள் மேல் மனம் உருகி உருக்கமாய் ஜனங்களோடு உரையாற்றினார். அவர்களுடைய வியாதிகளை அற்புதமாகக் குணமாக்கிப் பிசாசின் கட்டுகளிலிருந்து ஜனங்களை விடுவித்தார். எளிய உவமைகளால் ஜனங்களுக்கு ஆத்ம அறிவைப் புகட்டினார். அவர் பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்து கொண்டு அவர்

களுக்குப் பயிற்சியளித்தார். அவருடைய உரைகளும் உபதேசங்களும் அவர் காட்டிய மாதிரியான வாழ்க்கையும் ஒருவனை நித்திய ஜீவனுக்கு (நீடு வாழ்வுக்கு) நேராய் நடத்துவதாக அமைந்திருந்தது (மத். 9:36).

நீடுவாழ்வு அளிக்கும் வாழ்க்கை

அவருடைய வாழ்க்கையும் உபதேசங்களும், நற்செய்தி, இரட்சிப்பு, அறம், ஒழுக்கநெறி என்று பல பெயர்களில் அறியப்படுகிறது. ஏனென்றால் அவை ஒரு மனிதனை இந்த உலகத்தில் ஒழுக்கமான வாழ்க்கை நடத்தச் செய்து முடிவில் அவனைப் பரலோக இன்பத்தில் சேர்ப்பவையாகும்.

மறுபடியும் பிறப்பதுகுறித்த உபதேசம்

மறுபடியும் பிறப்பது என்பது மனிதன் பாவ வாழ்க்கையைக் களைந்துவிட்டுக் குமாரனாகிய இரட்சகர் காட்டிய வழியை ஏற்றுக்கொண்டு புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதாகும். அதாவது பழைய பாவ வழியை விட்டுப் புதிய பரிசுத்த வழி (குமாரன் காட்டிய வழி)யில் செல்வதாகும். இதற்குப் பரிசுத்த ஆவியே உதவி செய்வார். இதுவே இரட்சிப்பின் வழி. திருவள்ளுவர் இதைப் பொய்தீர் ஒழுக்கநெறி என்கிறார். இந்த வழியில் நடப்பவருக்கு நீடு வாழ்வு உண்டு என்கிறார் வள்ளுவர்.

பாவியான ஸ்திரீக்குத் தம்மை வெளிப்படுத்தினார்

இயேசு சமாரியா நாடு வழியாய் கலிலேயா நாட்டிற்குப் போனார். போகும் வழியில் மிகவும் பாவ வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஒரு ஸ்திரீயைப் பார்த்து அவளுக்கு அன்பு பாராட்டி அவளோடு உரையாற்றி அவர் தேவனுடைய குமாரன் என்று அவளுக்கு வெளிப்படுத்தினார். (யோ. 4:4-29, 39-42).

ஜெப ஆலயத்தில் தம்மை வெளிப்படுத்தினார்

இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார். "அப்பொது ஏசாயா தீர்க்கத்தரிசியின் புத்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்ட

வர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப் படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் கர்த்த ருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப் பினார் என்று எழுதியிருக்கிற இடத்தைக் கண்டு வாசித்து புஸ்தகத்தைச் சுருட்டிப் பணிவிடைக்காரரிடத்தில் கொடுத்து உட்கார்ந்தார். ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயி ருந்தது. அப்பொழுது அவர் அவர்களுடனே பேசத்தொடங்கி உங்கள் காதுகள் கேட்க இன்றைய தினம் இந்த வேதவாக்கியம் நிறைவேறிற்று என்றார்." *(லூக். 4:17-21).*

திமிர்வாதக்காரனுக்குப் பாவமன்னிப்பு

குமாரனாகிய கடவுள் கப்பர்நகூமில் ஒரு வீட்டில் இருக்கை யில் ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்று நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக் காரனை நோக்கி நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் முன்பாக போனான். அப்பொழுது, எல்லாரும் ஆச்சரியப்பட்டு நாம் ஒருக்காலும் இப்படி கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்." *(மத். 9:1-8).*

உபத்திரவம் குறித்து இயேசு

"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவித தீமை யான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களே யானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களி கூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும். உங்க ளுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தி னார்களே என்றார்." *(மத். 5 : 11, 12).*

உப்பு, விளக்கு குறித்து

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற் கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்

மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்." *(மத். 5:13-15).*

ஒப்புரவாகுதல் குறித்து

"நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில் அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகிப் பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." *(மத். 5:23, 24).*

எதிராளியிடம் ஒப்புரவு

"எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும் நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து." *(மத். 5:25).*

ஸ்திரீயிடம் நடந்துகொள்வது

"ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்தாயிற்று. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழியத் தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை விபச்சாரம் செய்யப்பண்ணுகிறவனாய் இருப்பான்." *(மத். 5:28, 32).*

ஆணையிடுதல் குறித்து

"வானத்தின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம். அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம். அது அவருடைய பாதப்படி, எருசலேமின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம். அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம். அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லாததென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்." *(மத். 5:34-37).*

பதிலுக்குப்பதில் செய்ய வேண்டாம்

"ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ." *(மத். 5:38-41).*

சத்துருக்களைச் சிநேகியுங்கள்

"உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைச் செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்." *(மத். 5:44).*

தர்மம் செய்வது

"நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்." *(மத். 6:3).*

ஜெபம் பண்ணுவது

"நீயோ ஜெபம்பண்ணும்போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்." *(மத். 6:6).*

மன்னிப்பதைக் குறித்து

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்." *(மத். 6:14).*

உபவாசம் குறித்து

"நீயோ உபவாசிக்கும்போது அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல் அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்." *(மத். 6:17).*

பொக்கிஷங்கள் சேர்த்து வைப்பது

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிசங்களை வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்;. இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதுமில்லை. திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்." *(மத். 6:19-21).*

இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்வது

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சினேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது." *(மத். 6:24).*

கவலைப்படாதிருங்கள்

".....என்னத்தை உண்போம். என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." *(மத். 6:25).*

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தை தேடு

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." *(மத். 6:33).*

மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்காதே

"உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்து போடு: பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகைபார்ப்பாய்." *(மத். 7:4-5).*

இரு வாசல்கள் குறித்து

"இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசியுங்கள். கேட்டுக்குப்

போகிற வாசல் விரிவும் வழி விசாலவுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அனேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்." *(மத். 7:13-14).*

யார் பரலோகத்தில் பிரவேசிப்பான்?

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." *(மத். 7:21).*

பாறைமேல் வீட்டைக் கட்டினவன்

"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ அவன்தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதினபோது அது விழுந்தது: விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்." *(மத். 7:24-27).*

இளைப்பாறுதல்

"வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." *(மத். 11:28).*

திருகுமாரன் மூன்று நாள் பூமிக்குள்

"யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் மூன்று நாள் பூமியில் இருதயத்தில் இருப்பார். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனம் திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத் தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்." *(மத். 12:40,41).*

மரித்தவனை உயிர்ப்பித்தல்

மனுஷ குமாரன் நாயீன் என்ற ஊருக்குச் சென்றபோது ஒரு விதவையின் மகனை அடக்கம் பண்ணுவதற்காகக் கொண்டு செல்லும் ஒரு கூட்டத்தைச் சந்தித்தார். மரித்தவனை உயிர்ப்பித்தார். (லூக்கா. 7:11-17).

காற்றை அடக்கினார்

அவர் கப்பர்நகூமிலிருந்து கலிலேயாக்கடல் வழியாகக் கெர்கசாவுக்கு செல்ல சீஷர்களுடன் படகேறினார். அப்போது பெரும் காற்று ஏற்பட்டது. அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, மடிந்து போகிறோம் என்று அவரை எழுப்பினார்கள். அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார். உடனே அலைகள் நின்றுபோய் அமைதியுண்டாயிற்று. (லூக். 8:22-25).

சீஷர்களை அனுப்பினார்

அவர் தம்முடைய 12 சீஷரையும் வரவழைத்து சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்துத் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார். "ஆடுகளை ஓனாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன் ஆகையால் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாயும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களாயுமிருங்கள்; மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக் கொடுத்துத் தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள், அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள்" என்றார். (மத். 10:16-18).

சிலுவைப்பாதை

"தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்: என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்." (மத். 10:38-39).

அற்புதமாய்ஆகாரம் கொடுத்தார்

ஒரு விசை ஐந்தாயிரம் பேருக்கு மேற்பட்ட மக்களை ஒரு சிறுவனிடமிருந்த ஐந்து அப்பங்கள் இருமீன்களைக் கொண்டு போஷித்

தார். மற்றொரு விசை ஏழு அப்பங்களையும் சில சிறு மீன்களையும் கொண்டு 4000 பேருக்கு அதிகமானோரை அற்புதமாய் போசித்தார்.

இயற்கைக்கு மேலான ஆற்றல்

இறைமகனாகிய இரட்சகருக்கு இயற்கைக்கு மேல் அதிகாரம் இருந்ததால் அவர் கடலின்மேல் நடந்து சென்றார். *(மத். 14:23-31)*

குருடருக்கு வழிகாட்டும் குருடர்

இயேசு பரிசேயர்களைக் குறித்துப் பேசுகையில், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்.

இரட்சிப்பின் வழி பாடுகள் நிறைந்தது

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார்." *(மத். 16:24).*

உயிர்த்தெழுதல் முன்னறிவிப்பு

"இயேசு கலிலேயாவில் சஞ்சரிக்கும்போது, அவர்களை (சீஷர்களை) நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள். ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்." *(மத். 17:22-23).*

விபச்சாரஸ்திரீக்கு மன்னிப்பு

"விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரியை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து அவளை நடுவே நிறுத்திப் போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப் பட்டாள்; இப்படிப்பட்டவர்களைக் கல்லறிந்து கொல்ல வேண்டுமென்று மேசே நியாயப் பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். இயேசுவோ குனிந்து தரையிலே விரலினால் எழுதினார்.

அவர் நிமிர்ந்து பார்த்து உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக் கடவன் என்று சொல்லி: அவர் மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார். அவர்கள் அதைக்கேட்டுத் தங்கள்

மனச் சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு அவளை நோக்கி, நீபோ. இனி பாவஞ்செய்யாதே என்றார்." *(யோ. 8:3-11).*

நானே ஒளி

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்." *(யோ. 8:12).*

நானே நல்ல மேய்ப்பன்

"நானே நல்ல மேய்ப்பன் : நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகள் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும் அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாம்." *(யோ. 10:11,16).*

குமாரன் மரணத்தின்மேல் அதிகாரம் உள்ளவர்

பெத்தானியாவில் லாசரு என்பவன் மரித்துப் போனான். மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசு அங்கு வந்து கல்லறைக்குச் சென்றார். "இயேசு, லாசருவே வெளியே வா என்று உரத்தசத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேத சீலைகளால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார். அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அனேகர் விசுவாசமுள்ளவர்களானார்கள்." *(யோ. 11:43-44).*

சகேயுவின் இரட்சிப்பு

இயேசு ஆயக்காரனான சகேயுவின் வீட்டிற்குச் சென்றார். "அப்போது சகேயு நின்று கர்த்தரை நோக்கி, ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் ஏதாவது அநியாயமாய் வாங்கினது உண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே: இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். *(லூக். 19:8-10).*

மறுபடியும் உயிர்த்தெழுதல் அறிவிப்பு

"அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து இதோ எருசலேமுக்குப் போகிறோம். மனுஷக்குமாரனைக் குறித்துத் தீர்க்கத் தரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும். எப்படியெனில் அவர் புற ஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்து, கொலை செய்வார்கள். மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார். (மத். 20:18,19).

பிரதான கட்டளை

"ஒருவன் அவரைச் (இயேசுவை) சோதிக்கும்படி, போதகரே நியாயபிரமாணத்திலே எந்த கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கத்தரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்." (மத். 22:36-40).

விதவையின் காணிக்கை

"அவர் (இயேசு) கண்ணேறிட்டுப் பார்த்தபோது ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதைக் கண்டு இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்." (லூக்கா 21:1-4)

மனுஷகுமாரன் மறுபடியும் வருவார்

"....அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தத்தோட அவர் தமது தூதர்களை அனுப்புவார்

அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலிருந்தும் கூட்டிச் சேர்ப்பார்கள்." (மத். 24:30-31).

வருகையின் நாளைப் பிதா மட்டும் அறிவார்

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என்பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்." (மத். 24:36).

இயேசு ரட்சகர் சீஷரோடு பஸ்கா ஆசரிப்பு

இந்தப் பஸ்கா பண்டிகை ஆசரிப்பதற்காகத் திருக்குமாரனும் சீஷர்களும் AD 29 April 14 வியாழன் அன்று எருசலேமுக்குச் சென்றார்கள். அங்கே மாற்கு என்பவனுடைய மேல்வீட்டறை அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. அந்த அறைக்குள்ளே அவர்கள் சென்று பந்தியிருந்தார்கள்.

சீஷரின் கால்களை கழுவினார்

"அவர் போஜனத்தை விட்டெழுந்து வஸ்திரங்களைக் கழற்றி வைத்து ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக் கொண்டு பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்துச் சீஷருடையக் கால்களை கழுவவும் தாம் கட்டியிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்." *(யோ. 13:4-5).*

காட்டிக் கொடுப்பவனைப் பற்றி

"அவர்கள் போஜனம் பண்ணுகையில் அவர் உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். காட்டிப்கொடுப்பவன் யார் என்று கேட்டதற்கு, இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான் என்று சொல்லி தணிக்கையைத் தோய்த்து யூதாஸ் காரியோத்துக்குக் கொடுத்தார்." (யோ. 13:21, 26).

சாத்தான் யூதாசில்

"அந்தத் துணிக்கையை அவன் வாங்கின பின்பு சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்."

புது உடன்படிக்கை ஸ்தாபித்தல்

பின்பு அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சைப்பழ ரசத்தை நலமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் இராஜியத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." *(மத். 26:27-30).*

ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன்

"ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்." *(யோ. 14:2-3).*

ஒரு தேற்றரவாளனை அனுப்புவேன்

"நான் என் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய இன்னொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு அருளுவார்." *(யோ 14:16-20).*

ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள்

"நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்." *(யோ. 13:34).*

அதிகாரம் : 12

குமாரனாகிய கடவுளின் வாழ்க்கை வரலாறு

(பாகம் : 2)

கெத்சமனே தோட்டத்தில் இயேசு

கெத்சமனே தோட்டம் ஒலிவமலையின் சரிவில் ஒலிவ மரங்கள் அடர்ந்த பகுதியாகும். அவர் அடிக்கடி அங்குச் சென்று ஜெபிப்பது வழக்கம். மாற்குவின் மேல் வீட்டிலிருந்து இயேசுவும் சீசர்களும் இங்கு வந்தார்கள். *(லூக்கா. 22:39-46.)*

தமக்கான ஜெபம்

"அவர் புறப்பட்டு வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார். அவருடைய சீஷரும் அவரோடே கூடப்போனார்கள். அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி அவர்களை விட்டு கல்லெறி தூரம் அப்புறம் போய் முழங்காற்படியிட்டுப் பிதாவே உமக்கு சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்." *(லூக். 22:39-42).*

தூதனின் தேற்றுதல்

"அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளி களாய்த் தரையிலே விழுந்தது." *(லூக். 22:43-44).*

சீஷர்கள் நித்திரை

"அவர் ஜெபம் பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் தூக்கத்தினாலே நித்திரை பண்ணு கிறதைக் கண்டு: நீங்கள் நித்திரை பண்ணுகிறதென்ன? சோதனைக் குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார்." *(லூக். 22:45, 46).*

முத்தத்தால் காட்டிக் கொடுத்தான்

"அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந் தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷ குமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் என்றார். (லூ. 22:47-48).

கடைசி அற்புதம்

"சீஷர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான். அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத் துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்." *(லூக். 22:51)*

தேவக்குமாரன் மனிதர்கள் கையில்

கெத்சமனே தோட்டத்தில் பிடிக்கப்பட்ட தேவக்குமாரன் ஆறு இடங்களில் கண் துடைப்பாக விசாரிக்கப்பட்டார். முதலாவது இயேசு முன்னாள் பிரதான ஆசாரியனான அன்னாவிடம் கொண்டு செல்லப் பட்டார். அங்கிருந்து பிரதான ஆசாரியனான காய்பாவிடத்திற்கும், பின்பு சனெகெரீப் சங்கத்திற்கும் கொண்டு செல்லப்பட்டார். யூதர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையத் தீர்மானித்துக்கொண்டு கண் துடைப்புக்காக ஒரு விசாரணையை மேற்கொண்டார்கள்.

சனெகெரீம் சங்கத்திலிருந்து இயேசுவைப் பிலாத்துவிடம் கொண்டு சென்றார்கள். பிலாத்து ஏரோதுவிடம் அனுப்பினான். ஏரோதினிடத்திலிருந்து இயேசு மறுபடியும் பிலாத்துவிடம் அனுப்பப்பட்டார்.

ஒரு குற்றமும் காணேன்

பிலாத்து பிரதான ஆசாரியர்களையும், அதிகாரிகளையும், ஜனங்களையும் கூடிவரச்செய்து அவர்களை நோக்கி ஜனங்களைக்

கலகத்திற்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டு வந்தீர்கள். நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை என்றான். (லூக். 23:4).

சிலுவையில் அறையும்

"அவர்களோ அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: ஏன் இவன் என்ன பொல்லாப்பு செய்தான்? மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் கணவில்லையே: ஆகையால் நான் தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான். அப்படியிருந்தும் அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று அவர்கள் உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். அவர்களும் பிரதான ஆசாரியர்களும் இட்ட சத்தம் மேற்கொண்டது." (லூக். 23:21-23).

பிலாத்து கையைக் கழுவினான்

"கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, இந்த நீதிமானின் இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும் இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்." (மத். 27:24-25)

பிலாத்து மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தான்

"அப்பொழுது அவர்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்பு செய்து கலகத்தினிமித்தமும் கொலை பாதகத்தினிமித்தமும் காவலில் போடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே விடுதலையாக்கி, இயேசுவையோ அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்." (லூக். 23:24-25).

சிலுவை சுமத்தினார்கள்

"அப்பொழுது தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனையிலே கொண்டு போய்ப் போர்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து அவர் வஸ்திரங்களைக் கழற்றி சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி முள்ளுகளால் ஒரு முடியைப்பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து

அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து அவர் முன்பாக முழங்காற்படியிட்டு யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி அவர் மேல் துப்பி அந்தக்கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள். அவரைப் பரியாசம் பண்ணினப்பின்பு அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி அவரைச் சிலுவையில் அறையும்படிக் கொண்டு போனார்கள்." *(மத். 27:27-31).*

சிலுவையில் அறைந்தார்கள்

"கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது அங்கே அவரையும் அவருடைய வலது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவையில் அறைந்தார்கள்." *(லூக். 23:33)*

இயேசுவின் சிலுவை மொழிகள்

சிலுவை மரணம் மிகவும் இழிவானதும் வேதனை நிறைந்ததும் ஆகும். ஆணிகளால் அறையப்பட்டுச் சிலுவையில் தொங்குகிறவர்கள் தங்கள் வேதனையின் மத்தியில் தகாத வார்த்தைகளைப் பேசி தங்கள் பகைஞரை சபிப்பதையும் திட்டுவதையும் காணமுடியும். ஆனால் இயேசுவைக் குற்றமற்றவராய் சிலுவையில் அறைந்த போதிலும் அவர் அமைதியாய்க் காணப்பட்டார். காலை 9 மணிமுதல் மாலை 3 மணி வரை சிலுவையிலிருந்து ஏழு பொன்மொழிகளை மொழிந்தார்.

1. இவர்களுக்கு மன்னியும்

தன்னைத் துன்பப்படுத்தித் தனக்கு முன் நின்று கொண்டிருந்தவர்களைப் பார்த்து : "பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்." *(லூக். 23:34).*

2. பரதீசிலிருப்பாய்

அவரோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை நோக்கி ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியோனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." *(லூக். 23:41-43).*

3. அதோ உன் மகன்

இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயி

ருந்த சீஷனையும் கண்டு தம்முடைய தாயை நோக்கி : ஸ்திரீயே அதோ உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி அதோ உன்தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீசன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான்." *(யோ. 19:26-27).*

4. ஏன் என்னைக் கைவிட்டீர் ?

ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு : "ஏலீ! ஏலீ! லாமா சபக் தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்." *(மத். 27:46-49).* மனுக்குலத்தின் பாவத்தைச் சுமந்து சிலுவையில் தொங்கிய இயேசு நமக்காக ஒரு நிமிடம் பிதாவினால் கைவிடப்பட்டார்!

5. தாகமாயிருக்கிறேன்

வியாழன் இரவு முழுதும் அடுத்தநாள் சாயங்காலம் வரை சித்திரவதை செய்யப்பட்டு அங்கும் இங்குமாய் அலைந்து தலையில் முள்கிரீடம் வைத்து அடிக்கப்பட்டுப் பாரச்சிலுவையும் ஏந்திக் கல்வாரி மேட்டில் நடந்து ரோமப் போராளிகளால் கொடுக்கோடு கூடிய வாரினால் அடிக்கப்பட்டு முதுகெல்லாம் கிழிக்கப்பட்டு இரத்தம் பெருக்கெடுத்த நிலையில் சிலுவையில் மூன்று ஆணிகளால் அறைபட்டுத் தொங்கும் போழுது ஏற்படும் தாகம்! மட்டுமல்ல மடிந்து போகும் அத்துமாக்களைக் குறித்த ஆத்துமத் தாகம்! (யோ. 19:28-29).

6. முடிந்தது

தேவன் பரத்திலிருந்து இப்பூமிக்கு வந்து செய்து முடிக்க வேண்டிய இரட்சிப்பு அல்லது மீட்பாகிய பெரிதான வேலையைச் செய்து முடித்த பெருமிதம். தேவனை விட்டுப் பிரிந்து பாவத்தால் தூரம் போய் நித்திய மரணத்துக்குள்ளான மனிதனுக்கு இனிமேல் நிலையான நீடுவாழ்வு அல்லது நித்திய ஜீவன் உண்டு. "இயேசு காடியை வாங்கின பின்பு முடிந்தது என்று சொல்லி தலையைச் சாய்த்தார்." *(யோ. 19:30).*

7. என்ஆவியை ஒப்புவிக்கிறேன்

அவரே எல்லா உயிரினங்களுக்கும் உயிரைக் (ஆவி) கொடுத் தவர். அதைக் கொடுக்கவும் எடுக்கவும் தகுதி அவருக்கே உண்டு. மன்னு யிருக்காக தன்னுயிர் கொடுக்க வந்தவர் - எல்லாம் செய்து முடித்து ஒரே பிரதான ஆசாரியனாக உலகத் தோற்றத்துக்கு முன்னே ஆயத்தப்

படுத்தப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகிய தம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தார். ஒரே மனிதனாகிய முதலாம் ஆதாமின் பாவத்தால் எல்லா மனிதரும் பாவிகளாக்கப்பட்டார்கள். அது போல ஒரே மனிதனாகிய இரண்டாம் ஆதாமாகிய தேவக்குமாரனுடைய ரத்தம் சிந்துதலாலே எல்லா மனிதர்களும் பாவத்திலிருந்து விடுதல் பெற வழிவகுக்கப்பட்டது. *(லூக். 23:46)*

"இயேசு பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகாசத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனைவிட்டார்." இவ்வாறு தேவக்குமாரனின் மாபெரும் பாவ நிவாரண பலியால் மனுக்குலத்துக்கு இரட்சிப்பும் அந்த இரட்சிப்பின் வழியில் நிற்பவருக்கு நீடுவாழ்வாகிய நித்திய ஜீவனும் கிடைக்கிறது.

இதுவே திருக்குறளின் மையப்பொருளாக திருவள்ளுவர் விளக்கும் "பொய்தீர் ஒழுக்க நெறி" இந்தத் தேவகுமாரனைத் திருவள்ளுவர் **"ஐந்தவித்தான்"** என்று அழைக்கிறார். அவர் தமது ஐம்புலன்களையும் (சரீரத்தை முழுமையாக) பலியாக்கினார்.

மரண நேரத்தில் அற்புதங்கள்

அழகு நிறைந்த வாலிபப் பருவத்தில் சிலுவை மரத்தில் குமாரக் கடவுள் பலியான போது அற்புதங்கள் நடந்தன. அவர் பிறப்பிலும், வாழ்க்கையிலும், இறப்பிலும் கூட அற்புதங்கள்! இவையெல்லாம் அவரைத் தேவகுமாரனென்று எடுத்துக்காட்டுகின்றன.

"அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது; கல்லறைகளும் திறந்தது, நித்தரையடைந்திருந்த அனேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டுப் பரிசுத்த நகரத்தில் பிரவேளசித்து அனேகருக்குக் காணப்பட்டார்கள். இயேசுவைக் காவல் காத்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு மிகவும் பயந்து மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்." *(மத். 27:51-54)*

சரீரம் யோசேப்பின் கல்லறையில்

"சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீசனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து பிலாத்துவினிடத்தில் போய் இயேசுவின்

சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும் படி பிலாத்து கட்டளை இட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்துத் துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றித் தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான். அங்கே மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராகக் காத்திருந்தார்கள்." (மத். 27:57-61).

கல்லறைக்குக் காவல்

"ஆயத்த நாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவிடம் கூடி வந்து : ஆண்டவனே இந்த எத்தன் உயிரோடிருக்கும் போது மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால் அவனுடைய சீஷர்கள் ராத்திரியிலே வந்து அவனைக் களவாய்க் கொண்டு போய் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும் முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தன எத்து கொடிதாய் இராதபடிக்கும் நீர் மூன்று நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரபடுத்தவேண்டும் என்றார்கள்.

அதற்குப் பிலாத்து : உங்களுக்குக் காவல் சேவகர் உண்டே போய் உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லறைக்கு முத்திரைபோட்டு காவல்வைத்துக் கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்." (மத். 27:62-66).

ஸ்திரீகள் கல்லறைக்கு

"ஓய்வுநாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்." (மத்தேயு 28:1).

தூதன் கல்லைப் புரட்டினான்

"அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போல் ஆனார்கள். (மத். 28:2-7)

தூதனின் சாட்சி

"தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறி வேன். அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந் தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்." (மத். 28:5-6).

திருக்குறளில் இச்செய்தி

குமாரனின் உயிர்த்தெழுந்த ஆற்றல் மற்றெந்த மனிதருக்கும் இல்லாததாகும். அதிலும் மேலாக அங்கே நடந்த ஐந்தவித்தான் ஆற்ற லுக்கு (உயிர்த்தெழுந்த ஆற்றலுக்கு) அகன்ற வானத்திலுள்ள தேவ தூதன் அதைக் குறித்து சாட்சி பகர்ந்தது மிகவும் விசேசித்த ஒரு நிகழ்ச் சியாகும்.

உயிர்த்தெழுந்த இயேசு உலகத்தில் 40 நாட்கள்

உயிர்த்தெழுந்த தேவகுமாரன் 40 நாட்கள் உலகத்தில் வாழ்ந்து சீஷருக்கும் வேறு அனேகருக்கும் காட்சியளித்து மேலும் அனேகக் காரியங்கள் செய்து சீஷரைப் பலப்படுத்தினார். அப்போது அவருக்கு உருமாற்றமடைந்த சரீரம் காணப்பட்டது. அந்தச் சரீரத்தில் பேச, நடக்க, சாப்பிட, மற்றவர்களுக்குக் காணத்தக்கவிதமாய் நிற்க, மற்ற வர்கள் பார்க்க முடியாமல் நிற்க, அடைக்கப்பட்ட அறைக்குள் புகுந்துவிட, நொடிப்பொழுதில் வெகுதூரம் செல்ல இதுபோன்ற எல்லாக் காரியங்களும் செய்ய முடியும்.

குமாரனின் கடைசிக் கட்டளை

"பின்பு அவர் (இயேசு) அவர்களை நோக்கி: ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கிப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்." (மத். 28:19-20).

பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவேன்

இயேசு அவருக்குப் பின் சீஷரை வழிநடத்த பரிசுத்த ஆவியான வரை அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். அதன்படி அவருக்காக எருசலேமில் காத்திருக்கக் கட்டளையிட்டார்.

பரமேறுதல்

இயேசு சீஷரைக் கூட்டிக்கொண்டு ஒலிவ மலைக்குச் சென்றார். அவர் அவர்களை நோக்கி, "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசேலமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி படியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார். இவைகளை அவர் சொன்னபின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு முன்பாக ஒரு மேகம் எடுத்துக் கொண்டது."

"அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த் துக்கொண்டிருக்கையில் இதோ, வெண்மையான வஸ்திரந் தரித் தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று கலிலேயராகிய மனு ஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

எருசலேமில் தரித்திருந்தார்கள்

இயேசு ஒலிவமலையிலிருந்து பரத்துக்கு ஏறிச் சென்றபின் சீசர் கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். இயேசுவின் கட்டளைப்படி அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக மாற்குவின் மேல்வீட்டறையில் தங்கியிருந்தார்கள். *(அப். 1:13-14)*

பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார்

"பெந்தேகோஸ்தே எனும் நாள் வந்தபோது, அவர்களெல்லா ரும் ஒருமனப்பட்டு ஒரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவ தையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொ ருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியி னாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்."

எல்லா தேசத்தாரும் பார்த்துப் பிரமித்தார்கள்

"வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணி

னார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது திரளான ஜனங்கள் கூடி வந்து தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர் கள் கேட்டதினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு ஒருவரையொருவர் பார்த்து, இதோ பேசுகிற இவர்க ளெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவர்க ளுடைய ஜென்ம பாஷைகளிலே பேசக் கேட்கிறோமே..." என்றார்கள். (அப். 2:5-11).

சபை ஸ்தாபிக்கப்படுதல்

சபை என்பது குமாரனாகிய கடவுளின் சிலுவைப் பலியை விசுவாசத்தால் எற்றுக்கொண்டு பாவ மன்னிப்பு அடைந்து பரிசுத்தா வியினால் வழிநடத்தப்பட்டு நித்திய ஜீவனுக்காக வாழ்பவர்களின் கூட்டம் ஆகும். அவர்கள் குமாரனால் இரட்சிக்கப்பட்டவர்கள். (அப். 2:46-47).

சபையில் சேர்த்தல்

"அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்தில் அனுதின மும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லா இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்." (அப். 2:47).

திருவள்ளுவர் இரட்சிக்கப்பட்டவர்களைத் திருக்குறளில் சான் றோர் (சாட்சியாய் ஜீவிக்கிறவர்கள்) என்று குறிப்பிடுகிறார். சான்றோ ரின் வாழ்க்கை மற்ற ஜனங்களை விட நற்பண்புகளையுடையதாய் அல்லது அறத்தையுடையதாய் இருக்கும். அப்படிப்பட்ட அறத்தைப் போதிப்பதே திருக்குறளின் நோக்கமாகும். அப்படிப்பட்ட அறவாழ்க்கை ஒருவனை நித்திய ஜீவனுக்கு எடுத்துச் செல்லும். அப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துவது உலக மனிதனுக்குக் கடினமாகும். எனவே அந்த வாழ்க்கை நடத்த மனிதனுக்கு உதவுவதே 'வான்' ஆகிய பரிசுத்த ஆவியான கடவுளாகும். அவரே உலகத்தில் இப்போது இருந்து கொண்டு செயலாற்றுகிறவர்.

அதிகாரம் : 13

குமாரனாகிய கடவுள் ஏன் அவதரித்தார்?

சைவ சித்தாந்தம்

உமாபதி சிவாச்சாரியார்

இறைவன் ஏன் பிறந்தார் என்பதை உமாபதி சிவாச்சாரியார் கீழ்க் கண்டவாறு விளக்குகிறார்.

'இறவா இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்தான்' - போற்றிப்ப ஃறொடை - 69

அதாவது ஓயாத நித்திய இன்பத்தில் நம்மைக் கொண்டு சேர்ப் பதற்காகப் பிறவா முதல்வனாகிய கடவுள் உலகத்தில் பிறந்தார். இங்கே, இந்த உலகத்தில் இறைவன் பிறந்தார் என்பதும் அவர் பிறந்த நோக்கமும் விளக்கப்படுகிறது.

இறைவன் உண்டு என்றும், மரணத்துக்குப்பின் மனிதனுக்கு இறவா அல்லது நீங்காத நித்திய இன்பம் உண்டு என்றும் இங்குக் கூறப்படுகிறது. மட்டுமல்ல நம்மைப் பாவத்திலிருந்து மீட்டு அந்த இன்பத்தில் கொண்டு சேர்ப்பதற்காக அல்லது அந்த இன்பத்தை நமக்குத் தருவதற்காகக் கடவுள் மனிதனாகப் பிறந்தார் என்றும் கூறப்படுகிறது. இது பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தாகும்.

இறைவன் குருவாக அவதரித்தார்.

சிவஞானபோதம்

'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே' - சி.ஞா.போ. 8

பதவுரை

தம் முதல்	- தமக்கு முதல்வனாகிய இறைவன்
ஐம்புல வேடரின் வளர்ந்து	- மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புல இச்சைகளாகிய வேடருடன் வாழ்ந்து
அயர்ந்தனையென	- உன்னையும் உன்னைப் படைத்த இறைவனையும் அறியாது மயங்கிவிட்டாய் என்று.
குருவுமாய்	- குருவாக உலகத்தில் வந்து
தவத்தினில்	- ஆன்மாவுக்காகத் தான் துன்பத்தை ஏற்றுத் தன்னுயிர் தானறப் பெறுத லாகிய தவத்தினில்
உணர்த்த	- ஆன்மாவுக்கு உணர்த்திக் காட்ட
விட்டு	- ஆன்மாவானது தன் பாவத்தை விட்டுப் பிரிந்து
அன்னியம் இன்மையின்	- ஆன்மாவிற்கு இறைவனோடிருந்த பிளவு நீக்கப்பட்டபடியால்
அரன்	- பாவத்தை அரிந்தெடுப்பவனாகிய இறைவனின்
கழல்	- திருவடி
செலுமே	- சென்று அடையும்

விளக்கம்

கடவுள் குருவாக அவதரித்தார் என்று சிவஞானபோதம் 8-ம் சூத்திரம் கூறுகிறது. ஆதி பெற்றோர் தூய்மையாய்ப் படைக்கப்பட்ட போதும் அவர்கள் தீயவனுடைய பொய்யினால் வஞ்சிக்கப்பட்டு மலமாகிய பாவத்தில் சிக்கிக் கொண்டார்கள். அது நிமித்தம் சகச மலம் ஆகிய ஜன்மபாவம் (original sin) உலகத்தில் வந்துவிட்டது. மனு மக்கள் எல்லோரும் சந்ததி பரம்பரையாய்ப் பாவத்தில் கிடக்கிறார்கள். மனிதனின் ஆன்மா கறைபடிந்து மயங்கிக்கிடக்கிறது.

குருவாக

இந்தப் பரிதாப நிலையைக் கண்டு மனம் உருகி இறைவன் தமது அன்பின் பெருக்கினால் குருவாக இந்த உலகத்தில் வந்து சிலுவைப்

பலியாகிய தவத்தினால் ஆன்மாவை உணர்த்திக் கசடுகள் அகற்றி பரிசுத்தப்படுத்தித் தம்மோடு மீண்டும் சேர்த்துக் கொள்கிறார்.

இறைவன் பாதத்தில் கிடக்கும் மனுமக்களைத் தேடிவந்து அவர்களுடைய பாவக்கறைகளை நீக்கித் தம்மோடுச் சேர்த்துக் கொள்வதை சைவ சித்தாந்தம் இரு உவமைகளால் விளக்குகிறது.

உவ. 1. வேடரோடு வாழ்ந்த மகன்

ஒரு அரசனுடைய மகன் காணாமற்போய்விட்டான். அவன் காட்டில் வேடர்களோடு வேடனாக வாழ்கிறான். தானும் ஒரு வேடனென்றே நம்புகிறான். தான் அரசனுடைய மகன் என்பது அவனுக்குத் தெரியாது. இந்நிலையில் அரசன் தன் மகனைத் தேடியபோது மகனின் நிலையை அறிகிறான். தானே காட்டில் சென்று மகனை மீட்டுவர நினைக்கிறான். ஆனால் அவன் காட்டிற்கு அரச கோலத்தில் சென்றால் மகன் பயந்து நடுங்கி ஓடிவிடுவான் என்று அறிந்து தன்னையும் ஒரு வேடனாக ஆக்கிக் கொண்டு வேடர் குடி தேடி காட்டிற்குச் சென்று மகனுடன் உரையாடி அவனை உணர்த்தி அங்கிருந்து அழைத்துக் கொண்டு வருகிறான்.

ஐம்புல வேடர்களோடு வாழும் ஆன்மா

இவ்வாறே இறைவனோடு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டிய நாம் அதைவிட்டுவிட்டு வேடர்களோடு வேடர்களாக வாழ்கிறோம்.

'ஐம்புல வேடரிள் அயர்ந்தனை வளர்ந்தென'

அதாவது ஆன்மா, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புல வேடர்களின் சிற்றின்பங்களை நாடித்தேடி ஓடி, வேடர்குடி வாழ்க்கை வாழ்ந்து தன்னை அறியாமல் மயங்கிக் கொண்டிருக்கிறது. அதைத் தேடி இறைவன் வருகிறார். ஐம்புல வேடர்கள் மத்தியில் வளர்ந்து 'அயர்ந்தனை' அதாவது நீ உன்னையே மறந்து விட்டாய் என்று முதல்வனாகிய இறைவன் குருவாக வந்து உணர்த்துகிறார். 'தவத்தினில் உணர்த்த' குருவாய் வந்த இறைவன் சிலுவைத் தவத்தால் உணர்த்தும்போது தான் ஆன்மா உணர்வடைய முடியும்.

உணர்வடையும் ஆன்மா

ஐந்தறிவுள்ள மிருகங்களுக்கும் ஆறறிவு படைத்த மனிதர்களுக்கும் உள்ள வேற்றுமை என்னவென்றால், மனிதனுக்கு மட்டுமே ஆன்மா உண்டு என்பது தான். ஆனால் ஆன்மாவை உடைய மனிதன் கூட சில வேளைகளில் மிருகங்களை விடக் கேவலமாய் நடந்து கொள்கிறானே!

மனிதர்களுக்குள் சில மனிதர்கள் மிருகங்களைப் போல நடந்து கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அது அந்த மனிதர்களின் ஆன்மா சகசமலமாகிய பாவத்தில் மயங்கிக் கிடப்பது தான் காரணம். கடவுள் வந்து உணர்த்தினால் மட்டுமே மனிதனுக்குள் இருக்கும் ஆன்மாவுக்கு உணர்வடைய முடியும்.

அதற்காகவே கடவுள் இந்த உலகத்தில் வந்து தவத்தை, அதாவது சிலுவைத் தவத்தை மேற்கொண்டார். கடவுளால் உணர்த்தப்படும் ஆன்மா உணர்வடைகிறது.

உவ. 2. பொன்னோடு சேர்ந்த செம்பு

இங்கே மற்றுமோர் உவமை சொல்லப்படுகிறது. செம்பினால் செய்யப்பட்ட ஒரு பொருள் இருக்கிறது. அதை விளக்கி மிக மினுக்காய் வைத்தாலும் அதில் களிம்பு சேர்கிறது. செம்பில் களிம்பு சேர்வது இயல்பு. அதுபோல வீழ்ச்சிக்குப்பின் சகசமலத்தில் இருக்கும் ஆன்மாவில் மலமாகிய பாவம் சேர்வது இயல்பு. ஆனால் செம்பில் களிம்பு சேராமல் ஆக்கிவிட முடியுமா? முடியும். எப்படி? ஒரு பசும் பொன் கட்டியை எடுத்து அதை உலையில் போட்டால் அது உருகும் அதோடு அந்தச் செம்பைப் போட்டால் அதுவும் சேர்ந்து உருகிவிடும்.

புதிய உலோகம்

இரண்டும் உருகிச் சேர்ந்தபின் வெளியே எடுத்தால் ஒரு புதிய உலோகம் வருகிறது. அதில் செம்பும் இருக்கிறது, பொன்னும் இருக் கிறது. அந்தச் செம்பில் களிம்பு சேர்வதில்லை. ஏனென்றால் செம்பு பொன்னோடு இணைந்திருக்கிறது. அதுபோல இறைவன் குருவாக இந்த உலகத்தில் வந்து தமது சிலுவைத் தவத்தில் உருகி நிற்கிறார். மனிதன் அடைய வேண்டிய பாடுகளை அவர் ஏற்றுக்கொண்டு அவர் சிலுவைத் தவத்தில் காணப்படுகிறார்.

புது சிருஷ்டி

நாம் அவரோடு இணைந்துவிட்டால் அதாவது நம் பாவங் களுக்காகக் கண்ணீர்வட்டு மனம் திருந்தி அவரிடம் செல்லும்போது அவர் நம்மை அணைத்துக் கொள்கிறார். அப்போது செம்பு ஒரு புது உலோகமாக மாறிவிடுவதுபோல நாமும் புது சிருஷ்டி அல்லது புதிய மனிதனாக மாறுவோம். அதுமுதல் நம் சிந்தனைகள் நம் செயல்கள் எல்லாமே சுத்தமாகிவிடும். இதுவே மறுபிறப்படைதல்.

இறைவன் பாதம் செல்லுதல்

இந்நிலையில் 'அன்னியம் இன்மையில் அரன் கழல் செலுமே' கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையில் இருந்த தடுப்புச்சுவர் உடைந்து இல்லாமற்போயிற்று. எனவே ஆன்மா பாவத்தை அரிந்து எடுப்பவனாகிய அரன் கழலில் சென்றுவிடும்.

மனுமக்களின் பாவத்தைச் சுமந்து கொண்டு சிலுவையில் தொங்கிப் பாவபலியாக மரித்து உயிர்த்த குமாரனாகிய இயேசுவே உலகத்தில் குருவாக வந்த கடவுள். அவரே மனுமக்களின் பாவங்களைக் களைந்து அவர்களைப் புது சிருஷ்டியாக்குகிறவர். அதாவது மறுபடியும் பிறக்க வைக்கிறார்.

குருபரனாாக வந்தார்

'அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்றிக ழாதே' - போற்றித் திரு அகவல் 75 - 77

பரலோகத்துக்குரியவரான ரூபமில்லாத கடவுள் குருபரனாக அதாவது தப்பிப்போன மனிதருக்கு நீடுவாழ்வைக் குறித்து போதிப்பவராக இவ்வுலகத்தில் வந்த பெருமையை அற்பமானதாய் இகழ்ந்து விடாதே என்பது பொருள்.

இங்கேயும் கடவுள் மனுவாக வந்ததைக் குறித்து எடுத்து கூறப் படுகிறது.

சாதாரண மனிதனாக வந்தார்
(திருவுந்தியார்)

'அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற' - (தி.உ. 1)

அதாவது எவருமே அறிவதற்கு அரிய மெய்பொருளாகிய கடவுள் ஒரு சாதாரண மனித உருவாக இவ்வுலகத்தில் வந்தார் என்று உந்தீபற (ஊக்கமாய் சொல்) அவர் தாமாகவே தம்மைத் தந்தார் என்றும் அடித்துச் சொல்.

உருவமில்லாத கடவுள் மனித உருவம் எடுத்து மனிதனுக்காக தாமாகவே தம்மைப் பலிக்கு ஒப்புக் கொடுத்தார் என்பது பொருள்.

திரும்பத் திரும்பப் பிறப்பதில்லை

கடவுள் மனிதனாக வந்து பலியாகிப் பாவ நிவிர்த்தி செய்தவர். எனவே மீண்டும் அவர் மனிதனாகப் பிறப்பதில்லை என்ற கருத்தைத் திருவுந்தியார் கீழ்க்கண்ட பாடலில் விளக்குகிறார்.

'கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற;' - (தி.உ. 3)

இறைவன் மீண்டும் மீண்டும் பல அவதாரங்கள் எடுத்துத் தீமையை அழிக்கிறான் என்ற ஒரு சாராருடைய கருத்தைத் திருவுந்தியார் இப்பாடல் மூலம் முறியடிக்கிறார். அப்படி இறைவனுக்கு இனிமேல் ஒரு பிறப்போ இறப்போ இல்லை என்கிறார் திருவுந்தியார்.

பாவத்தைப் போக்கி மனிதரைப் பரலோகம் சேர்க்க வந்தவர் உலக வரலாற்றில் பிறந்த கடவுள்: குமாரக் கடவுளாகிய இயேசு ஒருவரே.

மறுபடியும் முக்தி நிலைக்குக் கொண்டு செல்ல

ஆதிமனிதன் தூயநிலையிலிருந்து பாவ நிலைக்குச் சென்று விட்டதால் அவனைப் பாவ நிலையிலிருந்து தூய நிலையில் ஆக்கித் பரலோகம் சேர்க்கத் தேவகுமாரன் உலகில் தோன்றினார் என்பதைத் திருக்களிற்றுப்படியார் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

'முக்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங்கத்தியினால்
மோகக் கொடியறுக்க முக்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று' - (திருக்களிற்றுப்படியார் - 93)

அதாவது இறைவனோடு மகிழும் முக்தி நிலையில் தோன்றிய முதல் கொடியான மனிதனாகிய முதல் மனிதனால் ஏற்பட்ட மோகக் கொடியான பாவத்தின் காரணமாக உலகில் தீமை பழுத்தது. அந்தத் தீமையாகிய மோகக் கொடியை அருளாகிய கத்தியினால் அறுத்து அதில் திரும்பவும் முக்திப் பழத்தைப் பழுக்க வைக்குமாறு ஒப்பற்ற கொடியாகிய இறைக்குமாரன் இவ்வுலகத்தில் வந்தார் என்பது பொருள்.

இங்கே பரலோகம் முக்தி நிலை எனக் கூறப்படுகிறது. முதற் கொடியாகிய ஆதி மனிதனில் மோகமாகிய பாவம் படர்ந்ததால் தீமைக்கு மனிதன் உட்பட்டான். அத்தீமையை அவனில் இருந்து

அகற்றி மனிதரை மறுபடியும் பரலோக வாழ்வாகிய நீடு வாழ்வுக்கு அல்லது முக்தி நிலைக்குக் கொண்டு சேர்க்கவே கடவுள் உலகத்தில் அவதரித்தார் என்பது தெளிவாக விளக்கப்படுகிறது.

வைணவத்திலும் இக்கருத்து

கெட்டுப்போன எங்களை மீட்டுக் கொள்ளப் பிறந்தாய்

'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா;'

நம்மாழ்வார் திருவிருத்தம் 1 - 3580

அதாவது பொய் நின்ற ஞானம், கெட்ட நடத்தை, கேடு நிறைந்த அசுத்த உடம்பு ஆகியவற்றால் கெட்டு போன நாங்கள் மேலும் இந்நிலையில் இராதபடிக்கு எங்களை மீட்டு நித்திய ஜீவன் அருளுவதற்காக ஒரு கன்னிகை வயிற்றில் என்னைப் போன்ற உடலைத் தரித்தவராய் பிறந்தீரே எல்லாம் வல்ல இறைவா!

இப்பாடலிலும் கடவுள் மனுவுரு எடுத்தார் எனவும் அவர் கெட்டுப்போன மனு மக்களை மீட்டு அவர்களுக்கு நீடுவாழ்வு அளிப்பதற்காகவே மனிதனாக ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்தார் எனவும் தெளிவாய் விளக்கப்படுகிறது.

திருக்குறளில்

திருவள்ளுவர் குமாரனாகிய கடவுள் மட்டுமே இம்மை மறுமை ஆகிய இருமையும் சரியாய் அறிந்தவர் என்கிறார். பாவத்தில் வீழ்ச்சி யடைந்த மனுக்குலம் இம்மையில் அதாவது இந்தப் பூமியில் எத்தகைய பரிதாபமான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதையும் அவர்களுக்குக் கடவுளால் நியமிக்கப்பட்ட நீடுவாழ்வை எப்படி இழந்துபோனார்கள் என்பதையும் அவர் அறிந்தார். மறுமையின் பரலோக மேன்மையில் இருந்த அவர் மனுக்குலத்தை மீட்டு மீண்டும் அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கச் சித்தமானார். எனவே அவர் தமது பரலோக மேன்மைகளை ஈண்டு அறம் பூண்டார். அதாவது தமது மறுமையின் மேன்மைகளைத் துறந்து (விட்டுவிட்டு) பூமிக்கு வந்து அறம் ஆகிய இரட்சிப்பை மனுக்குலத்துக்குச் சம்பாதித்துத் தந்தார். அவருடைய பெருமை உலகில் மிகச் சிறந்து விளங்குகிறது.

(அ. 3:3)

'இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு' (கு. 23)

இத்தகைய மாபெரும் தியாகத்தைக் குமரக் கடவுள் செய்தபடியால் திருவள்ளுவர் அவரை நீத்தார் அல்லது ஒழுக்கத்து நீத்தார் என்ற காரணப் பெயரால் அழைக்கிறார். அதாவது உலக மக்களுக்கு இரட்சிப்பு ஆகிய ஒழுக்கத்தை நிலைநாட்ட தமது பரலோக மேன்மைகளை நீத்தவர் (விட்டுவிட்டவர்) என்பது பொருள்.

(அ. 3:1)

'ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு' (கு. 21)

இங்குக் கூறப்படும் 'ஒழுக்கத்து நீத்தாரின்' பெருமையைத் துணிவாகக் கூறுவதே நூல்களுக்கெல்லாம் தலையான பனுவல் செய்வது. திருக்குறள் ஒரு அறநுலாகப் புகழப்படுகிறது. ஆனால் வள்ளுவர் கூறும் அறம் என்பது என்ன? அதுவே குமாரனாகிய கடவுள் இந்த உலகத்தில் வந்து மனுக்குலத்துக்குச் சம்பாதித்துத் தந்த இரட்சிப்பு. இதற்கு அறம், ஒழுக்கம், பொய்தீர் ஒழுக்க நெறி போன்ற மேலும் அனேக வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதைத் திருக்குறள் முழுவதிலும் காணலாம்.

திருக்குறளின் மையப் பொருள் திருவள்ளுவர் கூறும் ஒழக்கம் அல்லது பொய்தீர் ஒழுக்கநெறி என்ற அறம் ஆகும். அது நீடுவாழ்வு அளிக்கின்ற அறம்! திருக்குறளின் எல்லா அதிகாரங்களிலும் மட்டுமல்ல எல்லா குறட்பாக்களிலும் திருவள்ளுவர் விளக்கும் அறம் ஒன்றோடொன்று தொடர்ச்சியாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அதிகாரம் : 14

குமாரனாகிய கடவுள் பரலோக மேன்மை துறந்தவர்

விவிலியம்

உலக இரட்சகராகிய இயேசு திரித்துவத்தில் ஒருவரான குமாரனாகிய கடவுள் ஆவார். அவர் தமது படைப்புகளான உலக மக்களின் பரிதாப நிலையைக் கண்டு மனம் உருகினார். பாவத்தில் வீழ்ச்சி அடைந்து நித்திய ஜீவனை இழந்துபோன மனுமக்களை மீட்டு மறுபடியும் அவர்களுக்குத் தேவனோடுள்ள பரலோக வாழ்வும் நித்திய ஜீவனும் அளிக்கச் சித்தமானார்.

தேவ நீதியை நிறைவேற்றினார்

மனிதருக்கு இரக்கம் காட்டும் அதே நேரத்தில் தேவநீதியையும் நிறைவேற்ற வேண்டியதாயிற்று. பாவத்தின் சம்பளம் மரணம் என்பது தேவ நீதி. சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட மனிதன் பாவம் செய்தான். பாவம்செய்த மனிதன் சாகவேண்டியதாயிற்று. இந்தத் தேவ நீதியையும் நிறைவேற்றி மனுக்குலத்தை இரட்சித்து அவர்களுக்கு அவர்கள் இழந்து போன நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காகத் திரித்துவத்தில் குமாரனாகிய கடவுள் தமது கடவுள் நிலையையும் தமது பரலோக மேன்மைகளையும் துறந்து ஒரு மனிதனாக இந்தப் பூமியில் பிறந்தார். இதுவே இரட்சகராகப் பிறந்த தேவ மைந்தனாகிய இயேசுவின் சிறப்பான மேன்மை.

தம்மைத் தாழ்த்தினார்

பரலோக மேன்மைகளைக் கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் (பிலி. 2:6,8).

நீத்தார் என்ற பெயர்

குமாரனாகிய கடவுளின் மேற்கண்ட தியாகத்தைத் திருவள்ளுவர் மிகச் சிறந்த மேன்மையாக எடுத்துக் கூறுகிறார். அதுமட்டுமல்ல, அத்தகைய சிறப்புடைய குமாரனாகிய கடவுளுக்கு நீத்தார் என்ற காரணப்பெயர் சூட்டிப் பெருமைப்படுத்துகிறார். நீத்தார் பெருமை என்ற 3-வது அதிகாரத்தில் திருவள்ளுவர் பரலோக மேன்மைகளை துறந்த குமாரனாகிய கடவுளின் சிறப்புக்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறுகிறார்.

(அ. 3:1)

'ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு' *(கு. 21)*

பனுவல் துணிவு

உலகில் இரட்சிப்பாகிய ஒழுக்க நெறியை நிலைநாட்டுவதற்குக் கடவுள் என்ற தமது மகிமை நிலையை நீத்து (துறந்து) உலகுக்கு வந்தவரது பெருமையை எடுத்துக்கூறுவதே நூல்களுக்கெல்லாம் தலையாகிய பனுவலின் துணிவு.

நீத்தாராகிய இயேசுவின் மேன்மையை விவிலியம் எடுத்துக் கூறுகிறது. அதுபோல் திருக்குறளும் அவர் மேன்மையைத் துணிவுடன் கூறுகிறது. இந்நூல்கள் நூல்களுக்கெல்லாம் தலையாக உலகின் மேற்கிலும் கிழக்கிலும் விளங்குகின்றன.

ஒழுக்கத்து நீத்தார்

திருவள்ளுவர் குமாரனாகிய கடவுளை ஒழுக்கத்து நீத்தார் என்று குறிப்பிடுகிறார். ஏனென்றால் அவரே ஒழுக்கத்தின்கண் நிலை நின்று தமது கடவுள் நிலையின் மேன்மையை நீத்தவர். திருக்குறளின் மையப் பொருளாய்த் திருவள்ளுவர் எடுத்துக்காட்டுவது அறம் அல்லது ஒழுக்கம் அல்லது பொய்தீர் ஒழுக்கநெறி ஆகும். அது நீடுவாழ்வு அளிக்கின்ற அறம். இந்த ஒழுக்கநெறி ஆகிய இரட்சிப்பை மக்களுக்குத்தரவே குமாரனாகிய கடவுள் தமது பரலோக மேன்மைகளை நீத்து இந்த உலகத்தில் வந்தார். நீத்தாரா கிய கடவுள் தரும் இரட்சிப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்குக் காணப்பட வேண்டிய பண்புகள் ஒழுக்கநெறி அல்லது அறம் என்று கூறப்படுகிறது.

மறுமையின் இன்பத்தை விட்டு வந்தவர்

பரலோக மேன்மைகளை துறந்த நீத்தாரின் பெருமை 23-ஆம் குறட்பாவிலும் பாடப்படுகிறது.

(அ. 3:3)

'இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு' *(கு. 23)*

இம்மை மறுமை ஆகிய இருமையையும் வகை தெரிந்தவர் இறைவன் மட்டுமே. அவர் தம்மையே பலியாகக் கொடுத்து அறச்செயல் பூண்டார். எனவே அவருடைய மேன்மை மிகச் சிறந்து விளங்குகிறது.

இருமை வகை தெரிந்தவர்

நீத்தாராகிய கடவுள் ஒருவரே இருமை வகை தெரிந்தவர். அவர் இம்மையிலே அதாவது இந்தப் பூவுலகத்தில் இருக்கும் மனுக்குலத்தின் பரிதாபமான நிலையை அறிந்து தாம் அனுபவிக்கும் மறுமையின் அதாவது பரலோக இன்பங்களை நீத்து இந்தப் பூலோகத்துக்கு வந்து அறம் பூண்டார்.

இம்மைக்குரிய மக்களைப் பரலோகத்துக்குரியவர்களாக்கும்படியாகத் தம்மையே அர்ப்பணித்து அறம் பூண்டார். தம் நிலையின் மகிமையை நீத்து ஈண்டு அறம் பூண்டு பொய்தீர் ஒழுக்க நெறியைக்காட்டி மக்களுக்கு நீடுவாழ்வு அளித்தார். மக்களுக்கு நீடுவாழ்வு அளிப்பதற்காக தம்மையே பலியாக்கி அறம் ஆகிய இரட்சிப்பை உண்டாக்கினார். அவ்வாறு அவர் பெருமை உலகுக்கு வெளிப்பட்டது.

அதாவது ஒழுக்கத்து நீத்தாராகித் தம்மையே கொடுத்து அறம் என்னும் ஒழுக்கநெறி பூண்டார். அவர் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியில் நடப்பவர்க்கு நீடுவாழ்வு உண்டு. ஈண்டு என்பதற்குத் தன் நிலையை நீத்து ஐம்புலனை ஏற்று இவ்வுலகத்துக்கு வந்தார் என்பது பொருள். அறம் பூண்டார் என்பதற்கு அறத்தை விளக்கிக் காட்டினார் என்று பொருள். ஈண்டு அறம் பூண்ட அவரே அறவோனாகிய அந்தணன் அல்லது அறவாழி அந்தணன் எனப்படுகிறார்.

அவர் 'ஓரைந்தும்' காப்பவர்

மேலும் கடவுளுக்கு வித்தாகிய நீத்தார் உலக மக்களைத் தீங்குக்கு விலக்கிக் காத்து அவர்களை வான் வீட்டிற்கு மணவாட்டியாகச் சேர்க்கும் மணவாளனாக விளங்குகிறார் என்று 24-வது குறட்பாவில் பார்க்கிறோம்.

(அ. 3:4)

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து *(கு. 24)*

நீத்தார் வரனென்னும் வைப்பாகிய கடவுளுக்கு வித்தாக விளங்குகிறார். அவர் பெற்ற (உரம்) என்னும் அங்குசத்தால் (தோட்டி) ஓரைந்தும் காத்தார். இங்கு ஐம்புலன்கள் யானைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்தவித்தானாகிய நீத்தார் தமது வெற்றியால் உலக மக்களைத் தீங்குக்குட்படுத்தும் ஐம்புலன்களையும் அடக்கிக் காப்பவர். அதற்காகவே அவர் தம் ஐம்புலன்களையும் பொறிவாயில் பலியாக்கினார்.

வரன் என்பது மணமகன். வரன் என்னும் வைப்பு என்றால் வரன் என்னும் மணமகனுடைய வீட்டுலகு அதாவது மனிதனுக்கு முழுமையான இன்பம் அளிப்பது இறைவனோடுள்ள உறவே ஆகும். அந்த முழு இன்பத்தை மணமக்கள் அடையும்படியாக இறைவனாகிய மணமகனுடைய வீட்டுலகிற்கு வித்தாக விளங்குபவர் ஒழுக்கத்து நீத்தாரே. அந்த வித்தாகிய நீத்தாரை ஏற்றுக்கொள்ளும் உள்ளங்களில் பேரின்பம் நிலை கொள்ளும். 'ஓரைந்தும்' அதாவது கண்டு, கேட்டு, உண்டு, உய்த்து, உற்று அறியும் ஐம்புலன்களுக்கும் நித்திய இன்பம் கொடுக்கும்படி வந்தவரே ஒழுக்கத்து நீத்தார். அவரை ஏற்றுக்கொண்ட உள்ளங்களை உடையவர்களின் ஐம்புலன்கள் காக்கப்படுகின்றன.

வார்த்தை மாம்சமானவர்

விவிலியத்தில் "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாய் இருந்தது, அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோ. 1:1,14) என்று வாசிக்கிறோம். வார்த்தையாகிய தேவன் பரத்திலிருந்து பூமிக்கு வந்ததைத் திருவள்ளுவர் 28-வது குறட்பாவில் சுட்டிக்காட்டுகிறார்.

நிறைமொழி மாந்தர்

(அ. 3:3)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் *(கு. 28)*

கடவுளின் சொல் ஆகிய மொழியாய் இருப்பவர் ஒழுக்கத்து நீத்தார். இது ஒன்றே நிறைமொழியாகும். மனுமக்களின் சொல் ஆகிய

மொழிகள் குறையுடையவை. நிறைமொழியே மனு உரு எடுத்து வந்தபடியால் இவர் (நிறைமொழி மாந்தரானவர்) நிறைமொழி மாந்தர் என்று அழைக்கப்படுகிறார். இந்த நிறைமொழியைக் கேட்ட இறை அடியார்கள் அதை எழுதி வைத்தார்கள். அவ்வாறு நிறை மொழி மறைமொழியாயிற்று. இவ்வாறு நிறைமொழி மாந்தர் பெருமையை மறைமொழி காட்டுகிறது.

மேற்காசியாவில் நிறைமாழி மாந்தரின் சொல்லைக் கேட்டவர் களால் எழுதப்பட்டதே திருமறை. அவ்வாறு கிழக்காசியாவில் குறிப்பாக இந்தியாவில் நிறைமொழி மாந்தரின் ஒரு சீடனான தோமா அப்போஸ்தலன் வழியாக அவர் சொல்லைக் கேட்ட திருவள்ளுவர் எழுதியதே 'திருக்குரல்'. அதாவது நிறைமொழி மாந்தரான குமாரனின் குரல் என்ற பொருளில் 'திருக்குரல்' என்று எழுதப்பட்ட வார்த்தை பின்பு 'திருக்குறள்' என்று எழுதப்பட்டிருக்கலாம்.

குமாரனாகிய கடவுளின் இரட்சிப்பையும் இரட்சிப்பின் உபதேசங்களையும் நேரில் கேட்டறிந்த வண்ணமாய்த் 'திருக்குரல்' விளக்குகிறது என்பதே உண்மை. எனவே நிறைமொழி மாந்தரான குமாரனின் பெருமையை நம் நிலத்தில் காட்டுவதே மறைமொழியா கிய 'திருக்குறள்' என்று துணிவோடு கூறமுடியும்.

அதிகாரம் : 15

குமாரனாகிய கடவுள் தம்மையே பலியாக்கியவர்

உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி மலையில் கள்வர்கள் நடுவில் சிலுவை மரத்தில் அடிக்கப்பட்டார் என்பது விவிலியம் கூறும் வரலாறு.

திருக்குறளில்

குமாரனாகிய கடவுள் (நீத்தார்) இந்த உலகத்தில் மனிதனாக வந்து மனிதருடைய பாவங்களுக்காகப் பொறிவாயில் (சிலுவை மரத்தில்) தம்மையே பலியாக்கி இரட்சிப்பாகிய அறத்தை ஏற்படுத்தினார் என்றும் அவர் காட்டிய வழியில் நடப்பவர்களுக்கு நீடுவாழ்வு ஆகிய நித்திய ஜீவன் உண்டு என்றும் திருவள்ளுவர் 6-வது குறட்பாவில் தெளிவாக விளக்குகிறார்.

(அ. 1:6)

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்' - (கு. 6)

பொறியாகிய கொலைக்கருவி (சிலுவை) வழியாகத் தம் ஐம்புலன் களையும் பலியாக்கிய நீத்தாராகிய கடவுள் பொய்யைப் பரிகரித்து (தீர்த்து) ஏற்படுத்திய ஒழுக்கநெறியில் நிற்பவர்கள் நீடுவாழ்வைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஐந்தவித்தான்

இக்குறட்பாவில் திருவள்ளுவர் குமாரனாகிய கடவுளை ஐந்த வித்தான் என்று அழைக்கிறார். ஐந்தவித்தான் என்பதற்கு ஐம்புலன் களையும் அவித்தவர் அல்லது பலியாக்கினவர் என்பது பொருள். அவர்

பலியாக்கியது 'பொறிவாயில்' ஆகும். பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதற்குப் பொறியாகிய கொலைக்கருவி வழியாகத் தம் ஐம்புலன்களையும் பலியாக்கியவர் என்பது பொருள்.

ஒழுக்கநெறி

பொறிவாயில் தம் ஐம்புலன்களையும் அவித்து அவர் பெற்றுத் தந்தது பொய்தீர் ஒழுக்கநெறியாகும். அதுவே வள்ளுவர் திருக்குறள் முழுவதும் வலியுறுத்தும் ஒழுக்கம் அல்லது அறம். அந்தப் பொய்தீர் ஒழுக்கநெறியாகிய அறவழியில் நிற்பவர்கள் நீடுவாழ்வு பெற்றுக் கொள்வார்கள்.

இரட்சிப்பு விவிலியத்தில்

குமாரனாகிய கடவுள் (இயேசு) தமது சிலுவை மரணத்தின் மூலம் பெற்றுத் தந்தது இரட்சிப்பு ஆகிய மீட்பு என்றும் இந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டு அவர் காட்டிய வழியில் நடப்பவர்கள் இறைவனோடு பரலோக ராஜ்யத்தில் சென்றடைந்து நித்திய ஜீவன் பெற்று நித்திய நித்தியமாய் வாழ்ந்து சுகித்திருப்பார்கள் என்றும் விவிலியம் வெளிப்படுத்துகிறது.

பேரின்ப வாழ்வு

திருக்குறளின் மூன்றாவது பாகமான இன்பத்துப்பால் பரலோக இன்பத்தை விளக்குவதாக உள்ளது. ஐந்தவித்தான் பெற்றுத் தந்த பொய்தீர் ஒழுக்கநெறியில் வான் ஆகிய தூய ஆவியின் உதவியோடு செல்பவர்கள் இறுதியில் பேரின்ப வாழ்வில் இறைவனோடு நீடுவாழ்வு பெற்று வாழ்வார்கள் என்பது திருக்குறள் கருத்து.

பொய்தீர் ஒழுக்கம்

'பொய்தீர் ஒழுக்கநெறி' என்பது பொய்யைத் தீர்த்து சம்பாதித்த ஒழுக்கநெறி ஆகும். இந்தப் பொய்யின் ஆரம்பத்தைத் திருமறை விளக்குகிறது. ஆதி பெற்றோராகிய ஆதாம் ஏவாளை வஞ்சித்தது சாத்தானுடைய பொய்யினால் ஆகும். கடவுளின் கட்டளை, தோட்டத்தின் நடுவில் இருக்கும் மரத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதைப் புசிக்கும் நாளில் நீ சாகவே சாவாய் என்பதாகும். ஆனால் பொய்களுக்கெல்லாம் பிதாவாகிய சாத்தான் ஏவாளிடம் சாகவே சாவதில்லை என்ற பொய்யைக் கூறி நம்பவைத்தான். அதோடு அந்தப் பொய்யினாலே ஏவாளை வஞ்சித்தான்.

ஜன்ம பாவம்

ஆதிப்பெற்றோர் சாத்தானின் பொய்யினால் வஞ்சிக்கப்பட்டுப் பாவம் செய்தார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். ஆகவே அவர்கள் நித்திய ஜீவனை அதாவது தேவனோடு வாழும் நீடுவாழ்வை இழந்து நித்திய மரணத்துக்குள்ளானார்கள். இந்தப் பாவம் அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் சந்ததிப் பரம்பரையாய் தொடர்ந்து சென்று மனுமக்கள் எல்லோரையும் பாவத்துக்குள்ளாக்கி நித்திய மரணத்துக்குள் ஆழ்த்தியது. இது பிறப்பிலேயே வரும் ஜென்ம பாவம் (சகச மலம்) என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு பாவமும் அதின் சம்பளமாகிய மரணமும் சாத்தானின் பொய்யினால் உண்டானதாகும்.

பாவத்திற்குப் பரிகாரம்

இறைவன், இந்தப் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திய பொய்யையும் அதின் விளைவாகிய நித்திய மரணத்தையும் பரிகரித்த (தீர்த்த) விதம் இங்குச் சொல்லப்படுகிறது. அது எவ்வாறு என்றால் 'பொறிவாயில்' அதாவது பொறியாகிய கொலைக்கருவியில் (சிலுவையில்) தம் ஐம்புலன்களையும் அவித்து அல்லது பலியாக்கியாகும். அதோடு சாத்தானின் தலை நசுக்கப்பட்டு அவனுடைய பொய்யால் ஏற்பட்ட நித்திய மரணம் தீர்க்கப்பட்டது. எனவே இழந்துபோன நீடுவாழ்வு மனிதன் பெற்றுக் கொள்கிறான்.

பரலோகத்தை விட்டுப் பூலோகத்தில் அவதரித்த கடவுள் கொலைக் கருவியாகிய சிலுவையில் ஐங்காயங்களோடு தொங்கிப் பலியானார் என்று விவிலியம் கூறுகிறது. அதுமட்டுமல்ல, பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய சாத்தானின் தலையை இயேசு சிலுவையில் நசுக்கி, இரட்சிப்பாகிய விலையேறப்பெற்ற மீட்பை மனிதருக்குச் சம்பாதித்துத் தந்தார். இந்த இரட்சிப்பின் வழியில் நடப்பவர்களுக்கு நித்திய ஜீவன் ஆகிய நீடுவாழ்வு உண்டு.

தண்டனையைத் தாமே ஏற்றார்

பாவத்தின் சம்பளம் மரணம். இது தேவநீதி. ஆனால் தேவனே பாவத்துக்குள்ளான மனிதரை இரட்சிக்கச் சித்தம் கொண்டார். அதே நேரத்தில் தேவநீதிக்குக் களங்கம் விளைவிக்காமல் மனிதரை எப்படி இரட்சிப்பது? அதற்காகவே தேவன்தாமே ஒரு மனிதனாகப் பிறந்து மனிதருடைய பாவத்தையெல்லாம் தாமே ஏற்றுக்கொண்டு மனிதன் மரிப்பதற்குப் பதிலாகத் தாமே மரணத்தை ஏற்றுக்கொண்டார். மனுக்

குலத்தையோ தண்டனையிலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் விடுவித்து அவர்களுக்கு நீடுவாழ்வை மறுபடியும் பெற்றுத் தந்தார்.

'கருமம் சிதையாமல்' பாவமன்னிப்பு

நீத்தாராகிய ஐந்தவித்தான், பாவத்தில் அமிழ்ந்துபோன மனிதர் மேல் கொண்ட கருணையின் கண்ணோட்டத்தால் அவர் தேவநீதியை சிதைக்காமல் (கருமம் சிதையாமல்) மனுமக்களுக்குப் பாவமன்னிப்பைச் சம்பாதித்துத் தந்துவிட்டார். எனவே இவ்வுலகம் நிலைபெற்றிருக் கிறது என்று வள்ளுவர் 578-வது குறட்பாவில் விளக்கியுள்ளார்.

(அ. 58:8)

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு *(கு. 578)*

தவத்தினில் உணர்த்துதல்

மனிதனின் ஐம்புலன்களால் ஏற்படும் பாவச் சிற்றின்பங்களால் மயக்கமுற்றுக் கிடக்கின்ற ஆன்மாவை உணர்த்த வேண்டுமானால் கடவுள் வரவேண்டும். கடவுள் வந்தால் மட்டும் போதாது, ஆன் மாவைத் தவத்தால் உணர்த்தவேண்டும். இந்தத் தவம் தான் சிலுவைத் தவம். அதுவே திருவள்ளுவர் கூறும் பொறிவாயில்ஐம்புலன்களையும் பலியாக்கிய (அவித்த) தவம்! அந்தத் தவத்தால் மட்டும் ஏன் ஆன்மா உணர்த்தப்படுகிறது என்றால் அது மிகப்பெரும் பாடுகள் நிறைந்த பலி. தமது ஜீவனையே பாடுகளுக்கு உட்படுத்தித் தியாகம் செய்யும் ஜீவபலி.

இதைக்குறித்து சைவ சித்தாந்தம்

மெய்கண்டார் சிவஞானபோதத்தில் குமாரனாகிய கடவுள் இந்த உலகத்தில் ஒரு குருவாக வந்து கெட்டுப்போன மனுக்குலத்தை மீட்டெடுப்பதைப் பற்றி 8-வது சூத்திரத்தில் கூறியுள்ளார். (101-ம் பக்கம் பார்க்க). அதில் 'தவத்தினில் உணர்த்தவிட்டு' என்பது நோக்கத்தக்கது.

சிவஞானபோதம் சூ. 12

குமாரனாகிய கடவுளின் சிலுவைப் பலியைக் குறித்து மெய்கண்டார் 12-வது சூத்திரத்திலும் குறிப்பிடுகிறார்.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே (சி.ஞாபோ. 12)

செம்மலர் நோன்தாள்

செம்மலர் = சிவந்த மலர்

நோன்தாள் = தவமாகிய நோன்பினில் நிற்கும் இறைவனின் திருவடிகள்

இங்கே இறைவனின் திருவடிகள் தவமாகிய நோன்பில் நிற்பவை என்று சொல்லப்படுகிறது. அந்தத் திருவடிகள் சிவந்த மலர்போல சிவப்பாய் மாறக்காரணம் என்ன? இறைவனின் திருவடிகள் செக்கச் செவேரென சிவந்து ஒரு சிவந்த மலரைப்போல் காட்சியளிக்கக் காரணம் என்னவென்றால், அவர் மன்னுயிர்க்காய்த் தன்னுயிர் கொடுக்கும் தவமாகிய நோன்பில் நிற்பதாகும். அந்த நோன்பு சிலுவைப் பலியாகிய நோன்பாகும். இவ்விதம் தம்மையே பலியாகக் கொடுத்த குமாரனாகிய கடவுளின் பாதங் களை ரத்தத்தில் தோய்ந்து செக்கச் செவேரென சிவந்த மலரைப் போல காண்கிறார் மெய்கண்டார்.

இரத்தத்தின் வல்லமை

மட்டுமல்ல அந்தப் பரிசுத்தப் பாதங்களை சேரவிடாமல் மனிதர் களைத் தடுத்து நிறுத்துகின்ற (அம்மலம் கழீஇ) எப்பேர்ப்பட்ட கொடிய பாவங்களையும் கழுவி சுத்தீகரிக்க வல்லமையுள்ளது அந்தப் பாதங் களிலிருந்து ஒழுகும் பரிசுத்த இரத்தம்!. "இயேசுக் கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்தீகரிக்கும் (யோ. 1:7) என்கிறது திருமறை. மனுக்குலத்தின் ஆத்தும இரட்சிப்புக்குத் தேவகுமாரன் தம்மையே பலியாக்கினார் என்று இங்குக் காணமுடிகிறது.

தேவத்திட்டம்

விவிலியக் கருத்துப்படி இது தேவத் திட்டங்களின் நிறைவேறு தலே ஆகும். ஏதேன் தோட்டத்தில், சாத்தானின் பொய்யினால் ஆதிப் பெற்றோர் வீழ்ச்சியடைந்தபோது அங்கேயே இத்திட்டம் வெளிப் படுத்தப்பட்டது. ஸ்திரீயின் வித்தாகப் பிறக்கவிருக்கும் குமாரனாகிய கடவுள் பொய்க்குக் காரண கர்த்தாவான சாத்தானின் தலையை (சிலுவையில்) நசுக்க வேண்டும் (ஆதி. 3:15) என்பதே அந்தத் திட்டம்.

யாருக்கு நீடுவாழ்வு

இவ்வாறு பொய்யைத் தீர்த்துச் சம்பாதித்த பொய்தீர் ஒழுக்க நெறிக்குத் திருமறையில் இரட்சிப்பு என்ற பெயர் வழங்கப்படுகிறது. இதுவே திருக்குறளில் 'அறம்' எனப்படுவது. ஐந்தவித்தான் தம்மையே பலியாக்கிச் சம்பாதித்த இந்தப் பொய்தீர் ஒழுக்கநெறியில் நிற்பவர்கள் அதாவது அதை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பவர்கள் நீடுவாழ் வர். அதாவது அவர்கள் நித்திய மரணம் நீங்கி நித்திய ஜீவன் பெற்று நித்தியம் நித்தியமாய்க் கடவுளோடு சேர்ந்து வாழ்வார்கள்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவர்

உலக மக்களுக்கு நயத்தக்க நாகரீகம் அதாவது கருணையின் கண்ணோட்டமாகிய மன்னிப்பை அருளும்படிக்கு இரட்சகராகிய ஐந்தவித்தான் பாவத்தின் சம்பளமாகிய நஞ்சினை உண்டு சிறப்போடு அமைந்தார் என்று விளக்குகிறார் திருவள்ளுவர்.

(அ. 58:10)

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் **(கு. 580)**

மரணமாகிய நஞ்சு

உலக மக்களுக்காக நஞ்சுண்டமைந்தவர் இயேசு பெருமான் ஒருவரே. அவர் சிலுவையில் அடிக்கப்படுவதற்கு முந்திய இரவு உலக மக்களுடைய பாவத்தின் சம்பளமான மரணமாகிய நஞ்சு அவர் முன் வைக்கப்படுகிறது. அந்த நஞ்சு பாத்திரத்தில் பெயப்படுவதை (ஊற்றப் படுவதை) அவர் காண்கிறார். அதைக் கண்டபோதிலும் மனுமக்கள் மேலுள்ள கருணையின் கண்ணோட்டத்தால் அந்நஞ்சினைத் தாமே உண்பதற்கு ஆயத்தமாகிறார். இதைக் கெத்சமெனே தோட்டத்தில் இயேசு செய்த ஜபத்திலிருந்து அறியலாம். "பிதாவே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும். ஆகிலும் என் விருப்பப்படி அல்ல உம் சித்தப்படியே ஆகட்டும்" என்று பிதாவின் சித்தத்துக்குத் தம்மை ஒப்புக் கொடுக்கிறார். (லூக். 22:42-44). ஆனாலும் அவர் அடைந்த வேதனைகளையும் இரத்தம் வியர்வையாகக் கொட்டிய காட்சிகளையும் நாம் அங்குப் பார்க்கிறோம்.

ஆவியைத் தாமாகவே ஒப்புக்கொடுத்தார்

உலகத்தையும் அதிலுள்ள சகல ஜீவ ஜந்துக்களையும் படைத்

தவர் கடவுள். அவர் மனிதனாகப் பிறந்தபோதிலும் அவர் மனிதரால் கொல்லப்படமுடியாது. ஆனால் மனுக்குலம் மீட்கப்படவேண்டுமானால் பாவத்தின் சம்பளமாகிய மரணம் (தேவநீதி) நிறைவேற்றப்படவேண்டும்.

“நம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமதுச் சரீரத்தில் நம்முடைய பாவங்களை சிலுவையிலே சுமந்தார்” (1 பேது. 2:24). மட்டுமல்ல, “இயேசு பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்” (லூக். 23:46).

பலிப்பொருளும் பிரதான ஆசாரியனும் அவரே

நியாயப் பிரமாணப்படி பலிப்பொருளாகிய ஒரு ஆட்டைப் பிரதான ஆசாரியன் கொன்று பலி செலுத்துவான். இங்கே உலகத்தோற்றத்துக்கு முன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி ஆகிய அவரே பலிப் பொருள். தம்மைப் பலியாகச் செலுத்திய பிரதான ஆசாரியரும் அவரே.

நஞ்சுண்டு அமைந்தவர்

நீத்தாராகிய ஐந்தவித்தான் நஞ்சுண்டு அழியாமல் சிறப்பாக அமைந்தார் என்று பார்க்கிறோம். ஐந்தவித்தானின் உயிர்த்தெழுந்த ஆற்றலைக்குறித்து 6-வது குறட்பா விளக்குகிறது. ஐந்தவித்தானாகிய இறைமகன் தமது ஆவியைச் சிலுவையில் பிதாவிடம் ஒப்புவித்த போதிலும் மூன்றாம் நாளில் அதைத் திரும்பப்பெற்றுக் கொண்டு சிறப்போடு அமைந்தார் என்பதும் ‘நஞ்சுண்டமைவர்’ என்பதில் அடங்கியுள்ளது.

அதிகாரம் : 16

குமாரனாகிய கடவுள் பாவத்தை நீக்கி இரட்சிக்கிறவர்

மக்களுக்கு இரட்சிப்பு

இறைவன் மனிதனைத் தம்மோடு நித்திய இன்ப வாழ்க்கை வாழ்வதற்காகவே படைத்தார் என்று திருமறை தெளிவாய்க் கூறுகிறது. ஆனால் மனிதன் வீழ்ச்சிக்குப்பின் நித்திய ஜீவனுக்குப் பதிலாக நித்திய மரணத்தை அடைந்துவிட்டான். மரணத்துக்குள்ளான மனுக்குலத்தை மீட்டு மறுபடியும் நித்திய ஜீவன் கொடுத்துத் தம்மோடு சேர்த்துக் கொள்ளவே கடவுள் தமது குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்தில் அனுப்பினார். இறைமகனாகிய இயேசு இந்த உலகத்தில் வந்து தம்மைத்தாமே பலியாக்கி இரட்சிப்பை ஏற்படுத்தினார்.

இருவழிகள்

இந்த இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு அவர் காட்டிய வழியில் நடப்பவர்கள் நித்திய ஜீவனாகிய பேரின்ப வாழ்விற்குச் செல்வார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்கள் நித்திய மரணமாகிய காரிருளுக்குச் செல்வார்கள். இவ்வாறு மறுமையில் இரு இடங்களும் அவ்விடங்களில் செல்வதற்கு இரு வழிகளும், அவ்வழியாகச் செல்லும் இருகூட்டம் ஜனங்களும் உண்டென்று விவிலியம் தெளிவாய்க் காண்பிக்கிறது.

மேற்கண்ட கருத்துக்களைத் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் அனேக இடங்களில் விளக்கியிருக்கிறார்.

இருளில் சேர்க்கும் இருவினைகள்

இருவினைகள், அதாவது, இரண்டுவித பாவங்கள் ஒருவனை இருளாகிய நரகத்தில் கொண்டு சேர்க்கும் என்கிறார் திருவள்ளுவர்.

(அ. 1:5)

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு *(கு. 5)*

நரகத்தில் சேர்ப்பவை

ஒருவனை இருளாகிய நரகத்தில் கொண்டு சேர்க்கும் பாவங்கள் இரண்டு வகையாகும். 1. பிறப்பிலேயே உண்டாகும் ஜென்ம பாவம். இதைச் சகசமலம், ஜன்மபந்தம் என்றெல்லாம் கூறுகிறார்கள். 2. கர்ம பாவம், அதாவது ஒருவன் தானாய்ச் செயல்புரியும் பாவங்கள்.

இறைவன் சேர்த்த பொருள்

இவ்விரு பாவங்களும் இறைவனை அணுகாது. அப்படிப்பட்ட இறைவன் இந்தப் பாவங்களிலிருந்து மனுமக்களை மீட்க ஒரு பொருளாகிய இரட்சிப்பை அல்லது பொய்தீர் ஒழுக்க நெறியைச் சேர்த்து வைத்திருக்கிறார். அந்தப் பொருளாகிய இரட்சிப்பின் வழியில் (பொய்தீர் ஒழுக்க நெறியில்) நிற்பவர்கள் நீடுவாழ்வு அதாவது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள் என்று 6-வது குறளில் பார்க்கிறோம்.

ஜென்ம பாவத்திலிருந்து மீட்பு

இருளாகிய நரகத்தில் கொண்டு சேர்க்கும் ஜென்ம பாவத்திலிருந்து விடுபட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பதைக் குறித்து 10-வது குறட்பா விளக்குகிறது.

(அ. 1:10)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் *(கு. 10)*

பிறவிப் பெருங்கடல்

பிறப்பிலிருந்தே தொடர்ந்துவரும் ஜென்ம பாவத்தைத் திருவள்ளுவர் ஒரு பெரும் கடலாக இங்குச் சித்திரிக்கிறார். அப்படிப்பட்ட பிறவிப் பெரும்கடலாகிய இந்தப் பாவக்கடலை நீந்திக்கடப்பவரே நீடுவாழ்வு பெற்றுக்கொள்வர். ஐந்தவித்தானாகிய இறைவன் பாதத்தில் சேர்ந்து கொண்டவர்கள் இந்தக் கடலை நீந்திக் கடக்கமுடியும். ஏனென்றால் அவர்களுக்காக இறைவன் தாமே பலியாகிப் பொய்தீர் ஒழுக்கநெறியை வைத்திருக்கிறார்.

இறைஅடி சேராதார்

ஆனால் ஐந்தவித்தானாகிய இறைவனடி சேராதார் நீந்திக் கடக்கமாட்டார்கள். அவர்கள் அப்படியே பிறவிப்பெருங்கடலாகிய ஜன்மபாவத்தில் மூழ்கி நித்திய மரணத்தை அடைவார்கள்.

குமாரனே இரட்சகர்

குமாரனாகிய கடவுள் பாவத்திலிருந்து மனுமக்களை இரட்சிப்பவர் என்பதை வள்ளுவர் 8-வது குறட்பாவிலும் விளக்குகிறார். **(அ. 1:8)**

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது **(கு. 8)**

அறவாழி

இங்கே வள்ளுவர் திருக்குறளின் மையப்பொருள் ஆன அறத்தை அல்லது இரட்சிப்பை ஒரு ஆழி (கடல்) ஆக வருணிக்கிறார். அந்த அறமாகிய ஆழிக்குக் காரணராயிருப்பவர் அறவாழி அந்தணனாகிய இறைவனாகும். அவரே ஐந்தவித்தானாகிய குமாரன் ஆவார். ஏனென்றால் அவரே தம் ஐம்புலன்களையும் பொறிவாயில் பலியாக்கி அறமாகிய இரட்சிப்பை உண்டாக்கியவர்.

பிறவாழி

இக்குறட்பாவில் வள்ளுவர் அறத்துக்கு மாறான மற்றுமோர் ஆழி (கடல்)யையும்)க் குறிப்பிடுகிறார். அதைப் பிறவாழி என்று அழைக்கிறார். அது அறத்துக்கு மாறான 'மற' ஆழியே. அதாவது பாவக்கடலே ஆகும். பிறவாழியான மற வாழி, அதாவது பாவப்பெரும் கடலை நீந்திக் கடக்க வேண்டுமானால் ஒருவன் அறவாழி அந்தணனான ஐந்தவித்தானின் பாதத்தைச் சென்று அடையவேண்டும் என்கிறார் வள்ளுவர். இங்கே பாவப்பெரும் கடலைத் தாண்டிச் சென்று நீடுவாழ்வைப் பெற்று பேரின்பப் பாக்கியத்தை அடைய குமாரனே உதவி செய்கிறவர் என்று பார்க்கிறோம். அவரே மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு வந்த அறவாழி அந்தணர் ஆகிய இயேசு.

அதிகாரம் : 17

குமாரனாகிய கடவுள் உயிர்த்தெழுந்தவர்

குமாரனாகிய இயேசு பாவிகளுக்காகச் சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதே திருமறை சத்தியம். இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதே கிறிஸ்தவத்தின் உயிர்நாடி. கிபி. முதலாம் நூற்றாண்டிலேயே உயிர்த்தெழுந்த நற்செய்தி உலகனைத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. அனேக ஆயிரக்கணக் கான மக்கள் முதலாம் நூற்றாண்டிலேயே இயேசுவை ஏற்றுக்கொள்ளக் காரணம், இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கண்ட மக்கள் அந்நாட்க ளிலும் உயிரோடிருந்ததே ஆகும்.

ஐந்தவித்தான் ஆற்றல்

திருவள்ளுவர் திருக்குறளில் ஐந்தவித்தானாகிய நீத்தாரின் உயிர்த்தெழுந்த வல்லமையை ஐந்தவித்தான் ஆற்றல் என்று குறிப்பிடு கிறார். இந்த ஐந்தவித்தான் ஆற்றலை 24, 25, 26 ஆகிய குறட்பாக்களில் விளக்குகிறார்.

ஐந்தவித்தான் கடவுளுக்கு வித்தானவர்

(அ. 3:4)

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து *(கு. 24)*

கடவுளுக்கு வித்தாகிய ஐந்தவித்தான் வெற்றி என்னும் அங்குசத் தால் உலக மக்களைத் தீங்குக்கு விலக்கிக் காத்து அவர்களை வான்வீட் டிற்கு மணவாட்டியாகச் சேர்க்கும் மணவாளனாக விளங்குகிறார். இங்கே ஐந்தவித்தானைக் கடவுளுக்கு வித்தாகப் பார்க்கிறோம்.

வித்தின் தன்மை என்ன?

தன்னை அழிவுக்கு ஒப்புக்கொடுத்து புது முளையாக வெளி வரும் வல்லமையைத் தனக்குள் அடக்கி வைத்திருப்பதே வித்து. ஒழுக்கத்து நீத்தாராகிய வித்துக்கும் இந்த வல்லமை உண்டு என்பதை ஐந்தவித் தான் ஆற்றல் என்ற சொல்லில் திருவள்ளுவர் அடக்கியுள்ளார்.

முளைத்தெழும்பும் வித்தைப்போல்

வித்தாகிய ஒழுக்கத்து நீத்தார் ஐம்புலன்களை அவித்தார் (பலியாக் கினார்). வித்தானது பூமியிலே புதைக்கப்பட்டு அழிவுக்கு ஒப்புக்கொடுத்து மீண்டும் புத்துயிர் பெற்று எழும்புவதைப்போல, நீத்தாரும் பலியாக் கப்பட்டு, பூமியில் புதைக்கப்பட்டார். புதைக்கப்பட்ட அவர் மீண் டும் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த நிகழ்ச்சிக்குத் தேவதூதனே சான்று பகர்ந்தான் என்றும் 25-வது குறட்பாவில் விளக்கப்படுகிறது.

அகல் விசும்பு உளார்கோமானின் சாட்சி

(அ. 3:5)

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி (கு. 25)

ஐந்தவித்தான் ஆற்றல் என்பதற்கு ஐம்புலன்களையும் பலியாக் கிய நீத்தாரின் வல்லமை என்பது பொருள். அந்த ஐந்தவித்தான் ஆற்ற லுக்கு அகல்விசும்புளார் கோமான்; அதாவது அகன்ற வானங்களில் உள்ள தேவதூதர்களின் தலைவனே (சாலுங்கரி) தகுந்த சாட்சியளித் தார் என்கிறார் வள்ளுவர். இந்திரன் என்பதற்குத் தலைவன் என்பது பொருள்.

தேவதூதனின் சாட்சி விவிலியத்தில்

தேவதூதன் ஐந்தவித்தானாகிய தேவகுமாரனின் உயிர்த்தெழுந்த ஆற்றலுக்குச் சான்று பகர்ந்த தகவல் விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது. இயேசுவின் சரீரத்தைப் பார்க்கச் சென்ற ஸ்திரீகள் கல்லறைக்குச் சென்ற போது தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி, "பயப்படாதிருங்கள். சிலுவை யில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்பதை அறிவேன். அவர் இங்கே இல்லை, தான் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த் தரை வைத்த இடத்தில் வந்து பாருங்கள்" என்று சொன்னான் (மத். 28:5,6).

உயிர்த்தெழுதல், செயற்கரிய காரியம்

ஐந்தவித்தான் ஒருவரே செயற்கரிய காரியத்தைச் செய்த பெயரிவர்.

(அ. 3:6)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் *(கு. 26)*

இறந்தோரில் குமாரன் மட்டுமே உயிர்த்தெழுந்தவர்

(அ. 3:2)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று *(கு. 22)*

துறந்தாராகிய நீத்தாரின் பெருமையை அறிய வேண்டுமானால் உலகில் இதுமட்டும் இறந்தாரை எண்ணிப்பார்த்தால் போதும். இது வரை இறந்த எல்லாரையும் எண்ணிப்பார்த்தால், அவர்களில் நீத்தார் ஒருவரே மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தவராகக் காணப் படுகிறார். இது மற்றெவர்க்கும் இல்லாமல் நீத்தாருக்கு மட்டுமே காணப் படும் பெருமையாகும். உலகில் மனிதனாகப் பிறந்த நீத்தாராகிய கடவுள் மட்டுமே உயிர்த்தெழுந்தவர் என்பதைத் திருவள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

திருமறையிலும் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்துக் கூறும் போது பரி. பவுல் "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரை அடைந்தவர்களில் முதற்பலனானார்" *(1 கொரி. 15:20)* என்கிறார்.

அதிகாரம் : 18

குமாரனாகிய கடவுள் நியாயத்தீர்ப்பு செய்பவர்

விவிலியம்

உலகத்தின் முடிவில் நியாயத்தீர்ப்பு உண்டு என்றும், கிறிஸ்துவே நியாயம் தீர்ப்பவர் என்றும் ஜனங்கள் எல்லாரும் நிச்சயமாய் நியாயம் விசாரிக்கப்படுவார்கள் என்றும் விவிலியம் கூறுகிறது.

"சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரி 5:10).

நியாயத்தீர்ப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது

ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி. 9:27). "தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவனவனுக்குப் பதிலளிப்பார் (ரோ. 2:6). அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயம் தீர்த்து, உலக ஜனங்களுக்கும் செம்மையாய் நீதி செய்வார்" (சங். 9:8).

அதிகாரம் குமாரனுக்கு

"பிதாவைக் கனம் பண்ணுகிறது போல, எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" (யோ. 5:22).

நீதியுள்ள ராஜாவாக வரும் காட்சி

குமாரன் மறுபடியும் வருவார் என்றும்; அவர் மறுபடியும்

வரும்போது ராஜாவாகவும் நீதியுள்ள நியாயாதிபதியாகவும் வருவார் என்றும் திருமறை கூறுகிறது. அவர் நீதியுள்ள ராஜாவாக வரும் காட்சியைப் பரி. யோவான் இவ்வாறு விளக்குகிறார்.

"இதோ ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறி இருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவர் என்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயம் தீர்த்து யுத்தம் பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்போலிருந்தன.... இரத்தத்தால் துவைக்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய வார்த்தை தேவனுடைய வார்த்தை என்பதே.... புற ஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்...." *(வெளி. 19:11-16)*

சாந்த சொரூபிக்கு வெகுளியா?

சாந்த சொரூபியாய் இந்த பூமியில் அவதரித்து வாழ்ந்த குமாரனாகிய கடவுள் ஒரு நாளில் பட்சிக்கிற அக்கினியாய் மாறும் நிலையைக் குறித்து வள்ளுவர் 29-வது குறட்பாவில் விளக்குகிறார்.

(அ. 3:9)

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது *(கு. 29)*

நற்குணங்களின் சிகரம்

குணமென்னும் குன்றேறி நின்றார் அதாவது நற்குணங்களின் குன்று ஒழுக்கத்து நீத்தாரே ஆகும். அதுமட்டுமல்ல, அந்தக் குன்றின் (உச்சியும்) சிகரமும் அவரே. அப்படிப்பட்ட குணம் படைத்த அவருக்கு 'வெகுளி'யும் (கோபம்) உண்டு. அந்த வெகுளியை 'கணமேயும் காத்தல் அரிது' அதாவது அதை ஒரு கணம்கூட தாங்கிக் கொள்ள முடியாது.

குணம் ஏன் வெகுளியானது?

குணம் வெகுளியாவதற்குக் காரணம் என்ன? குணமென்னும் குன்றேறி நின்ற அவரே நீத்தாராகிய ஐந்தவித்தான். அவர் மனிதருக்காகத் தம்மையே பலியாக்கியவர். அவர் காட்டிய ஒழுக்கநெறி நின்றால் நீடு வாழ்வு உண்டு. ஆனால் அவர் ஏற்படுத்திய பொய்தீர் ஒழுக்கநெறியில் நிற்காதவர்கள் நீடுவாழ்வு அடையமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலையை வள்ளுவர் இங்குக் காண்பிக்கிறார். அவர்நெறியில் நிற்காதவர்கள் அவர் வெகுளிக்குப் (கோபத்துக்கு) பாத்திரமாவார்கள்.

பொய்தீர் ஒழுக்கத்தில் நில்லாதோர்

குமாரனாகிய கடவுள் தன் சகலமகிமையோடும் கூட மறுபடியும் வருவார். அவர் சர்வலோக நியாயாதிபதியாக வந்து நியாயத்தீர்ப்பு அளிப்பார். அந்த நியாயத்தீர்ப்பு நாளில் அவர் வேண்டுதல் வேண்டாமை இலானாக நீதி செய்வார். அந்நாளில் அவர் ஈட்டித் தந்த இரட்சிப்பு என்னும் ஒழுக்கநெறியைப் பற்றிக்கொள்ளாத கூட்டத்தார் அவருடைய கடும் கோபத்தைச் சந்திக்க நேரிடும். அந்தக் கோபம் கணப்பொழுது கூடச் சகித்துக் கொள்வது கூடாத காரியம்.

வேண்டுதல் வேண்டாமை இலான்

ஐந்தவித்தானாகிய இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலானாகும். அதாவது அவர் விருப்பு வெறுப்பு இல்லாமல் நியாயத் தீர்ப்பு செய்கிறவர் ஆகும். தேவனிடத்தில்பட்சபாதமே இல்லை.

(அ. 1:4)

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல *(கு. 4)*

விருப்பு வெறுப்பில்லாத இறைவன் தமது ஐம்புலன்களையும் பலியாக்கி மனுக்குலத்துக்கு ஒழுக்க நெறியைத் தந்திருப்பதால் அவர் பாதத்தைப் பற்றிக்கொள்பவர்களுக்கு 'யாண்டும்' எக்காலத்திலும் 'இடும்பை இல' துன்பம் என்பது இல்லை. அதாவது அவர்கள் இவ் வுலகத்திலும் நித்திய ராஜ்யத்திலும் இன்புற்று வாழ்வார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் அவர்கள் துன்பமில்லாமல் நல்ல பலனை அடைவார்கள். ஆனால் அவர் பாதங்களைப் பற்றிக் கொள்ளாதவர்கள் நியாயத் தீர்ப்படைந்து நித்திய தண்டனை அடைவார்கள்.

அதிகாரம் : 19

மீட்கப்பட்டவர்கள் சான்றோர்

கிறிஸ்தவர்கள்

இயேசுவின் இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு அவர் காட்டிய இரட்சிப்பின் பாதையில் நடக்கும் அவர் அடியவர்கள் கிறிஸ்தவர்கள் என்று முதல்முதலாக அந்தியோக்கியாவில் அழைக்கப்பட்டார்கள். உலகமெங்கும் போய் நற்செய்தியை அறிவிக்கும்படி இயேசு பரத்துக்கு ஏறிச்செல்லுமுன் தமது அடியவர்களுக்குக் கூறி அவர்களைச் சாட்சிகளாக வைத்தார். அவர்கள் எல்லா இடங்களிலும் சென்று இயேசுவுக்குச் சான்று பகர்ந்தார்கள்.

சாட்சிகளின் வேறுபட்ட வாழ்க்கை

இயேசுவுக்குச் சாட்சி பகர்ந்த சீடர்கள் முற்றிலும் வேறுபட்ட ஒரு வாழ்க்கை இந்த உலகத்தில் வாழ்ந்தார்கள். உலகத்தாருக்கும் அவர்களுக்கும் வாழ்க்கையில் பெரும் வேறுபாடு இருந்தது. இக்காரணத்தால் அக்காலத்திலிருந்தே அரசாங்கத்தாரும் சாதாரண மக்களும் அவர்களைப் பல முறைகளில் எதிர்த்தார்கள் என்பது சபைச் சரித்திரத்திலும் தற்கால அனுபவங்களிலும் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள்

முதலாம் நூற்றாண்டில் தானே தோமா இந்தியாவுக்கு நற்செய்தி கொண்டு வந்தார். நற்செய்தியை ஏற்றுக்கொண்ட இந்தியர்களும் வேறுபட்ட ஒரு வாழ்க்கையை கடைபிடித்தார்கள். சாதாரண மக்களை விட உன்னதமான ஒரு வாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். நற்செய்தியை ஏற்றுக்கொண்ட அவர்களும் மற்றவர்களுக்கு

நற்செய்தியை அறிவித்ததோடு தாங்களும் சாட்சிகளாய் ஜீவித்தார்கள். அப்படிப்பட்டவர்கள் சான்றோர் என அழைக்கப்பட்டார்கள்.

திருக்குறளில்

இந்தியாவில் தோமா கொண்டுவந்த நற்செய்தியைத் திருவள்ளுவர் தமிழ்மொழியில் திருக்குறள் என்ற பெயரில் எழுதிச் சான்றோருக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருப்பதைப் பார்க்கமுடிகிறது. திருக்குறளில் மீட்க்கப்பட்டவர்கள் அதாவது ஐந்தவித்தான் ஈட்டிய இரட்சிப்பு என்னும் பொய்தீர் ஒழுக்கநெறியில் நடப்பவர்களே சான்றோர் என அழைக்கப்பட்டார்கள்.

விவிலிய விரிவாக்கம்

திருக்குறளில் விவிலியக் கருத்துக்களை மேலும் விரிவாக தெளிவு படுத்தும் பகுதி சான்றாண்மை ஆகும். திருக்குறள் முழுவதிலும் முப் பத்தெட்டு குறட்பாக்களில் சான்றோரைக் குறித்து கூறப்பட்டுள்ளது. திருக்குறளில் சான்றோருக்குச் சிறப்பாக அமைந்திருக்கும் குணங்களைக் குறித்து வள்ளுவர் 983-வது குறட்பாவில் கூறியுள்ளார். அவையாவன, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவைகளே. மேலும் இவ்வைந்தையும் ஐந்து தனி அதிகாரங்களில் விளக்கித் திருக் குறள் முழுவதையும் சான்றோருடன் இணைத்தே விளக்குகிறார். எனவே திருக்குறள் முழுவதும் சான்றோரைப் பற்றிய விளக்கமே எனக் கொள்ளக் கூடிய நிலையில் அமைந்துள்ளது.

சான்றோர் - பொருள் என்ன?

வள்ளுவர் தமது 69-வது குறட்பாவில் சான்றோன் என்பதன் பொருளை விளக்குகிறார்.

(அ. 7:9)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் **(கு. 69)**

இருபிறப்புகள்

ஒரு பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும்போது, தான் அடைந்த துன்பங்களையெல்லாம் மறந்து மகிழ்ச்சி அடைகிறாள். இது ஈன்றபொழுது அடையும் மகிழ்ச்சி.

குழந்தை, பிறப்பின் மூலம் வெளிவந்துள்ளது. இவ்வாறு இயற் கையில் பிறப்பது மட்டுமே குழந்தைக்குச் சிறப்பு அல்ல. அந்த

இயற்கைப் பிறப்பைத் தாண்டிய பிறப்பு ஒன்றைக் குழந்தை அடையவேண்டும். தாயும் இயல்பாகப் பிள்ளை பெற்ற பேற்றைவிட சிறந்த பேறு ஒன்றைப் பெற வேண்டும்.

இரண்டாம் பிறப்பு

இந்த இரண்டாம் பிறப்பே குழந்தை சான்றோன் ஆகும் நிலை. இதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். தாய்ப் பறவையிலிருந்து முட்டை வெளிவருவது முதல் பிறப்பு. முட்டையிலிருந்து பறவை வெளி வரும் இரண்டாம் பிறப்பே சிறப்பானது. இந்நிலையை வள்ளுவர் மக்களிடத்திலும் பொருத்திக் காட்டுகிறார். உருவத்தில் மக்களாகக் காணப்படுவோர் எல்லோரையும் மக்களாகக் கருதமுடியாது என்பது வள்ளுவர் கருத்து. இக்கருத்தை 993, 997, 1071, 1078, 440, 393, 186, 600 ஆகிய குறட்பாக்களில் வெளிப்படுத்தியுள்ளார். இதிலிருந்து திருவள்ளுவர், மக்கள் இனத்தில் இருசாரார் இருக்கிறார்கள் என்ற கருத்துடையவர் என்பதைக் காண்கிறோம்.

விளக்கம்

இது குறித்துப் பன்மொழிப் புலவனார் அவர்களின் விளக்கத் தையும் காண்பிக்கிறார் Dr. தெய்வனாயகம் அவர்கள் : "ஈன்ற பொழுதில் என்பதில் 'பொழுது' என்ற சொல் தாயின் பிள்ளைப் பேற்றின் முதற்பிறப்பைச் சுட்டி, அதன்பின் பிள்ளை சான்றோன் எனக் கேட்ட 'பொழுது' ஆகிய இரண்டாம் பிறப்பைக் குறித்துக் காட்டுகிறது. முன்னது சிறு பிறப்பிற்குரிய சிறு பொழுது, பின்னது பெரும் பிறப் பிற்குரிய பெரும்பொழுது.... (அது) இன்பத்தையே பேரின்பமாக்கித் துன்பத்தைக் கூட பெரும் பேரின்பம் ஆக்கக் கூடிய ஆற்றல் உடைய இன்பத்துள் இன்பம், தாய் இன்பம், கடவுட்பேரின்பம் ஆகும்."

சான்றோன்

சான்றோன் என்ற சொல்லுக்குப் பன்மொழிப்புலவர் விளக்கம் கொடுக்கிறார். "சான்றோன் என்பது சால்புடையவன் என்ற பொரு ளுடையது. சால்பு என்பது பண்பின் நிறை பொங்கல், மலர்ச்சி, பண்பிற் சிறந்து, இயல்பாகவே பண்புருவினனாகிப் பிற பண்பாளர்களுக்குச் சான்றாக, பின்பற்றும் மாதிரியாக, இலக்கண மேல்வரிச் சட்டமாக நின்று, பண்பாளர்களிடமெல்லாம் சால்பலைகளையும், மற்ற எல்லாரிடமும் பண்பலைகளையும் பரப்பும் பண்புடையவனே - சால்புடையவனே சான்றோன்; அவன் பண்பே சான்றாண்மை."

இப்படிப்பட்ட சான்றோர் யார்?

இறைவனுக்கு இவ்வுலகில் சாட்சிகளாக நின்று, அவரை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்திக் காட்டும் சான்றுகளே (சாட்சிகளே) சான்றோர் எனப்படுவார்கள். அவர்கள் உடலளவில் மற்ற மக்களைப் போல் காணப்பட்டாலும் உள்ளத்தால் மாறுபட்டவர்கள். உள்ளம் மாறிப் பிறந்த இரண்டாம் பிறப்பையுடையவர்கள்.

இரண்டாம் பிறப்புக் குறித்து விவிலியம்

இந்த இரண்டாம் பிறப்பை விவிலியம் மறுபடியும் பிறப்பது, மறுபிறப்பு, இரட்சிக்கப்படுவது, மீட்க்கப்படுவது போன்ற வார்த்தைகளால் விளக்குவதைப் பார்க்கிறோம். விவிலியபடி மறுபடியும் பிறத்தல் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முதற்படியாகும். ஒரு மனிதன் உலகத்தானாக மனம் போன போக்கில் வாழும்போது அவன் மனிதரை இரட்சிக்க இவ்வுலகத்தில் அவதரித்த குமாரனாகிய ஐந்தவித்தானைக் (இயேசு) குறித்துக் கேள்விப்படுகிறான். அவர் காட்டிய பொய்தீர் ஒழுக்கநெறியாகிய இரட்சிப்பின் பாதையைக் குறித்து அறிந்து கொள்கிறான். அப்படிப்பட்டவன் தூய ஆவியின் ஒத்தாசையால் இந்த உண்மைகளை விசுவாசித்துத் தனது வாழ்க்கையில் ஏற்றுக்கொள்கிறான். அன்று முதல் அந்தப் பாதையில் நடப்பேன் என்று தீர்மானித்துத் தன்னை முற்றிலும் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கிறான். அன்று முதல் அவன் கடவுளால் மீட்கப்பட்ட ஒரு புது சிருஷ்டி ஆகிறான். இதுவே மறுபிறப்பின் அனுபவம். இதை உறுதி செய்து கடவுளோடு உடன்படிக்கை செய்து வெளிப்படையாய் அதை அறிவிக்கும் செயலே ஞானஸ்நானம் என்பது. இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்தவர்களென்றும், சாட்சிகள் என்றும், சான்றோர் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

மறுபிறப்பைக் குறித்து தேவகுமாரன் (இயேசு)

மறுபிறப்பைக் குறித்து இயேசு நிக்கோதேமு என்பவனிடத்தில் பேசும்போது “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்றார். அதற்கு நிக்கோதேமு; ஒரு மனுஷன் முதியவனாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால்

பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்'' என்றார். (யோவா. 3:3-6). இதிலிருந்து முதல் பிறப்பு மாம்சத்திற்குரிய பிறப்பு என்றும் இரண்டாம் பிறப்பு ஆவிக்குரிய பிறப்பு என்றும் காணமுடிகிறது.

திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம்

இரட்சிக்கப்பட்டவர்கள் திருமுழுக்கு மூலம் அதை வெளிப்படுத்துவார்கள். ஆனால் அதிலும் சிலர் உண்மையற்ற நிலையில் காணப்படுவதுண்டு. அதைக் குறித்து வள்ளுவர் கூறுவதை 278-வது குறட்பாவில் பார்க்கலாம்.

(அ. 28:7)

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் *(கு. 278)*

அதாவது உள்ளம் திருந்தி மாசுபடிந்த பாவ வாழ்க்கையைக் களைந்துவிட்டு மறுபிறப்படைந்த சாட்சியுள்ள வாழ்க்கை வாழாமல் சடங்குக்காகப் பிதா, தூய ஆவி, குமாரன் (கடவுள் வான் நீத்தார்) ஆகியோர் நாமத்தால் நீராடி அதாவது ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு சபைக்குள் (கிறிஸ்தவர்கள் என்ற பேரில் அல்லது சான்றோர் என்ற பெயரில்) ஒழுக்கம் உடையவர் போல் நடித்து வாழும் பலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இயேசுவின் கூற்றுப்படி ஆக்கினை தான் கிடைக்கும்.

இயேசுவின் கூற்று

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவசியாதவனோ, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

அகத்தூய்மை தேவை

மேலும் தமது 298-வது குறட்பா மூலம் வள்ளுவர் அகத்தூய்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

(அ. 30:8)

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் *(கு. 298)*

பாவம் நிறைந்த வாழ்க்கையிலிருந்து இரட்சிக்கப்பட்டு தண்ணீரால் ஞானஸ்நானம் பெற்ற ஒருவனைச் சபை (சான்றோர்) அங்கீ

கரித்து ஏற்றுக் கொள்கிறது. ஆனால் உண்மையில் தண்ணீர் உடல முக்கை மட்டும் நீக்குகிறது. அவன் தன் உள்ளத்தில் இறைவனை ஏற்றுக்கொண்டு வாயினால் மெய் தேவனை அறிக்கை செய்வதினால் அதாவது நற்செய்தி அறிவிப்பதால் அவனுடைய உள்ளம் தூய்மைப் படும். நற்செய்தி பகரும் இந்த வாய்மையினாலே அகத்தூய்மை சிறந்து வளரும் என்கிறார் வள்ளுவர்.

இதைக்குறித்து விவிலியம்

இதைக்குறித்து விவிலியத்தில் "நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10:10) என்று வாசிக்கிறோம். சான்றோரின் (கிறிஸ்தவர்களின்) குணங்கள் (பண்புகள்) பற்றி வள்ளுவர் 1. நடுவு நிலைமை, 2. பிறனில் விழையாமை, 3. பயனில சொல்லாமை, 4. வாய்மை, 5. கொல்லாமை, 6. சிற்றினம் சேராமை, 7. வினைத்தூய்மை, 8. பழைமை, 9. பேதமை, 10. கள்ளுண்ணாமை, 11. சான்றாண்மை, 12. நாணுடைமை, 13. கயமை ஆகிய பதின்மூன்று அதிகாரங்களில் விளக்கியிருக்கிறார். அப்பண்புகளில் முக்கியமானவைகள் சில :

சான்றோர் உலகிற்கு உப்பாயிருக்கவேண்டும்

உப்பு தன்னுடைய சாரத்தை மற்றவற்றிற்கு ஈந்து தான் உருவழிந்து மறைந்துபோகிறது. ஆனால் தன்னைச் சார்ந்தவைகளைச் சுவை உள்ளவைகளாக்குகிறது. அதுபோல சான்றோரும் தங்களைச் சேர்ந்தவர்களை இனியவர்களாக்குகிறார்கள். அதாவது அவர்கள் பேரின்பத்தை அடைந்து இறைவனோடு மகிழ்ந்து வாழ்வதற்காகச் சான்றோர் என்ன துன்பத்தையும் சகிக்கவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து.

(அ. 81:2)

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன் **(கு. 802)**

இயேசுவின் கூற்று

தன்னைப் பின்பற்றுகிறவர்களைக் குறித்து இயேசு கூறியதாவது : "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய மற்றொன்றிற்கும் உதவாது (மத். 5:13).

சான்றோர் ஒளியாக இருக்க வேண்டும்

(அ. 30:9)

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு *(கு. 299)*

புறத்து இருள் கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்கு ஆகாது. சான்றோர்க்கு விளக்காவது மனத்து இருள் கடியும் பொய்யாமையாகிய சத்தியமே (பொய்தீர் ஒழுக்க நெறி) விளக்காகும். அதாவது கேட்கிறவனுடைய மனதின் இருளை நீக்கக் கூடிய இறைவனைப்பற்றிய செய்தியே ஆகும். அதுமட்டுமே மனத்து இருள் கடியக் கூடியது. மற்று எதற்கும் அவ்வாற்றல் இல்லை. இறைவனைப் பற்றிச் சான்று கூறுகிற சான்றோர் தம் மனதிலுள்ள ஒளியாகிய விளக்கை அடுத்தவர் உள்ளத்திலும் ஏற்றி அவர்களும் ஒளியைப் பெறும்படி செய்யவேண்டும்.

சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கல்ல. ஒப்பற்ற ஒருவனாகிய இறைவனைப் பற்றிய செய்தியைப் பொய்யாது மற்றவர்களுக்குச் சான்று கூறும் கொள்கையே சிறந்த விளக்காகும்.

இயேசுவின் கூற்று

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சயமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத். 5:14-16).

மற்றவர்களைப் பிரகாசிக்கச் செய்வது

உப்பானது தான் மறைந்து மற்றவற்றைச் சுவை ஊட்டும். அது அழிவதில்லை. உருவம் மட்டும் வெளியே காணப்படாமல் செயல் படும். ஒளி:தான் ஒளியாய் விளங்குவதுடன் மற்றப் பொருட்களையும் ஒளிரச் செய்கிறது. அது யாவருக்கும் பயன்படக்கூடிய இடத்தில் இருக்க வேண்டும். விளக்குத் தான் எரிந்து பிரகாசித்து மற்றவற்றை ஒளிரச் செய்கிறது. சான்றோரும் (கிறிஸ்தவர்கள்) இறைவனின் ஒளியை ஏற்று அதன் மூலம் தாங்கள் மற்றவர்களையும் பிரகாசிக்கச் செய்கிறார்கள். அம்முயற்சியில் தாங்கள் அழிவதைக்குறித்துப் பொருட்படுத்தமாட்டார்கள்.

அதிகாரம் : 20

சான்றோர் பண்புகள்

1. அன்பு

சான்று கூறும் சான்றவர்களாகிய சான்றோருக்கு அடிப்படைக் குணமாகக் கூறப்பட்டிருப்பது சால்பு ஆகும். விவிலியத்தின் அடிப் படையில் ஒரு கிறிஸ்தவனுக்கு (இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைக்கு) அஸ்திபாரமாய் இருக்கவேண்டியதாகக் கூறப்படும் அதே குணங் களையே திருவள்ளுவர் தமது திருக்குறளில் எடுத்துக் கூறுகிறார். அது 983-வது குறட்பாவில் கூறப்படுகிறது.

(அ. 99:3)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் ***(கு. 983)***

ஐந்து சால்பூன்றிய தூண்கள்

1. அன்புடைமை

அன்புடைமையை வள்ளுவர் அறத்துப்பாலில் 8-வது அதிகா ரமாக விளக்கியுள்ளார். அன்புடைமை ஐந்து சால்பூன்றிய தூண்களில் முதலிடத்தைப் பெறுகிறது.

விவிலியத்தின் ஆதாரமாய் அமைந்திருப்பதே அன்பு தான். விவி லியத்தின் சுருக்கம் என்னவென்று கூறவேண்டுமானால் அது தேவ அன்பின் வெளிப்பாடே ஆகும். ஆவியின் கனிகளில் முதன்மையாய் கூறப்பட்டிருப்பதும் அன்பு தான் (கலா. 5:22). அன்பின் சிறப்பை 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரம் விளக்கிக்கூறுகிறது.

அதில் சில பகுதிகள்

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்... மலைகளைப் பெயர்க்கத்தக்க சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

அன்பு நீடிய சாந்தமும் தயையுமுள்ளது, அன்புக்குப் பொறாமை இல்லை; .....சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்... இப்பொழுது விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது, இவைகளில் அன்பே பெரியது."

யோவானின் கூற்று

"அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோ. 4:7-8).

தேவ அன்பு

அன்பே உருவான கடவுள் தமது அளவற்ற அன்பைப் பகிர்ந்து கொள்வதற்காகவே மனிதனைப் படைத்தார். ஆனால் மனிதன் தேவ அன்பை விட்டு தூரம்போய் துன்பத்தில் ஆழ்ந்து விட்டான். தேவ அன்பு அவனை அப்படியே விட்டுவிடவில்லை. மறுபடியும் அவனைத் தமது பேரின்பத்தில் சேர்க்க அன்புள்ளம் படைத்த தேவன் மனு உருவெடுத்து, தம்மையே பலியாக்கி மனிதனை மீட்டுக் கொண்டு தமது அன்பை வெளிப்படுத்தினார்.

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்." (1 யோ. 3:16).

"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது. நாம் தேவனிடத்தில்

அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" *(1 யோ. 4:9-10).*

நீங்கள் அன்பிலே நடவுங்கள்

"கிறிஸ்து நமக்காக, தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல், நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" *(எபே. 5:2).*

அன்பை அடக்கிக் கொள்ளமுடியாது

கடவுள் தம் அடக்கமுடியாத அன்பினால் மனிதரைப் படைத்தார். மனிதன் நெறிதவறியபோதும் அதே அடக்கமுடியாத அன்பைச் சிலுவையில் வெளிப்படுத்தினதினால் அவன் சான்றோன் ஆக்கப்படுகிறான். இத்தகைய அன்பின் சிறப்பை திருவள்ளுவர் விளக்கிக்காட்டுகிறார்.

(அ. 8:1)

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் **(கு. 71)**

அன்பை அடைத்து வைக்கும் தாழ்ப்பாளும் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே அவர்கள் உள்ளத்தில் எழும் அன்பை வெளிப்படுத்திவிடும். துன்பப்படுவோருடைய துன்பத்தைக் கண்டு துன்பமடைகிறது உள்ளம். கண்ணீர் அதற்குத் துன்பக்குறியாக (அடையாளமாக) புலப்படுகிறது.

தன்னையே கொடுக்கும் அன்பு

அன்பை வெளிப்படுத்தும் துன்பக் குறி வெறும் கண்ணீர் மட்டுமல்ல. அன்பு செயலிலும் வெளிப்படும். அன்பு தன் உடமைகளை மட்டுமல்ல தன்னையே மற்றவர்களுக்குக் கொடுத்துவிடும். பூரண அன்பு தன்னை விரும்புகிறவர், வெறுப்பவர் ஆகிய அனைவருக்காகவும் தன்னைத் தியாகம் செய்யும். நீத்தாராகிய கடவுள் தமது பரலோக மேன்மைகளைத் துறந்ததும் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்து தம் ஐம்புலன்களையும் பலியாக்கியதும் அவர் மனுமக்கள்மேல் கொண்டிருந்த அளவற்ற அன்பையே காட்டுகிறது.

கிறிஸ்து நமக்காக மரித்தார்

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோம. 5:8)

அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் (1 யோ. 3:16).

நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினாலல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரப் பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோ. 4:10).

பிறர்க்கு தன்னையே கொடுக்கும் அன்பு

(அ. 8:2)

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (கு. 72)

அன்புடையவர்கள் தம்முடையதெல்லாம் (உடல், உயிர்) பிறர்க்குரியதென வாழ்வர். அதே நேரத்தில் அன்பற்றவர்களோ மற்றவர்கள் உடமைகளையும் கூட தனதாக்கிக் கொள்ள விரும்புவர்.

மற்றவர்களுக்காகத் தம் எலும்பையும் கொடுத்தவர் யார்?

அது இயேசு பெருமான் மட்டுமே என்று திரு. வி. கலியாண சுந்தரனார் கூறியிருக்கிறார். அவர் கூற்றுப்படி திருக்குறள் இலக்கணமும் இயேசு பெருமானின் வாழ்க்கை அதற்கு முந்திய இலக்கியவுமாய் அமைந்திருக்கிறது. இக்கருத்து முற்றிலும் உண்மையாகும். மற்றவர்களுக்காகத் தம் எலும்பையும் கொடுத்தவர் குமாரனாகிய இயேசு ஒருவரே.

மனிதனின் ஆருயிர்க்கு இறைஅன்பே காரணம்

(அ. 8:3)

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு (கு. 73)

மனிதனின் அரிய உயிர் உடம்போடு இணைவதற்குக் காரணம் இறை அன்பின் பங்கீடு ஆகும் என்று அறிந்தோர் கூறுகிறார்கள்.

ஏன் என்றால் மனிதனைத் தவிர மற்று ஜெந்துக்களைத் தேவன் வார்த்தையினால் படைத்தார். மனித உடம்பை மண்ணினால் உரு வாக்கி அவன் நாசியிலே தமது ஜீவ சுவாசத்தை ஊதினார். அப்போது அவன் ஜீவ ஆத்துமா ஆனான் என்று விவிலியம் கூறுகிறது. இறை வனோடு நித்தியப் பேரின்பத்தில் பங்கு பெறுவதற்காகவே மனிதன் இவ்வாறு இறைவனின் பேரன்பால் உருவாக்கப்பட்டான்.

இங்கு மனித உயிரில் தேவ அன்பின் பங்கீட்டை நாம் பார்க் கிறோம். தேவ அன்பினால் மனிதன் ஜீவ ஆத்துமாவானான். எனவே அவன் உயிர் 'ஆருயிர்' என்று சுட்டப்படுகிறது.

மனிதனுக்கு மறுபடியும் பேரின்பம் என்னும் நாடாச் சிறப்பு

இறைவனின் பேரின்பத்தில் பங்காளியாவதற்காக அவருடைய பேரன்பால் படைக்கப்பட்ட மனிதன் இறைக்கட்டளையை மீறியதால் அப்பேரின்பத்திலிருந்து விலகிச்சென்றான்.

(அ. 8:4)

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு *(கு. 74)*

பேரின்பத்தை இழந்த மனிதன்மேல் கொண்ட இறைவனின் அன்பு, ஆர்வமாகிய ஞானநேயத்தை ஈன்றது. அந்த ஞானநேயம் பிரிந்த மனிதனைச் சேர்க்கும் நட்பாகிவிட்டது. அந்த நட்பு நாடாச்சிறப்பு என்னும் பேரின்பத்தை ஈன்றது. இவ்வாறு கடவுளின் அன்பினால் மனிதன் மீண்டும் இறைவனுடன் பேரின்பத்தில் பங்கடையும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டான்.

இன்புற்றாரின் சிறப்பிற்குக் காரணம் என்ன?

(அ. 8;5)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு *(கு. 75)*

இவ்வுலகத்தில் இன்பத்தை அடைந்து இன்புற்றிருப்பவர்களின் சிறப்புக்குக் காரணம் என்னவென்று நாம் அவர்களைக் கேட்டால் அவர்கள், கூறும் விடை 'அன்பு உற்று அமர்ந்த வழக்கு' ஏன்பதாகும்.

அதாவது மனிதனைப் பேரின்பத்தில் சேர்க்கும் பொருட்டு, அன்பாகிய கடவுளே, மனித உரு எடுத்து மனிதரோடு பூமியில் அமர்ந்த வழக்கே ஆகும். அது இவ்வையகத்தில் இன்புற்றார் எய்துஞ் சிறப்புக்குக் காரணமாய் அமைந்திருக்கிறது.

அன்பே மனித உரு எடுத்த காரணத்தால் வைய்யகத்தில் இன்பம் தோன்றியது. அந்த இன்பத்தை அனுபவிக்கிறவர்களைக் கேட்டால் அவர்கள் அன்பு மனித உருவில் வந்த வழக்கை கூறுகிறார்கள்.

அறத்திற்கு மட்டுமே அன்பு சார்பாகுமா?

(அ. 8:6)

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை **(கு. 76)**

அன்பு அறத்திற்கு மட்டுமே சார்பு என்று அறியாதவர்கள் கூறுவார்கள். மறத்திற்கும் அவ்வன்பே துணையாகிறது என்பது வள்ளுவர் கருத்து. எவ்வாறெனில் அன்பாகிய கடவுள் உலகுக்கு வந்து மனிதருடைய பாவத்தைத் தாமே சுமந்து கொண்டு பாவிகளிலும் பெரிய பாவியாகச் சிலுவையில் தொங்கி அவர் மனிதர்மேல் வைத்த அளவில்லாத அன்பினாலே பிரதான ஆசாரியன் என்ற நிலையில் தம்மைத் தாமே பலியாக்கினார். இவ்வாறு தம்மையே கொல்லுத லாகிய மறச்செயலுக்கும் இறைவனின் அன்பு துணையாயிற்று.

இறையன்பை ஏற்றுக்கொள்ளாதவர் நிலை

(அ. 8:7)

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம் **(கு. 77)**

எலும்பையும் நமக்காகக் கொடுத்து, மறத்திற்கும் சார்பாகி, விடுதலையை ஏற்படுத்தித் தந்துள்ள அன்பை, நாம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாவிட்டால் நமக்கு விடுதலை கிடைக்காமல் போகும். ஆகையால் நியதியின்படி வரவேண்டிய தண்டனையை, நியதியாகிய அறம் நமக்கு அளித்துவிடும். அந்நிலை எலும்பற்ற புழுவை வெயில் அழுத்தி வருத்துவது போன்ற பரிதாப நிலையாகும்.

இறை அன்பை எடுத்துக்காட்டாதவன் நிலை

(அ. 8:8)

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று **(கு. 78)**

அன்பாகிய இறைவனை உள்ளத்தில் கொண்டு அவ்வன்பை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாத வாழ்க்கையானது பாலைவனத்தி லுள்ள பட்ட மரத்தைப்போல் அழிந்துகொண்டே இருக்கும்.

வற்றல் மரம் தளிர்ப்பது அரிது. அதிலும் வன்பாலை நிலத்தில் அதை எண்ணிப்பார்க்கவே முடியாது.

உள்ளத்தில் இறை அன்பில்லாதோர்

(அ. 8:9)

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு **(கு. 79)**

அன்பைப் பகராதவர்களின் உயிர்மட்டுமல்ல அவர்களுடைய உடலாம் யாக்கையும் பயனற்றதாகும். யாக்கை (உடல்) உறுப்புகளால் இயைந்தது. உறுப்புக்களைப் புறத்துறுப்புக்கள், அகத்துறுப்புக்கள் என இருவகைப்படுத்தலாம். புறத்துறுப்புக்களை விட அகத்துறுப்புக்களே சிறந்தவை. உடல்களை எல்லாம் இயக்குவது உயிர். அவ்வுயிர் அகத் துறுப்பாகக் கருதப்படுகிறது. அது இறைவனிடமிருந்து வந்தது. எனவே அதுவும் அன்புருவாய்த் திகழ வேண்டும். அன்பில்லாதவர்களுக்குப் புறத்துறுப்புக்களும் எவ்விதத்திலும் பயனுடையன அல்ல.

இறைஅன்பு அகத்தில்லாத உடம்பு

(அ. 8:10)

அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு **(கு. 80)**

உயிர் இயங்கும் வழியே அன்புதான். மனிதனைப் பேரின்ப நிலையில் சேர்க்கும் சிறப்புடைய அன்பு அகத்தில்லாத உடம்பு, எலும்பும் தோலும் சேர்த்து யாக்கப்பட்ட ஒரு கூடுபோல எவ்விதச் சிறப்பும் இல்லாமல் காணப்படும்.

இந்நிலையை விவிலியம் ‘அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை’ *(1 கொரி. 13:2)* என்று குறிப்பிடுகிறது.

சுருக்கம்

இறைவன் அன்புமயமானவர். அன்பின் பெருக்கினால் அவர் தம் அன்பைப் பகிர்ந்து கொள்ள மனிதனைப் படைத்தார். ஆனால் மனிதன் இறைவன் அளித்த பேரின்பநிலையை இழந்துத் துன்பத்துக்குள்ளானான். துன்பத்தினின்று மனிதனை மறுபடியும் மீட்டெடுத்து இன்ப நிலையில் அமர்த்துவதற்காகக் கடவுளே மனிதனாக அவதரித்து சிலுவையில் தம்மையே பலியாக்கி, மனிதனைத் துன்பத்திலிருந்து விடுவித்தார். எனவே மனிதன் அவ்வன்பை உணர வேண்டும்;. மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் அவ்வன்பைக் காட்ட வேண்டும். இப்படிப்பட்ட அன்பு இல்லாத உயிரினாலும் உடம்பினாலும் எவ்விதப் பயனும் இல்லை.

அதிகாரம் : 21

சான்றோர் பண்புகள் - 2. நாண்

நாண் என்பது என்ன?

வள்ளுவர் கூறும் இரண்டாவது சால்பூன்றிய தூண் 'நாண்' என்பதாகும். இதை நாணுடமை என்ற 102-ம் அதிகாரத்தில் விளக்குகிறார்.

ஒருவன் அன்பின் வடிவான இறைவனைத் தன் உள்ளத்தில் உணரும்போது தானும் அவ்வன்பாக மாறி மற்றவர்களிடத்திலும் அந்த அன்பை வெளிப்படுத்துகிறான்.

அங்கு அன்பின் ஒளி ஒருவனுடைய உள்ளத்தில் வரும்போது ஒரு மாற்றம் ஏற்படுகிறது. இதுவரை இருளில் மறைந்திருந்த மாசுகள் ஒளியில் வெளிப்படுகின்றன. தான் செய்த தவறுகள் தெளிவாக அவனுக்கு விளக்கிக் காட்டப்படுகிறது. இந்நிலை ஏற்படும்போது உள்ளம் தவறான செயலுக்கு நாணம் அடைகிறது. ஒருவன் தவறு செய்வதிலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் முதலில் அவன் செய்வது தவறு என்ற உணர்வு வரவேண்டும். அந்த உணர்வு அவனுக்கு நாணத்தை உண்டாக்குகிறது. நாணம் அவனைப் பழைய வழியிலிருந்து திரும்பிப் புது வழியாகிய பொய்தீர் ஒழுக்கநெறிக்குக் கொண்டு செல்லுகிறது. இதையே வள்ளுவர் நாண் என்ற அதிகாரத்தில் விளக்கிக்காட்டுகிறார்.

மனம் திரும்புதல்

இவ்வாறு பழைய பாவ வழிகளிலிருந்து திரும்பி இரட்சிப்பின் வழியில் கொண்டு செல்வதைக் கிறிஸ்தவர்கள் மனம் திரும்புதல், இரட்சிக்கப்படுதல், மறுபிறப்படைதல் என்றெல்லாம் அழைக்கிறார்கள்.

விவிலியத்தில் சகேயு என்பவன்

விவிலியத்தில் சகேயு என்ற ஒரு ஆயக்காரனின் மனம் திரும்பு தலைக் குறித்து வாசிக்கிறோம். அவன் இயேசுவைக் குறித்துக் கேள்விப் பட்டு அவரைப் பார்ப்பதற்கு விரும்பினான். இயேசு அவனை அழைத்து இன்று நான் உன் வீட்டில் தங்குவேன் என்றார். ஒளியாகிய தேவக்குமாரன் அங்குச் சென்றபோது அந்த ஆயக்காரனுடைய உள்ளத்தின் மாசுகள் வெளிப்பட்டன. அவன் தன் பழைய செயல்களுக்காக நாணமடைந்து, இயேசுவை நோக்கி நான் அனியாயமாய் வாங்கியவற்றை நாலத்தனை யாகக் கொடுக்கிறேன் என்று தனது பழைய வழியை மாற்றிக்கொண் டான். அப்பொழுது இயேசு இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார்.

கருமத்தால் நாணுதல்

நாணுடைமையும் மனம் திரும்புதலும் ஒரே நிகழ்ச்சியாகும். இது தன்னிடமுள்ள குறைகளுக்காக நாணம் அடைந்து தன் வழியை மாற்றிக் கொள்ளுதல் ஆகும். இந்த நாணத்திற்கும் பெண்களுக்குரிய நாணத்திற்கும் வேற்றுமை உண்டு.

(அ. 102:1)

கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற *(கு. 1011)*

தாங்கள் செய்த கருமத்துக்கு நாணி மனம் திரும்புதலே சிறந்த பண்பு. வேறு காரணத்துக்காக நாணுதல் பெண்களுக்குரிய நாணம் போன்றதாகும். அது பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்களில் ஒன்றாகிய நாணம்.

நாணுடைமையே மாந்தர்க்குச் சிறப்பு

(அ. 102:2)

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு *(கு. 1012)*

தான் செய்த பாவக் கருமங்களுக்காக நாணி அதிலிருந்து திருந்திக் கொள்வதே மாந்தருக்குச் சிறப்பு. மற்ற ஊண், உடை முதலியன உயிர் களுக்கெல்லாம் பொதுவானது.

அதாவது உடை அணிந்த உயிரினமாம் மனிதர் யாவரும் மனி தரல்ல. உள்ளத்தில் நாண் உடைமை இருப்பதே மாந்தரின் சிறப்பு.

சால்பை அறிந்துகொள்வது எப்படி?

(அ. 102:3)

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண் என்னும்
நன்மை குறித்தது சால்பு (கு. 1013)

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. அவைகளின் உடலாகிய ஊனைப் பார்த்து அவற்றிற்குள் உயிர் இருப்பதை அறிகிறோம். உயிரைக் காட்டுவது ஊன். அவ்வாறே ஒருவரிடம் கருமத்திற்கு நாணும் நாணம் உண்டா என்பதை நாம் காணமுடியும். எவனிடம் கருமத்திற்கு நாணும் நாணம் உண்டோ, அவனிடம் சால்பு உண்டு என்று நிச்சயமாய் உணரலாம். இவ்வாறு ஊனால் உயிரையும் நாணால் சால்வையும் அறியமுடியும்.

சான்றோர் இடையே நாண் இல்லாதவர்கள்?

(அ. 102:4)

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை (கு. 1014)

நல்ல பயிர்களிடையில் களைகளும் தோன்றுவதுண்டு. அது போலச் சான்றோர் கூட்டத்தில் சால்பில்லாதவர்களும் தங்களைச் சான்றோராக வேடம் அணிந்து வெளிக்காட்டிக்கொள்வதும் உண்டு.

அவர்கள் வெளித்தோற்றத்தில் சான்றோரே. ஆனால் உள்ளே அவர்களுக்கு இருக்கவேண்டிய சிறந்த அணியாகிய நாணுடமை இல்லாததால் அது அவர்களுக்கு மட்டுமல்ல அக்கூட்டத்தவர்க்கே பிணியாகிவிடும். அவர்கள் பீடுநடைபோட முடியாது. ஏனெனில் அவர்களின் பீடு நடையே பிணியாகி அவர்களை அழித்துவிடும்.

இன்றும் இப்படிப்பட்டவர்களைக் கிறிஸ்தவர்களிடமும் பார்க்க முடிகிறது. அவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்கள் அல்ல; பெயர் கிறிஸ்தவர்களே. அவர்களால் கடவுள் நாமம் பழிக்கப்படுகிறது. அவர்களைக் குறித்து திருமறை ஆட்டுத்தோலைத் தரித்த ஓநாய்கள் என்று கூறுகிறது.

சான்றோர் பிறர் பழிக்காகவும் நாணவேண்டும்

(அ. 102:5)

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு (கு. 1015)

சான்றோர்க்கு அணி நாணுடமை. ஆனால் நாணத்தினால்

தான் அடையும் நன்மையை மற்றவர்களும் அடையச் செய்வதே சான்றோர் கடமை. ஆகையால் அவர்கள் தம் பழிக்காய் நாணுவது போல் பிறர் பழிக்காகவும் நாணவேண்டும்.

இவ்வாறு தன் பழியுடன் பிறர் பழிக்காகவும் நாணுபவர்களே நாணுக்கு, உறைபதி என்னும் சிறப்பை இவ்வுலகில் பெறுவர்.

நாணை வேலியாகக் கொள்பவர்கள்

(அ. 102:6)

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர் *(கு. 1016)*

நாணுக்கு உறைபதியாகிய இவர்கள் பிறர் பழியைக் கண்டு அதைத் தூற்றி நடக்காமல் அப்பழியிலிருந்து அவர்களை விடுவிக்க அவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பார்கள்.

சிறந்த சான்றோர் இந்நாணமாகிய வேலியை உலகைவிடத் தமக்குப் பாதுகாவலாக எடுத்துக் கொள்வார்கள். மேலானவர்கள் நாணமாகிய வேலியைக் கொள்ளாமல் வியன் ஞாலத்தைப் பேணமாட்டார்கள் அன்றோ! அவர்கள் நாணத்தை உலகைவிட மேன்மையாய் கருதுவர்.

நாணுக்காக உயிரை துறப்பவர்

(அ. 102:7)

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர் *(கு. 1017)*

சான்றோர், நாணுடைமைக்காக உயிரைத் துறப்பரேயன்றி உயிர்ப்பொருட்டால் நாணைத் துறக்கமாட்டார்கள். இவ்வாறு நாணுக்காக உயிரைத் துறப்பவரே நாண் ஆள்பவர்.

அறம் நாணுவது எப்போது?

(அ. 102:8)

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து *(கு. 1018)*

நாணுடைமையின் சிறப்பைக் காட்டும் வள்ளுவர் நாண் இல்லாதவர்க்கு ஏற்படும் இழிவையும் காட்டுகிறார்.

தவறுக்கு நாணித் திருந்துவதே மனிதனின் சிறப்பு. நாணித்திருந்தாதவன் வெறும் ஊனைக்கொண்ட உயிரே அன்றி மனிதன் அல்ல. பிறர்

பழியும், தம் பழியும் நாணும் நாணுக்குப் பதியாகிய சான்றோர் ஒருவர், ஒருவனிடம் சென்று, அவன் செயலுக்கு அவர் நாணி, அவனுக்கு நற் செய்தி கூறியும், அவன் அதை ஏற்றுக்கொண்டு தன் பிழைகளுக்காக நாணாமல் இருப்பானாகில், அவனைக் கண்டு அறம் நாணவேண்டிய நிலை ஏற்படும்.

நாணின்மையால் ஏற்படும் தீங்குகள்

(அ. 102:9)

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை *(கு. 1019)*

நற்செய்தியைக் கேட்டும் நாணுடைமை ஏற்படவில்லையென்றால், அவனுக்கு மட்டும் இழிவு ஏற்பட்டு அதோடு நின்றுவிடாது. அவனைச் சார்ந்தவர்களாகிய குலம் இழிவடைந்து தீமையால் சுடப்படுகிறது. மட்டுமல்ல அவன் சார்ந்துள்ள கொள்கையும் பிழைபட்டு அதன் நலமும் சுடப்பட்டுவிடுகிறது. நற்செய்தியின் கொள்கை நம் நாட்டில் பற்றிப் பிடிக்காததின் காரணம், கொள்கையின் குறைபாடல்ல, அக் கொள்கையைப் பின்பற்றும் மக்களின் (கிறிஸ்தவர்களின்) குறை பாடுகளே என்று இக்குறள் சுட்டிக்காட்டுகிறது.

நாணுடைமை இல்லாதோர் இயக்கம்

(அ. 102:10)

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று *(கு. 1020)*

நாணத்தை உள்ளத்தில் கொள்ளாதவர்கள் தோற்றத்தில் மற்றவர்களிலிருந்து வேற்றுமை இல்லாதவர்கள். அவர்கள் அழிவை நோக்கிச் செல்கிறவர்கள். அவர்கள் இயக்கம் நாணால் (கயிற்றால்) இயக்கப்படும் மரப்பாவைக்கு ஒத்தது. நாண் இயக்கம் நின்ற உடன் மரப்பாவையின் உயிரற்ற தன்மை வெளிப்பட்டுவிடும். நாணத்தை உள்ளத்தில் கொண்டவர்கள் தங்கள் பாவவாழ்க்கைக்காக மனஸ்தாபப் பட்டு புது மனிதர்களாக மாற்றப்படுகிறார்கள். அதோடு அவர்கள் இரட் சிப்பின் பாதையில் அதாவது ஐந்தவித்தான் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியில் செல்லுகிறார்கள். அவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக் கொள் கிறார்கள். நாண் இல்லாத இயக்கம் ஜீவனற்றது என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறு திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் இரு கூட்டத்தாரைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகிறார். ஒரு கூட்டத்தார் நாணுடமை பெற்ற வர்கள். மறு கூட்டத்தார் நாணுடமை இல்லாத (இரட்சிக் கப்படாத)வர்கள்.

அதிகாரம் : 22

சான்றோர் பண்புகள் - 3. ஒப்புரவு

ஒப்புரவாகுதல்

ஒப்புரவுக்கு முதல் காரணர் இறைவனே. தம்மை விட்டுப் பிரிந்து சென்ற மனிதனைத் தம்மோடு மறுபடியும் இணைக்கும்படியாக அவரே இவ்வுலகுக்கு வந்து தம்மையே சிலுவையில் பலியாக்கினார். அவருடைய அன்பினாலே நாம் கடவுளுடன் ஒப்புரவானோம். அவ்வாறு கடவுளோடு ஒப்புரவானவர்கள் மற்றவர்களுடனும் ஒப்புரவை ஏற்படுத்தக் கடன்பட்டிருக்கிறார்கள்.

பவுலின் விளக்கம்

இதைக்குறித்து அப். பவுல் 2 கொரி. 5:17-20 வசனங்களில் விளக்கு கிறார். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கி றான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவை எல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

அதென்னவெனில் தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண் ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புர வாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியி னாலே தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காய் ஸ்தானாபதிகளாயிருந்து, தேவ னோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

ஐந்தவித்தான் ஏற்படுத்திய ஒப்புரவு

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே, ஏற்பட்டிருந்த பெரும் பிளப்பைச் சரிசெய்து, கடவுளுக்கும் மனிதருக்கும் ஒப்புரவை ஏற்படுத்தியவரே ஐந்தவித்தானாகிய இயேசுக்கிறிஸ்து.

"முன்னே அன்னியராகவும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும்... அவருடைய மாம்ச சரீரத்தினால் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ. 1:21).

"அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கிப் பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று." கொலோ. 1:20.

ஒப்புரவறிதல்

வள்ளுவர் 22-வது அதிகாரத்தில் ஒப்புரவறிதல் குறித்து விளக்குகிறார். ஒப்புரவைச் சான்றோருடன் இணைத்துச் சான்றோருக்குரிய ஐந்து தூண்களில் நடுத்தூணாகவும் வைத்துள்ளார்.

இறைவனின் ஒப்பிரவிற்கு கைமாறு இல்லை

(அ. 22:1)

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு **(கு. 211)**

உலகில் மழைநீர் பொழிவதற்குக் கைமாறு வேண்டுவதில்லை. அவ்வாறே தேவன் மனிதரைத் தம்மிடம் ஒப்புரவாக்குவதற்குக் கைமாறு வாங்கவில்லை. தேவனோடு ஒப்புரவானவர்களும் மற்றவர்களைத் தேவனோடு ஒப்புரவாக்குவதும் கைமாறு வேண்டா கடப்பாடாகும்.

இயேசுவின் கூற்று

"அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி, நீதி உள்ளவர்கள் மேலும் அநீதி உள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்கு லாபம் (கைமாறு) என்ன? (மத். 5:45-46).

மற்றவர்களையும் ஒப்புரவாக்க வேண்டும்

(அ. 22:2)

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு *(கு. 212)*

ஐந்தவித்தானாகிய கடவுள் சிலுவையில் தாளாற்றித் தந்த விலைமதிப்பற்ற பொருளாகிய மீட்பைப் பெற்று அவரோடு ஒப்புரவானவர்கள், தாங்களும் மற்றவர்களுக்கு அதை வெளிக்காட்டி அவர்களையும் ஒப்புரவாக்கவேண்டும்.

புத்தேளுலகிற்கும் சிறந்தது எது?

(அ 22:3)

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற *(கு. 213)*

இந்த ஒப்புரவிற்கு நிகரானது வேறொன்றும் இல்லை. தனக்குக் கடவுளோடு இருந்த பிளவு நீக்கப்பட்டு, கடவுளுடன் ஒப்புரவான நிலையில் ஒருவன் அடையும், இன்பம் இந்த உலகில் மட்டுமல்ல மறுமையிலும் நித்திய பேரின்பமாக அமையும். அவன் தான் பெற்ற ஒப்புரவின் இன்பத்தை மற்றவர்களுக்கும் பகர்ந்து கொடுக்கிறான்.

யார் செத்தவனுக்குச் சமானம்?

(அ 22:4)

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் *(கு. 214)*

எவன் ஒருவன் தான் பெற்ற இன்பத்தை மற்றவனுக்கும் கொடுத்து அவனையும் மகிழ்விக்கவில்லையோ அவனுக்குள் உயிர் இல்லை என்பது பொருள். அதாவது ஒப்புரவாகிய இன்பத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்காதவன் உயிர் இல்லாத செத்தவனாகவே கருதப்படுவான். ஒத்ததறியக்கூடிய உணர்ச்சி மிக்கவன் தான் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற்றுக்கொள்ளச் செயல்படுகிறான்.

வானாகிய தூய ஆவியின் நிறைவு

(அ 22:5)

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு *(கு. 215)*

ஊருக்கு மத்தியில் உள்ள ஊருணி (சிறுகுளம்), தான் மட்டுமாக மக்களுக்குப் பயன்படமுடியாது. ஆனால் வான் பொழிந்து, நீரால் நிரப்பப்படுமானால் அந்நீர் மற்ற யாவருக்கும் பயன்படுகிறது. அவ்வாறு தனிமனிதன் மக்களுக்குப் பயன்படுவதை விடக் கடவுளோடு ஒப்புரவானவன் தூய ஆவியினால் நிரப்பப்பட்டு அவன் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற்றுக்கொள்ளச் செய்கிறான். அவன் பெற்ற (வான்) மழைநீர் மற்றவர்களுக்கும் பயன்படுகிறது.

பயன்மரத்தைப் போன்ற அனுபவம்

(அ. 22:6)

பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் **(கு. 216)**

ஊருணி தனக்கு நீர் இருந்த காலத்து மட்டும் தன்னிடம் வருபவர்களுக்குப் பயன்படுகிறது. சான்றோர் நிலை அதைவிடச் சிறந்ததாகும். சான்றோர் கனி மரத்தைப் போல் செயல்படுவார்கள். கனிமரம் தன்னிடத்தில் தோன்றியிருக்கும் கனியைத் தானே வைத்துக் கொள்ளாமல், மற்றவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மற்றவர்களுக்குக் கொடுத்துவிடும்.

பயன்மரத்தைவிட உயர்ந்த நிலை ?

(அ. 22:7)

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் **(கு. 217)**

பயன் மரம் தன்னிடம் கனி இருந்த காலத்தில் மட்டுமே கொடுக்கும். ஆனால் சான்றோரோ அதையும் தாண்டி செயல்படவேண்டும். தாம் பெற்றதை மட்டுமல்ல, மற்றவர்களுக்காக தம்மையே கொடுக்க வேண்டும்.

மருந்து மரம் தனது கனி, காய், பூ, இலை, தண்டு, வேர் வரை மற்றவர்களுக்குப் பயன்பட்டு மற்றவர் வாழத் தன்னையே தியாகம் செய்கிறது. சான்றோர் இதுபோல் தங்களையே தியாகம் செய்யக் கடன் பட்டவர்கள்.

எவற்றிலும் சிறந்ததேதப்பாமரம்

'மருந்தாகித் தப்பா மரத்தற்றான்' என்ற தொடர் மூலம் சிறப்புச் செய்தியை விளக்குகிறார் திருவள்ளுவர்.

மருந்து மரம் தன்னையே அர்ப்பணித்து மற்றவர்களுடைய நோயைத் தீர்க்கிறது. அவ்வாறே இறைவனை விட்டுப் பிரிந்த உலக மக்களின் பாவப்பிணி நீக்கித் தம்மோடு மறுபடியும் ஒப்புரவாக்க ஐந்த வித்தானாகிய தேவக்குமாரன் தம்மைச் சிலுவை மரத்தில் ஒப்புக் கொடுத்து மருந்தானார்.

தப்பாமரம்

இங்கு வள்ளுவர் குறிப்பிடும் மரம் தப்பா மரம். சாதாரண மருந்துமரம், உடல் நோயை மட்டுமே தீர்க்கக் கூடியது. ஆனால் உடல் நோயுடன் ஆன்ம நோயையும் நீக்கும் தப்பா மரம் ஒன்றுண்டு. அதுவே மக்களின் உடலுக்காகவும் ஆன்மாவுக்காகவும் தம்மையே ஒப்புக் கொடுத்த ஐந்தவித்தானின் சிலுவை மரம். எனவே இயேசுவுக்குச் சான்று கூறும் சான்றோர்கள் சிலுவை மரத்தைப் பின்பற்றக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இயேசுவின் கூற்று

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அனுதினமும் தன்னைத் தானே வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." *(கலா. 6:14).*

எந்தச் சூழ்நிலையிலும் ஒப்புரவு

(அ. 22:8)

இடனில் பருவத்தும் ஒப்பிரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர் ***(கு. 218)***

சான்றோர் இக்கட்டான நிலையிலும் ஒப்புரவு செய்வதில் தீ விரித்து நிற்பார்கள். இயேசு பெருமான் சிலுவை மரத்தில் அடிக்கப் பட்ட கடைசி நேரத்திலும் தம்மிடம் வேண்டிக்கொண்ட கள்வனுக்கு ஒப்புரவளித்து அவனைத் தம்மிடம் இணைத்துக் கொண்டார். இது "கடனறி காட்சியவர் இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்" என்பதற்கு முன்மாதிரியாய் விளங்குகிறது.

சான்றோர்க்குத் துன்பம் கொடுப்பது எது?

(அ. 22:9)

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு ***(கு. 219)***

நயனுடைய சான்றோர்க்குத் துன்பம் கொடுப்பது எது என்றால் செய்யவேண்டிய நன்மையை செய்ய முடியாத நிலையே அவர்களுக்குத் துன்பம் கொடுப்பதாகும்.

ஒப்புரவினால் வரும்கேடு தன்னை விற்றும் கொள்ளத்தக்கதே

(அ. 22:10)

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து *(கு. 220)*

ஒருவன் ஒப்புரவு செய்வது அவனுக்கு இன்பம் கொடுக்காமல் துன்பமும் கேடும் விளைவிக்கும் என்பது உறுதி. ஆனால் அந்தக்கேடு தள்ளத்தக்கதல்ல. மாறாக ஏற்றுக்கொள்ளத்தக்கதே. தன்னிடத்திலுள்ள எல்லா பொருளையும் விற்றாவது கொள்ளத்தக்க சிறப்புடையது. அது மட்டுமல்ல தன்னையே விற்றாவது பெற்றுக் கொள்ளக்கூடிய மேன்மையுடையது.

எடுத்துக்காட்டு

ஐந்தவித்தானாகிய இயேசு பெருமான் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே ஒப்புரவு ஏற்படுத்துவதற்காகத் தம்மையே சிலுவை மரணமாகிய கேட்டுக்கு விற்று ஒப்புரவின் மேன்மையை வெளிப்படுத்தினார். இயேசுவைப் பின்பற்றும் சான்றோரும் தங்களையே விற்று ஒப்புரவையும் பெற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் அடையும் கேடு பேரின்பத்திற்கு அவர்களை நடத்துவதேயன்றி துன்பத்திற்குக் காரணமானதல்ல.

அதிகாரம் : 23

சான்றோர் பண்புகள் - 4. கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்பது

சால்பூன்றிய தூண்களில் நான்காவது தூணாக வள்ளுவர் கூறுவது கண்ணோட்டமாகும். அதை 58-வது அதிகாரத்தில் விளக்கு கிறார். அன்பே உருவான இறைவனின் ஒளிவீசும்போது உள்ளத்தில் அழுக்காகிய கருமம் வெளிப்பட்டு அதனால் நாணம் ஏற்படுகிறது. நாணிய உள்ளம் ஒப்புரவறிந்து மற்றவர்களுக்கு நன்மை செய்வதோடு அவர்கள் செய்யும் தீமையை மன்னிக்கிறது. மன்னிக்கும் மனப்பான் மையையே வள்ளுவர் கருணை நிறைந்த கண்ணோட்டம் என்கிறார்.

குமாரனாகிய கடவுளின் கண்ணோட்டம்

தம்மைவிட்டுத் தூரம் போன மனிதனை மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொள்ளும்படி இந்த உலகத்தில் வந்த குமாரனாகிய கடவுள் தம்மையே சிலுவையில் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். மனிதர்கள் அவரை நிந்தித்துச் சிலுவையில் அறைந்தவேளையிலும் அவர் அவர்களை மன்னித்ததுமட்டுமல்ல, பிதாவோடும் வேண்டு கிறார். "பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்." லூக். 23:34. அவர் சிலுவையில் சம்பாதித்த மன்னிப்பின் காரணமாகவே இவ்வுலகம் நிலைபெற்று, மக்கள் நீடுவாழ்வு அடைகிறார்கள்.

ஐந்தவித்தானாகிய இயேசுவின் போதனை

இயேசு பெருமான் தாம் மன்னித்தது மட்டுமல்ல, மற்றவர் களுக்கும் மன்னிக்கக் கற்றுத்தந்தார். பிறனுக்கு எத்தனை தரம் மன்னிக்க வேண்டுமென்று கேட்டதற்கு ஏழெழுபது தரம் (மத். 18:22) என்றார்.

தமது சீஷருக்கு: "எங்களுக்குக் எதிராகக் குற்றஞ்செய்தவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" (மத். 6:12) என்று ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார்.

மன்னியாதவனைக் குறித்த உவமை

மன்னிப்பின் அவசியத்தை விளக்கும் ஓர் உவமையை இயேசு கூறினார். பத்தாயிரம் பொற்காசு கடன்பட்ட ஒருவன் தன் அரசனால் மன்னிக்கப்பட்டு திரும்பும்போது தன்னிடம் நூறு வெள்ளிக்காசு கடன்பட்ட உடன் ஊழியனுக்கு மன்னியாமல் அவனை வாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்துத் தண்டித்தான். இதை அறிந்த அரசன் மன்னியாதவனைத் திரும்ப அழைப்பித்து அவனையும் தண்டித்தான். மன்னிப்பைப் பெற்றவன் மன்னியாததினால், தான்பெற்ற மன்னிப்பை இழந்தான்.

கண்ணோட்டத்தினால் உலகம் நிலைபெறுகிறது

(அ. 58:1)

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு *(கு. 571)*

குமாரனாகிய கடவுள் சிலுவையில் காட்டிய கண்ணோட்டத்தால் இவ்வுலகம் நிலை பெற்றிருக்கிறது. இறைவன் சிலுவையில் காட்டிய கண்ணோட்டத்தால் மனுமக்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீடுவாழ்வுக்குத் தகுதி பெற்றார்கள். எனவே மனுக்குலம் நிலைபெற்றிருக்கிறது.

கண்ணோட்டம் இல்லாதவர்கள்

(அ. 58:2)

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை *(கு. 572)*

ஐந்தவித்தானாகிய இறைவனால் ஈந்தருளப்பட்ட கண்ணோட்டத்தைப் பெற்றவர்களால் உலகம் இயங்குகிறது. எனவே உலகியல் கண்ணோட்டத்துடன் இயங்கியுள்ளது. அத்தகைய கண்ணோட்டம் இல்லாதவர்கள் வாழ்ந்தும் வாழாதவர்களே. அவர்கள் வாழ்வதால் நிலத்திற்குப் பாரமே அன்றிப் பயன் இல்லை. மற்றவனை மன்னியாதவனுக்கு மன்னிப்பு இல்லை. இதை இயேசு பெருமான் பலமுறைகளில் தமது அடியவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

இசையும் பாடலும் போல

(அ. 58:3)

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாங்
கண்ணோட்டம் இல்லாத கண் (கு. 573)

மனித வாழ்க்கையையும் மன்னிக்கும் தன்மையையும், இசைக்கும் (பண்) பாடலுக்கும் ஒப்பிடப்படுகிறது. பண் சிறந்தால், பாடலும் சிறக்கும். அவ்வாறே கண்ணாகிய பாடலுக்கு கண்ணோட்டமாகிய பண் (இசை) இசையாவிட்டால், கண்ணாகிய பாடல் பயனற்றதாகும். இங்கே சிறந்த வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது ஒருவொருக்கொருவர் மன்னித்து வாழ்தல் என்று காண்கிறோம்.

கண்ணோட்டத்திற்கே அடித்தளமாய் திகழ்ந்த இயேசு பெருமான் கூறியதாவது : "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கு மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத். 6:14-15).

கண்ணோட்டமில்லாத கண்

(அ. 58:4)

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண் (கு. 574)

கண்ணின் பயன் கண்ணோட்டம். சான்றோர் வாழ்க்கையில் யாவரும் இணைந்து வாழ அவசியமானது கண்ணோட்டம் ஆகிய மன்னிக்கும் இரக்கக் குணம். இக்குணம் இல்லாதவனுடைய முகத்தில் கண்கள் இருப்பதுபோலக் காட்சியளித்தாலும் அவை பயனற்றவையே.

'அளவினால் கண்ணோட்டம்' என்பதில் கண்ணோட்டம் காட்டவேண்டிய அளவு குறிக்கப்பட்டது. அதாவது எத்தனை முறை மன்னிப்பது என்ற கேள்விக்கு இயேசு பெருமான் அளித்த விடையும் குறிப்பிடத்தக்கது. "அப்பொழுது பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றம் செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்கவேண்டும்? ஏழு தரம் மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழு தரம் மாத்திரமல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" (மத். 18:21-22) என்றார். அளவில்லாமல் மன்னித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பது தான் பொருள்.

கண்ணோட்டமில்லாத கண், புண் எனப்படும்

(அ. 58:5)

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும் (கு. 575)

முகத்திற்கு அணிகலனாகத் திகழ்வது கண். கண்ணுக்கு அணிகலனாகத் திகழ்வது கண்ணோட்டம். கண்ணோட்டமில்லாத கண் புண்ணென வேதனை தருவதுடன் மற்றவர்கள் வெறுக்கத் தகுந்ததும் ஆகிவிடும். அணிகலனாய்த் திகழவேண்டியது புண்ணாகி இழிவுபடுத்தும் அவலம்!

மற்றவர்களை மன்னிக்காதவர்கள் நிலை

(அ. 58:6)

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர் (கு. 576)

ஒருவரை ஒருவர் மன்னிப்பதே சான்றோர் பண்பு. ஆனால் மற்றவனை மன்னியாதவன் அவனும் மன்னிக்கப்படாமல் மண்ணோடு இயைந்த மரத்தைப்போல அழிவான்.

கண் இல்லாதோர் யார்?

(அ. 58:4)

கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல் (கு. 577)

மன்னிக்கும் மனம் இல்லாதவர்கள் பார்க்கவேண்டியதைப் பார்க்கும் கண் இல்லாதவர்கள். பார்க்க வேண்டியதைப் பார்க்கும் கண் உடையவர்களிடம் கண்ணோட்டம் இல்லாமை இல்லை.

குருடனுக்குக் குருடன் வழிகாட்ட முடியாது. உண்மையான குருடன் யார் என்பதை அறிய உதவும் கருவியே கண்ணோட்டம்.

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லவர் யார்?

(அ. 58:8)

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு (கு. 578)

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லவராயிருந்தவர் ஐந்தவித் தானாகிய இறைவன் மட்டுமே. மனிதர் அடையவேண்டிய தண்டனையை அவரே ஏற்றுக்கொண்டு மனுக்குலத்தை மீட்டுக்கொண்டது, அவர்

கருமம் சிதையாமல் கண்ணோட்டம் கொண்டதினால் ஆகும். மனிதன் தன் குற்றங்களுக்காகத் தண்டனை பெறவேண்டும். அவனுக்குத் தண்டனை அளிக்கவேண்டியது கடவுள் ஆகும். ஆனால் இறைவனே மனிதனிடம் கண்ணோட்டம் கொண்டார். அவர் கருமம் சிதையாமல் (தண்டனை கொடுப்பதைச் சிதைக்காமல்) மனிதனிடம் கண்ணோட்டம் கொண்டதை விவிலியத்திலும் திருக்குறளிலும் பார்க்கமுடிகிறது.

தண்டனையைத் தாமே ஏற்றார்

அவர் மனிதன் அடையவேண்டிய தண்டனையைச் சிலுவை மரமாகிய பொறிவாயில் (தாமே ஏற்றுக்கொண்டு) நிறைவேற்றினார். மனிதர் மீது கண்ணோட்டமும் காட்டப்பட்டது. உலக மக்களுக்கு வரவேண்டிய தண்டனையை அவர்களுக்குப் பதிலாகத் தாமே ஏற்று கருமத்தைச் சிதையாமல் காத்தார். தண்டனை அடைய வேண்டிய மக்கள்மீது கண்ணோட்டம் கொண்டு அவர்களைத் தப்புவித்து நித்திய மரணத்திலிருந்து மீட்டுத் தம்முடையவர்களாக்கிக் கொண்டார்.

தம் பகைவர்களுக்காகக் கண்ணோட்டம்

(அ. 58:9)

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை **(கு. 579)**

நம்மை ஒறுக்கும் நம் பகைவர்களுக்காகவும், நாம் துன்பத்தை ஏற்றுக் கண்ணோட்டம் கொண்டு பொறுத்தாற்றுதலே தலையான பண்பு.

சிலுவையில் இயேசுவின் கண்ணோட்டம்

உரோமைப் போர் வீரர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு சிலுவையில் அறைந்தபோதும் அவர்கள் மீது காட்டிய கண்ணோட்டம், பிதாவை நோக்கிப் பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் (லூக். 23:34) என வேண்டிக்கொண்டது. இதுவே பகைவர்களுக்காகக் கொள்ளும் கண்ணோட்டம்.

அடியவர்க்கும் வழி அதுவே

அவர் வழியில் நடக்கும் சான்றோர்க்கும் இதுவே வழி. ஏனென்றால் இயேசு "நானே வழி" என்றார். இதுவே கண்ணோட்டத்தின் பாதை. இதைப் பூரணப்படுத்தும் முறையில் ஐந்தவித்தான் (இயேசு பெருமான்) மனிதருக்காகத் தம்மையே பலியாக்கினார்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவர்

(அ. 58:10)

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் **(கு. 580)**

உலக மக்களுக்கு, நயத்தக்க நாகரிகமாம் மன்னிப்பை அருளும் படிக்கு (ஊற்றப்படுவதைக் கண்டபோதிலும்) பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவர் உலக இரட்ச கரான இயேசு பெருமானே ஆகும்.

வரலாற்று நிகழ்ச்சி

குமாரனாகிய கடவுள் உலகில் அவதரித்து இவைகளைச் செய்து நிறைவேற்றியது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். இது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியல்ல. கடவுள் திட்டப்படி நிறைவேற்றப்பட்டதே ஆகும்.

நஞ்சினை ஏற்றுக்கொள்ளுபவர்

உண்மை நாகரிகத்தை விரும்புபவர்ப் பிறருக்காகத் துன்பமாகிய நஞ்சினை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார்கள். சிலுவை மரணத் துக்கு முன் இயேசு பெருமானின் நஞ்சுண்டல் உலகத்திலுள்ள எல்லா மனிதருக்காகவும் நிறைவேற்றப்பட்டது. அது அவர் தம்மை மனம் உவந்து மரணத்துக்கு ஒப்படைத்துக் கருமம் சிதையாமல் மனுக்குலம் முழுவதிலும் கண்ணோடிய செயலாகும்.

பாவமாகிய நஞ்சை உண்டவர்

அவர் சிலுவையில் அடிக்கப்படுவதற்கு முந்தின இரவில் உலக மக்களின் மீறுதலாம் பாவம் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு, ஒரு பாத் திரத்தில் அவர் முன் ஊற்றப்பட்டு வைக்கப்படுகிறது. கொல்லும் நஞ்சாகிய அப்பாவம் அழிக்கும் தன்மையுடையது. பாவமாகிய நஞ் சினால் அழிக்கப்படவிருக்கும் மக்கள்மீது இறைவன் அன்பு கூர்ந்ததி னால் அவர்களை விடுவிக்கும்பொருட்டு அந்த நஞ்சினைத் தாமே உண்ண ஆயத்தமாகிறார். இங்கு அவரை மனித நிலையிலும் இறை நிலையிலும் உணர முடியும்.

நஞ்சு பெயப்பட்ட பாத்திரம்

“பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணா திருப்பேனோ?” (யோ. 18:11). வியாழன் இரவு கெத்சமனே தோட்டத் தில், “இயேசு சற்று அப்புறம் போய், முகம் குப்புற விழுந்து என் பிதாவே,

இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத் தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார் (மத். 26:39).

அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய் என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக் கடவது என்று ஜெபம் பண்ணினார் (மத். 26:42).

நஞ்சுண்டமைவர்

"நஞ்சுண்டமைவர்" என்ற வள்ளுவர் கூற்றும் இங்குக் கவனிக்கத் தக்கதாகும். நஞ்சுண்டழிவர் என்று கூறாமல், நஞ்சுண்டபோதிலும் அழியாமல் சிறப்பாய் அமைவர் என்பதும் இயேசு பெருமான் ஒருவ ருக்கே பொருத்தமானதாகும். அவர் ஒருவரே மரித்தபின் உயிர்த்தெ ழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் சிறப்பாய் உட்கார்ந்து இருப்பவர்.

இயேசு கூறியதாவது, நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியால் பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத் தில் பெற்றுக் கொண்டேன் என்றார்" (யோ. 10:15-19).

சுருக்கம்

அன்பை அறிந்து, அதைப் பெற்று, அன்பாய் மாறி, தன் கருமத் திற்கும் பிறர் பழிக்கும் நாணி, ஒப்புரவையறிந்து, கண்ணோட்டத்தால் பிறர் பொருட்டு நஞ்சும் உண்டு அமையும் தன்மைபெற்றவரே சான்றோர்.

உலகனைத்திற்கும் அவரே

"நான்.... ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும் (யூதரல்லாத மற்றெல்லா ஜனங்கள்). அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோ. 10:15, 16) என்று இயேசு கூறினார்.

அதிகாரம் : 24

சான்றோர் பண்புகள் - 5. வாய்மை

வள்ளுவர் கூறும் சால்பூன்றிய தூண்களில் ஐந்தாவது தூண் வாய்மை என்பதாகும். இதைத் தமது 30-வது அதிகாரத்தில் வள்ளுவர் விளக்குகிறார்.

வாய்மை என்பது என்ன?

வாய்மைக்கு பரிமேலழகர் வாயினால் சொல்லப்படும் மெய் என்று பொருள் கொள்ளுகிறார். மெய் மூன்று வகையால் செயல் படுகிறது. மனோ வாக்குக் காயம்.

மனம் (உள்) + மெய் = உண்மை

வாய் (வாக்கு) + மெய் = வாய்மை

காயம் (மெய்) + மெய் = மெய்மை

மெய்யை, 1) உள்ளத்தால் எண்ணுதல் = உண்மை

2) வாயால் பேசுதல் = வாய்மை

3) மெய்யால் செயல்படுத்துவது = மெய்மை

மெய் என்பது என்ன?

(அ. 30:5)

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை (கு. 295)

என்கிறார் வள்ளுவர். உள்ளத்தோடு இணைந்து இந்த மெய்யை வாயினால் கூறினால் அது சிறந்த தவத்தைவிட மேல் என்கிறார்.

உயர்வுதரும் மெய் எது?

'செய்வாரின், மொழியில் தலை' என்றால், சொல்வது செய்வதை விட மிக உயர்ந்தது என்று பொருள். இவ்வளவு உயர்வு தரும் மெய் எது? பொதுவான கருத்துப்படி 'நடந்ததை உள்ளபடியே சொல்வது' என்ற பொருள் இதற்குப் பொருந்துமா?

விளக்கம்

ஒரு நாட்டின் வீரமிக்க அரசன் ஒருவன் இருந்தான். அவன் கொடிய காரியங்களைச் செய்வான். தான் செய்தவற்றை உள்ளபடியே சொல்லுவான் என்று வைத்துக் கொள்வோம். அவனைக்குறித்து, தவத்தொடு தானம் செய்வோரின் தலை, எனக் கூற முடியுமா? முடியாது. எனவே வாய்மை மொழிதல், என்பது நடந்ததை நடந்தபடியே கூறுதல் அல்ல.

வாயினால் சொல்லும் மெய்

அப்படியானால் வள்ளுவர் கூறும் வாயினால் சொல்லும் மெய் எது? அது என்றும் அழியா ஆதி காரணமாக விளங்கும் மெய்ப் பொருளாகிய இறைவனே ஆகும். அவ்விறைவனை உள்ளத்தால் எண்ணுவது - உண்மை; அவன் புகழை, வாயால் மொழிதல் - வாய்மை; அவன் ஏவலை மெய்யால் செய்வது - மெய்மை.

வாய்மை என்பது என்ன?

(அ. 30:1)

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இல்லாத சொலல் *(கு. 291)*

வாய்மை எனக் கூறப்படுவது யாதெனில், யாதொரு தீமைக்கும் இடமில்லாத இறைவனின் புகழை வாயினால் சொல்லுதலே ஆகும்.

சான்றோரின் குணங்களாக அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் ஆகிய நான்கினைக் கூறிய வள்ளுவர் இறுதியாக இந்த வாய்மையை வைக்கிறார். உள்ளத்தில் இறைவனை உணர்ந்தவர்கள் அந்த இன்ப அனுபவத்தைத் (இறை இன்பத்தை) தங்களுக்கு மட்டும் வைத்துக்கொள்ளாமல் உலக மக்கள் யாவருக்கும் எடுத்துச்செல்ல வேண்டும்.

இவ்வாறு அந்தச் செய்தியைச் சான்றோர்கள் அறிவிக்கும் நிலையே வாய்மை ஆகும். இந்த வாய்மையைக் கிறிஸ்தவ மக்கள்

நற்செய்தி அறிவித்தல், சாட்சி கூறுதல், சுவிசேஷம் அறிவித்தல் என்று அழைக்கிறார்கள்.

பொய்மை என்றால் என்ன ?

வாய்மைக்கு மாறானது பொய்மை. யாதொருவன் தன் உள்ளத்தில் இறைவனை உணராமல், தன் உள்ளத்தில் இல்லாத இறைவனை வாயால் மட்டுமே மற்றவர்களுக்குக் கூறுகிறானோ, அவன் பொய்யன் அவன் கூறுவது பொய்மை.

பொய்மையும் வாய்மையாய் எண்ணப்படுமா?

(அ. 30:2)

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் **(கு. 292)**

பொய்யின் தன்மை தீமையை விளைவிப்பதே. ஆனால் தீமைக்குப் பதில் நன்மையை விளைவிக்கும் பொய்மை உண்டா ? அதிலும் சிறப்பாகப் புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்மை உண்டா ? இருக்குமாயின், அது பொய்மையே என்றாலும், புரைதீர்ந்த நன்மை பயக்கும் காரணத்தால் வாய்மையின் இடத்தில் எண்ணப்படலாம் என்கிறார் வள்ளுவர்.

இறைப்பணியாளர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களில் ஒருவன் தான் இறைவனை உள்ளத்தால் உணராவிட்டாலும் தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் பொருட்டு இறைவனைப் பற்றிக் கூறு கிறான். இது நிச்சயமாக பொய்மையே ஆகும். ஆனால் அதனால் ஒருவன் நற்செய்தியை ஏற்றுக்கொண்டால்.....?

தன்னெஞ்சே தன்னைச்சுடுவது எப்போது?

(அ. 30:3)

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும் **(கு. 293)**

மேலே சொல்லப்பட்ட மெய், சொல்பவரின் உள்ளத்தின் தன்மை யாகிய பொய்யின் காரணமாக பொய்மை ஆகிறது. இங்கே பொய்யி னால் நன்மை ஏற்பட்டாலும், அந்தப்பொய் வாய்மையின் சிறப்பு பெற்றதாயிருப்பினும், பொய், இழிவானதே.

அந்தப்பொய் இருக்கும் நெஞ்சும் இழிவானது. தாம் அறிந்து உணராத இறைவனைப்பற்றிக் கூறிய காரணத்தால் அவர் கூற்றும்

பொய்யே. பொய்யை வெளிப்படுத்திய நெஞ்சம் நிச்சயமாய் பாதிக்கப் படும். புறத்திலிருந்து அவனுக்குத் தீமை ஏற்படாவிட்டாலும் அகத்தி லிருந்து தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

இறைவனை உள்ளத்தில் உணர்ந்து கூறுதல்

(அ. 30:4)

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன் *(கு. 294)*

வாய்ச்சொல்லில் மட்டுமல்ல உள்ளத்திலும் பொய்யாது ஒருவன் ஒழுகக்கூடுமானால், அப்படிப்பட்டவன் உலகில் உள்ள யாவரின் உள்ளத்திலும் உலவும் மேன்மையை அடைகிறான். அதாவது இறைவனை உள்ளத்தில் உணர்ந்து கூறுதலே உயர்ந்த உள்ளங்களில் எல்லாம் இடம் பெறுவதற்கான வழி.

மொழிக்கும் மேலாக உள்ளத்தால் இணைந்து ஒருவருடன் ஒருவர் உரையாடுவது மேலானநிலை. இந்நிலையினை அடைந்தவர்கள் எந்த உள்ளத்துடனும் உறவாட முடிகிறது. ஆகவே மொழியிலும் சிறந்தது உள்ளம்.

தவம் தானம் ஆகியவற்றிலும் சிறந்தது எது?

(அ. 30:5)

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. *(கு. 295)*

ஒருவன் மெய்ப்பொருளாம் இறைவனை, மனத்தொடு வாயி னால் மொழியின், (அதாவது கூறுவானே ஆனால்) அவனே தவமும் தானவும் செய்த பெரியோரிலும் சிறந்தவன். ஏனென்றால் தான் அறிந்த நற்செய்தியை அறிவிப்பது அவனுக்கு நன்மை அளிப்பதோடு, அதைக்கேட்கிறவனைப் பேரின்பவீட்டிற்கு வழிநடத்துகிறது.

ஒருவனுக்குப் புகழ் தருவது என்ன ?

(அ. 30:6)

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். *(கு. 296)*

இறைவனின் புகழினை உள்ளபடியே உணர்ந்து பொய்க்காது கூறுவதை விட ஒருவனுக்கு இந்த உலகத்தில் புகழ்தரக்கூடியது வேறில்லை. அதுவே மறுமைக்கேற்ற எல்லா அறத்தையும் தரும்.

ஒருவன் ஓயாமல் செய்ய வேண்டியது என்ன ?

(அ. 30:7)

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. *(கு. 297)*

ஒருவன் ஓயாமல் செய்ய வேண்டியது சான்று கூறுவது ஒன்றே. சான்று கூறுதலை உள்ளத்தால் பொய்யாது, செய்து கொண்டே இருந்தால் பிறஅறம் செய்யாமலிருந்தாலும், அதுவே எல்லா அறத்தையும் தரும்.

மற்றவர்களுக்கு சான்று பகர இன்னமும் உள்ளம் பக்குவம் அடையவில்லையே என்று எண்ண வேண்டாம். இந்நிலையே பக்கு வமடைந்த நிலை. உண்மை ஏக்கத்தோடு சான்று கூறுக. அதுவே மேலும் மேலும் அகத்தின் அக்கினியாய்ச் சுத்தப்படுத்தும்.

ஒருவனுக்கு அகத்தூய்மை அமைவது எப்படி ?

(அ. 30:8)

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். *(கு. 298)*

ஒரு சான்றோன் தூய்மையாக்கப்பட்டவன் என்று வெளிப் படையாகக் காட்டுவதற்குப் பயன்படுவது ஞானஸ்நானம். அதாவது தண்ணீரால் உள்ள ஸ்நானம். அதாவது வெளிப்படை சுத்தீகரிப்பு ஆனால் அகத்தூய்மைக்கு அவன் செய்ய வேண்டியது சான்று பகருதல் ஆகும்.

திருமுழுக்குப் பெற்ற ஒருவன் வெளிப்படையாகச் சுத்தமுள்ள வனாக அங்கீகரிக்கப்படுகிறான். அவன் சபையில் சேர்க்கப்படுகிறான். ஆனால் உண்மையான அகச்சுத்தம் அவன் தன் வாயினால் மெய்யாகிய இறைவனை அறிக்கை செய்து நற்செய்தி அறிவிக்கும்பொழுது ஏற்படு கிறது. அகத்தூய்மை அறிவிக்கும் கருவியாய் விளங்குவது வாய் மையே (நற்செய்தி அறிவித்தலே) ஆகும்.

சான்றோர்க்கு ஏற்ற - விளக்கு பொய்யா விளக்கு

(அ. 30:9)

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. *(கு. 299)*

வாய்மையுடைய சான்றோர் விளக்குக்குச் சமமாய் விளங்குகிறார்கள். விளக்கு தான் ஒளியாய் விளங்குவதோடு தன்னைச் சுற்றியுள்ள பொருள்களையும் ஒளிரச் செய்கிறது. அவ்வாறே சான்றோர் தாங்கள் தூய்மையாய் விளங்குவதோடு, தங்கள் வாய்மையினால் மற்றவர்களையும் தூய்மைப்படுத்துகிறார்கள்.

பொய்யா விளக்கு

சான்றோர்க்கேற்ற விளக்காய் விளங்குவது, பொய்யாதிருத்தல் ஆகிய விளக்கே ஆகும். உள்ளத்தில் இறைவனை உணராத ஒருவன் இறைவனைப்பற்றிச் சான்று பகர்ந்தால் அது பொய்யே ஆகும். எனவே விளக்காக விளங்கும் சான்றோர்களுள், பொய்யாதவர்களான சான்றோராம் விளக்கே சரியான விளக்கு.

வள்ளுவர் கண்டவற்றில் சிறந்தது எது?

(அ. 30:40)

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. **(கு. 300)**

திருக்குறளில் மூன்று இடங்களில் மட்டுமே திருவள்ளுவர் தம் அனுபவத்தை விளக்கிக் கூறுகிறார். (அவையாவன : கு. 61, கு. 300, கு. 1071) இங்கு அவர் கூறும் போது நான் மெய்யாய்க் கண்டவை பல உண்டு. அவற்றுள் வாய்மையைப்போல நல்லது வேறொன்றும் இல்லை என்கிறார்.

சிறப்பானது ஏன் ?

பிற எல்லாம் ஒருவருக்கே பயன்படுவது. தான் அடையும் பேரின்பத்தை மற்றவர்களுக்கு மறைக்காமல் அறிவிப்பதே வாய்மை.

நற்செய்தி அறிவிப்பதன் (வாய்மையின்) அவசியம்

"அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக்குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப் படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே... ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" *(ரோம. 10:14-17)*.

சான்று கூறுதல்

தேவகுமாரனின் நற்செய்தி உலகம் முழுவதும் அறிவதற்கும், நம்புவதற்கும், பின்பற்றுவதற்கும், மீட்பு அடைவதற்கும், பேரின் பத்தை அடைவதற்கும் அடிப்படையாய் விளங்குவது மெய் ஆகிய இறைவனை வாயினால் அறிவித்தலாகிய வாய்மை என்னும் சான்று கூறலே ஆகும்.

இயேசுவின் கடைசிக் கூற்று

“ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசியுங்கள்” *(மத். 28:19,20).*

(மேலும் விளக்கங்களுக்கு Dr. M. தெய்வநாயகம் அவர்களின் “சான்றோர் யார்?” என்ற நூலைக் காண்க)

அதிகாரம் : 25

மீட்கப்பட்டவர்கள் இறைவனோடு

(விவிலியம்)

குமாரனாகிய கடவுள் இவ்வுலகத்தில் வந்து தம்மையே பலியாக்கி மனுக்குலத்துக்குப் பெற்றுத்தந்ததே இரட்சிப்பு என்னும் பொய்தீர் ஒழுக்கநெறி. அந்த அறவழியில் செல்லும் மாந்தர்கள் சென்றடைவதே பேரின்ப வீட்டின் நீடுவாழ்வு. அந்த இரட்சிப்பாகிய அறவழியில் செல்லாதவர்கள் சென்று அடைவது நித்திய மரணமாகிய இருள் (நரகம்) ஆகும். திருவள்ளுவர் தமது 38-வது குறட்பாவில்

(அ. 4:8)

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல் *(கு. 38)*

என்கிறார். அதாவது ஒருவன் தன் வாழ்நாட்களை வீணாக்காமல் ஐந்தவித்தான் காட்டிய இரட்சிப்பாகிய அறவழியில்நடப்பானாகில் அதுவே அவனுக்கு நரகத்துக்குச் செல்லும் வழியை அடைக்கும் கல்லாக நிற்கும் என்கிறார். அவனோ பேரின்ப வீட்டில் நீடுவாழ்வுக்காகச் சென்று விடுவான்.

இருவழிகள்

இங்கே நாம் இருவழிகளைப் பார்க்கிறோம். ஒன்று பேரின்ப விட்டிற்குக் கொண்டு செல்லும் இரட்சிப்பு (மீட்பு) என்னும் அறவழி. இவ்வழியாய் செல்பவர்கள் நீடுவாழ்வு பெற்று நித்திய பேரின்பத்தில் இறைவனோடு மகிழ்ந்திருப்பார்கள்.

மற்றொரு வழி இருளாகிய நரகத்தில் சேர்க்கும் மலமாகிய பாவக்கேட்டின் வழி. அவ்வழியாய்ச் செல்பவர்கள் நித்திய இகழ்ச்சியடைந்துத் துன்புறுவார்கள்.

விவிலியம் கூறுவது

விவிலியமும் இவ்விரு வழிகளைக் குறித்து விளக்குகிறது. "கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலவுமாயிருக்கிறது. அதின்வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் (நீடுவாழ்வு) போகிற வாசல் இடுக்கவும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" *(மத். 7:13,14).*

இரு இடங்கள்

இந்த இருவழிகள் கொண்டு சேர்க்கும் இரு இடங்களையும் இங்குக் காணமுடிகிறது. ஒன்று நீடு வாழ்வு பெறும் பேரின்ப வீடு. மற்றொன்று நித்திய இருளாகிய எரி நரகம்.

இரு கூட்டம் மக்கள்

மறுமையில் அடையவிருக்கும் இரு இடங்களையும் அவ் விடங்களுக்குக் கொண்டு செல்லும் இரு வழிகளையும் பார்த்தோம். அவ்வண்ணமே இருவழிகளில் செல்லும் இரு கூட்டம் மக்களையும் இன்று உலகத்தில் நாம் பார்க்கிறோம்.

ஒன்று குமாரனாகிய கடவுள் அருளிய இரட்சிப்பைப் (ஒழுக்கம் அல்லது அறம்) பெற்றுக்கொண்ட கூட்டம். விவிலியம் இவர்களை மீட்கப்பட்டவர்கள் என்றும், திருக்குறள் இவர்களைப் பொய்தீர் ஒழுக்கநெறியில் நிற்பவர்கள் என்றும், சைவ சித்தாந்தம் இவர்களை மலமாகிய பாவம் கழுவப்பட்டவர்கள் என்றும் அழைக்கிறது. மற்றொன்று அந்த இரட்சிப்பை வேண்டாமென்று விட்டுவிட்ட கூட்டம்.

எப்பேர்ப்பட்ட மனிதனாயிருந்தாலும் மேலே கூறப்பட்ட இரு கூட்டங்களில் ஒன்றில் சேர்ந்தே ஆக வேண்டும். அவன் இவ்வுலகத்தில் இருக்கும்போது, எந்தக் கூட்டத்தில் சேர்கிறான் என்பதைப் பொறுத்து அவனது மறுமை வாழ்வுக்கு அது வழிவகுக்கும்.

பேரின்ப வழ்வுகுறித்து
விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம்

இந்த மகிமையான பேரின்ப வாழ்வைப் பரலோக வாழ்வு, மோட்ச வாழ்வு, பேரின்ப வாழ்வு, நித்திய வாழ்வு, மேலோக வாழ்வு என்றெல்லாம் அழைக்கிறார்கள்.

சிற்றின்பவும் பேரின்பவும்

சந்தோஷம் நிறைந்த இந்த மேலோக இன்பத்தை அடைய விரும்புவோர் இவ்வுலகத்திலேயே அதற்கு ஆயத்தப்பட்டு இறைவனோடு நெருங்கி அவ்வின்பத்தை அடைய ஆசைப்படுகிறார்கள். இவ்வுலக இல்வாழ்க்கையில் கிடைப்பது சிற்றின்பம். மேலோக இல் வாழ்க்கையில் கிடைப்பது பேரின்பம். இவ்வுலக இல்வாழ்க்கையில் ஆண் பெண் இருபாலரை இன்பத்தில் இணைப்பது காதல் எனலாம். மேலோக வாழ்க்கையில் அதாவது பேரின்ப வாழ்வில் சபை அல்லது மீட்கப்பட்டவர்களைக் கடவுளோடு இணைப்பது பேரின்பக் காதல் எனக் குறிப்பிடப்படுகிறது.

பேரின்பக் காதல்

இறைவனின் அருள்பெற்றவர்கள் அவர் அன்பைச் சுவைக்க ஆரம்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட (மனிதனுக்கும்) ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் இடையில் ஓர் நெருக்கம் ஏற்படுகிறது. இது மனிதனின் பூலோக வாழ்க்கையிலேயே ஏற்படுகிறது. அந்த உறவினால் ஏற்படும் இன்பமும் பெருகிக் கொண்டே வருகிறது. ஆனால் அந்த இன்பம் இவ்வுலக வாழ்க்கையில் நிறைவு பெறுவதில்லை. மாறாக, இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் மறுமையில் மட்டுமே நிறைவு பெறுகிறது. இவ்வாறு ஒரு ஆன்மா இறைஅன்பை ருசிக்க ஆரம்பித்தபின் மறுமையில் இறைவனோடு இணைந்து பேரின்பம் அனுபவிக்குமட்டும் அந்த ஆன்மா இறைவனோடு அனுபவிக்கும் இன்பத்தை வெளிப்படுத்துவதே பேரின்பக் காதல் என்பது.

பேரின்பக் காதலனும் காதலியும்

இறைவன் மக்களின் அகக்கண்களைத் திறந்து அவர் அன்பைச் சுவைக்கச் செய்கிறார். இவ்வாறு ஆன்மாவுக்கும் அல்லது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்படும் இத்தகைய உறவு ஒரு நீண்ட கால உறவாகிவிடும். ஏனென்றால் இவ்வுறவினால் கிடைக்கும் பேரின்பம் முழுமையாக இவ்வுலக வாழ்வுக்குப் பின்னால் மட்டுமே ஏற்படுகிறது.

எனவே இவ்வுலகத்தில் ஆன்மா (மனிதன்) பேரின்பக் காதலியாகவும் இறைவன் பேரின்பக் காதலனாகவும் சித்திரிக்கப்படுகிறார்கள்.

சிற்றின்பக் காதலால் விளக்கப்படுகிறது

மனிதனை (ஆன்மாவை) பேரின்ப நிலையில் தம்மோடு சேர்த்துக்கொள்ள இறைவன் நயம்காட்டி இழுத்துக் கொள்வதையும்.

அவ்வாறு இழுக்கப்பட்ட ஆன்மா இறைவனின் அன்பில் மதிமயங்கி இறைவனையே பற்றிக் கொண்டு பேரின்பத்தை அடைய ஏங்கித்தவிப்ப தையும், ஆனால் நித்தியமான பேரின்ப வாழ்வு முழுமையாய் இவ்வுல கில் கிட்டாமல் இருப்பதால் ஆன்மாவுக்கு ஏற்படுகின்ற மன உளைச் சில்களையும் அந்நேரங்களில் கடவுள் தமது பேரன்பினால் ஆன் மாவைத் தழுவிக் கொள்ளும்போது ஆன்மாவுக்கு ஏற்படுகின்ற ஆனந்த உணர்ச்சிகளையும் உள்ளபடி விவரித்தல் கூடாத காரியம்.

எனவே அந்நிலைகள் இவ்வுலக இன்பங்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படும் காதலர்களின் இன்பத்தைக் கொண்டு விளக்கப்படுகிறது. அதாவது சிற்றின்பக் காதல் நிகழ்வுகளைக் கொண்டு பேரின்பக்காதல் விளக்கப்படுகிறது. இவ்விதத்திலுள்ள விளக்கங்கள் விவிலியத்திலும் திருக்குறளிலும் காணப்படுகிறது.

விவிலியத்தில் பேரின்பக் காதல் விளக்கம்

விவிலியப் பழைய ஏற்பாட்டில் சாலொமோன் ஞானியால் எழுதப்பட்ட புத்தகங்களில் ஒன்று உன்னதப் பாட்டு என்பதாகும். அந்த நூலில் பேரின்பக் காதலனாக இறைவனும் பேரின்ப காதலியாக ஆன்மா அல்லது மனிதனும் கூறப்பட்டுள்ளனர். இந்த விவிலியப் பகுதி திருக்குறளின் மூன்றாவது பகுதியான இன்பத்துப்பாலோடு மிகவும் இசைந்ததாகக் காணப்படுகிறது. இங்கே இறைவனைக் காதலனாகவும், ஆன்மாவைக் காதலியாகவும் கொள்ளலாம். புதிய ஏற்பாட்டில் இயேசு மணவாளனாகவும் சபை மணவாட்டியாகவும் சித்திரிக்கப்படுகிறது.

உன்னதப்பாட்டின் சில பகுதிகள்
(நேசரும் அவர் அன்பால் இழுக்கப்பட்ட காதலியும்)

நேசரின் முத்தங்கள்

"அவர் (நேசர்) தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடு வாராக; உமது நேசம் திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது. உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது. ஆகையால் கன்னி யர்கள் உம்மை நேசிக்கிறார்கள். என்னை இழுத்துக் கொள்ளும்; உமக்குப் பின்னே ஓடி வருவோம்; ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக் கொண்டு வந்தார். நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்; திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப் போம்; உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்"..... *(உ.பா. 1:2-7)*

நேசரின் அன்பு மொழிகள்

ஸ்திரீகளில் ரூபவதியே! அதை நீ அறியாயாகில், மந்தையின் காலடிகளைத் தொடர்ந்து போய் மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக் குட்டிகளை மேய விடு. என் பிரியமே! பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன். ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாயிருக்கிறது. வெள்ளிப் பொட்டுகளுள்ள பொன் ஆபரணங்களை உனக்குப் பண்ணுவோம். (உ.பா. 1:8-11).

நேசரின் வாசனை

ராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளத தைலம் தன் வாசனையை வீசும். என் நேசர் எனக்கு என் ஸ்தனங்களின் நடுவில் தங்கும் வெள்ளைப்போளச் செண்டு. என் நேசர் எனக்கு எங்கேதி ஊர் திராட்சைத் தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றிப் பூங்கொத்து. (உ.பா. 1:12-14)

காதலியின் அழகு

என் பிரியமே! நீ ரூபவதி; நீ ரூபவதி; உன் கண்கள் புறாக் கண்கள். (உ.பா. 1:15)

நேசர் இன்பமானவர்

நீர் ரூபமுள்ளவர்; என் நேசரே! நீர் இன்பமானவர்; நம்முடைய மஞ்சம் பசுமையானது. நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம். நம்முடைய மச்சு தேவதாரு மரம். (உ.பா. 1:16, 17)

சாரோனின் ரோஜா - லீலி புஷ்பம்

நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பவுமாயிருக்கிறேன். முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் எப்படி இருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள். (உ.பா. 2:1,2)

நேசத்தால் சோகமடைந்தேன்

காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படி இருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார். அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன். அதின் கனி என் வாய்க்கு மதுர

மாயிருக்கிறது. என்னை விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார். என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே. திராட்ச ரசத்தால் என்னைத் தேற்றுங்கள்; கிச்சிலிப் பழங்களால் என்னை ஆற்றுங்கள்; நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்; அவர் இடது கை என் தலையின் கீழ் இருக்கிறது; அவர் வலது கை என்னை அணைத் துக் கொள்ளுகிறது. *(உ.பா. 2:3-6)*

நேசரை எழுப்பாமலிருக்க ஆணை

எருசலேமின் குமாரத்திகளே எனக்குப் பிரியமானவளுக்குப் பிரியமாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பா மலுமிருக்கும்படி வெளிமான்கள் மேலும் வெளியின் மலைகள் மேலும் உங்களை ஆணையிடுகிறேன். *(உ.பா. 2:7)*

என் ரூபாவதியே எழுந்து வா

இது என் நேசருடைய சத்தம்! இதோ அவர் மலைகள் மேல் குதித்தும், மேடுகள் மேல் துள்ளியும் வருகிறார். என் நேசர் வெளிமா னுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறார்; இதோ, அவர் எங்கள் மதிலுக்குப் புறம்பே நின்று, பலகணி வழியாய்ப் பார்த்து, கிராதியின் வழியாய்த் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார். என் நேசர் என் னோடே பேசி, என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்து வா. இதோ மாரிகாலம் சென்றது; மழை பெய்து ஒழிந்தது; பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது; குருவிகள் பாடுங்காலம் வந்தது; காட்டுப் புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது. அத்திமரம் காய் காய்த்தது; திராட்சக் கொடிகள் பூ பூத்து வாசனையும் பரிமளிக்கிறது. என் பிரியமே! என் ரூபவதியே! நீ எழுந்து வா ..... *(உ.பா. 2:8-15)*

அவர் என்னுடையவர் - நான் அவருடையவள்

என் நேசர் என்னுடையவர்; நான் அவருடையவள்; அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார். என் நேசரே, பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகும் வரைக்கும் நீர் திரும்பிக் குன்றும் பிளவுமான கன்மலைகளில் குதித்து வரும் கலைமானுக்கும் மரைகளின் குட்டிக் கும் சமானமாயிரும்.

இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன். தேடியும் நான் அவரைக் காணவில்லை. நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்து என் ஆத்தும நேச ரைத் தேடுவேன் என்றேன். தேடியும் நான் அவரைக் காணவில்லை.

நகரத்திலே திரிகிற காவலாளர் என்னைக் கண்டார்கள். என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா? என்று அவர்களைக் கேட்டேன்.

நான் அவர்களை விட்டுக் கொஞ்சத் தூரம் கடந்து போன உடனே என் ஆத்தும நேசரைக் கண்டேன். அவரை நான் என் தாயின் வீட்டிலும், என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டு வந்து விடுமட்டும் விடாமல் பற்றிக் கொண்டேன். (உ.பா. 2:16-17, 3:1-11)

உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது

நீ ரூபவதி! என் பிரியமே நீ ரூபவதி! உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக் கண்களாயிருக்கிறது. உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது. உன் பற்கள் மயிர் கத்திரிக்கப்பட்ட பின் குளிப்பாட்டப்பட்டு கரை யேறுகிறவைகளும் ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டைக் குட்டி ஈன்றவைகளுமான ஆட்டு மந்தை போலிருக்கிறது. உன் உதடு கள் சிவப்பு நூலுக்குச் சமானமும், உன் வாக்கு இன்பமுமாயிருக் கிறது. உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம் பழம் போலிருக்கிறது. உன் கழுத்து பராக்கிரமசாலிகளின் கேட கங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுதசாலையாக்கப் பட்ட தாவீதின் கோபுரம் போலிருக்கிறது. உன் இரண்டு ஸ்தனங்க ளும் லீலி புஷ்பங்களில் மேயும் வெளிமான்களின் இரட்டைக் குட்டிகளுக்குச் சமானம் .....

என் மணவாளியே உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது. உன் நாவின் கீழ் தேனும் பாலும் இருக்கிறது. உன் வஸ்திரங்களின் வாசனை லீபனோனின் வாசனைக்கொப்பாயிருக்கிறது. என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட கிணறுமாயிருக்கிறாய் ..... (உ.பா. 4 அதி)

தென்றலே வா

வாடையே எழும்பு! தென்றலே வா! கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு; என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக. (உ.பா. 4:16)

என் மணவாளியே நான் தோட்டத்தில் வந்தேன்

என் சகோதரியே, என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன். என் வெள்ளைப் போளத்தையும், என் கந்தவர்க்கங்க ளையும் சேர்த்தேன்..... (உ.பா. 5:1)

என் நேசர் போய்விட்டார்

நான் நித்திரை பண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன். என் சகோதரியே, என் பிரியமே, என் புறாவே, என் உத்தமியே கதவைத் திற; என் தலை பனியினாலும், என் தலை மயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார். என் வஸ்திரங்களைக் கழற்றிப் போட்டேன்; நான் எப்படி அதைத் திரும்பவும் உடுப்பேன்? என் பாதங்களை கழுவினேன, நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் என்றேன். என் நேசர் தமது கையைக் கதவு துவாரத்தின் வழியாய் நீட்டினார். அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது ..... *(உ.பா. 5:2)*

என் நேசருக்குக் கதவைத் திறந்தேன்; என் நேசரோ இல்லை, போய் விட்டார். அவர் சொன்ன வார்த்தையால், என் ஆத்துமா சோர்ந்து போயிற்று. அவரைத் தேடினேன். அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிட்டேன், அவர் எனக்கு மறு உத்தரவு கொடுக்கவில்லை. நகரத்தில் திரிகிற காவலாளர் என்னைக் கண்டு, என்னை அடித்து என்னைக் காயப்படுத்தினார்கள் ..... எருசலேமின் குமாரத்திகளே என் நேசரைக் கண்டீர்களானால், நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுகிறேன் ..... *(உ.பா. 5:5-8)*

தோட்டங்களில் மேயவும், லீலி புஷ்பங்களைக் கொய்யவும், என் நேசர் தமது தோட்டத்துக்கும் கந்தவர்க்கப் பாத்திகளுக்கும் போனார்.

என் பிரியமே - திரும்பி வா -

என் பிரியமே.... உன் கண்களை என்னை விட்டுத் திருப்பு, அவைகள் என்னை வென்றது; ..... பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்கவும், திராட்சச் செடிகள் துளிர் விட்டு, மாதளஞ் செடிகள் பூத்ததா என்று அறியவும் வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன். நினையாததுக்கு முன்னே என் ஆத்துமா என்னை அம்மினதாபின் ரதங்களுக்கு ஒப்பாக்கிற்று. திரும்பி வா, திரும்பி வா, சூலமித்தியே நாங்கள் உன்னைப் பார்க்கும்படிக்குத் திரும்பி வா ..... *(உ.பா. 6:12,13)*

என் நேசரே வாரும், கிராமங்களில் தங்குவோம்

வாரும் என் நேசரே! வயல் வெளியில் போய் கிராமங்களில் தங்குவோம். அதிகாலையில் திராட்சைத் தோட்டங்களுக்குப் போவோம். திராட்சைச் செடி துளிர்த்து அதன் பூ மலர்ந்ததோ என்

றும், மாதளம் செடிகள் பூப்பூத்ததோ என்றும் பார்ப்போம். அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன் .....

ஆ! நீர் என் தாயின் பால் குடித்த என் சகோதரனைப் போலிருந்தீரானால், நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன்; என்னை நிந்திக்கவுமாட்டார்கள். நான் உம்மைக் கூட்டிக் கொண்டு என் தாயின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவேன் ..... அவர் இடது கை என் தலையின் கீழிருக்கும்; அவர் வலது கை என்னை அணைக்கும் ..... *(உ.பா. 8:1-3)*

தலைவன் தலைவி

கடவுளின் அன்பைப் பெற்றுக் கொண்ட ஆன்மா அல்லது மக்கள் அவர் அன்பை முற்றிலும் அடைய ஆசைப்படுவதையும் அதைத் தலைவன்-தலைவி என்ற உறவு நிலையில் சித்திரித்திருப்பதையும் இங்குப் பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டில்

புதிய ஏற்பாட்டில் இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து மணவாளனாகவும் அவருடைய இரத்தத்தால் மீட்கப்பட்ட சபை மணவாட்டியாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

இவ்வுலக - இல்

"கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" *(எபே. 5:23).* இது இவ்வுலக இல்.

மேலுலக - இல்

"..... இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன்" *(எபே. 5:31).*

அதாவது மணவாளனாகிய தேவகுமாரனோடு மணவாட்டியாகிய சபை சேர்ந்து எப்போதும் ஒன்றாயிருப்பதே இங்குக் காட்டப்படுகிறது. இது மேல் உலக இல்.

பேரின்ப வீட்டைக் குறித்து இயேசு

இரட்சகராகிய இயேசு சீஷரோடு கூறியதாவது : "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன், நான் போய் உங்களுக் காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத் திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" *(யோ. 14:2-3).*

இதுவே நித்திய வீடு. இது புதிய எருசலேம், பரம எருசலேம், மேலான எருசலேம், தேவனுடைய நகரம் என்றெல்லாம் அழைக்கப் படுகிறது.

இயேசுவின் வருகையைக் குறித்து பவுல்

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்..... அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும்..... அவரோடே கூட ஆகயாத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழு தும் கர்த்தருடனே கூட இருப்போம் *(1 தெச. 4:16-17).*

"......ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்போது மரித் தோர் (மீட்கப்பட்டவர்கள்) அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் (உயிரோடிருக்கும் மீட்கப்பட்டவர்கள்) மறுரூபமாக்கப் படுவோம் *(1 கொரி. 15:51,52).*

பேரின்ப வீட்டில் மீட்கப்பட்டவர்களின் காட்சி

"இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும். பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துச் சிங்காசனத்துக்கு முன் பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள் *(வெளி. 7:9-12).*

அதிகாரம் : 26

மீட்கப்பட்டவர்கள் பேரின்பத்தில்

(திருக்குறள்)

திருக்குறளில் மூன்றாம் பகுதியான இன்பத்து பால் உரையாசிரியார்கள் காலத்துக்கு முன்பு இன்பத்துப் பால் என்றே அழைக்கப்பட்டது இன்பத்துப் பாலுக்கு மோட்சத்தைக் குறித்த பேரின்ப பொருளும் உண்டு. இப்பகுதி இறைவன்பால் இழுக்கப்படும் ஆன்மா பற்பல இன்னல்களைத் தாண்டி இறைவனின் இன்பத்தைச் சுவைத்து இறுதியில் இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் இறைவனோடு இணைந்து பேரின்பத்தில் நீடுவாழ்வு பெறுவதைப் பேரின்பக்காதலன் காதலி என்ற நிலையில் விளக்கி மேல் உலகின் மகிமையைச் சிறப்பித்துக் காட்டுகிறது.

களவியல் கற்பியல்

இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்ற இருபகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. களவியலில் இறைவன் ஆன்மாவைக் களவாக (கவர்ச்சியால்) கொள்ளும் திறனும் கற்பியலில் பேரின்பத்தை நுகர்ந்து ஆன்மா அந்நிலையில் கற்பு காக்கும் திறணும் விளக்கப்படுகிறது.

உலகின்பக் காதலில் காதலன், காதலியாகிய ஆண் பெண் இருவரும் விளங்குகின்றனர் இறை இன்பக்காதலில் காதலன் யார் காதலி யார் என்பதில் அடிப்படை வேற்றுமை உண்டு. கிறிஸ்தவத்தில் திருச்சபையை (இறையடியவர்களை) மணவாட்டியாகவும் அல்லது நாயகியாகவும் கிறிஸ்துவை மணவாளனாகவும் அல்லது நாயகனாகவும் விளக்கப்படுகிறது. தமிழ்ப் பழைய மரபுப்படி இறைவனைப் பெண்ணாக உருவகிப்பதுண்டு. திருவள்ளுவர் கூற்றில் கடவுள் பெண்

என்ற பழங்கருத்து மிகுதியாகவும் ஆண் என்ற பிற்பட்ட கருத்து சில இடங்களிலும் காணப்படுகிறது.

திருவள்ளுவர் இன்பத்துப் பாலைச் சிறந்த முறையில் பேரின்பப் பொருளிலேயே இயற்றியுள்ளார். அவர் கற்பைத் தூய்மைப்படுத்தி ஆண் பெண் இருபாலர்க்கும் உரிமையாக்குகிறார். பொதுமகளிர் தொடர்பு தீயது என வலியுறுத்துகிறார். பேரின்பத்தை முதன் முதலில் விரிவாக விளக்கியவரும் திருவள்ளுவரே ஆவார்.

காமம்

காமம் என்பதற்கு விழைவு ஆசை, அவா, என்பன பொருள், துறவி காமத்தை நீக்க வேண்டும் காதலர் காமத்தைக் கொள்ள வேண்டும். இதுவே வள்ளுவர் கருத்து. இதிலே முரண்பாடு ஒன்றுமில்லை. நிறைவான இன்பம் ஏற்படுவதற்கான ஆசையாகிய விருப்பத்தைத் திருவள்ளுவர் காமம் என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

சிற்றின்பம் பேரின்பம்

இல் என்பதனுள் திருவள்ளுவர் சிற்றின்பம், பேரின்பம் இவை இரண்டையுமே அடக்கிகாட்டுகிறார். இவ்வுலகில் இருப்பது சிற்றின்பம். மேலுலகில் இருப்பது பேரின்பம். இவ்வுலக இல் வழியாக மேலுலக இல் - ஐ அடைகிறோம். இவ்வுலக இல்லில் வாழ் வாங்கு வாழ்பவர் (ஐந்தவித்தான் காட்டிய முறைபடி) மேலுலக இல்லை அடைந்தே தீருவார்கள். திருவள்ளுவர் முறையான சிற்றின் பத்தை வெறுப்பவர் அல்லர். சிற்றின்பத்தைக் கூறி அப்படியே விட்டு விடுபவரும் அல்லர். அவர் கூறும் சிற்றின்பம் தூய்மையானது. பேரின் பத்துக்கு வழியாய் இருப்பது பேரின்பத்தில் முடிவது. தூய சிற்றின்ப நெறி சேரும் இடம் பேரின்பமாகும். தமிழ் மொழி கூறும் அகப் பொருள் இலக்கண நெறியும் அந்நெறியே.

இன்பத்துபால், காமத்துப்பாலா ?

மேற் கூறிய சிறப்புகளையுடைய இன்பத்துப் பாலைப் பிற்கால உரை யாசிரியர்கள் காமத்துப் பால் என்றே அழைத்தார்கள். அவர்கள் காம வெறியை விளக்கும் நூலாகிய வாத்சாயனத்துடன் இன்பத்துப் பாலை இணைத்தனர். மட்டுமல்லாது திருவள்ளுவர் காமசூத்திரத்தைப் பின்பற்றி இன்பத்துப் பாலை எழுதினார் எனக்கூறி மக்களை நம்ப வைத்தனர். பின்பு அவர்கள் இன்பத்துப்பாலைக் காமத்துபால் ஆக்கி

விட்டனர். ஆனால் திருக்குறள் காமசூத்திரம் எழுதப்படுவதற்கு முன்பே எழுதப்பட்டபடியால் திருவள்ளுவர் காமசூத்திரத்தைப் பயன்படுத்த வாய்ப்பில்லை என்பதைக் கண்டுகொள்ளலாம்.

களவியல், கற்பியல் என்பவற்றில் கூறப்படுவன காமத்தைக் குறித்த களியாட்டுகள் அல்ல. மனிதன் அறிந்து புரிந்து கொள்ள வேண்டிய நுணுக்கங்கள் அங்குத் தரப்படுகின்றன. மட்டுமல்ல குடும்ப வாழ்க்கையினால் இறைவனை அடையும் மேலான நிலைகளும் கூர்ந்து படிக்கையில் புலப்படும்.

பேரின்பம் அடையும் நிலைகள்

திருக்குறளில் 109 முதல் 133 வரையிலான அதிகாரங்களில் திருவள்ளுவர் பேரின்பக்காதலன் பேரின்பக்காதலி ஆகியோர் தங்கள் காதலை வளர்த்துப் பெரிக்கி பேரின்பம் அடையும் நிலைகளைப் படிப்படியாக விளக்குவதை பார்க்கமுடிகிறது.

அன்பு வளர்தல்

தலைமகளது அழகு தன்னை வருத்துதலைத் தலைமகன் அழுத்தமாகக் கூறுகிறார் (அதி:109). தலைமகன் தலைமகளின் காதற்குறிப்பை அவளது பார்வையினாலும் செயல்களினாலும் அறிந்து கொள்கிறார் (அதி. : 110). தலைமகளும் தலைமகனும் ஒருவரையொருவர் நோக்குதலான் தொடங்கிய காதலில் அன்பின் உள்ளத்தால் ஒன்றுபடுகிறார்கள். (அதி. 111.). பேரின்பக்காதல் வலியுறுத்தப்படுகிறது (அதி. 112). இறைவனும் - ஆன்மாவும் பேரின்பக் காதலை (உறவு) உரைத் தல் (அதி. 113). பேரின்பப் பெருக்கினால் நாணத்தைக் கைவிட்டுக் கூறுதல் (அதி. 114). மறைவாக விளங்கும் பேரின்பக் காதல் (அதி: 115).

பிரிவினால் வருந்துதல்

தலைமகன் (ஆன்மா) தலைமகளைப் (இறைவனை) பிரிந்திருக்கும் பிரிவைத் தாங்கிக் கொள்ளாமை, அதாவது ஆன்மா உலகில் வாழும் வரை இறைவனை முற்றும் அடையாமல் பிரிந்தே இருக்க வேண்டியதால் அந்தப் பிரிவை ஆற்றவியலாமல் ஆன்மா வருந்துதலால் ‘பிரிவாற்றாமை’ என அழைக்கப்பட்டது (அதி. : 116). ஆன்மாவாகிய தலைமகன், இறைவனாகிய தலைமகளை நினைத்து ஏங்கித் தவித்தலால் உள்ளம் மெலிந்து வருந்துதல் (அதி. : 117). காதல் தவிப்பு அதிகரிக்க அதிகரிக்கத் தலைவி தலைவனை நேரில் காண ஆசைப்பட்டும், காண இயலாததால் வருந்துதல் (அதி. 118).

ஏக்கத்தால் வலிமை குன்றுதல்

விரும்பியவாறு இறைவனைக் காண இயலாமையால் ஏக்கம் அதிகரிக்க அதிகரிக்க உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் வெளிப் படையாகச் செழுமை, வலிமை, தெம்பு, ஆகிய பண்புகள் குறைதல் (அதி. 119). இறைவனுக்குத் தன்மீது கவலை எதுவும் இல்லை எனவும் தனக்கு மட்டும் இறைவன் மீது காதல் மிகுதியாக உண்டு எனவும் ஆன்மா (தனியாக) எண்ணி வருந்துதல் (120 : அதி.).

தவிப்பு

தொடக்கத்தில் இறைவன் தன்மீது காட்டிய காதலின் இன்பத் தைச் சுவைத்திருந்த ஆன்மா, இப்போது அந்த இனிமையை அடைய இயலாமல் தவிப்பதை நினைத்துத் தான் தனித்து விடப்பட்டதாக எண்ணி வருந்துதல் (அதி. 121). காதலனின் நினைவு மிகுதியால் எந்த நேரமும் அவனையே நினைத்து ஏங்குவதால் ஏற்படக்கூடிய மன நிலையே கனவுநிலை உரைத்தலாகும் (அதி. 122).

உடல் மெலிவு

ஆன்மாவுக்கு மாலைப் பொழுதெனப்படுவது, இறைவனாகிய தலைவனால் கைவிடப்பட்டதுபோல், தனிமையில் வேறு எந்த ஆறுதலும் துணையுமின்றி ஒளியாகிய மகிழ்ச்சி குன்றி, இருளாகிய துன்பம் வருவது போன்ற ஓர் நிலை! எப்பக்கம் செல்வதென அறியாமல் ஆன்மா திகைப்படையும் நிலை! இந்நிலையில் ஆன்மா வருந்துதலே பொழுது கண்டிரங்கல் (அதி : 123.)

பிரிவைத் தாங்கிக் கொள்ளாமல் நீண்ட தொலைவுக்குச் சென்று விட்ட காதலரின் நினைவு அதிகரிக்க, அதிகரிக்க, உடல் உறுப்புகள் மெலிந்து, சோர்வு கொண்டு உறுப்பு நலன் அழிதல் (அதி. 124.)

இறைவனின் பிரிவை ஆற்ற முடியாமலும், இறைவன் நீண்ட தூரம் சென்று விட்ட போது, தனக்கு உலகில் எவ்வித ஆறுதலும் கிடைக்காத நிலையில், என்ன செய்வதென்று அறியாமலும், ஆன்மா தன்னுள்ளத்தில் பலவாறு பேசிக் கொள்ளுதலே நெஞ்சோடு கிளத்தல். (அதி. 125.)

பேச்சில் தடுமாற்றம்

இறைவன் மீதுள்ள, விருப்பத்தால் (வேட்கையால்) ஆன்மா மனதுக்குள் அடக்கி வைக்க வேண்டிய செய்திகளையும் வெளியே எடுத்துச் சொல்லுதல் (அதி. 126). இறைவனும் ஆன்மாவும் ஒருவரை யொருவர் காண விரைந்து செல்லுதல். (127).

வெகு தொலைவிலிருப்பதாகத் தோன்றிய தலைமகனாம் இறைவன் ஆன்மாவுக்குத் தன்னை வெளிப்படுத்தும் போது (ஆன்மா வைச் சந்திக்கும் போது) ஒருவர் குறிப்பை மற்றவர்க்குச் சொல்லுதல் (அதி. 128.)

தன் காதல் நோயைக் குறிப்பால் உணர்த்தியும் காதலன் பிரிகின் றான். அதன் பிறகு, மீண்டும் என்று வருவானோ என்று புணர்வானோ (ஒன்றித்தல்) என்று ஆன்மா வருந்தி விரைந்து செல்லுதல். (அதி. 129.)

பிணங்குதல்

ஆன்மா, இறைவனை அடைய விரைந்து செல்லக் கூடிய நெஞ் சுடன் பிணங்குதல் (அதி. 130). ஆன்மா இறைவனோடு புலம்புதலும், இறைவன் ஆன்மாவோடு புலம்புதலும் (அதி : 131). தக்க காரணமில் லாமல் காதலர் பிணங்குதல் (அதி : 132.)

பேரின்பத்தின் கடைநிலை

வள்ளுவர், இன்பத்துப் பாலின் கடைசி அதிகாரத்தில் (அதி. : 133.) இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள பேரின்பக் காதலின் உச்சக் கட்டத்தை விளக்குகிறார். இவர்களிடத்தில் காணும் பிணக்கம் (ஊடல்) நீங்கியதும் ஏற்படும் இணைப்பு (கூடல்) மகிழ்ச்சியின் கடைநிலையானப் பேரின்பக் காதலின் கடைநிலையாகும்.

ஊடுதல் அன்பைப் பெருக்குகிறது

இறைவனிடம் குற்றம் எதுவுமே இல்லை. ஆனாலும் ஊடுதலா கிய சிறு பிணக்கம், அவரை நம்மிடத்தில் மேலும் அதிகமான அன்பு காட்டவைக்கிறது. அதாவது முன்பு இருந்த அன்பைவிட அதிகமான அன்பின் அருள் கிடைக்கிறது. பேரின்பத்தை வலுவுள்ளதாக்குகிறது. இந்த அருள் திட்டத்தினால் கிடைக்கின்ற மகிழ்ச்சி பலமடங்கு பெருகு கிறது. இந்நிலை பாவம் நீங்கிய ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் மட் டுமே பொருத்தமானதாகும் (குறள். 1321.)

பிணங்குவதால் உண்டாகும் துன்பம் மிகச் சிறியதேயாகும். பேரின்பக் காதலர் காட்டும் அன்பு குறைவது (வாடுவது) போலக் காணப்பட் டாலும் அந்த அன்பு பெருகுகிறது (குற. 1332.) அது தெய்வீக அன்பாய் மாறுகிறது. இதனினும் புத்தேள் நாடு உண்டா? என்கிறது குறள். ஒரு உவமையும் இங்குக் கூறப்படுகிறது. நிலம் என்பது ஆன்மா; நீர் என்பது இறைவன். ஆன்மாவும் இறைவனும் இணைந்தால்

அதுவே புத்தேள் நாடு. அதுவே பேரின்ப நிலை. நிலத்தில் நீர் கலப்பது போல ஆன்மாவுடன் இறைவன் ஒன்றாக இருக்கிறான். இப்பேரின்பக் காதலரிடம் ஊடல் என்ற பிணக்கத்தால் நிகழும் இன்பத்துக்கு இணையானது வேறெங்குமில்லை. மறுமை வாழ்வில் இத்தகைய பிணக்கம் இருக்காது. இவ்வுலகில் நம் ஆருயிரைக் காக்க வந்த இன்பப்பெருக்கு ஐந்தவித்தானாகிய இறைவன் ஆவார். சாதாரண அன்பெலல்லாம் அன்பாகிவிடாது. பிறருக்காகச் சிறப்பாக இறைவனுக்காகப் படுகின்ற துன்பமே அன்பிற்கு உன்னத அத்தாட்சியாகும். (குறள். 1323.)

தவிப்பால் அன்பு பெருகும்

இறைவனை இடைவிடாமல் அணைத்துக் கொள்வதற்காக ஆயத்தப்படுவது போன்றது இந்தப் பிணக்கம். இது மனித உள்ளத்தின் பாவ நிலையை உடைத்து இறைவனிடம் சேர்ப்பதற்கு கருவியாகி விடுகிறது. (குறள். 1324.)

இறைவன் எந்தத் தவறும் இல்லாதவர். ஆனால் எந்த நேரமும் இறைவனுடைய அன்பிற்காகவே ஏங்கி நிற்கின்ற ஆன்மாவுக்கும் ஊடல் (பிணக்கம்) நிகழ்வதுண்டு. இது மிக மிக நெருங்கிய காதல் இன்பம் நாடுவது ஆகும். பேரின்பப் பெருக்கத்தை நாடுகின்ற ஆத்துமா பேரின்பம் இல்லாமல் தவிக்கிறது. இத்தகைய நிலையால் அன்பு பெருகும் (குறள். 1325)

இறைவனோடுள்ள உறவு சலிப்பைத் தருவதில்லை

உணவு உண்பதில் மனிதனுக்கு இன்பமுண்டு. சாப்பிட்ட உணவு செரிக்காமல் உண்டு கொண்டே இருந்தால் அது கேட்டை உருவாக்கும். அது போல உடற்புணர்ச்சியில் ஏற்படுகின்ற சிற்றின்பமானது இறுதியில் துன்பத்தையே தரும். ஆனால் இவ்வுலகச் சிற்றின்பத்தைச் சாராத இறைவனோடுள்ள பேரின்பப் புணர்ச்சியில் இறைவனின் அன்பைப் பெற்று இன்புறும் விஷயத்தில் சலிப்போ வெறுப்போ ஏற்படுவதில்லை இறைவனேடு தொடர்பு அதிகரிக்கும் போது இன்பமும் அதிகரிக்கும் தன்மை கொண்டது பேரின்பக் காதல் உணர்வு.

துன்பத்தில் தான் ஆன்மா மேன்மையையும் பெருமையையும், நிறைவையும் அடைகின்றது. இதன் நிறைவே ஊடலாகிய பிணக்கத்திற்குப் பின்பு ஏற்படுகின்ற உவகையாகும். அதாவது ஆர்வமிக்க காதலுக்குக் கூடி மகிழ்வதை விட ஊடி (கூடாமல்) அன்பை வளர்ப்பது இன்பமானதாகும் (குறள் 1326.)

ஊடலுக்குப்பின் உவகை

இறைவனோடுள்ள பேரின்பக் காதலானது நிறைவு பெற்று இன்பமுறும் முயற்சியில் ஊடலால் தோற்றவர் போலக் காணப்பட்டாலும் இறுதியில் வெற்றி பெற்றது கூடலினால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் தெளிவாகப் புலப்படும்.

உலக காதலரை பொறுத்தவரை வெற்றியாக தொடங்கியகாதல் முடிவில் தோல்வியடைவதை கண்கூடாக காண்கிறோம். ஆனால் பேரின்பக் காதலை பொறுத்த அளவில் தொடக்கத்தில் கவர்ச்சியற்றதும் சலிப்பை தருவதுமாகவே தோன்றும். ஏனென்றால் பேரின்பம் வேண்டுமானால் சிற்றின்பத்தைகைவிடுதல் அவசியம் இறைவன் தரும் பேரின்பமோ தொடக்கத்தில் கசப்பு போல தோன்றினாலும் அதை அனுபவிக்க அனுபவிக்க இன்பம் பெருக்கெடுத்துக் கொண்டே இருக்கும். (குறள். 1327.)

பேரின்பக்காதலின் சிறப்பு

இறைவனும் ஆன்மாவும் கூடும் போது உண்டாகும் இனிமை பிணக்கத்தால் மறைந்து விடுகிறது. ஆனால் ஊடுதல் (பிணக்கம்) முடிந்த பின்பு நிகழக்கூடிய இன்பமானது பலமடங்காகும் என்ற காரணத்தால் அதையடைய வேண்டும் என ஏங்கி காத்திருப்பதில் கிடைக்கும் இன்பம் உப்பை போன்றது எனலாம். காத்திருந்து இணைந்த பின்னர் ஊடல் (பிணக்கு) இருக்க இடமில்லை. ஊடலின் போது அனுபவித்த துன்பத்தை கூடலில் (இணைவதில்) தோன்றும் இன்பத்துடன் ஒப்பிட முடியாது. இப்பாடலின் கருத்து இவ்வுலகப் பாடுகள் இனி வெளிப்படபோகும் மகிமைக்கு (மறுமையின்பம் - பேரின்பம்) ஒப்பிடதக்கவையல்ல என்ற விவிலிய கருத்தால் மேன்மையடைகிறது. (குறள் 1328)

ஆன்மாவின் கெஞ்சல்

ஆன்மா இறைவனோடும், இறைவன் ஆன்மாவோடுமுள்ள பிணக்கம் தீரும்படியாக தூய வெளிச்சம் நிறைந்த இறைவனோடு ஆன்மா இரந்து கெஞ்சி மன்றாடிக் கொண்டே இருக்க வேண்டும் பேரின்பமயமான இறைவன் நெருங்கி வருகின்ற காலத்தில் அதாவது இம்மை வாழ்வு முடிக்குமுன்னர் தன்னை எவ்வளவு தயார்படுத்திக் கொள்ளுவதற்காக மன்றாட (இரப்ப) முடியுமோ, அந்த அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும் இதனால் பேரின்பம் அதிகரிக்கிறது. (குறள். 1329.)

இறைவனோடு இணையும் பேரின்பம்

திருவள்ளுவர் தன் கடைசி குறட்பாவில் கூறும் 'காமம்' என்ற வார்த்தை ஆசை, ஆர்வம் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது இது பேரின்ப காதலின் பேரார்வ நிலையை குறிக்கிறது. இந்த பேரார்வத் துக்கு மேற்பட்ட இன்பமானது இறைவனோடு இணையும் நிலை யாகும். பிணங்குவதால் காதல் பெருகி இன்பம் அதிகரிக்கும். அதை விட மேலான இன்பமானது வாழ்க்கையின் இறுதியில் நீடுவாழ்வை அடையும்போது இறைவனோடு இணைந்து முடிவில்லா பேரின்பத்தை பெறுவதாகும்.

(அ. 133:10)

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்" ***(கு. 1330)***

'ஊடுதல் காமத்திற் கின்பம்' இங்கே காமம் என்ற சொல் ஆசை அல்லது ஆர்வம் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது. இது பேரின்பக் காதலின் பேரார்வ நிலையைக் குறிக்கிறது. ஊடுதல் என்ற சிறு பிணக்கம், காதல் வளர்ச்சிக்குத் தடையாயிராமல் பேரின்பக் காதல் பொங்கி வளர்வதற்கு ஊக்கம் ஊட்டுகிறதாய் மட்டுமல்ல, காதல் இன்பம் தருகிறதாய் விளங்குகிறது.

ஆனால் இந்த இன்பத்திற்கும் மேற்பட்ட பேரின்பம் ஒன்றுண்டு. அதுவே இறைவனோடு கூடி இணையும் (கூடி முயங்குதல்) பேரின்பம். ஆனால் இந்தப் பேரின்பம் எல்லாருக்கும் கிடைப்பதில்லை இந்நிலையை வெளிப்படுத்துவதற்காகவே 'பெறின்' என்ற சொல்லை பயன்படுத்தி திருக்குறளை முடிக்கிறார் வள்ளுவர். இறைவனோடு இணையப் பெற்ற வர்களுக்கு மட்டுமே அந்த மேலான பேரின்பம் பெற்றுக்கொள்ள முடியும். அதாவது இவ்வுலக வாழ்க்கையின் முடிவில் இறைவனோடு ஒன்றித்து இணையும் தகுதி பெற்றவர்களுக்கு மட்டுமே (அதற்கின்பம்) எல்லாவற்றையும் விட மேலான அந்த பேரின்பம் பெற்றுக்கொள்ள முடியும்.

இறைவனோடு கூடி முயங்கப்பெறுவது எளிதான ஒன்றல்ல. அதற்காக இறைவனின் அருளாகிய தூய ஆவியை வேண்டிக்கொண்டு, அவர்மேல் முழு அன்பைச் செலுத்தி, அவர் காட்டிய அறவழியில் நடந்து, வாழ்க்கையின் இறுதிவரை ஒழுக்கமாகிய இரட்சிப்பை காத்துக் கொள்பவர்க்கே அந்த மேலான நிலையை அடைய முடியும். இதற்கு தூய ஆவியாகிய வான் மட்டுமே உதவி செய்ய முடியும்.

(அதி. 2:10)

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு *(கு. 20)*

'பெறின்' என்பதிலிருந்து சிற்றின்பத்தில் மூழ்கி இருப்பவர்கள் இந்நிலையை பெற முடியாது என்பது வலியுறுத்தி காட்டப்படுகிறது. பேரின் பத்தை விரும்பாமல் சிற்றின்பத்தில் மூழ்கி இருப்பவர் களுக்கு இறைவனோடு கூடிவாழும் 'இணைப்பு' பெற்றுக்கொள்ள முடியாது.

(அ. 18:3)

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர் *(கு. 173.)*

ஆன்ம மீட்பும் பேரின்ப வாழ்வும்

குமாரனாகிய கடவுளின் மீட்பை ஏற்றுக்கொண்டு இறை அன்பை நாடி நாடிச் சென்று அதை இவ்வுலக வாழ்விலும் சுவைத்துச் சுவைத்து இவ்வுலக வாழ்வுக்குப்பின் இறைவனோடு இணைந்து நித்திய காலமாகப் பேரின்ப வாழ்வை அனுபவிக்கும் நிலைகளைக் குறித்து திருவள்ளுவர் அழகாய்ச் சித்திரிப்பதையே இன்பத்துப்பாலில் பார்க்க முடிகிறது.

அதிகாரம் : 27

மீட்கப்பட்டவர்கள் இறைவனோடு இணைதல்

(சி.ஞா.போ)

கடவுள்: முதல் மனிதன், முதல் ஸ்திரீ, உலகம் ஆகியவற்றைத் தூய நிலையில் படைத்தாரென்றும், ஆனால் படைப்புகள் தூய நிலையிலிருந்து மலமாகிய பாவத்தில் விழுந்துவிட்டது என்றும் மெய்கண்டார் சிவஞானபோதம் முதலாம் சூத்திரத்தில் விளக்கினார்.

ஆன்மா இருளில்

மனிதனுக்குள் ஆன்மா உண்டு என்றும், ஆதி பெற்றோரின் வீழ்ச்சியின் காரணத்தால் ஆதி பெற்றோர் வழிவந்த மனுக்குலம் முழுவதும் ஜன்ம பாவத்தில் (சகச மலம்) சிக்கிக்கொண்டதென்றும், எனவே ஆன்மா இருளடைந்து உணர்வற்ற நிலையில் ஆகிவிட்டதென்றும் முன் சூத்திரங்களில் பார்த்தோம்.

வீழ்ச்சியடைந்த மனிதனைச் சேர்த்தல்

தம்மால் உருவாக்கப்பட்ட மனிதன் வீழ்ச்சியடைந்துவிட்ட போதிலும் அவனை மறுபடியும் தம்மிடம் சேர்த்துக்கொள்ள கடவுள் சித்தமானாரென்பதை 2-ம் சூத்திரத்தில் பார்த்தோம்.

வீழ்ச்சி அடைந்த மனிதனை மீட்டெடுத்தார்

வீழ்ச்சியடைந்த மனிதனைத் (ஆன்மாவை) தேடிவந்து மீட்டெடுக்க இறைவனே குருவாக இந்த உலகத்தில் வந்து மீட்பை உண்டு பண்ணி ஆன்மாவை உணர்த்தினார் என்று 8-வது சூத்திரத்தில் பார்த்தோம்.

மீட்கப்பட்டவர்கள் இறைவனிடம்

குமாரனாகிய கடவுளின் இரட்சிப்பாகிய மீட்ப்பைப் பெற்றுக் கொண்ட ஆன்மா (மனிதன்) மலமாகிய பாவத்தைக் களைந்து எவ்வாறு இறைவனைப் பின்தொடர்ந்து பற்றிக்கொண்டு பேரின்ப வாழ்வில் இறைவனோடு இணைந்து பேரின்பத்தை அடைகிறது என்பதைச் சிவஞானபோதம் 9 - 12 வரை சூத்திரங்கள் விளக்குகிறது.

இங்கே குமாரனின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஆன்மா (மனிதன்) இறை இன்பத்தை ருசிக்கச் தொடங்கிவிடுகிறதையும் கடவுள் தன்னை ஆட்க்கொள்வதையும் அவர் பாதத்தில் தன்னை முழு மையாய் ஒப்படைக்கும்பொழுது ஏற்படும் நிகழ்வுகளையும் படிப்படியாக விளக்கிச் செல்வதைக் காண்கிறோம்.

1. பாவம் கானல்நீரைப்போல் ஓடிமறைதல்
2. இறைப்பணியால் தூய்மை அடைதல்
3. இறைஅடிகளைப் பற்றிக்கொள்தல்
4. புதிய சாயல் பெற்று இறைவனோடு இணைதல்

1. பாவம் கானல் நிரைப்போல் ஓடி மறைதல்

பாவத்தில் அமிழ்ந்து கிடக்கும் மனிதனை (ஆன்மாவை) மீட்க இறைவனே வந்தார் என்றும் இறைவன் தவத்தினில் அதாவது சிலுவைத் தவத்தினில் உணர்த்தியதால் மட்டுமே ஆன்மா உணர்வடைகிறது என்றும் 8-ம் சூத்திரத்தில் பார்த்தோம். அவ்வாறு உணர்வடைந்த உள்ளம் இறைவனை உணர்ந்து சுவைக்கச் சுவைக்க, இறை அருள் பொழியப்படுகிறது. அப்போது நடப்பது என்ன?

ஒரு அற்புதமான நிகழ்வு நடந்தேறுகிறது. இதுமட்டும் மனி தனை (ஆன்மாவை) விடாமல்கட்டி அழுத்தி வைத்திருந்த மலம் எல்லாம் அவனை விட்டு ஓடத்துவங்குகிறது. அந்த ஓட்டத்தை மெய்கண்டார் கானல் நீர் (பேய்த்தேர்) ஓட்டத்துக்கு ஒப்பிடுகிறார். பாவமெல்லாம் ஒரு நொடியில் அதிவேகத்தில் பறந்தோடி விடுகிறது. அந்த நிலை தான் ஒரு மனிதனின் (ஆன்மாவின்) உண்மையான விடுதலை. இதுமட்டும் இறைவனை அறியாமலிருந்தவன் இப்போது இறைவ னின் நாமத்தை ஓயாமல் உச்சரித்து மகிழத் தொடங்குகிறான். இதை 9-ஆவது சூத்திரத்தில் பார்க்கிறோம்.

சிவஞானபோதம் - சூத்திரம் : 9

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி விதி எண்ணும் அஞ்செழுத்தே

பதவுரை

ஊனக்கண் பாசம் உணராப்பதியை	=	ஐம்புல வேடர்களில் ஒன்றாகிய புறக்கண்ணால் அறிந்த பாச ஞானத்தால் உணர இயலாத இறைவனை
ஞானக்கண்ணினில்	=	இறைவன் அருளிய அருளாகிய ஞானக் கண்ணினால்
சிந்தை நாடி	=	ஆராந்து அறிந்து
உரா	=	யாராலும் ஊர்ந்து செல்ல இயலாத
துனை	=	மிக வேகமுடைய
தேர்த்துஎன	=	பேய்த்தேரைப் (கானல் நிர்) போல
பாசம் ஒருவ	=	பாசம் விரைந்து நீங்க
தண்ணிழலாம்பதி	=	ஆன்மாவின் பாவமாகிய வெப்பத்தைத் தணிக்கும் குளிர்ந்த நிழலாக நிற்கும் கடவுளை
விதியெண்ணும்	=	இடைவிடாமல் தியானிப்பது
அஞ்செழுத்தே	=	ஐந்து எழுத்தின் உட்பொருளின் வழியாகும்.

பொருள்

8-வது சூத்திரத்தில், ஆன்மா பாவத்தை அரிந்தெடுக்கும் அரனடியை அடைந்துவிட்டது என்று பார்த்தோம். அதாவது புறக் கண்ணால் (ஐம்புல வேடர்களில் ஒன்றாகிய கண்ணால்) பார்த்து அறியும் பாச ஞானத்தால் இறைவனை அறியமுடியாது. ஆனால் இப்போது, இரட்சிக்கப்பட்ட ஆன்மா இறைவனின் பாதத்தில் வந்து அருள் ஆகிய ஞானக்கண்ணினால் ஆராய்ந்து அறிந்து உணர்ந்துகொண்டது. அந்நிலையில் அவன் (ஆன்மாவின்) பாவமெல்லாம் பேய்த் தேராகிய கானல் நீர் அதிவேகமாய் நீங்கிப்போவது போல விரைந்து நிங்கிப்போயிற்று. அப்போது அந்த ஆன்மாக்களின் வெப்பம் தணியத் தக்க குளிர்ந்த நிழலாகக் கடவுள் விளங்குகிறார். ஆன்மாவோ, இந்த

இளைப்பாறுதல் நீடித்திருக்க இடைவிடாமல் அவரை ஐந்தெழுத்தின் உட்பொருள்வழி தியானித்துக் கொண்டிருக்கும்.

விளக்கம்

புறக்கண்ணால் இறைவனை உணரமுடியாது. ஆனால் ஆன் மாவுக்குக் கடவுள் அருள் திறக்கும்போது பாசமாகிய பாவம் ஓடி ஒளித்து விடுகிறது. பாவம் நீங்கி ஓடுவது கானல்நீரின் வேகத்துக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. பாவமாகிய கானலிலிருந்து விடுபட்ட ஆன்மா இப்போது இறைவனின் காலடிகளில் அமர்ந்து குளிர்நிழல் போன்ற குளிர்ச்சியைப் பெற்று மகிழ்கிறது. மட்டுமல்ல அம்மகிழ்ச்சி நிலை யாயிருக்க இறைவனை ஓயாமல் தியானிக்கிறது. இறைவன் அருளிய இரட்சிப்பை ஏற்றுக்கொண்டபோது மலமாகிய பாவம் நீங்கிப் போகிறது. அப்போது அம்மனிதன் இறைவன் பாதத்தில் மகிழ்ச்சி யோடு அமர்ந்து இன்புறுகிறான்.

2. இறைப்பணியால் தூய்மை அடைதல்

கொடும் வெயிலின் நிலைமாறிக் குளிர் நிழலாய் நிற்கும் இறை வனின் நிழலில் அமர்ந்து ஐந்தெழுத்தால் அவரையே ஓயாமல் தியா னிக்கும் ஆன்மா இறைவனோடு மேலும் ஒருபடி நெருங்குகின்றது. இந்நிலையில் மனிதன் (ஆன்மா) தன்னையே முற்றிலும் இறை ஆட் சிக்கு ஒப்புக்கொடுக்கிறான். இப்போது தனக்கென ஒரு வழி இல்லை. இறைவன் காட்டும் வழியில் சென்று அவர் பணியையே செய்கிறான். இறைப்பணி செய்யச் செய்ய அவன் மென்மேலும் தூய்மை அடை கிறான். அப்பொழுது மலம், மாய்கை ஆகியவற்றின் போராட்டத்தை முற்றிலும் வென்றுவிடுகிறான். இப்டிப்பட்ட உயர்நிலையை அடைந்த மனிதன் (ஆன்மா) பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடைகிறான். இது 10-ஆவது சூத்திரத்தில் விளக்கப்படுகிறது.

சிவஞானபோதம் - சூத்திரம் : 10

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

பதவுரை

அவனே - கடவுளே
தானே ஆகிய - தன்னை முழுமையாக ஆட்கொண்ட நிலையில்
அந்நெறி - அவன் காட்டும் வழியில்

ஏகனாகி	- அவன் வழியில் ஒன்றித்து நின்று
இறைப்பணி நிற்க	- இறைவன் ஏவும் பணி செய்ய
மலம்	- ஜன்ம பாவமும் (சகசமலம்)
மாயை	- மாயை ஆகிய உடலின் போராட்டங்களும்
வல்வினை	- சகச மலம், உடல் போராட்டம் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் கொடிய பாவவினைகளும்
இன்றே	- இல்லாமல் போயிற்றே.

கருத்துரை

ஆன்மா கடவுளை இடைவிடாமல் தியானிக்கும் நிலையில் கடவுளே தன்னை ஆட்க்கொள்கிறார். ஆன்மா கடவுள் காட்டும் வழியில் அவனோடு ஒன்றித்து நிற்கிறது. மட்டுமல்ல கடவுள் ஏவும் பணிகளையே செய்கிறது. அப்படிச் செய்யும் பொழுது, ஜன்ம பாவமாகிய சகசமலம் விடுபட்டுப் போகிறது. மட்டுமல்ல இறைப்பணி செய்வதால் மாயை ஆகிய உடலில் ஏற்படும் போராட்டங்கள் நீங்குகின்றன. போராட்டங்களால் செயல்படக் கூடிய பாவக் கிரியைகளும் இல்லாமல் ஆகிவிடுகிறது. எனவே ஆன்மா முற்றிலும் விடுதலை பெற்றுப் பரிசுத்த நிலையை அடைகிறது.

விளக்கம்

கடவுள் தியானத்தில் இருக்கும் ஆன்மா(மனிதன்) தியானிக்கத் தியானிக்கச் சுய சித்தத்தை முற்றிலும் விட்டுக் கடவுள் சித்தத்தையே செய்யும் நிலைக்கு வளர்ந்து விடுகிறான். அது 'இனி நானல்ல எனக்குள் வாழும் கடவுளே என்னைச் செயல்படுத்துகிறார்' என்ற விவிலியக் கருத்துக்கு ஒத்திருக்கிறது. செய்யும் செயல்கள் யாவும் கடவுள் கட்டளையை நிறைவேற்றுவதாக அமைந்துவிடுகிறது. இறைப்பணி செய்வதால் மாயையாகிய உடலின் போராட்டங்கள் நீங்குகின்றன. பாவம் செய்யும் நிலையும் அற்றுப்போகிறது. முன்பு அசுத்தத்திற்கும் அக்கிரமத்துக்கும் காமவிகாரத்துக்கும் செயல்படுத்தப்பட்டிருந்த உறுப்புக்கள் இப்போது நற்கிரியைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. இது ஆன்மாவின் பரிசுத்த நிலையாகும்.

3. இறைவன் பாதத்தைப் பற்றிக்கொள்தல்

மனிதன் (ஆன்மா) மேற்கூறிய பல படிகளைக் கடந்து இறைப்பணியில் நிற்கும்போது கடவுளுக்கேற்ற பரிசுத்தம் ஏற்படுகிறது. இந்நிலையில் இறைவன் தாமே வந்து நடக்கவேண்டிய வழியைக் காட்டுகிறார்.

இறைவனே வழிகாட்டுவதால் எவ்வித இடற்பாடுகளுக்கும் தேவை இல்லை. இவ்விதமான தெய்வீகத் தைரியத்தைப் பெற்றுக் கொண்ட ஆன்மா முழு நம்பிக்கையோடு இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொள்கிறது. இது எவராலும் அசைக்கமுடியாத சிறந்ததோர் உன்னத நிலையாகும்.

சிவஞானபோதம் - சூத்திரம் : 11

கா்ணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

பதஉரை

காணும்	-	பொருட்களைக் கண்டு அறியக்கூடிய
கண்ணுக்கு	-	கண்ணாகிய உறுப்புக்கு
காட்டும்	-	உள்ளிருந்து காட்டுகின்ற
உளம்போல்	-	உள்ளத்தைப் போன்று
காண	-	பாசமலத்தால் மறைக்கப்பட்டிருந்த ஆன்மாவுக்கு அதன் மறைப்பை நீக்கி அதைத் தெளிவாய் அறிந்துகொள்ளுமாறு
உள்ளத்தைக் கண்டு காட்டலின்	-	இறைவன் ஆன்மாவைத் தேடி வந்து அது நடக்கவேண்டிய வழியைத் தாமே முன் நின்று காட்டுகின்ற காரணத்தால்
அயரா அன்பின் அரன்	-	மயக்கம்சிறிதும் இல்லாதவனும் என்பையும் பிறர்க்கீயும் அன்பையுடையவனும், பாவத்தை அரிந் தெடுப்பவரும் ஆகிய இறைவனுடைய
கழல் செலுமே	-	திருவடிகளைச் சார்ந்து திடமாய் பற்றிக் கொள்ளும்

கருத்துரை

உலகப்பொருளைக் கண்டு அறியக்கூடிய கண்ணாகிய உறுப்பிற்கு அது காணுமாறு உள்ளிருந்து காட்டுகின்ற ஆன்மாவைப் போலப் பாசமலத்தால் மறைக்கப்பட்டிருந்த ஆன்மாவுக்கு அதன் மறைப்பை நீக்கி, அது யாவற்றையும் தெளிவாய் அறிந்துகொள்ளு மாறு அதைத் தேடிவந்து, கண்டுபிடித்து, அது நடக்க வேண்டிய வழியைத் தாமே முன்நின்று காட்டுகின்ற காரணத்தால், மயக்கம்

சிறிதும் இல்லாதவனும், என்பையும் பிறர்க்கீயும் அன்பையுடைய வனும், பாவத்தை அரிந்தெடுப்பவனும் ஆகிய இறைவனுடைய திருவடியை ஆன்மா சார்ந்து திடமாகப் பற்றிக்கொள்ளும்.

விளக்கவுரை

கண் ஒரு உறுப்பாக இருக்கிறது. அப்படிப்பட்ட கண்ணுக்குப் பொருட்களைக் காட்டுவது உள்ளம் (ஆன்மா) ஆகும். ஆன்மாவின் துணையின்றி, கண் பொருட்களைக் காண இயலாது. அதுபோல உள்ளம் நடக்கவேண்டிய வழியைக் காட்டுவது இறைவன் ஆகும். இறைவன் ஆன்மாவின் (மனிதனின்) மேல் கொண்டுள்ள அயரா அன்பினால் அதைத் தேடிவந்து கண்டுபிடித்து அதை மறைத்து வைத்திருக்கும் பாச மலத்தை நீக்கி அதற்கு நடக்கவேண்டிய வழி யைக் காட்டுகிறார். அவ்வாறு திடன்கொண்ட ஆன்மா அன்பு மயமாய் விளங்குபவனும் பாவத்தை அரிந்தெடுக்கும் அரனுமாகிய கடவுளின் திருவடிகளைப் பற்றிக்கொள்கிறது.

4. புதிய சாயல் பெற்று இறைவனோடு இணைதல்

மீட்கப்பட்டுப் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் இறுதியாக மறுரூபமாக்கப்பட்டு, இறைவனோடு இணைந்து, நித்திய இன்பம் அடையும் நிலை குறித்து இங்கு விளக்கப்படுகிறது. இது மீட்கப் பட்டவர்கள் அடையவிருக்கும் கடைசி நிலையாகும். இந்த நிலை இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் நடைபெறுவதாகும்.

இவ்வுலகத்தின் பாவத்தில் கிடக்கும் ஆன்மாவை (மனிதனை) இறைவனே வந்து உணர்த்துவதால், ஐந்தவித்தானாகிய இறைவன் ஈட்டித்தந்த இரட்சிப்பை மனிதன் ஏற்றுக்கொள்கிறான். பாவக்கட்டு களிலிருந்து விடுதலை பெற்ற மனிதன், இறைவனின் குளிர்நிழலில் அமர்ந்து அவரை ஓயாமல் துதித்துத் தியானம் பண்ணுகிறான்.

ஆன்மா இப்போது படிப்படியாக உயர்ந்து, இறைவனை நெருங்குகிறது. தனக்கென ஒன்றில்லாமல் இறைப்பணியில் ஈடுபட்டு மேலும் தூய்மை அடைகிறது. அப்போது மாய்கையான சரீரத்தின் போராட்டங்கள் யாவும் ஓய்ந்துவிடுகின்றன. இந்தத் தூய நிலையில் இறைவனே வந்து அவன் நடக்கவேண்டிய வழிகள் யாவும் காண் பிக்கிறான். ஆன்மா இறைவனிடம் பரிபூரண நிறைவுபெறுகிறது. எனவே இறைவன் பாதத்தையே உறுதியாய்ப் பற்றிக்கொள்கிறது.

இறைவன் பாதத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட ஆன்மா நித்தியமான உன்னத நிலைக்குத் தாவிச் செல்வதைக் குறித்து 12-ம் சூத்திரம் விளக்குகிறது.

சிவஞானபோதம் - சூத்திரம் : 12

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே.

பதஉரை

செம்மலர்	-	சிவப்பு மலர் போன்ற
நோன் தாள்	-	மன்னுயிர்க்காகத் தன்னுயிர் கொடுக்கும் தவமாகிய நோன்பினில் நிலைநின்ற இறைவனின் திருவடிகள்
சேரல் ஒட்டா	-	சேர விடாமல் ஆன்மாவைத்தடுத்து நின்ற
அம்மலம் கழீஇ	-	அக்கொடிய பாவம் கழுவப்பட்டு
அன்பரொடு மரீஇ	-	எதையும் பிறர்க்கு ஈந்து கொடுக்கும் அன்பராகிய இறைவனுடைய திருவடிகளில் இணைக்கப்பட்டு
மால் அற	-	ஆன்மாவைப் பற்றி நின்ற மயக்கம் முற்றிலும் நீக்கப்பட்டு
நேயம் மலிந்து	-	ஆன்மீக நேயத்தால் நிரப்பப்பட்டு
அவர் வேடவும்	-	ஆன்மாவின் பழையசாயல் நீங்கி இறைவனுக்குரிய புதிய சாயலைப் பெற்ற நிலையில் அது
அரன்	-	பாவத்தை அரிந்தெடுப்பவனாகிய இறைவன்
ஆலயம்தானும் என	-	மகிழ்ந்து உறையுந் திருக்கோயிலாகத் தான் அமைந்து
தொழுமே	-	இறைவனைத் துதித்து வணங்குமே.

கருத்துரை

மன்னுயிர்க்காகத் தன்னுயிர் கொடுக்கும் தவத்தில் நிலை நின்று சிவந்த மலர் போல விளங்குகின்ற இறைவனின் திருவடிகளைச் சேர விடாமல் தடுத்து நிறுத்தும் கொடிய பாவம் கழுவப்பட்டு ஆன்மா அன்பராகிய இறைவனின் திருவடிகளில் இணைக்கப்படுகிறது. அந் நிலையில் ஆன்மாவைப் பற்றி நின்ற மயக்கம் முற்றிலுமாக நீக்கப்படு கிறது. ஆன்மா நேயத்தால் நிரப்பப்பட்டு இறைவனின் சாயல் பெற்று புதுமை அடைகிறது. மட்டுமல்ல பாவத்தை அரிந்தெடுப்பவனாகிய இறைவனில் மகிழ்ந்து உறையும் திருக்கோவிலாக தானும் அமைந்து இறைவனைத் தொழுது மகிழ்ந்து நிலைத்திருக்கும்.

விளக்கம்

இறைவனின் பாதங்கள், 'செம்மலர் நோன் தாழ்' என்று குறிப் பிடப்பட்டுள்ளது. ஏனென்றால், அவைகள் சிவந்த மலரைப்போல காட்சியளிக்கிறது. அப்படி சிவந்துவிடக் காரணம் என்னவென்றால், அவை 'நோன்தாழ்' ஆகும். அதாவது நோன்பு நின்று சிவந்த தாழ் ஆகும். அது, ஐந்தவித்தானாகிய இறைவன் தன் ஜீவனைக் கொடுக்கும் தவமாகிய நோன்பு ஆகும். அந்தச் சிலுவைத் தவமாகிய நோன்பின் போது சிந்தப்பட்ட இரத்தத்தால் தோய்க்கப்பட்ட பாதங்கள் செம்மலர் போல் காட்சியளிக்கின்றன. அந்தப் பரிசுத்தப் பாதங்களைச் சேரவிடா மல் ஆன்மாவைத் தடுத்து நிறுத்துவது கொடிய பாவமாகிய மலமாகும்.

ஆனால் அந்தப்பாதங்களிலிருந்து பீறிட்டுப் பாய்ந்தொழுகும் இரத்தம் மலமாகிய எந்தக்கொடிய பாவங்களையும் கழுவிச் சுத்தீகரிக்க வல்லமையுள்ளதாகும். அவ்வாறு இரத்தத்தால் பாவங்கள் கழுவி அகற்றப் படும்போது ஆன்மா அன்பராகிய இறைவனின் திருவடிகளில் இணைக்கப் படுகின்றது.

இந்நிலையில் ஆன்மாவைப் பற்றி நின்ற மயக்கம் முற்றிலும் நீங்கிப்போகிறது. ஆன்மீக நேயம் நிரம்புகிறது. ஆன்மா பூரண நிலையை எட்டுகிறது. அப்போது ஆன்மாவின் பழைய சாயல் நீங்கி இறைவ னுக்குரிய புதிய சாயலைப் பெற்றுக்கொள்கிறது. இவ்விதமாய் மறுரூப மடைந்தவர்கள் இறைவனோடு இணைந்து ஆலயமாக அமைந்து இறைவனைத் தொழுது நித்திய நித்தியமாய் நிலைத்திருப்பார்கள். திருக்குறளில் இக்கருத்து பேரின்பக்காதலின் கடைசிநிலையாகக் காட்டப்பட்டுள்ளது.

விவிலியத்திலும் மேலே கூறப்பட்டவை யாவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். 'அம்மலம் கழீஇ.' அதாவது, இரத் தத்தால் பாவங்களைப் போக்குவது பற்றி விவிலியத்தில் "இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" என்று வாசிக்கிறோம். *(1 யோவான். 1:7)*.

பழைய சாயல் நீங்கி இறைவனின் புது சாயல் பெற்று மறுரூப மடைவதைக் குறித்து "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறி விக்கிறேன்...... ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்தில், ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம்" *(1 கொரி. 15:51)* என்றும், இறைவனோடு நித்திய நித்தியமாக மகிழ்ந்து கோவிலாக அமைந்து இருப்பதைக் குறித்து "அதிலே தேவா லயத்தை நான் காணவில்லை, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் (குமரக்கடவுள்) ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்." என்றும் வாசிக்கிறோம். *(வெளி. 21:22)*.

அதிகாரம் : 28

குமாரன் எல்லாருக்கும் உரியவர்

"இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் உலகத்தில் வந்தார்" என்கிறது விவிலியம்.

இழந்து போன மனுக்குலத்தை மீட்டெடுக்க வந்தவரே குமாரனாகிய கடவுள். இந்தக் குமாரனாகிய கடவுள் தந்த இரட்சிப்பும் பேரின்ப வாழ்வும் (நீடு வாழ்வு) ஒரு திறத்தாருக்கே உரியது என்றோ மற்றொரு திறந்தாருக்கு உரியதல்லவென்றோ எவருமே கூற முடியாது. குமாரன் மேற்காசியாவில் பிறந்தபடியால் மேற்காசிய மக்களோ, யூத இனத்தில் பிறந்தபடியால் யூதர்களோ தங்களுக்கென்று தனி உரிமை கோர முடியாது. அவ்வாறே அவர் கிழக்காசியாவில் பிறக்காததால் கிழக்காசிய மக்கள் அவரை இழந்துவிடவும் முடியாது. இந்தக் காரியம் வரலாற்றிலேயே தீர்வு காணப்பட்ட ஒன்றாகும்.

தேவதிட்டப்படி தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு ஸ்திரீ

கடவுள் உலகத்தில் மனிதனாகப் பிறப்பதற்கு ஒரு ஸ்திரீ தேவையாயிருந்தது. அதற்காகக் கடவுள் ஆபிரகாம் என்ற ஒரு மனிதனைத் தெரிந்து கொண்டு அவன் வழி இஸ்ரவேல் என்ற ஒரு ஜனத்தை ஆயத்தப் படுத்தி, அதிலிருந்து மரியாள் என்ற ஒரு ஸ்திரீயைத் தெரிந்து கொண்டார். இவை அனைத்தும் இரட்சிப்பை உண்டுபண்ணுவதற்கான தேவத் திட்டங்களே ஆகும். அது நிமித்தம் எந்த மனிதனோ, மனித இனமோ தனி உரிமை கொண்டாட உரிமை இல்லை. தேவன் தாமே உலகத்தின் எல்லா மக்களுக்கும் உரியவராகி விட்டார்.

ஆபிரகாமின் அழைப்பில் வெளிப்பாடு

கடவுள் தமது திட்டங்களை நிறைவேற்ற ஆபிரகாமை அழைத்த போதே இந்தக் காரியத்தை வெளிப்படுத்தினார். தேவன் ஆபிரகாமை அழைத்தபோது கூறியதாவது– "உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர் வதிப்பேன்; உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; **பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்**" என்பதாகும் *(ஆதி. 12:3)*. அவன் பூமியிலுள்ள எல்லா வம்சங்களும் ஆசீர்வதிக்கப் படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரம் அவ்வளவு தான்.

எதிர்த்த சவுலுக்கு வெளிப்படுத்தினார்

சவுல் என்பவன் ஒரு யூதன். ஆனால் அவன் தேவகுமாரனை ஏற்றுக் கொள்ளாமல் அவரைக் கொலை செய்த கூட்டத்தாரைச் சார்ந் தவன். ஒரு நாள் அவன் சபையைத் துன்பப்படுத்துவதற்காக அதிகாரம் பெற்றுச்சென்று கொண்டிருக்கையில் தேவக்குமாரனே அவனுக்குக் காட்சி கொடுத்தார். அன்று முதல் அவன் மனம்மாறி சீஷர்களிடத்தில் சென்றான் சீஷர்களோ அப்போது அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னால் அவன் மனம் மாற்றத்தை அறிந்து அவனைத் தங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். அவன் பவுல் என்று அழைக்கப்பட்டான். புற ஜாதியாரை அதாவது யூதர் அல்லாத மற்ற ஜனங்களை இரட்சிப் பின் பாதையில் நடத்துவதற்குப் பாடுபட்டான் அனேக புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களையும் எழுதி சபைகளை ஸ்தாபித்தான்.

கொர்நேலியுவும் எருசலேம் கவுண்சிலும்

கொர்நேலியு என்பவன் இத்தாலியாப் பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியான ஒருவன். அவன் யூத இனத் தானல்ல. ஆனால் மிகுந்த தேவபக்தி உடையவன்.

இரட்சகராகிய இயேசு யூத ஜனத்துக்குத்தான் உரியவர் என் றும் இரட்சிப்பும் யூதருக்கே உரியது என்றும் சில யூதர்கள் சிந்தித்துக் கொண்டிருந்த நாட்களில் அவன் ஒரு தேவத் தரிசனத்தைக் கண்டு அதின்படி யோப்பாப் பட்டணத்தில் இருந்த பேதுருவை அழைத்து வர ஆள் அனுப்பினான். அதன்பின் நடந்த நிகழ்ச்சிகளில் இரட்சகர் எல்லாருக்கும் உரியவர் என்ற முடிவு உண்டாயிற்று. நிகழ்ச்சிகளாவன:

பேதுருவுக்கும் வெளிப்படுத்தல்

சீஷனான பேதுரு என்பவனுக்கு ஒரு தரிசனத்தின் மூலம் தமது திட்டத்தைத் தேவன் வெளிபடுத்தினார். பேதுரு யோப்பாப் பட்டணத்தில்

சீமோன் என்பவனுடைய வீட்டில் தங்கியிருந்தான். அங்கே அவன் ஒரு காட்சி கண்டான். அந்தச் சம்பவம் கீழ்க்கண்டவாறு விளக்கப் படுகிறது:

துப்பட்டியின் காட்சி

"அவன் (பேதுரு) ஞானதிருஷ்டியடைந்து வானம் திறந்திருக்கிற தாகவும் நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப் பட்டிருக்கிறதாகவும் அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்." *(அப். 10:9-12)*

அடித்துப் புசி

"அல்லாமலும் பேதுருவே எழுந்திரு அடித்துப் புசி என்று அவ னுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு அப் படியல்ல ஆண்டவரே தீட்டும் அசுத்தமுமுள்ள யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்."

"அப்பொழுது தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டா யிற்று, மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது." *(அப். 10:13-16)*

கொர்நேலியுவின் ஆட்கள் பேதுருவிடம்

"அப்பொழுது பேதுரு தான் கண்ட தரிசனத்தைக் குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில் இதோ கொர்நேலியுவினால் (புற ஜாதியான்) அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசா ரித்துக் கொண்டு வாசற்படியிலே வந்து நின்று பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா? என்று கேட்டார்கள். பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக் கொண்டி ருக்கையில் ஆவியானவர் இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடு கிறார்க்ள். நீ எழுந்து இறங்கி ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்க ளுடனே கூடப் போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவ னுக்குச் சொன்னார்." *(அப். 10:17-20)*

பேதுரு கொர்நேலியுவிடம்

"அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷரிடத்துக்கு இறங்கிப் போய் இதோ நீங்கள் தேடுகிறவன் நான்

தான். நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன? என்றான். அதற்கு அவர்கள் நீதிமானும் தேவனுக்குப் பயப்படுகிறவரும் யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவ கட்டளை பெற்றார் என்றார்கள். அப்பொழுது பேதுரு அவர்களை அழைத்து, அவர்களுக்கு உபகாரஞ் செய்து மறுநாளிலே அவர்களுடனே கூடப் புறப்பட்டான். யோப்பா பட்டணத்தாராகிய சிலரும் அவனுடனே கூடப் போனார்கள்." *(அப். 10:21-23)*

கொர்நேலியு வீட்டில் பேதுரு

கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேசித்த சினேகிதரையும் கூட வரவழைத்து அவர்களுக்காகக் காத்திருந்தான். பேதுரு உள்ளே பிரவேசிக்கிறபொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டு போய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து, எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான் என்றான். அவனுடனே பேசிக் கொண்டு உள்ளே போய் அனேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டு அவர்களை நோக்கி :

"அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அப்படியிருந்தும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும், அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்குத் தேவன் எனக்கு காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர் பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்." *(அப். 10:28,29)*

அதற்குக் கொர்நேலியு, நீர் வந்தது நல்ல காரியம். தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவச் சமூகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். *(அப். 10:30-33)*

தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல

"அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி, **தேவன் பட்சபாதமுள்ளவரல்லவென்றும், எந்த ஜனத்திலாயிலும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்...."** *(அப். 10:30-33)* என்றான்.

குமாரனாகிய இயேசுவைக் குறித்த சாட்சி

பேதுரு பேசத்தொடங்கி, "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிற வராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் சுற்றித் திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்த எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்." (அப். *10:34,35*) எனச் சாட்சி பகர்ந்தான்.

புற ஜாதியாருக்குப் பரிசுத்த ஆவி

"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கை யில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிற தையும், தேவனைப் புகழுகிறதையும் பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தாவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரமித்தார்கள்." *(அப். 10:44-46).*

புற ஜாதியாருக்கு ஞானஸ்நானம்

"அப்பொழுது பேதுரு : **நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத் தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்ட ளையிட்டான்.** அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்." *(அப். 10:47-48)*

சில யூதர்களின் சந்தேகம் :

குமாரனை விசுவாசித்த எல்லா ஜனங்களுக்கும் குமாரனுடைய இரட்சிப்பும் பரிசுத்த ஆவியின் அபிசேகமும் கிடைப்பதைக் கேள்விப்பட்ட சில யூதர்கள் இதைக் குறித்து எரிச்சலடைந்தபோது, பேதுரு நடந்தவற்றை விளக்கித் தேவனே **அந்த அனுக்கிரகங்களை யூதரல்லாத எல்லா ஜனங்களுக்கும் கொடுத்தார் என்றான்.** (அப். *11:1-4; 17, 18)*

தேவனைத் தடுக்க நான் எம்மாத்திரம்?

பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது விருத்த சேதனமுள்ளவர்கள் அவனை நோக்கி, விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய் அவர்களோடே போஜனம் பண்ணினீர் என்று அவனோடே வாக்குவாதம் பண்ணினார்கள். அதற்குப் பேதுரு காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி- ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற **நமக்குத் தேவன் வரத்தை அனுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அனுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்டபோது அமர்ந்திருந்து, அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனம் திருந்துதலைத் தேவன் புறஜாதி யாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.** *(அப். 11:2-18)*

எருசலேம் கவுண்சில்

யூதரல்லாத மற்ற ஜனங்கள் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவையும் அவர் அருளிய இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்வது யூத ஜனங்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதோடு இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் அவர்களுக்குத் தூய ஆவியின் அபிஷேகம் ஆகியவை குறித்தும் யூதர்களிடையில் சலசலப்பு ஏற்பட்டது.

இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து ஆலோசித்து ஒரு சரியான முடிவு எடுப்பதற்காக அப்போஸ்தலர்களும் சபையாரும் A.D. 50-ல் எருசலேமில் ஒரு கவுண்சில் கூடினார்கள்.

மேலே கூறப்பட்ட காரியங்கள் **அதாவது யூதரல்லாத எல்லா தேசத்தாரும், ஜாதிகாரரும், பாஷைக்காரரும் குமாரனையும் அவர் இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்வதே தேவ சித்தம் என்னும் விஷயம் எருசலேமில் A.D. 50-ல் கூடிய கவுன்சிலில் எடுத்துச் சொல்லப்பட்டது.**

பேதுருவின் விளக்கம்

அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள். மிகுந்த தர்க்கம் உண்டான போது பேதுரு எழுந்து அவர்களை நோக்கி : சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி புற ஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ

வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும் பொருட்டுத் தேவன் அனேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாக என்னைத் தெரிந்து கொண்டார். இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினது போல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார். விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார் என்று விளக்கினார்.

பவுலின் விளக்கம்

அப்பொழுது கூடி வந்திருந்த யாவரும் அமர்ந்திருந்து, பர்னபாவும், பவுலும் தங்களைக் கொண்டு தேவன் புறஜாதியாருக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக் கேட்டார்கள்.

கவுண்சிலின் முடிவு

அவர்கள் பேசி முடிந்த பின்பு கவுன்சிலின் தலைவராயிருந்த யாக்கோபு அவர்களை நோக்கி: "சகோதரரே, எனக்குச் செவி கொடுங்கள். தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதன் முதல் அவர்களுக்குக் கடாட்சித் தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்குகளும் ஒத்திருக்கிறது."

"உலகத் தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது. ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்திற்குத் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்." என்றான்.

நிரூபம் அனுப்பப்பட்டது

எருசலேம் கவுண்சிலின் அந்தத் தீர்மானத்தை நிருபமாய் எழுதி யூதா, சீலா என்பவர்கள் வழியாக அனுப்பினார்கள். அவர்கள் அந்தியோகியாவுக்கு வந்து, சபையைக் கூடிவரச்செய்து நிருபத்தை ஒப்புவித்தார்கள். ஜனங்கள் நிருபத்தை வாசித்து அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள். யூதாவும் சீலாவும் மேலும் அநேக வார்த்தைகளினாலே ஜனங்களுக்குப் புத்தி சொல்லித் திடப் படுத்தினார்கள்.

இரட்சிப்பு யூதருக்கு மட்டுமல்ல, உலக மக்களுக்கு

இவ்வாறு உலக ரட்சகராகிய தேவ குமாரன் யூதருக்கு மட்டு மல்ல; அவரும் அவர் அருளிய இரட்சிப்பும் பரிசுத்த ஆவியின் அபி ஷேகமும் உலக மக்களுக்கு எல்லாருக்குமே உரிமைப்பட்டதென்பது அந்நாட்களிலேயே தெளிவாக்கப்பட்டது.

இதைக்குறித்து பவுல்

மட்டுமல்ல பரிசுத்தப் பவுலும் இதைக் குறித்து, 2 கொரி. 5:16 - ல் "இதுமுதற் கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறி யோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், **இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்**" என்கிறார்.

அதாவது குமாரன் இந்த உலகத்தில் ஒரு ஸ்திரீயில் பிறக்க வேண்டியிருந்தது. அதற்காக ஒரு யூத ஸ்திரீயில் பிறந்தார். எனவே **மாம்சத்தின்படி யூதனாக அறியப்பட்டாரே தவிர குமாரனாகிய இயேசு எல்லா ஜாதியாருக்கும் உரியவர் என்பது பொருள்.**

அவர் எல்லா ஜனங்களுக்கும் உரியவர்

அவர் தேவ ஆவியால் பிறந்தவர். உலக மக்கள் அனைவரையும் இரட்சிக்கவே பிறந்துத் தம் கடமைகளைச் செய்து முடித்துவிட்டார். இப்போது அவர் மனுக்குலத்துக்கே சொந்தமானவர். எனவே தான் பவுல் ஆணித்தரமாக இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி (அதாவது யூதனாக) அறியோம் என்கிறார். அவர் எல்லா ஜனங்க ளுக்கும் உரிய தேவக் குமாரனாகவே அறியப்படுகிறார்.

பரலோகத்தில் நானாதேசத்தார்

"......இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்க ளிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக்கூடா ததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துச் சிங்காசனத் துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன் (வெளி. 7:9-12). இங்கே உலகத்தின் நானா தேசத்தார் பரலோ கத்தில் காணப்படுவதை யோவான் தனது காட்சியில் காண்கிறார்.

மனுக்குலத்தின் மீட்பு உலகத்தின் மையத்தில்

மனுக்குலத்தின் மீட்புக்காகக் குமாரனாகிய இயேசு மனிதனாகப் பிறந்தது உலகத்தின் மைய்யமான மத்திய தரைக்கடலின் கிழக்குக்

கரையிலுள்ள ஆசியாக் கண்டத்தின் ஒரு பகுதியான பலஸ்தீனாவில் என்று பார்த்தோம். அங்கே அவர் சிலுவை மரத்தில் தம்மையே பலியாக்கி இரட்சிப்பைச் சம்பாதித்தார். இதுவே மனுக்குலத் துக்கு நீடு வாழ்வைப் பெற்றுத்தரும் நற்செய்தி.

நற்செய்தி மேற்கிலும் கிழக்கிலும்

உலகத்தின் மையத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் கிடைக்கப் பெற்ற மாபெரும் மீட்பின் நற்செய்தி மேற்கில் ஐரோப்பாவுக்கும் கிழக்கில் இந்தியாவுக்கும் தொடர்ந்து எல்லா நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப் பட்டது.

இந்தியாவுக்கு நற்செய்தி

மேற்காசியாவிலிருந்து கிழக்கில் இந்தியாவுக்கு நற்செய்தியைக் கொண்டு வந்தது குமாரனாகிய கடவுளின் மற்றுமோர் சீஷனாயி ருந்த தோமா என்பவர் ஆகும். தோமா கி.பி. 52 முதல் 72 வரை இந்தி யாவின் பல பகுதிகளில் நற்செய்தி அறிவித்தார். இது ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்று அழைக்கப்படுகிறது.

அன்று இந்தியாவில் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய சமண மதவும் கடவுள் கொள்கையற்ற (agnostic) புத்தமதவும் இருந் தன. மட்டுமல்ல பிறவிச்சுழற்சிக் கொள்கையால் மக்கள் வாழ்க்கையில் நம்பிக்கை அற்ற நிலையில் இருந்து வந்தார்கள். தங்கள் சுய முயற்சியினால் கர்மம் செய்து, பிறவிச்சுழற்சியிலிருந்து விடுதலை அடைய மக்கள் நம்பிக்கை இல்லாமலேயே முயற்சி செய்து வந்தார்கள்.

பிரகாசமான எதிர்காலம்

கடவுள் உண்டு என்றும், அவர் தங்களைத் தங்களுடைய பாவக் கட்டுகளிலிருந்து விடுவிக்க இந்த உலகத்தில் ஒரு மனிதனாகப்பிறந்து மனிதரின் பாவத்தையெல்லாம் தாமே சுமந்து பாவப் பரிகாரத்துக்காக பலியாகி உயிர்த்தெழுந்தாரென்றும் அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவர் வழியில் நடப்பவர்களுக்கு இரட்சிப்பும் நித்திய ஜீவனும் உண்டு என்றும் அறிந்த போது ஜனங்களின் கண்கள் பிரகா சித்தது உள்ளம் மகிழ்ந்தது: அவர்கள் பிரகாசமான ஓர் எதிர் காலத்தைக் கண்டார்கள்.

திருவள்ளுவர்

ஆயிரக்கணக்கான மக்கள் தோமாவின் இரட்சிப்பின் நற் செய் தியை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாத சிலரால் தோமா

மைலாப்பூரில் ரத்த சாட்சியாய் கிபி. 72-ல் கொல்லப்பட்டார். தோமாவின் நற்செய்திகளால் கவரப்பட்டு அதை முழுமையாய் ஏற்றுக்கொண்டு தமது வாழ்க்கையில் கடைபிடித்தவர்களில் சிறந்து விளங்குபவரே திருவள்ளுவர் என்ற மேதை. அவர் அனைத்து மக்களும் தோமாவின் நற்செய்தியால் பயனடைவதற்காக எழுதிய சிறந்த நூலே 'திருக்குறள்'. குமாரனாகிய இயேசுவின் இரட்சிப்பின் நற்செய்தியைக் குறித்து மேற்காசியாவில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நூலே விவிலியத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதி. அவ்வாறே குமாரனாகிய இயேசுவின் இரட்சிப்பின் நற்செய்தியை; இந்தியாவில் தமிழ்மொழியில் எழுதப்பட்ட நூலே திருக்குறள் ஆகும்.

சைவ வைணவ மதங்கள்

திருக்குறளுக்குப்பின் தமிழ் நாட்டிலிருந்து பக்தி இயக்கங்கள் தோன்றி இந்தியா முழுவதும் பரவியதை வரலாற்றில் காண்கிறோம். இவைகளின் அடிப்படையில் உருவானவைகளே ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்ற சைவ வைணவ மதங்கள். இவை முதலாம் நூற்றாண்டுக்குப்பின் பெரும் வளர்ச்சியடைந்தது. குமாரனாகிய கடவுளின் இரட்சிப்பாகிய ஒழுக்கநெறியை ஏற்றுக்கொண்டவர்கள் சான்றோர் என்று அழைக்கப்பட்டார்கள். அதனால் அனேக சித்தர்களும் உருவானார்கள்.

ஆதி இந்தியக் கிறிஸ்தவம் இந்துத்துவாவுக்குள்

18-ம் நூற்றாண்டில் ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்ற சைவ வைணவ மதங்கள் இந்துத்துவா என்ற கொள்கைக்குள் புகுத்தப்பட்டன. அது முதல் சைவ வைணவ மதங்கள் இந்துமதம் (இந்துத்துவா) என்ற புதுப்பெயரால் அழைக்கப்படத் தொடங்கின. உண்மையில் (இந்துத்துவா) இந்து மதம் என்பது ஒரு மதமல்ல. அது ஜாதி ஏற்றத் தாழ்வைக் கொண்ட ஒரு வாழ்க்கை முறை ஆகும்.

இப்போது இந்துத்துவவாதிகளின் தலைவர்கள் அனைவரும் இந்த உண்மையை ஒத்துக்கொண்டுள்ளார்கள். அவர்கள் இந்துயிசம் (Hinduism) ஒரு மதமல்ல அது ஒரு வாழ்க்கை முறை மட்டுமே என்று வெளிப்படையாக அறிக்கைகளும் விடுத்திருக்கிறார்கள். ஆனால் சாதாரண மக்கள் இவைகளைப் பற்றி அறியாதவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இன்றைய நிலை

இன்று இந்துமதம் என்ற இந்துத்துவாவுக்குள் திணிக்கப்பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களான சைவ வைணவ மக்களைப் பார்த்தால் அவர்கள் தங்கள் ஆதிக்கொள்கைகளான மூவொருக் கொள்கை, குமாரனாகிய கடவுளின் மீட்பின் கொள்கை, மரணத்துக்குப்பின் அடையப்போகும் நித்திய ஜீவனைப் பற்றிய கொள்கை யாவையும் மறந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

பெரும்பாலானோர் பிறவிச்சுழற்சிக் கொள்கையையே சார்ந்திருக்கிறார்கள். முப்பத்து முக்கோடி தேவர்களையே வணங்குகிறார்கள். முன்னால் கூறப்பட்ட பல காரணப் பெயர்களையுடைய குமாரனாகிய கடவுள் தங்களுக்குரியவர் என்பதை அறியாதிருக்கிறார்கள். உண்மைகள் யாவும் அவர்களுக்கு மறைக்கப்பட்டுவிட்டது. ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களான அவர்களுடைய முன்னோர்களால் எழுதப்பட்ட திருக்குறள், சிவஞானபோதம் மற்றும் சைவ சித்தாந்த நூல்களைக் கூர்ந்து படிக்கும்போது தான் உண்மைநிலை விளங்கும். விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது குமாரனாகிய இயேசு கிறிஸ்வர்கள் என்று அழைக்கப்படும் மக்களுக்கு மட்டுமல்ல எல்லா மக்களுக்கும் உரியவர் என்பதை நாம் காணமுடிகிறது.

சுருக்கம்

மனிதருக்குப் பாவத்திலிருந்து மீட்பு இரட்சகராகிய குமாரக்கடவுளிடமிருந்து மட்டுமே கிடைக்கிறது.

குமாரனாகிய கடவுள் (ஐந்தவித்தான்) அருளிய இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டு, அந்தப் பொய்தீர் ஒழுக்கநெறியில் நிற்பவர்களுக்குப் பேரின்ப வாழ்வாகிய நீடுவாழ்வுண்டு.

(அ. 1:6)

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (கு. 6)

குமாரனாகிய கடவுள் சிலுவைத் தவமாகிய நோன்பில் நின்று சிந்திய இரத்தம் நம் பாவங்களைக் கழுவி நீக்குகிறது.

செம்மலர் நோன்நாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ............ *(சி.ஞா.போ. சூ. 12)*

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்தீகரிக்கும் (1 யோ. 1:7).

பொய்தீர் ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பின் வழியில் கடைசி மட்டும் நிலைநிற்க வேண்டுமானால் வான் ஆகிய தூய ஆவியான வரின் அருள் வேண்டும்.

(அ. 2:10)

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு (கு. 20)

தூய ஆவியின் உதவியோடு கடைசிவரை இரட்சிப்பாகிய ஒழுக்க நெறியைக் காத்து, இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்பவர்கள் பேரின்ப வீட்டில் கடவுளோடு இணைந்து நீடுவாழ்வைப் பெற்றுக் கொள் வார்கள்.

(அ. 5:10)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (கு. 50)

ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்திரித்துக் கொள் ளுவான். நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாயி ருப்பான் (வெளி. 21:7).

★ ★ ★

குமாரனாகிய இயேசு எல்லாருக்கும் உரியவர்.

BIBLIOGRAPHY

The Reese Chronological Bible

பொதுமறையும் பொருள் இலக்கணமும் – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

திருக்குறள் இன்பத்துப்பால் - பேரின்ப விளக்கம் – Dr. R. அருளப்பா.

Thirukural Malayalam Translation – Pandit Pavanan.

திருக்குறள் விளக்க உரை – Dr. P. வளன் அரசு.

திருக்குறள் புத்தாய்வு – Dr. R. அருளப்பா.

திருக்குறள் உரை – பரிமேலழகர்.

திருக்குறள் தெளிவு – Dr. சுப்பு ரெட்டியார்.

தமிழ் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் – விவிலிய ஒளியில் – Dr. D. தேவகலா M.A., Ph.D.

பைபிள் கூறும் சைவ உணவின் வரலாறு – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

India in third Millennium – Dr. M. Deivanayakam M.A., Ph.D.

சிவஞானபோதம் – விளக்கம் – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

Hindu religion is the off shoot of St. Thomas Dravidian Christianity – Dr. M. Deivanayakam M.A., Ph.D.

Christianity in Hinduism – Dr. M. Deivanayakam M.A., Ph.D.

திராவிட சிந்தையில் பிள்ளையார் – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

திருக்குறளும் விவிலியமும் – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

விவிலியம், திருக்குறள், சைவசித்தாந்தம் ஒப்பாய்வு – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

திருவள்ளுவர் கிறிஸ்தவரா? – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

ஐந்தவித்தான் யார்? – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

நீத்தார் யார்? – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

வான் எது? – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

சான்றோர் யார்? – Dr. M. தெய்வனாயகம் M.A., Ph.D.

Comparitive Religion – Kedar Nath Tiwari.

Asian Religions – Geodffrey Parrinder.

சுருதி இலக்கியம் – S. கங்காதரன்.

சிந்துவழி தொல் தமிழ் நாகரீகம் – P. ராமநாதன்.

இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடே – Dr. M. சுந்தர் இயேசுவடியான்.

தமிழர் சமயம், தமிழர் வேதம் – U. சுப்பிரமணியம் I.A.S.

Other books published by the Author

1. **Bible Hand Book**
2. **The Day of the Lord**
3. **Vivilya Pathai**
4. **A History that is burried**
5. **Satan's Battle through the Ages**
6. **Deliverance From Hindutua**
7. **Love Hindus**

Copies can be had from :

Bible Institute, Gems Complex, Kalluketty,
Kuzhithurai - 629 163. Ph : 04651 - 260354, 260404.

Diocesan Book Depot
Nagercoil. Ph : 04652 - 230395

Shalom Bible Books
Nagercoil. Ph. 04652 - 225406.

Word of Christ
Green Ways Road, Chennai. Ph : 044 - 24616161.

Word of Christ
Madurai. Ph : 0452 - 2536240.

E.L.S. Head Office
Vepery High Road, Chennai. Ph. 044 - 25323231.

Living Voice
Palayamkottai. Ph. 0462 - 2502098.

Bible Book Club
Palayamkottai. Ph : 0462 - 2586784.

Gem India Honey Complex
Mogapair, Chennai. Ph. 044 - 26521326.

Also available in all
Leading Christian Book Stalls in Tamil Nadu.

Author's Address :

M. CHRISTOPHER, M.A., L.L.B.
Benaiah, Kallukatty, Kuzhithurai - 629 163,
K.K. Dist, Tamil Nadu, India. Ph : 04651 - 260404

குமாரனால் இரட்சிப்பு

"இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும்
நீக்கி நம்மை சுத்தீகரிக்கும்"

- விவிலியம்

"செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ ...."

குமாரனாகிய கடவுள் [சிலுவை] தவமாகிய நோன்பில் நின்று சிவந்த கால்களிருந்து சிந்திய இரத்தம் நம் பாவங்களை கழுவி நீக்குகிறது.

- சைவ சித்தாந்தம்

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

ஐந்தவித்தானாகிய கடவுள் பொறியாகிய கொலைக் கருவியில் [சிலுவை] தம் ஐம்புலன்களையும் பலியாக்கி பொய்யனின் பொய்யால் ஏற்பட்ட பாவத்தை பரிகரித்து சம்பாதித்த ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பின் வழியில் நிற்பவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள்.

- திருக்குறள்

Gems, Gems Complex, Kallukatty, Kuzhithurai - 629 163
Kanyakumari District. Ph : 260404